# என்றும் உன் நினைவுகளுடன்...

## ரேவதி அஷோக்



அமுதம் வெளியீடு

# என்றும் உன் நினைவுகளுடன்

## 1

**மெ**ல்ல விடியற்காலை புலர்ந்து கொண்டிருக்க, நிலவு இத்தனை நேரம் ஏகாந்தமாக உறவாடிய இரவைப் பிரிய மனமில்லாமல் ஏக்கத்துடன் மறைந்து கொண்டிருக்க, சூரியன் கம்பீரமாகத் தன் பணிக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். காலை புலர்வதற்கு அறிகுறியாகப் பறவைகளின் கலகலத்வனியின் இன்னிசையில் புதிய விடியலின் பூபாளம்.

முதல் நாளிரவு பெய்த அடை மழையின் மிச்சம் போல சாரல் சிறு பூத்தூரலாகத் தூவி காலைப் அவள் எதிரில் வந்து நின்றார்.

"ஏண்டி எத்தனை முறை உனக்குச் சொல்லியிருக்கிறேன்... தினமும் இப்படி வேலை நேரத்தில் கூப்பிடாதே என்று... அப்பா எட்டரைக்கு

ஆபீஸ் கிளம்பணும்... நீயும் ஒன்பது மணிக்கு வேலைக்குப் போகணும்... அதற்குள் நான் எல்லா வேலைகளையும் முடிக்க வேண்டாமா...? என்ன பெண் நீ..." என்று அலுத்துக் கொண்டாலும், ஏனோ அவரின் ஒரு வார்த்தைகளில் சற்று கூட கோபமோ எரிச்சலோ இல்லை.

"மச் அம்மா! நான் தூங்கி எழுந்ததும், உங்க முகத்தில் தான் விழிப்பேன் என்று தெரியாதா...? சரி சரி. எங்க உங்க ட்ரேட் மார்க் புன்னகையோடு இருங்க... நான் கண்ணைத் திறக்கப் போகிறேன்" என்ற அறிவிப்போடு, புன்னகையுடன் கண்ணைத் திறந்து தாயின் கனிவான முகத்தைப் பார்த்தவள், படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்து அவரின் கன்னத்தில் தன் சிவந்த இதழ்களைப் பதித்தாள்.

"ஹேய்... ஹேய்... விடு நான் இன்னும் பூஜையை முடிக்கவில்லை" என்று துள்ளிக் குதித்தவரைக் கண்டு தேஜஸ்விக்கு சிரிப்பு பொங்கியது.

மகளின் சிரிப்பைக் கண்டவர், "அது சரி இன்னும் எத்தனை நாளைக்கு நீ என் முகத்தில் விழிப்பாய்...? கல்யாணம் ஆகிவிட்டால் என்னாடி செய்வே?" என்றார் விளையாட்டாக.

அவரின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் சோபாவில் கால்களை மடித்து சப்பணமிட்டு அமர்ந்து, "நோ ப்ராப்ளம் மம்மி, வீட்டோடு மாப்பிள்ளையாய் பார்த்தால் போகிறது...!" என்று உதட்டைச் சுழித்து அலட்சியமாக தோள்களைக் குலுக்கினாள்.

"ம்ம்... பார்க்கலாம்" என்று புன்னகையுடன் தலையாட்டியவரை ஈஸ்வரன் அழைக்க, "சரிம்மா, போய் குளிச்சிட்டு வா... இன்று ஏதோ புது ப்ராஜெக்ட் ஒன்று வரப்போகுது; ஆபீசுக்கு சிக்கிரம் போகணும் என்று சொன்னாயே" என்று ஞாபகப்படுத்த, அதுவரை நிதானமாக பேப்பரை ஒவ்வொரு பக்கமாக புரட்டிக் கொண்டிருந்தவள், "ஓ நோ, இதை எப்படி மறந்தேன்? தேங்க்ஸ் மா..." என்று கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு பதறியடித்து கொண்டு ஓடினாள்.



"எழில்... எனக்கு நேரமாச்சு, சீக்கிரம் டிபன் வை" என ஈஸ்வரன் இரண்டாம் முறையாக அழைக்க, அவருக்கு சப்பாத்தியையும், உருளைக்கிழங்கு குருமாவையும் பரிமாறினார்.

சாப்பிட்டுக்கொண்டே மகளைப் பற்றி விசாரித்த கணவரிடம், "என்னங்க இன்னும் இரண்டு மாதம் போனால் நம்ம பெண்ணிற்கு இருபத்திரண்டு முடிந்து இருபத்தி மூன்று தொடங்கப் போகுது... இன்னும் நாம் அவள் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கவே இல்லையே...!" என்றார் ஆதங்கமாக.

"ஏன் எழில், எனக்கு மட்டும் நம்ம பெண்ணைப் பற்றி கவலையில்லைன்னு நினைக்கிறாயா? நானே இதைப் பற்றி உன்னிடம் பேசணும்னு நினைத்தேன்... ஆனால் இந்த ஒரு வாரமா பாங்கில் வேலை அதிகம்; அதனால் நேரமில்லாமல் போய்விட்டது. என் நண்பன் சிவராமன் மூலமா ஒரு வரன் வந்திருக்கு. அதைப் பற்றி இன்னைக்கு ஆபீஸ் போய்விட்டு வந்து சொல்றேன்..." என்றதுமே எழிலரசியின் முகம் தாமரையாக மலர்ந்தது.

"எழில்... இன்றைக்கும் நான் வர தாமதம் ஆகும்... நீ ஏதோ கோவிலுக்குப் போகணும் என்று சொன்னியே... தேஜு மாலை ஆபிசிலிருந்து திரும்பி வந்ததும்

அவளுடன் போயிட்டு வந்திடு" என்றவாறே, ஆபிசுக்குக் கிளம்பி ரெடியாகி வந்த மகளிடமும், மனைவியிடமும் சொல்லிக் கொண்டு சென்றார்.

அரைத்த சந்தனக் கலரில், இடையை தாண்டிய கூந்தலும், நிகுநிகுவென்ற உயரமும், கொடியிடையும் திருத்தமான முக அமைப்போடு, இளம் பிங்க் ஆர்கன்சா சாரியில் வந்த மகளைக் கண்டு தாயின் மனம் பூரித்து போனது.

எம்.ஆர்க் முடித்துவிட்டு ஒரு பிரபல கட்டுமான கம்பெனியில் டிசைன் அண்ட் பில்ட் டீம் லீடராக வொர்க் செய்கிறாள் தேஜஸ்வி.

மகளை ரசித்துக் கொண்டே, அவளுக்கு டிபன் பரிமாற, அவள் சாப்பிடுவதை மனநிறைவுடன் பார்த்துக் கொண்டிருந்தவரை கைப்பிடித்துத் தன்னருகில் அமர்த்தி அவருக்கும் பரிமாறி சாப்பிடச் சொல்ல, மறுத்தவரிடம், "அம்மா உங்களுக்கு சுகர் இருக்கு என்ற ஞாபகமே இல்லையா? நேரத்திற்கு சாப்பிட்டு மெடிசின் எடுத்தால் தான் உங்க ஹெல்த் நன்றாக இருக்கும்... ம்ம்ம்..." என்று அக்கறையும் பாசமுமாக சொன்ன மகளின் பேச்சைத் தட்ட முடியாமல் அவளுடன் சாப்பிட அமர்ந்தார்.

சாப்பிட்டதும் கையைக் கழுவிக்கொண்டு தாயின் முந்தானையில் கையைத் துடைத்துவிட்டு, பேகை எடுத்துக் கொண்டு விடை பெற்றுச் சென்றவளை நிறுத்தி,"தேஜஸ்வி அப்பா வர லேட்டாகும்... இன்னைக்கு அம்மனுக்குப் பாலாபிஷேகம் செய்யணும். நீ சீக்கிரம் ஆபீஸ் விட்டு வந்தால், இரண்டு பேரும் சேர்ந்தே போயிடலாம்..." என, "சரிம்மா... நான் வரேன்..." என்று காரை எடுத்துக் கொண்டு பறந்தாள்.



மகளின் அவசரத்தை நினைத்து ஒரு பெருமூச்சுடன் கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்தவர், வேலைக்காரியிடம் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி கூறிவிட்டு, ஓய்வாக சோபாவில் அமர்ந்து கம்ப ராமாயணத்தை, நேற்று விட்ட இடத்திலிருந்து படிக்க ஆரம்பித்தார்.

ராயல் கன்ஸ்ட்ரக்ஷன் பில்டிங் உள்ளே வண்டியை பார்க் செய்து விட்டு, அரக்கப் பறக்க ஆபீஸ் உள்ளே செல்ல, "ஹாய்... குட்மார்னிங் தேஜஸ்வி...! என்னப்பா எப்போதும் சரியான நேரத்திற்கு வருவே... இன்னைக்குப் பார்த்து பத்து நிமிஷம் லேட்டா வந்திருக்கே?" என்றாள் அவளின் ரிசப்சனிஷ்ட் தோழி சரயு.

அவளுக்கு பதில் வணக்கத்தைக் கூறிவிட்டு, தன் கேபினில் அமர்ந்து இன்றைக்குக் கொடுக்க வேண்டிய டிசைன்ஸ் ரெடி செய்ய ஆயுத்தம் செய்து கொண்டிருந்தவள்,"மச்... வழக்கம் போல ட்ராபிக் தான்... நம்ம நாட்டில் எது இருக்கோ... இல்லையோ வண்டியும், பொல்யுஷனும் அதிகமாக இருக்கு..." என்று அலுத்துக் கொண்டவளுக்கு தோழியின் கேள்வி ஞாபகத்திற்கு வந்தது.

"சரி, அதென்ன இன்னைக்குப் பார்த்து பத்து நிமிஷம் லேட் என்று கேட்கிறே?" என்று புரியாமல் கேட்டவளை நோக்கி,

"நமக்கு புதுசா ஒரு பைவ் ஸ்டார் ஹோட்டல் கட்டுகிற ப்ராஜெக்ட் வரப் போகுதுன்னு உனக்குத் தெரியாதா...? என்றவளிடம்,

"ம்ம்... தெரியும்... சோ...?" என்று புருவத்தை நெரித்தாள் கேள்வியாக.

"சோ... என்று தோழியின் பாணியிலே இழுத்து..." அதோட சேர்மன் மிஸ்டர்.செழியனோடு இன்று பத்து மணிக்கு கான்பரன்ஸ் இருக்கு. அதனால் நீ வந்தவுடன், நம்ம சேர்மன் உன்னை அவரை வந்து பார்க்கச் சொன்னார், போய்ப் பாரு''ன்னு முடிப்பதற்குள் அவரிடமிருந்தே கால் வந்தது.

மிஸ்டர்.தாமோதரன் சேர்மன் என்ற பித்தளை போர்ட் தாங்கிய கதவைத் தட்டி அனுமதி கேட்டுக்கொண்டு உள்ளே சென்ற தேஜஸ்விக்கு, புன்னகையுடன் காலை வணக்கத்தைக் கூறினார்.

பதில் வணக்கம் கூறியவளிடம், முதல் நாள் ரெடி செய்யச் சொன்ன டிசைன்ஸ் பற்றி விசாரித்துவிட்டு, 'நமக்கு இன்று செழியன் குருப் ஆப் கம்பனீஸ் சேர்மன் மிஸ்டர். செழியனோடு ஒரு முக்கியமான கான்பரன்ஸ் இருக்கு... அதுக்குத் தேவையானதை ரெடி செய்துடுங்க..." என்று கூற, அவருக்கு நன்றி சொல்லிவிட்டு வெளியே வந்தவள் சேர்மன் தாமோதரன் சொன்னவற்றைச் செய்ய ஆரம்பித்தாள்.

கான்பரன்ஸ்க்கு தேவையானவற்றை சேர்மனின் அந்தரங்கச் செயலாளர் மிஸ். தன்ஷியோடு செய்து முடித்து நிமிர்ந்த போது பத்தடிக்க இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்க, ராயல் கன்ஸ்ட்ரக்ஷனின் மற்ற ஷேர் ஹோல்டேர்ஸ் ஒவ்வொருத்தராக வர ஆரம்பித்தார்கள்.

எல்லோரையும் இன்முகத்தோடு வரவேற்றுக் கொண்டிருந்த தேஜஸ்விக்கு, சேர்மனின் ஆர்ப் பாட்டமான குரல் கேட்டு அவளின் பார்வை



அனிச்சையாகத் திரும்ப, தன் முன்னே நெடிய உருவத்துடன் கோதுமை கலரில் அடர்த்தியான மீசையோடு கம்பீரமாகச் சிரிக்கும் கண்களோடு வந்து நின்றவனைக் கண்டதும் ஒரு நிமிடம் இதயத் துடிப்பு நின்று துடித்தது.

அதற்குள் சேர்மன் அவனை எல்லோருக்கும் அறிமுகம் செய்துவைக்க எல்லோருக்கும் சிரிக்கும் முகத்துடன் இயல்பாகக் கையை குலுக்கிக்கொண்டு வர, தேஜஸ்வியை அவனுக்கு அறிமுகப்படுத்தினார்.

"ஹாய்..." என்று அவனின் கரம் இயல்பாக கைகுலுக்க நீள, அதை மறுத்து கைகளை தாமரை மொட்டாக குவித்து வணக்கம் என்றாள்.

தமிழ்நாட்டுப் பாணியில் அவளின் வணக்கம் அவனைக் கவர்ந்தாலும், அவனின் கண்கள் ஆராய்ச்சியாக லேசாக இடுங்கி அடுத்த வினாடியே இயல்பாக மாறினாலும், அவனின் பார்வை என்னவோ அவளை அலட்சியமாக அளவிட்டுக் கொண்டிருந்தது.

# 2

**எ**ல்லோருடன் கான்பரன்ஸ் ஹாலில் அமர்ந்த தேஜஸ்விக்கு செழியனின் பார்வையில் இருந்த ஏதோ புரியாத, இனம் காணமுடியாத, செய்தி அவளை மிகவும் சங்கடப்படுத்தியது.

அந்தப் பார்வைக்கு என்ன பொருள் என்று மூளையை போட்டு குடைந்து கொண்டிருந்தவளை,

"தேஜா ஸ்பீச்சை கவனி..." என்ற தனுஷியின் கிசுகிசுப்பான குரல் மீட்டது.

சேர்மன் தாமோதரன் அவர் கம்பெனியின் சட்ட திட்டங்கள், பரிணாம வளர்ச்சி , தரம் பற்றி பேசி முடித்ததும், செழியன் தான் கட்டப் போகும் பைவ் ஸ்டார் ஹோட்டலுக்கான ப்ராஜெக்ட்டைப் பற்றி சேர்மன், மற்றும் மற்ற ஷேர் ஹோல்டர்ஸ்களுடன் விவாதித்துவிட்டு, அதற்குண்டான ஒப்பந்த பைலில் பரஸ்பரம் கையெழுத்தாக, கை தட்டலில் கான்பரன்ஸ் ஹாலே அதிர்ந்தது.

தேஜஸ்வியின் நினைவை செழியனின் பார்வையே ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததால் அவர்கள் பேசியது எதுவும் காதில் விழவில்லை என்றாலும், என்ன பேசியிருப்பார்கள் என்று அவளுக்குத் தெரிந்து தான் இருந்தது. ஒவ்வொரு ப்ராஜெக்ட் கையெழுத்தாகும் போதும் நடக்கிற சம்பிரதாயமாச்சே இது...! இப்பொழுது மட்டும் என்ன புதுசாகப் பேசிவிடப் போகிறார்கள்...?" என்று தோன்றியதுமே ஒப்புக்காக அவளும் கையைத் தட்டி வைத்தாள்.

மணி பன்னிரெண்டரை ஆனதும், மீட்டிங் முடிந்து எல்லோரும் கை குலுக்கி விடை பெற்றதும், தன் சீட்டில் வந்தமர்ந்த தேஜஸ்விக்கு தலை வலிக்க ஆரம்பித்திருந்தது. இதுவரை நிறைய கிளையண்ட்களை சந்தித்திருக்கிறாள். ஆனால் அவர்களில் ஒருவர் கூட அவளிடம், இப்படி ஒரு பார்வையை வீசியதில்லை.

ஆனால் இந்தச் செழியனின் பார்வை அவளை



ஏதோ செய்ய, முதல் நாள் போட்டு வைத்திருந்த டிசைனை முடிக்காமல் அதையே இலக்கில்லாமல் வெறித்துக் கொண்டிருந்தாள்.

''தேஜஸ்வி .ஆர் யு ஹியர்'' என்ற குரல் கேட்டு, கம்ப்யூட்டர் திரையிலிருந்து கண்களை விலக்கி நிமிர்ந்தவள்... சேர்மனைக் கண்டதும் அனிச்சை செயலாக எழுந்து, ''ஐ அம் சாரி சார், சொல்லுங்க...'' என்றாள்.

''ஆர் யு நாட் பீலிங் வெல்? பலமுறை அழைத்தும் ஏதோ பலமா யோசிச்சிகிட்டு இருக்கியே! முகமும் சரியில்லையே... என்று அக்கறையாக விசாரித்தவருக்குப் புன்னகையைப் பதிலாகக் கொடுத்து,

"நத்திங் சார், இந்த டிசைனைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்...'என்று சமாளித்தாள்.

"ஹ்ம்ம் ... குட்! இன்று மதியம் செழியன் சாரோட ப்ராஜெக்ட் டிசைன்ஸ் பற்றிய டிஸ்கஷன் இருக்கு ! தெரியுமில்லே?" என்று வினவியவரிடம் மெலிதாக முறுவலித்தாள்.

"தெரியும் சார், நான் அதற்குண்டான பேப்பர்ஸ் மற்றும் மற்ற ஃபார்மாலிட்டீஸ் முடிச்சிடறேன். இந்த ப்ராஜெக்டை நல்லபடியா முடிச்சுக் கொடுத்திடலாம்' என, "ஒகே, யு கேரி ஆன்..." என்று புறப்பட்டுச் சென்றார்.

"தேஜா, நேரமாச்சு நீ சாப்பிட வரலை...?" என்றழைத்த சரயுவின் குரலுக்கு நிமிர்ந்தவள் ,' ஹ்ம்ம் போகணும்..." என்றபடி சிஸ்டத்தை ஷட் டௌன் செய்துவிட்டு அவளுடன் கான்டீனுக்குச் சென்றாள்.

அவளுக்கு எப்போதுமே சாப்பாடு சூடாக இருந்தால் மட்டுமே பிடிக்கும். அதனால் கான்டீனிலே ஆர்டர் செய்து விடுவாள். அன்றும் தனக்கு வேண்டியதை கான்டீனில் ஆர்டர் செய்துவிட்டு அமர்ந்திருந்த நேரத்தில், மழை நின்ற பொழுதும் விழும் சிறு தூறலாய் மீண்டும் செழியனின் பார்வை ஞாபகத்திற்கு வர, அவளின் மூளை அவன் எதற்குத் தன்மேல் இப்படி ஒரு பார்வையை வீசினான் என்று குடைந்து கொண்டிருந்தது.

தோழியின் யோசனையை அறியாமல் அவளிடம் எதையோ பேசி... சிரித்துக் கொண்டிருந்த சரயு, அதற்கு எதிரொலியாக அவளிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை என்றதும், "என்ன தேஜா, மீட்டிங் அட்டென்ட் பண்ணிவிட்டு வந்ததிலிருந்து என்னவோ மாதிரி இருக்கே! என்னாச்சுப்பா... ஏதாவது பிரச்சனையா? என்றாள்.

இவளிடம் சொல்லலாமா... வேண்டாமா ? என்று யோசித்தவள், "ச்சே ! இதைப் போய் ஒரு விஷயமாக எப்படிச் சொல்வது, அப்படியே சொன்னாலும் இவள் அதைச் சரியான கோணத்தில் எடுத்துக் கொள்வாளா? என்று நினைத்தவள் வேண்டாம் என்று முடிவெடுத்தாள்.

"ம்ச், ஒண்ணுமில்லை சரயு , மதியம் டிஸ்கஸ் செய்யப் போகிற புது ப்ராஜெக்ட் டிசைன்ஸ் பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன்..." என்றாள் பொய்யாக.

லஞ்ச் நேரம் முடிந்து மீண்டும் கான்பரன்ஸ் ஹாலுக்கு வந்தவள் தனுஷியிடம் சேர்மனும், செழியனும் வந்தால் தனக்குத் தெரியப்படுத்துமாறு



கூறிவிட்டு தன் லேப்டாப்பில் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். எவ்வளவு நேரம் சென்றதோ, திடீரென்று தன் எதிரே ஏதோ நிழலாட நிமிர்ந்தவள் செழியனைக் கண்டதும், தன்னையும் அறியாமல் சரேலென எழுந்து, "சாரி... ஹலோ சார்' என்றாள் பதட்டமாக.

அவளின் வரவேற்பை தலையசைப்பில் ஏற்றுக் கொண்டவன், "ஹ்ம்ம், இந்த டெக்னிக் புதுசா இருக்கே!" என்றான் புரியாத குரலில் கேலிப் புன்னகையோடு. இதழ்கள் தான் புன்னகைத்ததே தவிர, கண்களில் மருந்துக்கும் கூடப் புன்னகையில்லை.

தேஜஸ்விக்கு அவன் பார்வைக்கும், புன்னகைக்கும் அர்த்தம் புரியாமல், "பார்டன் , நீங்க சொல்றது புரியலை..." என்றவளை நிதானமாகப் பார்வையால் அளந்துவிட்டு, ஏதோ பேச வாயெடுத்த நேரம் தனுஷியோடு சேர்மன் உள்ளே வர, பார்வையை அவர் பக்கம் திருப்பினாள்.

"சாரி செழியன், கொஞ்சம் டிலே ஆயிடுச்சு...!" என்று கைகுலுக்கி அமரச் சொல்லிவிட்டு, தேஜஸ்வியிடம் ஆரம்பிக்கலாமா? என்று கேட்டார்.

அதற்குள் தன்னைச் சுதாரித்துகொண்ட இருவரும், ஹோட்டல் டிசைன்ஸ் பற்றி என்னென்ன அம்சங்களோடு இருக்க வேண்டும், என்று பேசி முடிவெடுத்ததும் எல்லாவற்றையும் தன் லேப் டாப்பில் குறிப்பெடுத்துக் கொண்டாள்.

முழுதாக நான்கு மணிநேரம் சென்றதும் டிஸ்கஷன் ஒரு முடிவுக்கு வர, "ஓகே செழியன்... உங்க ப்ராஜெக்டோட டிசைன்சை மிஸ்.தேஜஸ்வி

கமிங் மண்டே ரெடி செய்திடுவாங்க, அதைப் பார்த்த பிறகு உங்களுக்கு ஏதாவது மாற்றம் வேண்டு மென்றால் சொல்லுங்கள்...'' என்று முடித்தார்.

“ஷ்யூர் மிஸ்டர். தமோதரன்...'' என எல்லோரும் எழுந்து வெளியே வர, அதுவரை தற்காலிகமாக செழியன் தன்னிடம் பேசியதை மறந்திருந்த தேஜஸ்விக்கு, பெய்த மழையில் நெஞ்சு நிமிர்த்தும் காளான்கள் போல மீண்டும் அவன் பார்வையும், பேச்சும் நினைவிற்கு வந்தது.

காலையில் புரியாத ஒரு பார்வை வீசினான், இப்பொழுதோ என்னவோ புரியாத குரலில் சொன்னான் யாரிவன்? எதற்காக முதல் முதல் பார்க்கிற பெண்ணிடம் நடந்துகொள்கிறான்...? எல்லோரிடமும் இப்படித் தானா? இல்லை தன்னிடம் மட்டுமா? என்று யோசனையில் உழன்று கொண்டிருந்தவள் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

சேர்மேனிடம் கம்பீரமான குரலில் பேசிக் கொண்டிருந்தவனின் முகமும் கண்களும் ஒரு சேர சிரித்துக் கொண்டிருக்க, அந்த இடமே ஆயிரம் சூரியன்கள் தரையிறங்கி வர்ணஜாலம் காட்டியது போலப் பிரகாசமாகத் தோன்றியது தேஜஸ்விக்கு.

அவனின் வசீகரச் சிரிப்பு அவனை மேலும் இளமையாகக் காட்ட, அவளின் கண்கள் அவளையும் மீறி அவன் முகத்தில் நிலைக்க வைத்தது .

அவளின் பார்வை அவன் கவனத்தைச் சிதறடிக்க, அவள் பக்கம் பார்வையைத் திருப்பி, என்ன என்று குறும்பாக புருவத்தை வில்லாக



வளைக்க, அப்பொழுது தான் அவளுக்கு அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று உரைத்தது.

அவமானத்தில் முகம் ரத்தமெனச் சிவந்துவிட, அதுவரை இருந்த இதம் தொலைய, “நத்திங் சார்...' என்று தடுமாறிவிட்டு, “சாரி எனக்கு டைம் ஆச்சு, நான் கிளம்பறேன்...'' என்று அவனிடமும், சேர்மெனிடமும் சொல்லிவிட்டு விடுவிடுவென்று தன் கேபின் நோக்கிச் செல்ல , செழியனின் பார்வை ஒரு பளபளப்புடன் அவளைப் பின் தொடர்ந்தது .

தன் சேரில் அமந்தவளுக்கு படபடப்பில் தன் இதயத்துடிப்பின் முரசு தன் காதுகளுக்குத் தெளிவாகக் கேட்க, தண்ணீரைக் குடித்து பதட்டத்தைத் தணித்தாள்.

‘ச்சே பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையை முறைச்சிப் பார்க்கிற மாதிரியல்லவா பார்த்தேன். ஏற்கனவே அவன் என்னைப் பார்க்கிற பார்வையே சரியில்லை! இதில் வேறு நான் முறைச்சுப் பார்த்ததை எந்தக் கோணத்தில் எடுத்துக் கொண்டிருப்பானோ என்று நொந்து கொண்டிருந்தவளை தாயின் கைபேசி அழைப்பு திசை திருப்பியது.

கோவிலுக்குச் செல்ல நினைவூட்டிய தாயிடம், “இதோ அரை மணிநேரத்தில் வருகிறேன்...' என்று கைபேசியை அணைத்தவள் தன் உடமைகளை எடுத்துக்கொண்டு சரயுவிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

கோவிலில் அம்மனுக்குப் பாலாபிஷேகம் நடக்க, அதைக் கண்குளிரக் கண்டு மனமுருக வேண்டிக் கொண்டிருந்த தாயின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த

தேஜஸ்வியின் மனது அதில் ஒட்டவில்லை. மனம் ஓர் அலைபுறுதலுடன் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தது.

திருநீறு வைத்த தாயின் தொடுகையில் மனம் ஒரு இடத்தில் இளைப்பாற, இருவரும் பிரகாரத்தைச் சுற்றிவிட்டு, கூட்டமில்லாத இடமாகத் தேர்ந்தெடுத்து அமர்ந்தார்கள்.

"ஆபிசில் ஏதாவது பிரச்சனையா தேஜு...?" என்ற தாயின் கனிவான குரலில் விரலால் தரையில் கோலம் போட்டுக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டு நிமிர, 'நானும் உன்னைஆபீஸ் விட்டு வந்ததிலிருந்து பார்க்கிறேன், காலையிலிருந்த மனநிலை இப்போ தில்லை, ஏதோ ஒன்று உன்னை மாம்பழ வண்டாய் குடையுது சரியா...?" என்று கேட்டு நிறுத்தினார்.

அவரின் கணிப்பு அவளுள் ஆச்சரியத்தைத் தோற்றுவித்தாலும், தன் ஆச்சரிய முகபாவத்தைக் காத்து, "ஒரு பிரச்சனையுமில்லைமா! இன்றைக்கு ஒரு பைவ் ஸ்டார் ஹோட்டல் ப்ராஜெக்ட் கிடைத்தது அந்த ஹோட்டலை எந்த மாதிரி வடிவமைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்; மற்றபடி ஒன்று மில்லை..." என்றவளை ஒரு நிமிடம் ஆழப் பார்த்தவர், கோவிலை விட்டுக் கிளம்ப ரெடியானார்.

வீட்டுக்கு வரும் வழியில், 'ச்சே! நான் என்ன குழப்பத்தை நெற்றியிலா ஒட்டிக் கொண்டு அலைகிறேன்? ஆபிசில் சரயு... இங்கே அம்மா, எவனோ எப்படியோ பார்த்துவிட்டு போனால், எனக்கென்ன வந்தது? நான் ஏன் தேவையில்லாமல் இதையெல்லாம் ஆராய்ச்சி செய்து மற்றவர்களின்



கேள்விக்கு ஆளாகிறேன்...? இந்தக் குப்பை ஆராய்ச்சியைத் தூக்கிப் போட்டுவிட்டு ஹோட்டல் டிசைனில் கவனம் செலுத்தணும்...' என்று முடிவெடுத்ததும் மனம் சற்று தெளிந்தாற் போலிருந்தது.

ஆபிசிலிருந்து திரும்பி வந்து டிவியில் ஆழ்ந்திருந்த ஈஸ்வரன், வாசலில் கார் சத்தம் கேட்டு டிவியை அணைத்துவிட்டு, வாசலுக்குச் செல்ல, அவரை எதிர்கொண்டார் அவரின் நண்பர் சிவராமன்.

சிவராமனும், ஈஸ்வரனும் சிறுவயது முதலே இணைபிரியா நண்பர்கள். கல்லூரிப் படிப்பை முடித்ததும் ஒரே இடத்தில் வேலைக்கு அப்ளை செய்து அங்கேயே வேலை கிடைக்க, அவர்களின் நெருக்கம் மேலும் பலப்பட்டது.

இரண்டு பேருக்கும் திருமணமானதும் அவர்களின் குடும்பமும் மனதளவில் நெருங்க இரு குடும்பங்களுள் ஏதாவது பிரச்சனை யென்றால் உரிமையுடன் தலையிட்டு தீர்த்துகொள்ளும் நட்பு பலமானது.

"வாடா, உனக்காகத் தான் காத்திருந்தேன்" என்று அவரை வரவேற்று அமரச் சொன்னவர், பணியாளிடம் இரண்டு காபி கொடுத்து விட்டு எதிரில் அமர்ந்தவரிடம், ஒரு கவரை நீட்டினார்.

அதைப் பிரித்துப் பார்த்த ஈஸ்வரன், பையன் அழகாக லட்சணமாக இருப்பதைக் கண்டு திருப்தியுற, "பையன் எம்.எஸ். முடித்துவிட்டு கலிபோர்னியாவில் வேலை செய்கிறான். நல்ல குடும்பம், ஒரே பையன்! எந்தப் பிக்கலும் பிடுங்கலும் கிடையாது! எனக்கு

நெருங்கின சொந்தம் தான். நம்ம தேஜுவுக்கு ரொம்பப் பொருத்தமாக இருப்பான்...' என்று சொல்லச் சொல்ல, ஈஸ்வரனின் முகத்தில் நிம்மதி படர்ந்தது.

"எல்லாம் சரிடா ஆனால்..." என்று இழுக்க,

"என்னடா ஆனால்...?" என்று திருப்பி அடித்தவரிடம்,

"பையன் அழகாகத்தான் இருக்கிறான், ஆனால் எங்களுக்கு இருப்பதோ ஒரே பெண். இவளையும் வெளிநாட்டில் கட்டிக் கொடுத்துவிட்டு நாங்கள் என்ன செய்வது? உள்ளூராக இருந்தால் அடிக்கடி போய்ப் பார்த்துவிட்டு வரலாம், வெளிநாடு என்கிறாய் அது தான் யோசனையாக இருக்கிறது..." என்றார் தயக்கத்துடன்.

"என்னடா பேசறே, ஒரு பேங்க் ஆபிசர் மாதிரியா இருக்கு உன் பேச்சு? கலிபோர்னியா என்ன வேறு ஒரு கிரகத்திலா இருக்கு, இப்பொழுது உலகமே சுருங்கி உள்ளங்கை அளவிற்கு வந்துவிட்டது, காலையில் ப்ளைட் ஏறினால் இரவு அங்கு போய்ச் சேர்ந்து விடலாம், நினைச்சா போனில் பேசலாம், வீடியோ சாட் செய்யலாம்... இதுக்குப் போய் பெரிசா அலட்டிக்கிறே..." என்றவரின் அதட்டலில் உரிமையும், கோபமும் கலந்திருந்தது.

"நீ ஈசியா என்னைக் கன்வின்ஸ் பண்ணிடலாம், எழிலை எப்படிச் சமாளிக்கப் போறே ? தேஜுவுக்கு காலையில் எழுந்ததும் அவள் அம்மாவின் முகத்தில் விழிக்கவில்லையென்றால் தலையே வெடிச்சிடும். பேசாமல் வேறு ஒரு வரன் இருந்தா சொல்லு. என்னவோ இது சரிப்பட்டு வரும்னு தோணலை...'



என்றவர் மீண்டும் பையனின் புகைப்படத்தைப் பார்த்துவிட்டு பெருமூச்செறிந்தார்.

"கவலையை விடு ஈஸ்வரா, நான் தங்கையிடமும் தேஜுவிடமும் பேசறேன் ! எங்கே அவங்க ?" என்றவருக்கு அவர்கள் கோவிலுக்குப் போன விவரத்தைக் கூறி, இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார்கள் என்று கூறி முடிக்குமுன்னரே இருவரும் உள்ளே நுழைய, தேஜாவுக்கு சிவராமனைக் கண்டதும் முகம் மலர வரவேற்றாள்.

"காயத்ரியும், விஷ்வாவும் நல்லா இருக்காங்களா அங்கிள்...?" என்று விசாரித்தவளுக்குப் புன்னகையுடன் பதிலைக் கூறிவிட்டு,

"விஷ்வாவுக்கு இந்த வருஷத்தோட ஹௌஸ் சர்ஜன் முடியப் போகுது, காயத்ரிக்கு ஹோட்டல் மேனேஜ்மெண்ட் ரெண்டாவது வருடம் என்பதால் அதில் கொஞ்சம் பிசி, கோல்ட் மெடல் வாங்கணும் என்று முழு மூச்சாகப் படிப்பில் இறங்கிட்டாள்...' என்றார் சுவாதீனமாக.

"ம்ம் தேஜா, சொல்ல மறந்துட்டேனே, காயத்ரி தான் உன் மேலே ரொம்ப கோபமா இருக்காம்மா, நீ அவளுக்குப் போன் செய்வதில்லையாம்! அவள் போன் செய்தாலும் எப்பொழுதும் உன் செல் பிசியாக இருக்கிறதாம்.

நான் இங்கே வருகிறேன் என்று தெரிந்ததும், என்னிடம் சொல்லி உன்னை போன் செய்யச் சொன்னாள். தயவுசெய்து அவளுக்கு ஒரு கால் பண்ணிடுமா, இல்லையென்றால் நான் தான் சொல்லாமல் விட்டுவிட்டேன் என்று கோபப்படுவாள்'

என்று சிரிக்க அப்பாவும் பெண்ணும் கூடச் சேர்ந்து சிரித்தாள்.

"கண்டிப்பாகச் செய்கிறேன் அங்கிள்..." என்று சிரித்தபடி உள்ளே செல்வதை புன்னகையுடன் பார்த்துவிட்டு, காபியும் டிபனும் கொண்டு வந்த எழிலிடம் போட்டோவைக் கொடுத்து விவரத்தைக் கூறினார்.

அதுவரை மலர்ந்திருந்த முகம் வாடிப் போக, "இந்த மாப்பிள்ளை வேண்டாமண்ணா, என்னால் தேஜுவைப் பிரிந்து இருக்க முடியாது..." என்றார் அழுத்தம் திருத்தமாக.

அவரைக் கன்வின்ஸ் செய்த சிவராமன், "நமக்குப் பிடிக்கிறது முக்கியமில்லை, கல்யாணம் செய்துக்கப் போகிறவளுக்குப் பிடிக்கணும் அது தான் முக்கியம், தேஜா சொன்னால் உங்களுக்கு ஓகே தானே? என்றவர், உள்ளே சென்றிருந்த தேஜாவை அழைத்து போட்டோவைக் கொடுத்து, பிடித்திருக்கிறதா என்று கேட்க அதைப் பார்த்தவளின் முகத்தில் கலவையான உணர்ச்சிகள்.

# 3

**தே**ஜூவின் கண்கள் கையிலிருந்த புகைப் படத்தில் பதிந்திருந்தாலும், அதிலிருந்த முகம் அவள் மனதில் பதியவில்லை. மாறாக தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் அவர்களாகவே கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தது. அவள் மனதில்



கோபக் குமிழ்களை உற்பத்தி செய்தன.

அதன் விளைவாகப் பேச வார்த்தைகளற்று புகைப்படத்தையே இலக்கின்றி வெறித்துக் கொண்டிருந்தவளின் தோளைப் பிடித்து உலுக்கி, "என்னம்மா அந்த போட்டோவையே பார்த்துக்கிட்டு இருக்கே? பையனை உனக்குப் பிடிச்சிருக்கு தானே...?" என்ற சிவராமனின் குரலில் கவனம் கலைந்தாள்.

அவரின் கையில் போட்டோவைத் திணித்து, "சாரி அங்கிள்! எனக்குப் பிடிக்கலை..." என்று வெடுக்கெனச் சொன்னவளை புரியாமல் பார்த்தவர், தன் கையிலிருந்த போட்டோவை மீண்டும் ஒரு தடவை பார்த்துவிட்டு,

"ஏன்மா, பையன் அழகாத் தானே இருக்கிறான்? நல்ல குடும்பம்! வசதியும் கூட!" என்று அடுக்கியவரை இடைமறித்து, "எனக்கு இப்போ கல்யாணம் செய்து கொள்ளப் பிடிக்கலை என்றேன்..." என்றாள் அழுத்தம் திருத்தமாக.

அவளின் பதில் எல்லோரையும் அதிர்ச்சிக் குள்ளாக்க, "என்னடி சொல்றே? இப்போ கல்யாணம் செய்து கொள்ளப் பிடிக்கலை என்றால் என்ன அர்த்தம்...? இப்பவே இருபத்திரண்டு ஆகுது, இதுக்கும் மேலே நாட்களைக் கடத்தினால் சரி வராது..." என்ற தாயின் பக்கம் திரும்பினாள்.

"நான் ஏன் கல்யாணம் வேண்டாமென்று சொல்றேன் என்று உனக்குப் புரியலையாம்மா? இல்லை, புரியாத மாதிரி இருக்கிறியா? என குற்றம் சாட்டும் குரலில் கேட்க, அவரின் முகம் ஒரு வினாடிக்கும் குறைவாகக் கசங்கியது.

அடுத்த நொடியே தன்னைச் சரிபடுத்திக் கொண்டவர், "எல்லாம் தெரிஞ்சு தான் பேசறேன்... பெண்ணையும், வாழைத்தாரையும் ரொம்ப நாள் வீட்டில் வைச்சிருக்கக் கூடாதுன்னு சொல்வா... ஒரு பெண்ணிற்கு காலா காலத்தில் கல்யாணம் காட்சி நடந்தால் தான் மதிப்பு..." என,

"போதும், நிறுத்தும்மா" என்ற மகளின் கோபக்குரல் அவரின் பேச்சை இடைவெட்டியது .

"இன்னும் எத்தனை காலத்திற்குத் தான் பெண்களை இப்படியே பேசி, ஒரு அடிமை மாதிரி நடத்தப் போறீங்க, நீங்க பழமொழியையே வாழ்க்கையா பார்க்கறீங்க, ஆனால் என் வாழ்க்கையையே இந்த மாதிரி ஒரு பழமொழி தான் அடியோடு மாற்றியது என்று தெரிஞ்சும்... நீங்க இந்த மாதிரி பேசறது, உங்களுக்கே நல்லா இருக்கா...? என்றாள் கண்ணீருடன்.

அதுவரை மகள், தாயின் வாக்குவாதத்தை கவனித்துக் கொண்டிருந்த ஈஸ்வரனுக்கு மகளின் கலங்கிய கண்கள் நெஞ்சைப் பதற வைக்க, மனைவியை கண்ணாலே அடக்கி விட்டு, "என்னடா! ஒரு தாயா... அவளின் ஆதங்கத்தைச் சொல்றா, இதில் கோபப்பட என்ன இருக்கு?" என்றார் கனிவாக.

"நான் அவங்க சொல்றதை தவறுன்னு சொல்லலை டாடி, ஆனால் என் கடந்த காலம் தெரிஞ்சும், இப்படிப் பேசறது தான் என்னை காயப்படுத்துது..." என்றாள் கண்ணீருடன்.

"சரிடா! நான் அவ சார்பில் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். அவள் பேசினது தவறு தான், இப்போ நீயே உன் முடிவைச் சொல். எப்பொழுது கல்யாணம்



செய்து கொள்ள உத்தேசம்...? என்று கேட்டு நிறுத்த, மற்ற இருவரும் ஆவலாக அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள், அவளின் பதிலுக்காக.

"என் லட்சியம் எல்லாம் என் தொழிலில் சாதிக்கணும். இதுவரை நான் வேலைக்குச் சேர்ந்து நிறைய பில்டிங் கட்டுவதற்குத் துணையாக இருந்தாலும், கடந்த ஒரு வருடமாக நானே டிசைன் செய்து சில ப்ராஜெக்ட்ஸ் செய்து வருகிறேன்; அதில் பாராட்டும் வாங்கியிருக்கிறேன் என்று உங்களுக்கே தெரியும்..." என்று சொல்லிக் கொண்டிருந்தவளை இடைமறித்தார் எழில்.

"அது தான் உன் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கிறதே! அதுவே உன் லட்சியத்தை நீ அடைந்த மாதிரி தானே...?" என்ற தாயை தீர்க்கமாகப் பார்த்து,

"மே பீ, ஆனால் அதிகாரப்பூர்வமான அங்கீகாரத்தை நான் எதிர்ப்பார்க்கிறேன். அட்லீஸ்ட் யெங் ஆர்கிடெக்ட் அவார்ட் வாங்கினால் தான், என் லட்சியம் கொஞ்சமாவது நிறைவேறும்..." என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி முடித்தவளைக் கண்டு ஈஸ்வரனுக்கு பெருமையாகவும் அதே சமயம் ஆயாசமாகவும் இருந்தது.

இந்தக் காலத்து பெண்கள் மனதளவில் மிகவும் தெளிவாகத் தான் இருக்கிறார்கள்; படிப்பிலும், இலட்சியத்திலும் எதற்காகவும் காம்ப்ரமைஸ் செய்து கொள்வதில்லை. ஆனால் பெற்றவர்கள் தான் அவர்களின் ஆசையை வீண் கௌரவத்திற்காகவும், பிடிவாதத்திற்காகவும் சிதறடிக்கிறார்கள், ம்ம்ம்... என்று பெருமூச்செழுந்தது.

"சரி உன் ஆசை, லட்சியம் எல்லாம் நல்லாத்தான் இருக்கு, நாங்களும் உன்னைச் சாதிக்க வேண்டாம் என்று சொல்லலை, ஆனால் கல்யாணம் செய்து கொண்டு உன் லட்சியத்தை நிறைவேற்று, உன்னை யார் தடுக்கப் போகிறார்கள்? என்ற மனைவியின் வாதத்தில் தன்னிலைக்கு வந்த ஈஸ்வரன், மனைவிக்குப் பதில் சொல்லும் முன் சிவராமன் குறுக்கே புகுந்தார்.

"அம்மா சொல்றதும் சரி தானே தேஜூ, இப்போ பார்த்திருக்கிற பையன் உன் லட்சியத்தை நிறைவேற்ற உனக்கு முழுச் சுதந்திரம் கொடுப்பான்..." என்றவர், தேஜூவின் சூடான பார்வையில் பேச்சை நிறுத்தி, "சாரிமா, நான் ஏதோ தவறாகப் பேசிட்டேன் என்று நினைக்கிறேன்..." என்று மன்னிப்புக் கேட்க, ஈஸ்வரனுக்கே ஒரு மாதிரி ஆகிப்போனது.

"நான் சொல்றேன் என்று தவறா நினைக்காதீங்க அங்கிள், யார் சுதந்திரத்தை யார் கொடுக்கிறது? என் சுதந்திரத்தைப் பறிக்கவே உரிமையில்லை என்கிற பொழுது, அதை உனக்குக் கொடுக்கிறேன் என்று சொல்ல, அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது?

அதுமட்டுமில்லை, என் லட்சியம் என் மூலமாக மட்டும் தான் நிறைவேறணுமே தவிர அதைப் பங்கு போட்டுக் கொள்ள எந்தத் துணையும் வேண்டாம்..." என்று ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்திக் கூற, அவளின் நியாயமான ஆசைக்கு அணை போட யாருக்கும் துணிவில்லை.

தொடர்ந்து, "சாரி, என் பேச்சு மூலமாக உங்க யார் மனசையாவது காயப்படுத்தியிருந்தா, என்னை



மன்னிச்சிடுங்க..." என்றவள் அதற்கு மேல் பேச ஒன்றுமே இல்லை என்கிற மாதிரி விடுவிடுவென்று அவளின் அறைக்குச் சென்று தாழிட்டுக் கொள்ள, மற்ற மூவரும் அவரவர் யோசனையில் மூழ்கினார்கள்.

குண்டூசி விழுந்தால் கூடப் பெரிதாகச் சத்தம் கேட்கும் அளவிற்கு கனமான மௌனம் அந்த ஹாலையே வியாபித்திருக்க, சிவராமன் தான் அந்த மௌனத்தை மன்னிப்பு என்னும் வார்த்தையால் உடைத்தார்.

"என்னை மன்னிச்சிடுடா ஈஸ்வரா, நான் ஏதோ நல்லது செய்யறேன் என்று இவ்வளவு பெரிய பிரச்சனை உண்டாகக் காரணமாயிட்டேன்..." என்று தழைந்து போக,

"முட்டாள் மாதிரி பேசாதே, நீ எதுக்கு மன்னிப்புக் கேட்கிறே, நான் தானே உன்னை வரன் பார்க்கச் சொன்னேன், ஓகே லீவ் இட். தேஜூவுக்குக் கல்யாணத்தில் இஷ்டமில்லை என்னும் பொழுது யார் என்ன செய்ய முடியும்? சரி, விஷ்வாவிற்குப் படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் செய்யப் போறியா...? என்று பேச்சை மாற்ற, கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு சிவராமன் விடைபெற்றுச் சென்றார்.

அறையின் உள்ளே வந்த தேஜூவுக்கு ஆத்திரம் அடங்க மறுத்தது. பெண்கள் என்றால் ஒரு வயதுக்கு வந்தவுடனே, பெற்றோர் காட்டுகிற பையனுக்குக் கழுத்தை நீட்டி... அவன் கட்டுகிற தாலியைச் சுமந்து கொண்டு கடைசிக் காலம் வரை அவனுக்கு அடிமையாகவே வாழணுமா?

பெண்ணுக்கென்று எந்த ஆசாபாசமும் இருக்கக் கூடாதா? என்ன முட்டாள்தனம்! கட்டியவளின் சுதந்திரத்தைப் பறித்து அவளுக்கே பெரிய மனதாகத் திருப்பித் தந்து, நல்லவன், வல்லவன் என்ற பட்டத்தைச் சம்பாதிப்பது...' என்று எண்ணங்கள் ஓட, தலையே வெடித்து விடும் போல தோன்ற தலையை அழுந்தப் பிடித்துக் கொண்டு அமர்ந்தாள்.

ஆனால் மேலும் கண்டகண்ட சிந்தனைகளே அவளை ஆக்கிரமிப்புச் செய்ய , உடையில் ஒட்டிய கடற்கரை மணல் போல அவற்றைத் தட்டிவிட்டு, தன் லாப்டாப்பை எடுத்து புது ப்ராஜெக்ட்ஸ் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

எவ்வளவு நேரம் சென்றதோ, கதவு தட்டும் ஓசை கேட்டு கதவைத் திறந்தவளிடம், "உன் ஆசை புரியாமல் நாங்க செய்தது தவறு தான், எங்களை மன்னிச்சிடுமா..." என்ற தகப்பனைச் சமாதானப்படுத்த நிறையவே திணறிப் போனாள்.

ஒரு வழியாக அவரின் குற்ற உணர்வைப் போக்கி, தன் வேலையைத் தொடர்ந்தவள் அதிலேயே மூழ்கிப் போக, அவளை யாரும் தொல்லை செய்யவில்லை. ஈஸ்வரனும் அவளின் வேலைக்கு இடைஞ்சல் இல்லாமல் நடந்து கொள்ள, எழில்தான் அவளை வேளா வேளைக்குச் சாப்பிட வைக்க மிகவும் கஷ்டப்பட்டுப் போனார்.

இரண்டு நாளாக ஹால் பக்கமே வராமல் லாப்டாப்பிலே புதைந்திருந்தவள் தன் மனதில் தோன்றிய மிக மிக வித்தியாசமாக, சைபர் டேக்ஷர் எக் வடிவில் சுற்றுச் சூழல் அமைப்பைப் பொறுத்து



ஐகோனிக் முறையில் ஹோட்டலை வடிவமைத்தவள், திருப்தியுடன் பலமுறை அதைத் திருத்தி பல மாற்றங்கள் செய்து, தனக்குத் திருப்தி என்றான பிறகு லாப்டாப்பை மூடிவைத்தாள்.

இரண்டு நாளாக கம்ப்யூட்டரில் வேலை செய்ததால் கண்கள் சிவந்து , லேசாகத் தலை வலிக்க ஆரம்பித்தது. தாயிடம் ஜூஸ் போடச் சொல்லி அதைக் குடித்தவள், முகத்தில் பப்பாளிப் பழத்தில் தேனைக் கலந்து மசித்து பூசிக்கொண்டு ரிலாக்ஸாக இளையராஜா இசையைக் கேட்டபடி அமர்ந்தவளின் அருகில் வந்தமர்ந்தார் எழில்.

"தேஜூ, ஹோட்டலுக்கு டிசைன் போட்டு முடிச்சிட்டியா? என்று விசாரித்தவரின் கேள்விக்கு புன்னகைத்தவள், "என்னம்மா, அதிசயமா என் வேலையைப் பற்றியெல்லாம் கேட்கறீங்க...?" என்று ஆச்சரியப்பட்டாள்.

"அதில்லே! நேற்று உன் அத்தை பெண் அகிலாவுக்குக் கல்யாணம். நீ வேலையில் பிசியாக இருந்ததினால் நாங்களே போயிட்டு வந்துட்டோம். நாளை மாலை ரிசப்ஷன் வைச்சிருக்காங்க. நீயும் வந்தால் நன்றாக இருக்கும். கல்யாணத்திற்கு நீ ஏன் வரலை என்று எல்லோரும் கேட்டார்கள். அது தான் நீ ப்ரீயா என்று கேட்டேன்..." என்று தயங்கித் தயங்கி கேட்க, தேஜூவுக்கே சங்கடமாகிப் போனது.

"நிச்சயம் வரேன்ம்மா..." என்ற பெண்ணின் மென்மையான பேச்சு அவருள் சந்தோஷத்தை விதைக்க, ஒரு சின்னச் சிரிப்புடன் சமையலறைக்குச் சென்றார்.

அடுத்த நாள் தாயின் உத்தரவுப்படி, ஹாப் ஒயிட்டில் கோல்டன் பார்டரில் சிகப்பில் டிசைன் செய்யப்பட்ட அனார்கலி நெட் சுரிதார் அணிந்து, அதற்கு மேட்சான நகைகளோடு, முடியை பிரெஞ்சு பிளாட் போட்டு , மிதமான ஒப்பனையோடு ரெடியாகி வர, ஒரு கை தேர்ந்த சிற்பியின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட சிற்பம் போலிருந்த மகளைக் காண தாயின் மனம் பூரித்துப் போனது.

ரிசப்ஷன் ஏற்பாடு செய்திருந்த ஸ்டார் ஹோட்டலுக்குச் சென்றவர்கள், மணமக்களுக்கு வாழ்த்துக்களைக் கூறி பரிசைக் கொடுத்துவிட்டு மேடையை விட்டு கீழே இறங்க, மணமகள் அகிலா, தேஜூவின் கையைப் பிடித்து தன் கூடவே இருத்திக் கொண்டாள்.

பெற்றோர் இருவரும் உறவினர் கூட்டத்தில் கலந்துவிட, கொஞ்ச நேரத்திலே தேஜூவுக்கு அங்கு போரடித்துப் போனது. மேடையிலே எல்லோருக்கும் காட்சிப் பொருள் மாதிரி நிற்பது தர்மசங்கடமாக இருந்தது.

அதுவும் மாப்பிள்ளையின் தோழனாய் நின்றிருந்தவனின் வழிசல் பேச்சைத் தாங்க முடியாமல் போக, அகிலாவிடம் சொல்லிவிட்டு கீழே போகத் திரும்பியவள், ஒரு கம்பீர நடையுடன் மேடையேறி வந்தவனைக் கண்டதும்... அவளின் இதயம் ஒரு நிமிடம் அதிர்ந்து, பின் படபடவென்று துடித்தது.

அந்த இடத்தில் அவனை எதிர்பார்க்காததால் எப்படி ரியாக்ட் செய்வது என்று தெரியாமலும், அந்தத்



தருணத்தில் கீழே இறங்கிப் போவது மரியாதையாக இருக்காது என்பதினாலும் சற்றுத் தள்ளி அமைதியாக நின்று விட்டாள்.

மேடையேறி வந்தவனின் விழிகளோ அவளிடமே நிலைத்திருக்க, மணமக்களை நெருங்கி வாழ்த்துக் களைக் கூறி... பரிசைக் கொடுத்தவனிடம் மணமகன் ராகேஷ், "இவங்க என் மனைவியின் மாமா பெண் மிஸ். தேஜஸ்வி, இவர் என்னுடைய எம்.டி மிஸ்டர் .செழியன்' என்று இருவருக்கும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தான்.

செழியன் இளம் புன்னகையுடன், "ஹலோ..." என்று கை கொடுக்க, தேஜூ மென்மையான புன்னகையுடன் தாமரை மொட்டாய் கரம் குவித்து, "ஹலோ சார்..." என்றதும் செழியனின் முகம் ஒரு வினாடி இறுகி இயல்பானது.

அதற்குமேல் அவளிடம் எதுவும் பேசாமல் மணமக்களிடம் சிரித்துப் பேசிவிட்டு கீழே இறங்கிச் செல்ல, அவனை சாப்பிட அழைத்துச் சென்றார்கள்.

அவன் சென்றதும் தான் தேஜூவுக்கு மூச்சு சீராக வர, வேகமாக மேடையிறங்கி உறவினர்கள் மத்தியில் அமர்ந்திருந்த தாயுடன் போய் அமர்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் மெல்லிசை ஆரம்பிக்கப் போவதால் அன்பர்கள் அமைதி காக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறார்கள் என்ற அறிவிப்பு வர, அதுவரை போரடித்துப் போயிருந்தவள், உற்சாகத்துடன் நிமிர்ந்து அமர்ந்தாள்.

மூத்தவர்கள் மெல்லிசைக்கு தொந்தரவு இல்லாத வகையில் தன் பேச்சைத் தொடர ஹால் மறுகோடியில்

சென்று அமர... ஈஸ்வரும், எழிலும் மகளைத் தனியாக விட்டுவிட்டு அவர்களோடு சென்றுவிட, இதை அறியாத தேஜூ, இசை மழையில் நனைந்து கொண்டிருந்தாள்.

யாரோ தன் பக்கத்தில் அமரும் அசைவை உணர்ந்து இசையிலிருந்து கவனம் கலைந்து திரும்பியவள், மாப்பிள்ளையின் தோழனைக் கண்டதும், கடமையே என்று உதட்டை இழுத்து வைத்துப் புன்னகைத்துவிட்டு, மீண்டும் இசையில் கவனத்தை வைத்தவளிடம், “யு ஆர் சோ பியூட்டிஃபுல் தேஜஸ்வி ...!” என்றவன், அதோடு நில்லாமல், “உன் பெயர் உன்னைப் போலவே ரொம்பவும் அழகா இருக்கு' என்று மேலும் வழிய, தேஜூவுக்கு எரிச்சலாக இருந்தது.

அவனுக்குப் பதில் சொல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ள, “ஐ அம் சந்தோஷ்...” என்றதுமே தேஜூ முகத்தில் அடித்தாற் போல 'அதான் ஏற்கனவே அறிமுகப்படுத்தி வைத்தார்களே...” என்று கூறியும் எந்தவிதப் பலனுமில்லை.

“ராகேஷ் வேலை செய்யற அதே கம்பெனியில் தான் நானும் சாப்ட்வேர் ப்ரோக்ராமராக இருக்கிறேன். எங்க வீட்டுக்கு ஒரே பிள்ளை...” என்று சுய புராணம் பாடிவிட்டு, “உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன் தேஜஸ்வி...” என்று கேட்க அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

யார் இவனைப் பற்றி கேட்டது? இவனைப் பற்றி சொன்னதுமில்லாமல், என்னைப் பற்றி வேறு கேட்கிறான் இடியட்' என்று மனதுள் வசை பாடிக் கொண்டிருந்தாள்.



அவளின் மௌனத்தின் அர்த்தத்தைப் பற்றிக் கவலைப்படாமல், “உங்களைப் பற்றி சொல்லவில்லை என்றால் கூட பரவாயில்லை. நான் உங்களிடம் ஒன்றை சொல்லியே ஆகவேண்டும் தேஜஸ்வி! எனக்கு உங்களை ரொம்பப் பிடித்திருக்கு. ஐ திங்க் ஐ அம் இன் லவ் வித் யூ...” என்றதும் தேஜூக்கு தூக்கிவாரிப் போட்டது.

எவ்வளவு திண்ணக்கம் இருந்தால், புதிதாகப் பார்க்கிற ஒரு பெண்ணிடம் இப்படிப் பேசுவான் இடியட்” என்று கோபம் பொங்க தாயிடம் திரும்பியவள், அங்கே தாய் தந்தை இருவருமே இல்லாததால் துணுக்குற்றவள், அவர்கள் எங்கே யென்று பார்வையால் துழாவினாள்.

ஹாலின் மூலையில் கூட்டமாக அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டதும் மனம் நிம்மதியுற, இவனை எப்படி இங்கிருந்து விரட்டுவது என்ற யோசனையில் அமர்ந்திருந்தவளை, “ஹாய் தேஜஸ்வி...” என்ற சினேகமான ஒரு கம்பீரக் குரல் அழைக்க, சட்டென்று நிமிர்ந்தாள்.

அவளை நோக்கி வந்து கொண்டிருந்த செழியனைக் கண்டதும், அந்த நிமிடம் மனதில் பாதுகாப்பான உணர்வு தோன்ற, “ஹலோ சார் ...” என்றபடி எழுந்தவளை அமரச் சொல்லிவிட்டு, தானும் அவள் பக்கத்தில் சுவாதீனமாக அமர்ந்தான்.

செழியனைக் கண்டதும் அதுவரை அவளிடம் வழிந்து கொண்டிருந்தவன் பயபக்தியுடன் எழுந்து நிற்க, “என்ன சந்தோஷ்! நீங்க ஏதாவது பேசிகிட்டு இருந்தீங்களா? நான் வந்து இடைஞ்சல்

செய்துட்டேனா...?" என்று கேலி என்றே தெரியாத மாதிரி புருவத்தை வில்லாக வளைத்துக் கேட்டான்.

"ஆ...ஆமாம் இ...இல்லை... சார், நான்... வந்து..." என்று தந்தியடித்தவன், "மாப்பிள்ளை கூப்பிடறான் சார், நான் வரேன்..." என்று விட்டால் போதுமென்று அலறியடித்துக் கொண்டு ஓட, தேஜூவுக்கு சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

"தேங்க்ஸ்..." என்று மெல்லிய குரலில் கூறியவளிடம், "பாவம் விட்டில் பூச்சிகள்..." என்றான் கேலியாக புரியாத குரலில்.

# 4

**செ**ழியனின் பேச்சில் சடாரென்று நிமிர்ந்தவள், "வாட் ? என்ன சொன்னீங்க, சாரி எனக்குப் புரியலை..." என்றவளுக்கு அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கியபடி எழுந்தான்.

"சொல்ல என்ன இருக்கு, விளக்கில் விழுந்தால் உயிர் போய்விடும் என்று தெரிந்தும், தானாக வந்து விழுகிற பூச்சிகளை, விட்டில் பூச்சிகள் என்று தானே சொல்லணும்" என்று கூலாக விளக்கமளிக்க, தேஜூவுக்கு அதுவரை இருந்த இதம் தொலைந்து சுறுசுறுவென்று கோபம் தலைக்கேறியது.

"வாட் டூ யு மீன், யார் விளக்கு? யார் விட்டில் பூச்சி?" என்று சண்டைக் கோழியாய்ச் சிலிர்த்து நின்றவளை,



"ஹேய்... கூல்... கூல்... இப்போ எதுக்கு இவ்ளோ கோபம், நான் நிதர்சனத்தைச் சொன்னேன், தன் காதல் நிறைவேறாது என்று தெரிந்தும், காதலைச் சொல்லி ஏமாந்து போகிற சந்தோஷ் மாதிரி ஆண்களைச் சொன்னேன்..." என்று அவளை சமாதானப்படுத்திக் கொண்டிருக்கும் போதே, ஈஸ்வர் அவளைத் தேடி வர, தேஜூ அவசரமாகத் தன் முக பாவனையை மாற்றினாள்.

செழியனைக் கண்டதும், "யாரும்மா இவர்..." என்றவருக்கு அவனை அறிமுகப்படுத்தி வைக்க, அவனுக்கு கைகுலுக்கி, "உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கேன் சார்! இந்த வயதிலே தொழிலில் நிறைய சாதித்து, விருதுகள் வாங்கி, உங்களைப் பெற்றவர்களை பெருமைப்படுத்தியிருக் கீங்க!" என்று பாராட்ட, தேஜூவுக்கு அவன் மேல் கோபம் இல்லையென்றாலும் எரிச்சலாக இருந்தது.

பொறுமை எல்லை மீற, பல்லைக் கடித்தபடி, "ஓகே டாடி, நீங்க பேசிட்டு வாங்க, நான் போறேன்..." என்றவள், அவரின் பதிலுக்குக் காத்திராமல், "எக்ஸ்க்யூஸ் மீ சார்..." என்றுவிட்டு வேகமாகத் தாயிடம் சென்றாள்.

"அம்மா போகலாமா?" என்றவளிடம், "தேஜூ, இவர் சரண், என் முதலாளியின் மகன். மும்பையில் கன்ஸ்ட்ரக்ஷன் அண்ட் இன்டீரியர் டெகரேஷன் கம்பெனி வைச்சிருக்கார்..." என்று மாமா அறிமுகப்படுத்த, அப்பொழுது தான் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

ஆறடிக்கும் உயரமாக மொழுமொழுவென்று மீசையில்லாமல் இந்தி மாடல் மாதிரி அழகாக இருக்க அவனுக்குக் கைகுவித்து, "வணக்கம்" என்றாள்.

அழகாகப் புன்னகைத்து ஏற்றுகொண்டவனிடம், 'இவள் தேஜஸ்வி. எங்க வீட்டு பெண்..." என்று அவள் வேலையைப் பற்றிக் கூறி அறிமுகப்படுத்தி வைக்க, பதிலுக்கு அவனும் கைகுவித்தான்.

அவனின் இயல்பான அந்தச் செயல் அவளை ஈர்க்க, அவனிடம் அவனின் வேலை பற்றி விசாரிக்க, பதிலுக்கு அவனும் விசாரிக்க, இருவருமே சற்று நேரம் தங்களை மறந்து பேச்சில் திளைத்தார்கள்.

இருவரும் ஒரே லைன் என்பதால் தேஜூ அவனிடம் தொழில் சம்மந்தப்பட்ட சில சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டிருக்க, ஈஸ்வரிடம் பேசிக் கொண்டிருந்த செழியனின் பார்வை தேஜூவின் பக்கம் திரும்பியது.

அவள் சரணிடம் சிரித்துப் பேசுவதைக் கண்டதும், முகம் பாறையாய் இறுக, இதை ஏதும் அறியாத ஈஸ்வரும் அவனிடம் பேசிவிட்டு விடைபெற்றார்.

தந்தை வந்ததும் எல்லோரிடமும் சொல்லிவிட்டுக் கிளம்பி வெளியில் வர, காரில் ஏறும் சமயம் தன் காரை நோக்கிச் சென்ற செழியன் ஒரு நிமிடம் நின்று தேஜூவிடம், "மாதவிகளுக்குக் கோவலன்களைப் பற்றி கவலையே இல்லை... இல்லையா?"என்று துளைக்கும் பார்வையோடு மெல்லிய குரலில் கேட்டுவிட்டு, அவளின் பதிலுக்குக் காத்திராமல் தன் காரை நோக்கிச் சீராக செல்ல, தேஜூ தான் அதிர்ச்சியானாள்.



"சீக்கிரம் ஏறுமா..." என்ற தந்தையின் குரலுக்குக் கட்டுப்பட்டு, காரில் அமர்ந்தவளுக்கு செழியனின் பேச்சு மேலும் குழப்பத்தை விளைவித்தது.

இவன் ஏன் என்னிடம் இப்படிப் பேச வேண்டும்...? மாதவி என்கிறான், கோவலன்களைப் பற்றி கவலை இல்லையா என்கிறான், அன்றும் அப்படித்தான் புது டெக்னிக் நல்லாயிருக்கே என்றான். என்ன நினைத்து என்னிடம் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறான்?

இவன் ஏன் எப்பொழுதும் என்னிடம் புரியாத குரலிலே, புரியாத மாதிரியே பேசுகிறான்? என் மேல் ஏதும் கோபமா? என்று யோசித்தவள், 'ம்ஹீம். அப்படியிருக்க சான்சே இல்லை. இவனை இதற்கு முன் பார்த்தது கூட இல்லை. அப்படியிருக்கும் பொழுது முதன் முதலாக சந்திக்கிற பெண்ணிடம் பேசுகிற மாதிரி இவன் பேசவில்லையே...!' என்று அவனைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியவளுக்கு, கூடவே இன்னொரு சந்தேகமும் வந்தது.

இவன் என்ன மாதிரி குணம் கொண்டவன் ? திடீரென்று சூரியனாகச் சுடுகிறான்! உடனேயே நிலவாக குளிர்விக்கிறான்! இத்தனை கம்பெனி களுக்கு அதிபதியாக இருந்தும், தன் கம்பெனியில் வேலை செய்கிறவனின் கல்யாணத்திற்கு வருகை தந்து அவர்களை மகிழ்விக்கிறான். அவ்வளவு ஏன், முன்பின் பார்த்திராத அப்பாவிடம் கூட சற்று நேரம் முன் சிரித்துப் பேசினானே! ஆனால் என்னிடம் மட்டும் ஏன் புதிராகவே பேசுகிறான் ...? என்று யோசித்துக்

கொண்டிருந்தவளுக்கு முடிவில் குழப்பம் தான் மிஞ்சியது.

தான் போட்டு வைத்திருந்த ஹோட்டல் ப்ரொஜெக்ட் டிசைனை சிஸ்டத்தில் ஏற்றி, அதை ப்ளூ பிரிண்ட் எடுத்துக் கொண்டிருந்த தேஜூவிடம், "ஹேய், இன்று படத்துக்குப் போகலாமா? ஹிரித்திக் ரோஷன் படம் அக்னிபாத் ரிலீசாகி இருக்கு...!" என்று கண்கள் மின்ன, ஆர்வம் பொங்க கேட்ட சரயுவை புன்னகையுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன மேடம்? இப்போல்லாம் அதிகமாக ஹிரித்திக் ரோஷன் படம் பார்க்கிற மாதிரி இருக்கு. முதலில் அக்ஷய் குமார் பைத்தியமாக இருந்தே போலிருக்கே. ஏன் இந்த திடீர் பல்டி..." என்றாள் நமுட்டு சிரிப்புடன் கேலியாக.

"ஹேய் நோ நோ...! இப்பவும் நான் அக்ஷய் ஃபேன் தான். ஆனாலும் ஹிரித்திக் சோ ஹான்ட்சம் யார்..." என்று வழிந்தவளைக் கண்டு சிரிப்பு பொங்கியது.

"ஹூம், இது சரிப்பட்டு வராது, உங்க வீட்டில் சொல்லி சீக்கிரமே உனக்கு கல்யாணம் செய்து வைச்சால் தான் நீ அடங்குவே..." என்றாள் கேலியாக.

"ஏன் தேஜூ உனக்கு இந்தக் கொலைவெறி. நான் சந்தோஷமா இருக்கிறது உனக்குப் பிடிக்கலையா? ஏதோ வாரத்திற்கு ஒரு ஹான்ட்சம் பசங்களின் படம் பார்த்துக்கிட்டு லைப் ஜாலியா போய்க்கிட்டு இருக்கு. அதிலே ஏன்மா அணுகுண்டைத் தூக்கிப் போடறே...?" என்று பாவமாகக் கேட்ட சரயுவைக் கண்டு, வாய்விட்டு சிரித்தாள்.



பேசிக்கொண்டே தன் வேலைகளை முடித்தவள், "நான் இன்றைக்கு உன் கூடப் படத்திற்கு வர முடியாது சரயு. நிறைய வேலை இருக்கு..." என்றுவிட்டு சேர்மன் தாமோதரனின் கேபினுக்கு பைலோடு சென்றவள் நின்று திரும்பி, "சரயு! செழியன் க்ரூப் ஆப் கம்பெனீஸ் எம்டியிடம் அப்பாயின்ட்மெண்ட் பிக்ஸ் பண்ணு..." என கட்டளையிட சரயு அரட்டையை விட்டுவிட்டு வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

காலை பதினோரு மணிக்கு அப்பாயின்ட்மெண்ட் என்பதால் மிச்சமிருந்த வேலைகளைச் சீக்கிரமாக முடித்துவிட்டு செழியனின் சாப்ட்வேர் கம்பெனிக்குச் சென்றவள், வண்டியைப் பார்க்கிங் செய்துவிட்டு, ரிசப்ஷனில் தன் கார்டைக் கொடுத்துவிட்டு காத்திருந்த நேரத்தில் அவளின் பார்வை அந்தக் கம்பெனியை அளந்தது.

பரந்த ரிசப்ஷனில் ஒரு பக்கம் செயற்கை நீரூற்று அமைத்து அதில் பலவகைச் செடிகள் வளர்க்கப்பட்டு, மிகவும் பசுமையாக கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது.

காலை வைத்தாலே கூசுகிற அளவிற்குத் தரை முழுவதும் மார்பிள் கல்லும், சுவற்றில் கிரானைட் கற்களும் பதித்து, வைட் அண்ட் கிரீன் கலரில் குஷன் நாற்காலிகள், டேபிள்கள் அமைத்து எங்கு பார்த்தாலும் ஏர் பிரெஷ்னர் ப்ளாண்ட்ஸ் வைத்து, பார்ப்பதற்கே அந்த ஆபீஸ் ரம்யமாக இருந்தது.

இதுவரை மாமூலான ஆபீஸ்களையே பார்த்துப் போரடித்துப் போயிருந்தவளுக்கு அந்த ஆபிஸின்

வடிவமைப்பும் அலங்காரமும், ஆச்சரியத்தையும் வியப்பையும் கொடுக்க, "ஹ்ம்ம், ரசனை மிக்கவன் தான். ஆனால் பேச்சில் தான் ஏதோ வித்தியாசம் தெரிகிறது..." என்று யோசித்துக் கொண்டிருந்தவளை,

"மேடம்! யு கேன் கோ நவ்..." என்ற ரிசப்ஷன் பெண்ணின் மரியாதையான குரல் கவனத்தைக் கலைக்க, அவளுக்கு ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு கதவைத் தட்டி அனுமதி கேட்டு உள்ளே சென்றாள்.

பைலை பார்த்துக் கொண்டிருந்தவன் தேஜூவைக் கண்டதும் முகம் மலர, "வெல்கம் டு மை ஆபீஸ்..." என்று பலநாள் அவளிடம் இயல்பாகப் பழகியவன் போல வரவேற்று அமரச் சொல்லி நாற்காலியைக் கை காட்ட, மென்மையான புன்னகையுடன் நன்றி சொல்லி அமர்ந்தவளிடம் 'காபி ஆர் கூல்ட்ரிங்க்ஸ்...?" என்றான் உபசரிக்கும் முகமாக.

"நோ, தேங்க்ஸ்..." என்றவள், "உங்க ஆபீஸ் ரொம்ப அழகா வித்தியாசமா இருக்கு..." என்று மனதில் தோன்றியதைப் பாராட்டாக வெளியிட்டாள். அவளின் பாராட்டை புன்னகையோடு ஏற்றுகொண்டவனிடம், தான் கொண்டு வந்திருந்த ப்ளூ பிரிண்டை அவனிடம் காட்டி விளக்க ஆரம்பித்தாள். அவள் போட்டிருந்த டிசைன் செழியனைக் கவர, அவள் விளக்கத்தைக் கவனமாகக் கேட்டுக்கொண்டவன், அதில் தனக்கு ஏற்பட்டிருந்த சில சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டு, டிசைனை ஓகே செய்தான்.

அதன் பிறகு எஸ்டிமேஷனை முடிவு செய்து டிசைனை அப்ருவலுக்கு அனுப்ப முடிவு செய்ததும் அவர்களின் டிஸ்கஷன் ஒரு முடிவிற்கு வர, தேஜூ



மணிக்கட்டைத் திருப்பி மணியைப் பார்க்க ஒரு மணி ஆகிவிட்டிருந்தது.

"ஓகே சார் நான் கிளம்பறேன்..." என்று எழுந்தவளை, "இன்று என்னோடு லஞ்ச் சாப்பிடுங்களேன்..." என்ற செழியனின் அழைப்பை அவசரமாக மறுத்தாள்.

"சாரி சார், என் தோழி எனக்காகக் காத்திருப்பாள்..." என்று கழன்று கொள்ள உத்தேசித்து ஒரு பொய்யை அவிழ்த்துவிட, 'நோ ப்ராப்ளம்! ஒரு நாள் அவங்க தனியா சாப்பிட்டால் ஒன்றும் ஆகிவிடாது...' என்றவனிடம், எவ்வளவு மறுத்தும் கேளாமல் பிடிவாதமாக அழைக்க பதிலேதும் பேசாமல் மௌனமாக இருந்தாள்.

"ஏன், என் கூட டைம் ஸ்பெண்ட் செய்ய உங்களுக்குப் பயமா...?" என்று ஆழமான குரலில் ஆண்கள், பெண்களை மடக்க வழக்கமாகப் பயன்படுத்தும் ஆயுதத்தை பயன்படுத்த, அது சரியாக வேலை செய்தது.

சட்டென்று நிமிர்ந்தவள், "யுவர் தாட் வாஸ் ராங், ஐ வில் கம்..." என்று விறைப்பாகக் கூற செழியனின் இதழ்கள் சிரிப்பில் மலர்ந்தது.

அவளின் காரை அங்கேயே விட்டுவிட்டு அவனின் காரில் பின்னால் ஏற முயன்றவள், ஒரு நிமிடம் தயங்கி, இதற்கும் அப்புறம் ஏதாவது சொல்லுவான் என்று நினைத்து, முன் சீட்டில் அவனின் பக்கத்தில் அமர்ந்தாள்.

அவன் போட்டிருந்த செண்டின் மணம் மனதை மயக்க, அவளையும் அறியாமல் அவளின் பார்வை

காரை அலட்சியமாகக் கையாண்டு கொண்டிருந்த செழியனின் பக்கம் திரும்பியது.

அடர்ந்த கருகருவென்ற கேசம், அது நெற்றியில் புரண்டு முகத்திற்கு அழகு சேர்த்தது. அழுத்தமான முகவாய், கூர்மையான நாசி, எதிராளியின் உள்ளத்தை நகல் எடுக்கும் விழிகள் , சுனாமியாய் சுருட்டி இழுத்துப் போகும் கவர்ச்சியான சிரிப்பு, முள்ளாய்க் குத்தும் அடர்த்தியான மீசை... மொத்தத்தில் பெண்களின் மனதைக் கொள்ளையடிக்கும் கம்பீரமான ஆண்மகன்' என்று நினைத்த மாத்திரத்தில் தன் எண்ணங்கள் தறிகெட்டு ஓடுவதை அறிந்து கடிவாளம் இட்டவள், '்சே, நானா இப்படியெல்லாம் நினைக்கிறேன் என்று தன்னையே குட்டிக்கொண்டு,

"எதற்குத் தான் இவனோடு லஞ்ச் சாப்பிட ஒத்துக்கொண்டேனோ...?' மனதிற்குள் புலம்பியவள் பார்வையை அவசரமாக வெளியே திருப்பிக் கொண்டாள்.

ஆரம்பமே ஹோட்டல் என்று ஆரம்பிக்குதே. போகப் போக என்ன ஆகும்? ஏற்கனவே புரியாத பாஷையில் பேசுகிறான். இவன் கூட கொஞ்சம் சிரித்துப் பேசினால் நம்மைப் பற்றிய கணிப்பு இவனிடம் என்னவாக இருக்கும்?' என்று யோசித்தவள், "ம்ஹீம், இதுவே முதலும் கடைசியுமாக இவனுடன் தனியாக இருப்பதைத் தவிர்க்கணும்... என்று முடிவெடுத்தாள் தீர்க்கமாக.

"பைனலா என்ன டெசிஷன் எடுத்தீங்க மிஸ்.தேஜஸ்வி, இன்னொரு தடவை இவனோட லஞ்சுக்கு வரக்கூடாது என்றா? என்று புருவத்தை



உயர்த்தி உதடு சிரிப்பில் துடிக்க திடீரென்று கேட்க தேஜூவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

என் மனதில் ஓடுகிற எண்ணங்களை இவன் எப்படிப் படித்தான்? என்று திடுக்கிட்டாலும் உடனே தன்னைச் சுதாரித்து, "ஹ்ம்ம், இல்லை. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந் தேன்" என்று முடிந்தவரை மிடுக்காகக் கூறிவிட்டு மீண்டும் பார்வையை வெளியே திருப்பினாள்.

"ம்ஹீம்!" என்று குறும்புடன் புன்னகைத்தவன் காரை ஒரு பெரிய ரெஸ்டாரெண்டின் முன் நிறுத்த, பணியாள் ஓடி வந்து கதவைத் திறந்துவிட்டான். காரிலிருந்து இறங்கிய செழியன் தேஜூவுக்கு கதவைத் திறக்க, "தேங்க்ஸ்" என்றபடி இறங்கியதும், கார் சாவியை வாலெட்டிடம் கொடுத்து பார்க் செய்யச் சொல்லிவிட்டு அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

அரையிருட்டாக இருந்த ரெஸ்டாரெண்டின் உள்ளே சென்று ரிசர்வ் செய்த டேபிளில் அமர்ந்து மெனு கார்டை எடுத்தவன், அவளுக்குப் பிடித்த உணவு வகைகளைக் கேட்டு தனக்கும் ஆர்டர் கொடுத்துக் கொண்டிருந்தவன்,ரெஸ்டாரெண்டில் மெலிதாக கசிந்து கொண்டிருந்த ஆங்கிலப் பாட்டை முணுமுணுத்தபடி டேபிளில் இரண்டு கைகளையும் ஊன்றி அதில் முகத்தைப் பதித்து, கனவில் மிதந்த விழிகளோடு எங்கேயோ வேடிக்கைப் பார்த்து கொண்டிருந்த தேஜூவின் அழகில் கவரப்பட்டு, பேரரை அனுப்பிவிட்டு அவளையே சற்று நேரம் ரசித்து விட்டு, 'தென் ஹவ் இஸ் யுவர் ஜாப்... ?' என்றான்.

செழியனின் பேச்சில் கவனம் கலைக்கப்பட, "ஹ்ம்ம், என்ன கேட்டீங்க... ?" என, அவளிடம் மீண்டும் தான் கேட்டதை திருப்பிக் கேட்டதும், "ஓ! ஹ்ம்ம். நைஸ்..." என்று சுருக்கமாகக் கூறியவள் மீண்டும் வேடிக்கை பார்ப்பதைத் தொடர்ந்தாள்.

"உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்..." என்று பேச்சை வளர்க்க விரும்பிக் கேட்டவனை விநோதமாக பார்த்துவிட்டு,

"என்னைப் பற்றிச் சொல்ல ஒன்றுமே இல்லை! நான் ஒரே பெண், அவ்வளவு தான். என் வேலை என்னவென்று தான் உங்களுக்கு தெரியுமே" என்று மிக சுருக்கமாக நறுக்கு தெரித்தாற் போல கூறிவிட்டு மௌனமானாள்.

ஏதோ நினைவு வர, "உங்களைப் பற்றி தெரிஞ்சுக்கலாமா?" என்றவள் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு, "சாரி இஷ்டமிருந்தால் சொல்லலாம், நோ ப்ராப்ளம்..." என, செழியனுக்கு அவளின் பாவனையில் சிரிப்பு வந்தது.

"என்னைப் பற்றி தானே? கண்டிப்பாகச் சொல்லலாமே; நான் தான் குடும்பத்திற்கு மூத்த பிள்ளை. எனக்கு ஒரு தம்பி இருக்கிறான் பெயர் ஆதவ். அமெரிக்காவில் பிசினெஸ் மேனேஜ்மென்ட் படிக்கிறான். அப்பா இல்லை, அம்மா மட்டுமே..." என்று முடிக்க பேரர் அவர்கள் ஆர்டர் செய்த உணவுகளை மேஜையில் அழகாக அடுக்கி வைத்தான்.

"ப்ளீஸ் ஹாவ் இட்...!" என்று உபசரிக்க சாப்பிட்டுக்கொண்டே, 'இப்போ நீங்க செய்கிற தொழில்கள் எல்லாம் நீங்களே ஆரம்பிச்சதா? என்றாள்.



"அப்படிச் சொல்ல முடியாது. டெக்ஸ்டைல்ஸ், க்ரானைட்ஸ், ரியல் எஸ்டேட்ஸ் இதை மட்டும் தான் அப்பா ஆரம்பிச்சார். அப்போ நான் லண்டனில் படிச்சிக்கிட்டு இருந்தேன். அப்பாவின் மறைவுக்குப் பின் இதெல்லாம் என் பொறுப்பில் வர என் உழைப்பில் அவரின் தொழில் சாம்ராஜியத்தை விரிவுப்படுத்தி, நானும் சில தொழில்களை ஆரம்பித்தேன் அவ்வளவு தான் !" என்று கூறக் கூற தேஜூவுக்கு அவனின் மேல் மரியாதை அதிகமாயிற்று.

அதற்கு மேல் என்ன கேட்பது என்று தெரியாமல் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவளிடம், "நீங்க சமைப்பீங்களா" என்று சம்மந்தம் சம்மந்த மில்லாமல் கேட்க, அவனை ஏதோ வேறு கிரகத்து மனுஷன் போலப் பார்த்துவிட்டு,

"ஹ்ம்ம் சுமாராக சமைப்பேன்" என்று பதிலைக் கூறிவிட்டு, "உங்களிடம் நான் ஒன்று கேட்கலாமா?" என்றாள் கூர்மையாக.

இளம் புன்னகையுடன் தலையசைத்தவனிடம், "நீங்கள் என்னை சந்தித்த முதல் நாளிலும் சரி, கல்யாண வீட்டில் சந்தித்த அன்றும் சரி, நீங்கள் என்னிடம் பேசிய பேச்சின் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. உங்கள் பேச்சிற்குண்டான அர்த்தத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று நிதானத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

முகம் மலர சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் அவளின் கேள்வியில் சட்டென்று புன்னகை தொலைந்து, அதுவரை வர்ண ஜாலங்களைக் காட்டிக்

கொண்டிருந்த முகம் இருண்டு குரல் இறுகிவிட, கண்களை இறுக மூடித் திறந்து, "நேரம் வரும் பொழுது, கண்டிப்பாக நானே சொல்கிறேன்..." என்று நறுக்குத் தெரித்தாற் போல சொல்லிவிட்டு கைகழுவ எழுந்து செல்ல, தேஜூவுக்கு அவன் பேச்சில் விதிர்த்துப் போனது.

# 5

**செ**ழியனின் பதில் முகத்தில் அறைந்தது போல இருந்ததால், அதற்கு மேல் அவளால் அவனிடம் எதுவும் பேச முடியவில்லை; அப்படி என்று சொல்வதை விட பேசப் பிடிக்கவில்லை என்று தான் சொல்லணும். அவளும் பாதியிலே எழுந்து விட, இருவரும் ரெஸ்டாரெண்டை விட்டு வெளியில் வந்தார்கள். இவர்களைக் கண்டதும் வாலெட் காரை இவர்கள் முன் கொண்டு வந்து நிறுத்த, தேஜூ எதுவும் பேசாமல் பின் பக்கம் ஏறினாள்.

ஏனோ அவன் பக்கத்தில் அமர மனம் இடம் கொடுக்கவில்லை. பின்னால் ஏறியதற்கு ஏதாவது சொல்லட்டும், அப்புறம் அவனை கவனித்துக் கொள்ளலாம் என்று கருவியபடி ஏறியவளை, சலனமே இல்லாமல் திரும்பிப் பார்த்துவிட்டு, காரை எடுத்தவன் ஏதோ நினைவுகளில் மூழ்கியபடி மௌனமாக இருந்தான்.

தேஜூவும் ஆபீஸ் வந்தடைந்ததும், "தேங்க்ஸ்..."



என்ற வார்த்தையை வேண்டா வெறுப்பாக உதிர்த்துவிட்டு, தன் காரை எடுத்துக் கொண்டு சென்றவளுக்கு திரும்பவும் ஆபீஸ் செல்ல மனம் இல்லாததால் வீட்டிற்குத் திரும்பியவளை, எட்டாவது உலக அதிசயமாகப் பார்த்தார் எழில்.

"என்னடி அதிசயமாய்! மதிய நேரத்தில் வீட்டிற்கு வந்திருக்கே. ஏதும் உடம்பு சரியில்லையா?" என்று ஆச்சரியமாய்க் கேட்டாலும் அதில் சற்று பதட்டமும் கலந்திருந்தது.

"ம்ச்ச் அதெல்லாம் ஒன்றுமில்லை, வேலை விஷயமாய் வெளியில் போனேன், அப்படியே வீட்டிற்கு வந்துட்டேன்" என்று அலுப்பாக, சுரத்தே இல்லாமல் சொன்ன மகளை வித்தியாசமாகக் கவனித்தார்.

என்றைக்கும் இப்படிப் பேசுகிறவள் இல்லையே, இன்றைக்கு என்ன ஆனது என்று யோசித்தபடியே, "சரி சாப்பிட்டாயா? சாப்பாடு எடுத்து வைக்கவா?" என்று அக்கறையாகக் கேட்டார்.

"ம்ம்,அதெல்லாம் ஆச்சு. கொஞ்சம் அலுப்பாக இருக்கு. நான் தூங்கப் போறேன். என்னைத் தொல்லை செய்யாதேம்மா..." என்று அவரின் பதிலை எதிர் பார்க்காமல் தன் அறைக்குச் சென்றவளை யோசனையாகப் பார்த்தார்.

தேஜூ வந்ததைக் கவனித்த வேலைக்காரி, "அம்மா, பாப்பாவுக்கு சாப்பாடு எடுத்து வைக்கவா?" என்று கேட்டு அவரின் யோசனையைக் கலைத்தது.

"வேண்டாம், நீ போய் வேலையைக் கவனி..." என்றபடி டிவியின் முன் அமர்ந்தார். சிறிது நேரம் மகளைப் பற்றிய யோசனையில் டிவியில் கவனம்

பதியாது இருந்தவரை, டிவி தொடர் அவரைத் தன் பக்கம் இழுத்து மூழ்கடித்துக் கொள்ள, சுவாரசியமாக டிவி தொடரில் ஆழ்ந்து போனார்.

அவரின் லயிப்பை தேஜூவின் கைபேசி அழைப்பு நிகழ்வுலகுக்குக் கொண்டு வர, தேஜூ போனை மறந்து ஹாலிலே வைத்துவிட்டுப் போனதை அப்பொழுது தான் கவனித்தவர் மகளின் அறையை எட்டிப் பார்த்தார்.

மகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைக் கவனித்தவர், அவரே போனை எடுத்து, ''ஹலோ'' என்றதும், எதிர்முனையில் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதே மாதிரி இரண்டு மூன்று முறை நடக்க, எரிச்சலுடன் அவரே அதை ஸ்விட்ச் ஆப் செய்துவிட்டு தன் வேலையைத் தொடர்ந்தார்.

"சொல்லு ஆதவ், எப்படி இருக்கிறே? எப்போ எக்ஸாம்ஸ் ஆரம்பிக்கிறது? எப்போ இந்தியா பக்கம் தலை காட்டுவே?'' என்று சரமாரியாக கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்த தாய் சரளாவை நினைத்து சிரித்தான்.

"அம்மா இவ்வளவு கேள்விகளும் ஒரே சமயத்தில் கேட்டால் எப்படி பதில் சொல்றதாம்? கொஞ்சம் மூச்சு விட்டுத் தான் கேளுங்களேன். அப்பொழுதும் உங்களுக்குத் தேவையான பதில் கிடைக்கும்' என்றான் குறும்பாக.

"என்னப்பா பண்றது? எல்லாம் பழக்க தோஷம்... !' என்று சிரித்தவர், "சரி, என் எல்லா கேள்விகளுக்கும் வரிசையா பதில் சொல்லு' என்றார் சளைக்காமல்.

அவரின் எல்லா கேள்விகளுக்கும் பதிலைச் சொன்னவன் அவரின் கடைசிக் கேள்விக்கு, "இதற்கான பதில் அண்ணனுக்கே தெரியும். அவரைக் கேளுங்கள்...' என்று சொல்லிக்கொண்டு வந்தவன், "இப்போ அங்கே சாயங்காலமாச்சே! அண்ணன் ஆபிசிலிருந்து வந்தாச்சா?'' என்றான்.



"இன்னும் இல்லைப்பா. வர்ற நேரம் தான். ஹ்ம்ம், அவனும் வேலை வேலை என்று ஆலாய் பறக்கிறான். ஒரு கல்யாணத்தைச் செய்துவைச்சால் என் கடமை முடியும் என்று பார்த்தால் உன் அண்ணன் வாயையே திறக்க மாட்டேங்கிறான். நீ என்னடாவென்றால் நிம்மதியாய் அமெரிக்காவில் போய் உட்கார்ந்துட்டே...'' என்றார் ஆதங்கத்தோடு.

லானில் அமர்ந்து போனில் பேசிக்கொண்டிருந்த தாயிடம், "யாரும்மா போனில்...'' என்று கேட்டுக் கொண்டே வந்த செழியனை நோக்கித் திரும்பியவர்,

"தம்பி தான் பேசுகிறான், பேசு, நான் டிபன் எடுத்து வருகிறேன்...'' என்றபடி உள்ளே சென்றவரைத் தடுத்தி நிறுத்தி,

''எனக்கு ஒன்றும் வேண்டாம்மா, நீங்க பேசுங்க. எனக்கு தலைவலிக்குது'' என்று உள்ளே செல்ல, ஒரு பெருமூச்சுடன் இளைய மகனுடன் தன் பேச்சை தொடர்ந்தார்.

தன் ரூமிற்கு சென்று டிரெஸ்ஸைக் கூட கழற்றாமல், அப்படியே கட்டிலில் படுத்து இலக்கில்லாமல் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த வனின் மனதில் இன்று மதியம் தேஜூ கேட்ட கேள்வி தான் ஓடிக்கொண்டிருந்தது.

நான் ஏன் இப்படி என் கட்டுப்பாட்டை இழக்கிறேன். இன்னும் கொஞ்சம் நிதானமாக இருந்திருக்கலாமோ என்று தோன்றிய அதே சமயம், எப்படி முடியும்? அவளைப் பார்த்தாலே மதம் பிடித்து ஓடும் யானைகளைப் போல், என் நினைவுகளும் தறிகெட்டு ஓடுதே...!" என்று தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தவனை, பழைய நினைவுகள் துரத்த முகமெல்லாம் குப்பென்று வியர்த்துப் போனது.

சட்டென்று படுக்கையை விட்டு எழுந்து ஏசியை அதிகம் வைத்துவிட்டு, எதையும் யோசிக்கப் பிடிக்காமல் மீண்டும் கட்டிலில் படுத்தவனை, மனதிலிருந்த அலுப்பு அவனை உடனேயே தூக்கக் கடலில் அழுத்த நித்ராதேவியின் வசமானான்.

ஆபீஸ் விட்டு வந்து மாடிக்கு சென்றவன், இரவு உணவுக்கு நேரமாகியும் கீழே இறங்கி வராததால் அவனின் அறைக்குச் சென்ற சரளாவுக்கு, மகனின் தூக்கத்தைக் கண்டு வியப்பாக இருந்தது. தன் கணவர் இறந்து, எல்லா தொழில்களும் அவன் கைவசம் வந்த பிறகு அவன் இவ்வளவு சீக்கிரம் தூங்கி அவர் பார்த்ததே இல்லை.

ஆச்சரியத்துடன் அவனின் கட்டிலின் அருகில் சென்றவர் சிறு குழந்தை போல நிச்சலனமாக தூங்கும் மகனின் முகத்தை சில வினாடிகள் பார்த்துவிட்டு, அவனின் கைகொள்ளா கேசத்தை மென்மையாக வருடிக்கொண்டே, "பாவம், இப்படி நிம்மதியாக தூங்கி எவ்வளவு நாளாச்சோ...?" என்ற பெருமூச்சுடன் பரிதாபப்பட்டவர் கம்பளியை நன்றாக இழுத்துப் போர்த்தி, அறைக் கதவை சாத்திவிட்டு வெளியே வந்தார்.



அலுவகத்தினுள் நுழைந்த தேஜூவைக் கண்டதும் சரயுவின் முகம் பூவாய் மலர, "குட் மார்னிங் மேடம், என்ன இரண்டு நாளாய் ஆளையே காணோம். லீவ் மெசேஜ் தான் வந்தது. வாட் ஹாப்பன்ட் யார்...?" என்று தோழமையும், அக்கறையுமாகக் கலந்து கேட்டவளை வாஞ்சையாகப் பார்த்து புன்னகைத்தாள்.

"நத்திங் மா, கொஞ்சம் பெர்சனல் வொர்க் தட்ஸ் இட்... !" என்று புன்னகைக்க,

'ஓ'என்றவள், "தேஜூ, சொல்ல மறந்துட்டேனே, செழியன் சார் உன்னைக் கேட்டு மூன்று முறை போன் செய்துவிட்டார். உன் போன் நம்பர் அவரிடம் இல்லையா?" என ,

"ஹ்ம்ம் இருக்கே..." என்று அசுவாரசியமாக அவளுக்கு பதில் சொல்லிவிட்டு வேலையில் கவனத்தை திருப்பினாள்.

"ஹேய்! என்னப்பா, ஒரு மனுஷன் உன்னைத் தேடி பலதடவை கால் செய்தார் என்று சொல்கிறேன் ! நீ ஏன் எதற்கு என்று கூடக் கேட்காமல், யாருக்கு வந்த விருந்தோ என்று உன் வேலையைப் பார்க்கிறே? ஏன் தேஜு... உனக்கும், செழியன் சாருக்கும் ஏதேனும் பிரச்சனையா? என்று சரியாக யூகித்தவளைச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

"வாட் பிரச்சனையா? ஆர் யூ மேட்? அவர் நம்ம கஸ்டமர் அவ்வளவே. அவருடைய ப்ராஜெக்ட் பற்றி விசாரிக்க போன் செய்திருப்பார். இதற்குப் போய் இத்தனைக் கேள்விகள் கேட்டு ஏன் நேரத்தை வீணாக்குகிறாய் சரயு..." என்று சலனமில்லாத குரலில் கூற, அதற்கு மேல் அதைப் பற்றிப் பேச சரயுவால் முடியவில்லை.

தேஜூவுக்கு ஏனோ செழியனைப் பற்றி யோசிக்க எரிச்சலாக இருந்தது. தன்னைப் பற்றி அவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான். எதற்காக என்னிடம் இப்படியெல்லாம் பேசவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்தவள், 'ஒரு வேளை செழியனுக்கு ஏதேனும் காதல் இருந்து, அது தோல்வியில் முடிந்திருக்குமோ? அதனால் பெண் இனத்தையே வெறுக்கிறாரோ?' என்று தோன்றியதும் செழியனின் மேல் ஒரு நிமிடம் பரிதாபம் எழுந்தது.

ஆனால் மறுநிமிடமே அதற்காக உலகத்தில் உள்ள பெண் எல்லாம் மோசக்காரிகள் என்று எப்படி நினைக்கலாம். அப்படியே நினைத்தாலும் அதை முன் பின் தெரியாத பெண்ணிடம் எப்படி வெளிப் படுத்தலாம்? இது தான் வெளிநாட்டுப் படிப்பு சொல்லிக் கொடுத்த நாகரிகமா? என்று நினைக்க நினைக்க உள்ளம் கொதித்தது.

அவனைப் பற்றி நினைத்தாலே ஆத்திரமும், எரிச்சலும் முட்டிக் கொண்டு வர, வேலையில் கவனம் சிதறியது. ஒரு நிமிடம் கண்ணை மூடி தன்னை நிலைப்படுத்திக் கொண்டவள் மேற்கொண்டு எதைப் பற்றியும் யோசித்து நேரத்தையும், மனதையும் வீணடிக்க விரும்பாமல் செய்ய வேண்டிய வேலைகளை வரிசைப்படுத்தி அதில் மூழ்கிப் போனாள்.

ஹோட்டல் அப்ரூவல் கிடைக்கும் வரை அவனைச் சந்திக்கும் வாய்ப்பு இல்லையென்பதால் தேஜூவுக்கு வாழ்க்கை எந்தவிதச் சங்கடமுமில்லாமல் தெளிந்த நீரோடை போலச் சென்றது.



அடுத்த மூன்றாவது வாரத்திலே செழியனின் இன்ஃப்ளுயன்சால் சீக்கிரமே அப்ரூவல் கிடைக்க, அடுத்த கட்ட வேலைக்குத் தயார் செய்தாள். சேர்மனிடம் கலந்தாலோசித்து தன் டீமை ரெடி செய்து, வேலையைத் தொடங்க நாள் குறிக்கப்பட்டதும் செழியனுக்குத் தெரிவித்தாள்.

அந்த வாரத்திலே பூமி பூஜை ஏற்பாடு செய்திருந்ததால், காலையில் சீக்கிரமே கிளம்பி சைட்டுக்குச் செல்ல, அங்கு ஏற்கனவே செழியன், தன் தாயார் சரளாவோடு வந்திருந்தான். அங்கு ஏற்கனவே வந்திருந்த டீம் மெம்பர்களின் காலை வணக்கத்தை ஏற்று, பதில் வணக்கம் கூறியபடி வந்தவளை, செழியனின் கண்கள் லேசர் இல்லாத குறையாகத் துளைதெடுத்தது.

செழியனைக் கண்டதும், "குட் மார்னிங் சார்..." என்று புன்னகைத்தவள், அவன் பக்கத்தில் பழைய காலச் சினிமாக்களில் வரும் பணக்கார அம்மாக்கள் மாதிரி நிறைய நகைகளோடு, தங்க பிரேமிட்ட கண்ணாடி அணிந்து, பட்டுப் புடவையின் மேல் காஷ்மீர் ஷால் போர்த்தி கம்பீரமாக, அதே சமயம் சாந்தமே உருவாக நின்றிருந்தவரைக் கண்டதும் அவளின் கை தானாகக் கும்பிட, "வணக்கம்மா..." என்றாள் மரியாதையாக.

அவரும் அந்த நேரத்தில் தேஜூவையும், அவளின் அழகு, நடந்து வந்த தோரணம், பெரியவர்களுக்குக் கைகுவித்த பண்பு இவற்றை யெல்லாம் அளவிட்டுக் கொண்டே, யார் இந்தப் பெண்? என்று யோசனையூடே தேஜூவுக்கு பதில் வணக்கம் கூறினார்.

"அம்மா, இவங்க, மிஸ். தேஜஸ்வி. நம்ம ஹோட்டலை வடிவமைத்து, உருவாக்கித் தரப்போகிற ப்ராஜெக்ட் லீடர்...!" என்று அறிமுகப்படுத்தி வைத்ததும், சரளாவின் பார்வையில் பெருமையும், மரியாதையும் கூடியது.

"நேரமாச்சு, பூஜை தொடங்கலாமா...?" என்ற ஐயரின் கேள்வியில் எல்லோரும் பேச்சை நிறுத்தி விட்டு, பூஜையில் கவனம் செலுத்த இனிதாக பூஜை நிறைவேறியது.

ஐயருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து அனுப்பிவிட்டு வந்தவளிடம்,"ஏன் மிஸ்.தேஜஸ்வி, பூமி பூஜையை இவ்வளவு சிம்பிளாக ஏற்பாடு செய்தீர்கள்? இன்னும் கொஞ்சம் கிராண்டாக செய்திருக்கலாமே...?" என்று சற்று குறையும் குற்றமுமாக கேட்டவனுக்கு புன்னகை மாறாமல்,

"செய்திருக்கலாம் சார். ஆனால் என்னைப் பொறுத்தவரை இதை கிராண்டாக செய்வதைவிட ஹோட்டலை ஆடம்பரமாகக் கட்டி முடித்து அதன் திறப்பு விழாவை உங்கள் ஆசைப்படி மிகப் பெரிய அளவில் செயதால், அதன் வரவேற்பே தனி என்பது என் அபிப்ராயம் ...!" என சரளாவுக்கு தேஜூவின் தன்னம்பிக்கையான பேச்சு மிகவும் பிடித்துப் போனது

மகன் ஏதும் சொல்வதற்கு முன், "தேஜஸ்வி சொல்றதும் சரி தானே செழியா!" என்றவர், "அந்தக் காலத்தில் நாங்கள் வேலைக்குப் போவதற்கே போராட வேண்டியதாக இருந்தது... அப்படியே போனாலும் நிறைய அவமானங்களையும், கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டி இருந்தது. ஆனால் இன்றைய



பெண்கள் தொட முடியாத உயரத்தில் இருக்கிறீர்கள் என்று நினைக்கும் போது மிகவும் பெருமையாக இருக்கும்மா..." என்று சிலாகித்துப் பாராட்ட, செழியனின் முகம் எரிச்சலில் சுருங்கியது.

அதைக் கவனித்துவிட்ட தேஜு, அவருக்கு ஒரு நன்றி கூறி, மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல் தன் டீம் மெம்பர்ஸை அறிமுகப்படுத்தி வைக்க, அவளிடம் மேற்கொண்டு கேட்க வேண்டியவைகளைக் கேட்டு நிவர்த்தி செய்துகொண்டு, "ஓகே மிஸ், ஆல் த வெரி பெஸ்ட் பார் யுவர் சக்சஸ்...!" என்று மனதார பாராட்ட சிறு முறுவலுடன் ஏற்றுகொண்டாள்.

அன்றிலிருந்து ஹோட்டல் கட்டும் வேலை ஆரம்பித்துவிட்டதால் தேஜூவுக்குத் தான் நேரம் போதாமல் போனது. காலையில் ஆபீஸ் சென்று கையெழுத்து போட்டு விட்டு, முக்கியமான வேலைகளை முடித்துவிட்டு மதியத்திற்கும் மேல் சைட்டுக்கு மேற்பார்வையிடச் சென்றுவிடுவாள்.

அங்கு சாயங்காலம் வரை வேலைகளைக் கவனித்து, திருத்தம் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி, குறித்துக் கொள்ள வேண்டியவற்றைக் குறித்து, அடுத்த நாள் என்ன ப்ளான் என்று டீம் மெம்பர்களோடு விவாதித்து, வேலையாட்களிடம் பேசிவிட்டு வீடு திரும்ப பொழுது சாய்ந்துவிடும்.

சில சமயம் கட்டிடடத்தைப் பார்வையிட செழியன் வந்துவிட்டால், அங்கேயே அமைக்கப்பட்ட சிறு அலுவலகத்தில் அமர்ந்து, அவனின் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்வாள். அந்த மாதிரி சமயத்தில் தேஜு, மறந்தும்

கூட பர்சனல் விஷயங்களையோ, மற்ற பொது விஷயங்களையோ பேசுவதை கவனமாகத் தவிர்ப்பாள்.

செழியன், ஆரம்பத்தில் தேஜூவை காயப் படுத்துகிற மாதிரி பேசினாலும் நாளாக நாளாக அவள் வேலையில் காட்டும் ஆர்வமும், கடின உழைப்பும், செயற்கைத்தனம் இல்லாத பேச்சும், கண்ணியமான உடையும் செழியனைக் கொஞ்சம் ஈர்த்தது எனலாம். அதன் காரணமாக அவளை அடிக்கடி வார்த்தையால் சுடுவதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டான்.

செழியனின் மாற்றத்தை தேஜூ உணர்ந்திருந் தாலும், அவனிடம் எச்சரிக்கையாகவே ஒதுங்கி இருந்தாள். அவன் முன்னால் சிரிப்பதோ, ஏன் புன்னகைப்பதோ கூட இல்லாமல் ஒரு இயந்திரத் தனமாகவே இருக்கும் தேஜூவின் நடவடிக்கை.

ஆனால் சில மாதங்களாக இதுவே தொடர. அப்பொழுது தான் தேஜூ தன்னைத் தவிர மற்ற எல்லோரிடமும் சிரித்து இயல்பாக பேசுவதும். தன்னிடம் பேசும் பொழுது மட்டும் அவளின் முகம், ஓர் இறுக்கத்துடனே இருப்பதும் நினைவிற்கு வர. அவளின் மேல் கோபம் தான் அதிகமாகியது. இதற்கெல்லாம் மூல காரணம் தான் தான் என்பதே அடியோடு மறந்து போனது.

ஏனோ அவள் மற்ற ஆண்களிடம் சிரித்துப் பேசும் பொழுது, அவனுள் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரியும். அந்த மாதிரி சமயங்களில் அங்கிருக்கவே பிடிக்காமல் சீக்கிரமே அங்கிருந்து அகன்று விடுவான். அப்படிப் போக முடியாத தருணங்களில், பேச்சில் குத்தல் கலந்திருக்கும்.



தேஜூவுக்கு அவனின் குணம் தெரிந்த காரணத்தினால், அவனின் பேச்சை பெரிதாக எடுத்துக் குழப்பிக் கொள்வதில்லை. ஆனாலும் எல்லா நேரத்திலும் அப்படியே இருந்துவிட முடியுமா? அவளும் மனுஷி தானே. வேலை பளுவான நாட்களில் செழியனின் குத்தல் பேச்சைக் கேட்க நேர்ந்தால், பதிலுக்கு அவளும் சூடாக பதில் கொடுப்பாள்.

அன்றும் அப்படித்தான்! ஆபிசில் வேலை செய்துகொண்டிருந்தவளை அவளின் டீம் மெம்பர் அவசரமாக போன் செய்து வரச் சொல்ல, முடிக்க வேண்டிய வேலைகளை பாதியிலே விட்டுவிட்டு அரக்கப்பறக்க சைட்டுக்கு வந்தால் சூப்பர் வைசருக்கும், மேஸ்திரிக்கும் வாய்ப்பேச்சு முற்றி வேலையே நிறுத்தபட்டிருந்தது.

விசாரித்த தேஜூவிடம் ஆளாளுக்கு அவரவர் ஈகோவை காப்பாற்றிக் கொள்ளும் விதமாகப் பேசினார்களே ஒழிய, பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வரச் சற்றும் முயலவில்லை. மதிய வெயில் மண்டையைப் பிளக்க, மணி இரண்டாகியும் பிரச்சனை முடிவுக்கு வரவில்லை. போதாக்குறைக்கு பசி வேறு வயிற்றைக் கிள்ளியது.

இரண்டு நாள் வேலை நின்று போய் விட்டால், ஏகப்பட்ட பண விரயம் ஆகிவிடுமே என்ற அவளது கவலையைப் பற்றி அவர்களுக்கு என்ன அக்கறை? சற்றுநேரம் பேசிப் பார்த்தவள் யாருமே சமாதானத்திற்கு வராமல் போக, மேஸ்திரியை அழைத்து தடாலடியாக நான் வேறு ஆளைப் பார்த்துக்கொள்கிறேன், நீங்கள்

உங்கள் கணக்கை முடித்துக் கொள்ளுங்கள் என்று ஒரு பெரிய அணுகுண்டைத் தூக்கிப் போட்டாள்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத மேஸ்திரிக்குத் தன் வேலையே ஆட்டம் கண்டிருப்பதை உணர்ந்து, தேஜூ எதிர்பார்த்த மாதிரியே உடனடியாக சண்டையை வாபஸ் வாங்கி, வேலையைத் தொடங்கிய பிறகு தான் தேஜூவுக்கு அப்பாடா என்றானது.

பின்னே பெரிய வேலையாச்சே! இதுவரை வாங்கியதை விட சம்பளமும் அதிகமாக இருப்பதால் மேஸ்திரியின் ஈகோ தேஜூவின் அணுகுண்டில் கருகிப் போனது.

வேலையைக் கவனித்துக்கொள்ளச் சொல்லி விட்டு, சாப்பிட வீட்டுக்கு வந்தவள் ஹால் சோபாவில் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தவனைக் கண்டதும் ஆச்சரியத்தில் முகம் விகசித்தது.

# 6

**த**ன் கூடப் படித்த ராஜஸ்தானி தோழியின் அண்ணன் கிஷோரைக் கண்டதும் மனம் சந்தோஷத்தில் துள்ள, "வாங்க அண்ணா, எப்படி இருக்கிறீர்கள்? என்ன இந்தப் பக்கம் திடீர் விசிட்? அமீஷா எப்படி இருக்கிறாள்? உங்க கூட வந்திருக்கிறாளா?" என்று உற்சாகத்தில் படபடவென்று கேள்விகளை அடுக்கியவளைக் கண்டு சிரித்தவன், அவளின் கேள்விகளுக்குப் பதில் கூறும்போதே, தாயுடன் உள்ளிருந்து வந்த தோழி



அமீஷாவைக் கண்டதும் சகலமும் மறந்து போக தோழிகள் இருவரும் சந்தோஷத்துடன் அணைத்துக் கொண்டார்கள்.

இருவரின் அன்பை வாஞ்சையாகப் பார்த்துக் கொண்டிருந்த கிஷோர், "உன்னைப் பார்க்க வேண்டும் என்று ரொம்ப ஆசைப்பட்டாள் தேஜு. அதுமட்டு மில்லை, அடுத்த மாதம் இவளுக்குக் கல்யாணம் முடிவாகியிருக்கு. அதை உன்னிடம் சொல்லிட்டு உங்கள் எல்லோரையும் அழைக்கலாம் என்று தான் நாங்கள் வந்தோம்..." என்றான் உடைந்த தமிழில்.

தேஜு தோழியின் முகத்தை குறுகுறுப்பாக நோக்கி, அப்போ இனிமே அமீஷாவைப் பார்க்கவோ, பேசவோ இன்னொருத்தரிடம் நான் அனுமதி கேட்க வேண்டுமா?" என்று குறும்புடன் கூறிச் சீண்ட அமீஷாவின் முகம்... சிவந்த முகம் மேலும் வெட்கத்தில் சிவந்து போனது.

ஹாலில் எல்லோருடனும் அமர்ந்து தோழியைக் கேலி செய்துகொண்டிருந்த மகளிடம், "இவ்வளவு நேரம் உனக்காகத் தான் காத்திருந்தோம். நீ வர லேட்டாகும் என்று நான் தான் எல்லோரையும் சாப்பிடச் சொல்லிட்டேன். நீ சாப்பிட வா, நேரமாச்சு தேஜூ..." என்று அழைத்தார்.

"நீங்க பேசிட்டிருங்க ஆன்ட்டி. நான் தேஜூவுக்குப் பரிமாறுகிறேன்..." என்ற அமீஷாவின் பதில், எழிலின் முகத்தில் புன்னகையைக் கொண்டு வந்தது.

"அம்மா இவ மாப்பிள்ளைக்குச் சேவை செய்ய இப்பவே ட்ரைனிங் எடுக்கிறா?" என்ற தேஜூவின்

கேலிக்கு எல்லோருமே சிரிக்க, அமீஷாவின் முகம் ரத்தமென சிவந்துவிட, "சீ போடி, வாயாடி..." என்று செல்லமாகத் திட்டி சிரித்துக் கொண்டே தேஜூவுக்குப் பரிமாறினாள்.

சாப்பிட்டு முடிந்ததும் அவளை அழைத்துக் கொண்டு, தன் ரூமிற்குச் சென்று மாப்பிள்ளை பற்றியும், கல்யாணத்தைப் பற்றியும் கேட்டுக் கொண்டிருந்தவள், "அமீஷா, அங்கே எல்லாப் பிரச்சனையும் சரியாயிடுச்சா... ?" என்றாள் திடீரென்று. அதைக் கேட்கும் போதே தேஜூவின் குரலில் ஓர் இனம் புரியாத நடுக்கம் இழையோடியது.

அதுவரை மலர்ந்திருந்த முகம் வெயிலில் பிடிங்கி எறியப்பட்ட மலராய் சட்டென்று வாடிவிட, "ம்ச்ச், இன்னும் இல்லைடி? எப்போவாவது அவங்களைச் சந்திக்க நேர்ந்தால், அவங்க பேச்சில் ஆத்திரமும், வன்மமும் தான் ஓங்கியிருக்கும்..." என்றாள் வாட்டமாக.

"நான் ஒன்றுமே செய்யவில்லையே? எல்லாமே அவர்கள் தவறு தானே?" என்று கண்கலங்கிய தோழியை ஆறுதலாக அணைத்துக் கொண்டாள்.

எந்தத் தவறும் செய்யாமலே தன் உயிருக்கு உயிரான தோழி நிறைய கஷ்டங்களையும், அவமானங்களையும் சந்தித்து அதனால் மன வெறுத்துப் போயிருப்பது புரிந்து தான், அந்தப் பேச்சையே எடுக்காமல் இருந்தாள். ஆனால் தேஜூவே அதைப் பற்றிக் கேட்டதும் சொல்ல வேண்டிய நிர்பந்தம். இவளின் வாழ்க்கையில் நடப்பவை எல்லாம் வரமா? சாபமா? என்று யோசித்தவளுக்கு, "ஹ்ம்ம், எல்லாம்



கடவுளுக்கே வெளிச்சம்..." என்று பெருமூச்செழுந்தது அமீஷாவிற்கு.

தோழியின் முக வாட்டத்தைக் காணச் சகிக்காமல், "ஹேய் விடுப்பா? சில பேரின் குணத்தை திருத்த முடியாது. ஒருத்தரைப் பிடிக்காமல் போனால் அவர்களை காரண காரியம் இல்லாமல் வெறுப்பது சிலரின் இயல்பு தானே. இது உனக்கு தெரியாததா? லீவ் இட்..." என்று தேற்றியவள், "சரி, நீ எப்போ கல்யாணச் சாப்பாடு போடப் போறே...?" என்று பேச்சை திசை திருப்பினாள்.

அவளின் கேள்விக்குப் பதில் சொல்லும் முன், தாய் அழைக்கும் சத்தம் கேட்டு முகத்தைத் துடைத்து சரி செய்து கொண்டு தோழியுடன் வெளியே வந்த தேஜூவுக்கு, ஹாலில் அமர்ந்திருந்த சரணைக் கண்டதும் ஆச்சரியத்தில் முகம் விரிந்தது.

தன் வீட்டில் அவனைச் சற்றும் எதிர்பார்க்காத தால் அன்புடன் வரவேற்று, கிஷோருக்கும், அமீஷாவுக்கும் அறிமுகப்படுத்தி வைக்க, அரட்டையும் கேலியுமாக நேரம் ஓடியது. சைட்டுக்குச் செல்ல நேரமாகிவிட, தோழியிடம் மாலை வந்து பேசுவதாகக் கூறிவிட்டு கிளம்பும்போது சரணும், கிஷோரும் அவளின் ப்ராஜெக்டை பார்க்க விரும்புவதாகக் கூறவும், அவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றாள்.

கட்டிடத்தைச் சுற்றிக் காட்டியதும், இருவருக்குமே பிரமிப்பாக இருந்தது. அவளின் கற்பனை வடிவம் அழகாகச் சிறிது சிறிதாக உயிர் பெறுவதைப் பார்த்து பிரமித்த சரண், அவளை மனம் திறந்துப் பாராட்டி தனக்குத் தோன்றிய சில டிப்ஸ்களை வழங்க, அதை

எந்தவித பந்தாவுமில்லாமல் பெற்றுக் கொண்ட தேஜூவை நினைத்துப் பெருமையாக இருந்தது.

பொதுவாகவே சரணுக்கு அவ்வளவு எளிதில் யாரிடமும் இயல்பாகப் பழகிவிடும் குணம் இல்லை. பேசும் போதும் கூட அளந்து தான் பேசுவான். ஏனோ தேஜூவிடம் பழகும் போது மட்டும் இந்த இயல்பு அவனிடம் தொலைந்து போனது.

தேஜூவுக்கும் அவனிடம் பேசிப் பழகிய சிலமணி நேரங்களிலே கிஷோரைப் போல, அவனையும் ஒரு சகோதரனாகத் தான் நினைக்கத் தோன்றியது. முதன் முதல் செழியனைப் பார்த்த போது ஏற்பட்ட ஒரு தடுமாற்றமோ,நெஞ்சில் ஒரு குறுகுறுப்போ ஏற்பட வில்லை. அதன் காரணமாக அவனிடம் பேச, தேஜூவுக்கு எந்தத் தயக்கமும் உண்டாகவில்லை.

அவன் சில திருத்தங்கள் கூறும்போதும் கூட, இயல்பாக எழும் ஈகோ கூட அப்போது எழவில்லை. ஒரு சகோதரனின் யோசனையை ஏற்க அகங்காரம் குறுக்கே வருமா என்ன?

கிஷோரும் சரணின் வார்த்தைகளைப் பின்பற்றி தேஜூவைப் பாராட்டிப் பேச, அவளுக்கு உலகமஹா ஆச்சரியமாகிப் போனது. பின்னே கிஷோர் யாரையும் அவ்வளவு எளிதில் பாராட்டிவிட மாட்டார் என்று அமீஷாவே பலமுறை சொல்லியிருக்கிறாள். அது தேஜூவுக்கும் தெரியும். அப்படிப்பட்டவர்ம இன்று மனம் திறந்து பாராட்டியது, அவளுக்குப் பெரிய விருது கிடைத்த மாதிரி நிறைவாக இருந்தது.

கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு மூவரும் அலுவலகத்தின் உள்ளே அமர்ந்து சிரித்துப்



பேசிக்கொண்டிருக்க, அங்கு வந்த செழியனின் கண்ணில் இந்தக் காட்சி பட, அவனின் நெஞ்சில் வன்மம் எழுந்தது. அதை விட, அவன் உள்ளே நுழைந்ததைக் கூட கவனிக்காமல், இருவரிடமும் தேஜூ சிரித்துப் பேசியது வேறு கோபத் தீயை விசிறி விட்ட மாதிரி இருக்க, "எக்ஸ்க்யூஸ்மீ..." என்றான் எரிச்சல் கலந்த அழுத்தமான குரலில்.

மூவரும் அந்தக் குரலில் பேச்சை நிறுத்தித் திரும்ப, முகத்தில் ரௌத்திரத்தோடு நின்றிருந்த செழியனைக் கண்டதும், தேஜூவின் முகத்தில் அவ்வளவு நேரம் குடிகொண்டிருந்த மகிழ்ச்சி விடைபெற்றுச் சென்றுவிட, அவனிடம், "ஹலோ சார்..." என்றவள், மற்ற இருவரையும் அவனுக்கு பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தாள்.

அவனிடம் கைகுலுக்கி கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு... சரணும், கிஷோரும் புறப்பட்டுச் சென்றதும், "உங்க இஷ்டத்திற்கும் கூத்தடிக்க, இது உங்கள் வீடு இல்லை; வேலை நடக்கிற இடம்... ஞாபகம் வைத்துகொண்டால் நல்லது'' என்றான் புரியாத குரலில்.

சடாரென்று திரும்பியவள்,"வாட் டூ யு மீன் மிஸ்டர்.செழியன்...?'' என்றாள் சீற்றத்துடன்.

"ஹ்ம்ம், நூற்றுக்கணக்கானோர் வேலை செய்கிற இடத்தில் இப்படி உன் ஆண் நண்பர்களை அழைத்து வந்து கொட்டமடிக்க வேண்டாமென்று சொல்கிறேன், கண்ணியமாக நடந்து கொள்ளச் சொல்கிறேன்'' என்றான் சினத்துடன்.

"ஸ்டாப் யுவர் டர்டி டாக்! மைன்ட் யுவர்

வேர்ட்ஸ்" என்று குரலை உயர்த்தி ஒரு பெண் புலி மாதிரி சீறியவள், "வாட் யு திங்கிங் அபௌட் மீ, நானும் பார்த்துகிட்டே இருக்கேன், நீங்க உங்க இஷ்டத்திற்கு பேசிகிட்டே போறீங்க. நீங்க பேசுவதற்கெல்லாம் நான் அமைதியாக இருந்தால் என்ன வேண்டுமென்றாலும் பேசிடலாம் என்று நினைத்தீர்களா?

எங்கே? எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று சொல்லித் தர உங்களுக்கு என்ன தகுதி இருக்கு மிஸ்டர்.செழியன்? கண்ணியத்தைப் பற்றி நீங்க பேசறிங்களா? கண்ணியத்தை நீங்கள் முதலில் கற்றுக்கொள்ளுங்கள். அப்புறம் மத்தவங்களுக்குப் பாடம் எடுக்கலாம்..." என்று சீறியவள், ஆத்திரம் அடங்காமலே அவனை அலட்சியப்படுத்திவிட்டு வெளியே செல்ல எத்தனிக்க, அவளின் கையை இரும்பாகப் பற்றித் தன் பக்கம் திருப்பினான்.

"என்ன சொன்னே? நான் கண்ணியத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமா? ம்ஹீம், அப்படி ஒன்று என்னிடம் இருப்பதால் தான், இன்று வரை நான் உன்னிடம் பொறுமையாக நடந்து கொள்கிறேன். இல்லையென்றால் உன் நிலைமையே வேறு...!" என்று உறும, தேஜூவுக்கு அவன் பேசிய பாஷையே புரியாதது போல விழித்தாள்.

எல்லாமே சில வினாடிகள் தான். மீண்டும் அவளின் கோபம் சீறிக்கொண்டு எழ, அவனிடம் இருந்து கையை உதறிக்கொண்டு, "ஓ! முன் பின் தெரியாத, பார்த்திராத பெண்ணைத் தவறாகப் பேசுவது தான் உங்களுக்குத் தெரிந்த கண்ணியமா? சாரி எனக்கு



அது தான் கண்ணியம், மரியாதை என்று தெரியாது மிஸ்டர்.செழியன். இனிமேல் உங்களிடமிருந்து கற்றுக் கொள்கிறேன். சரியா...?" என்று படு நக்கலாகப் பேசிவிட்டு ஓர் அலட்சியத்தோடு நேர்கொண்ட நடையோடு வெளியே சென்ற தேஜூவைக் கண்டு திக்பிரமை பிடித்தவன் மாதிரி நின்றான்.

அவனிடம் இதுவரை யாரும் இப்படிப் பேசியதில்லை, எல்லோருமே அவனுக்குப் பணிந்து, அவன் சொல்கிற வார்த்தைகளை ஏற்று வேலை செய்வதைப் பார்த்தே பழக்கப்பட்டவன். அப்படிப் பட்டவனுக்கு, இன்று தேஜூ அவனை தூக்கியெறிந்து பேசியது சிறிது அதிர்ச்சியைக் கொடுத்தாலும், அவள் பேசிய தோரணை அவனைச் சற்றே குழப்பியது.

தவறு செய்தவளால் நான் பேசிய வார்த்தைகளுக்கு சீறிக்கொண்டு எழ முடியாது. அவளின் பேச்சில், முகத்தில், கண்ணில் எந்த ஒரு குற்ற உணர்வும் இல்லை. அப்படி என்றால் நான் தான் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறேனா? என்று புதிதாக அவனுள் சிறு குழப்பம் உண்டானது.

ஆனால் அடுத்த வினாடியே, 'இல்லை, நல்லவள் போல் இவள் நடிக்கிறாள். விட மாட்டேன்! இவள் வாயாலே உண்மையை வரவழைக்கிறேன்...' என்று கருவிக்கொண்டே வெளியே வர, அங்கு தேஜூ இல்லாததால் எரிச்சலுடன் அவனும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு தேஜூ செழியனைக் கண்டாலும், கடமைக்காகக் கூட முறுவலிப்பதில்லை. அவனிடம் எது கேட்பதென்றாலும், சொல்வதென்றாலும் தன் டீம் மெம்பர்களை

வைத்தே வேலையை முடித்துக் கொள்ள செழியனுக்கு அவளிடம் பேச சந்தர்ப்பமில்லாமல் போனது.

இப்படியே நாட்கள் காற்றில் அடித்துச் செல்லும் சருகுகள் போல பறந்து செல்ல, தேஜூவுக்கும் வேலை சரியாக இருந்தது. பல சமயங்களில் செழியன் அவளிடம் பேச நாடி வந்தாலோ, வேறு வேலையைக் கவனிப்பது போல பாசாங்கு செய்து, கவனமாக அவனைத் தவிர்த்துவிடுவாள்.

ஆனால் எவ்வளவு நாள் தான் இந்த கண்ணாமூச்சி ஆட்டத்தைத் தொடர முடியும்? எதற்கும் ஒரு முற்றுப்புள்ளி உண்டல்லவா? இவர்களின் கண்ணாமூச்சி ஆட்டத்திற்கு முற்றுப்புள்ளியாய் வந்தவர் செழியனின் தாய் சரளா.

கட்டிட வேலை ஆரம்பித்த நாளிலிருந்து பல தடவை தனியாகவும், சில சமயங்களில் செழியன் கூடவும் வந்து சுற்றிப் பார்த்துவிட்டு தேஜூவிடம் சிறிது நேரம் பேசிவிட்டுத் தான் செல்வார். தனியாக வரும் சமயங்களில் எந்தவித தடங்கலும் இன்றி அவரிடம் சிரித்துப் பேசுபவள், செழியன் கூட வரும் போது மட்டும் வார்த்தைகளை அளந்தே பேசுவாள். அவருக்கே அவளின் மாற்றங்கள் புரிந்தாலும் அதற்கான காரணம் புரியாமல் போனது.

செழியனைக் கண்டாலே ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையாய் தேஜூ மாறுவதற்கான காரணத்தை, ஒருமுறை மகன் கூட வரும்பொழுது காண நேரிட்டது. இருவரும் எலியும் பூனையுமாக சீறிக்கொண்டு நின்றது, சரளாவுக்குள் ஒரு குழப்பத்தை ஏற்படுத் தினாலும், தான் கண்டதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள,



அவர்களுக்குத் தெரியாமல் இருவரையும் நோட்டமிட ஆரம்பித்தவருக்குத் தலையே சுற்றிப் போனது.

எப்பொழுதும் சிரித்த முகமாக இருக்கும் தேஜூவின் முகம், செழியனைக் கண்டால் மட்டும் இறுகிவிடுவதையும், யாரிடமும் முகம் சுளிக்காத மகன் தேஜூவைக் கண்டால் கடுவன் பூனை மாதிரி மாறிவிடுவதையும் கவனித்தவருக்கு, இருவரையும் நினைத்து கவலையாக இருந்தது.

பின்னே இருக்காதா தேஜூவைப் பற்றி தனக்குள் நிறைய கற்பனைகளை வளர்த்து வைத்திருக் கிறாரே! அந்தக் கற்பனைக் கோட்டைகள் இவர்களின் சண்டைகளில் மணல் கோட்டை மாதிரி தகர்ந்து போய்விட்டால், அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அவருக்கு கண்டிப்பாக இல்லை.

இவர்கள் ஏன் சண்டை போட்டுக்கொள்ள வேண்டும்? என்ன காரணமாக இருக்கும்? இந்த ப்ராஜெக்ட் கொடுக்கும் வரை செழியனுக்கு தேஜூவைத் தெரியாது. அவளுக்கும் அப்படியே! அப்படியிருக்கும் பொழுது இந்தப் ப்ராஜெக்ட் ஆரம்பித்த நாளிலிருந்து இவன் ஏன் தேஜூவிடம் கடுவன் பூனையாகிப் போனான்? என்று யோசிக்க யோசிக்க குழப்பம் தான் மிஞ்சியது.

இருவரில் யாரிடமாவது கேட்டுக் குழப்பத்தைத் தெளிவுப் படுத்திக் கொள்ளலாம் என்றால் இருவருமே கண்டிப்பாகச் சொல்ல மாட்டார்கள். அதற்காக அப்படியே விட்டு விடவும் முடியாது! எப்படியாவது இவர்கள் சண்டையைச் சரி செய்ய வேண்டும். என்ன

செய்யலாம் என்று யோசித்தபொழுது ஒரு நல்ல ஐடியா கிடைக்க, உடனே அதை செயல்படுத்தலானார்.

கட்டிடத்தைப் பார்வையிட வரும் பொழுதெல்லாம் தேஜூவை வீட்டிற்கு வரும்படி அழைப்பார். ஆனால் அவள் செழியனின் நடத்தை காரணமாக தட்டிக் கழித்துக்கொண்டே வந்தாள்.

சரளாவும் ஒரு நாள் மனவருத்தத்துடனே, "ஏன் தேஜூ எங்க வீட்டுக்கெல்லாம் வர உனக்கு இஷ்டமில்லையா? ஆன்ட்டி... ஆன்ட்டி என்று வாய் நிறையக் கூப்பிடுகிறாய்? ஆனால் நான் வீட்டிற்குக் கூப்பிட்டால் மட்டும் உனக்கு நேரமில்லாமல் போகிறது" என்றும் கேட்டே விட்டார்.

ஆனால் அப்பொழுதும் தேஜூ, சிறு முறுவலை பதிலாகக் கொடுத்தாளே தவிர,அவரின் கேள்விக்குச் சரியான பதிலைச் சொல்லவில்லை என்று நினைவு வர உடனே களத்தில் இறங்க ஆரம்பித்தார்.

# 7

**கா**லிங்பெல் சத்தம் கேட்டு புத்தகத்தில் மூழ்கியிருந்த எழில், நிமிர்ந்து கடிகாரத்தை நோக்க அது மூன்றரை எனக் காட்டியது."யாரது இந்த நேரத்தில்...?" என்று தனக்குள் பேசிக் கொண்டே புத்தகத்தை மூடிவைத்துவிட்டு, கதவைத் திறந்தவருக்கு வெளியில் கண்ணாடி போட்டுக்கொண்டு, சிறு முறுவலுடன் ஒரு நடுத்தர வயதுள்ள பெண்மணியைக் கண்டதும்



எழிலின் புருவம் நெரிந்தது.

"நீங்க...?" என்று கேள்வியுடன் இழுத்த எழிலிடம், 'இது தேஜஸ்வி வீடுதானே...?" என்று கேட்டவருக்கு "ஆமாம்" என்றதும்,

"அப்போ உங்களின் கேள்விக்கு உள்ளே வந்து பதில் சொல்லலாமா?" என்று புன்னகையுடன் கேட்க, எழிலுக்கு விநோதமாக இருந்தது! யாரென்று தெரியாத பெண்மணியை உள்ளே விடலாமா? வேண்டாமா? என்ற சிறு குழப்பத்தினூடே அவரை வரவேற்றார்.

அவரின் எதிரில் அமர்ந்த எழில், "நீங்க... யாரென்று சொல்லவே இல்லையே..." என்று தயக்கத்துடன் இழுப்பதைக் கண்டு கலகலவென்று சிரித்து,

"நான் சரளா ? தேஜூ..." என்று சொல்லி முடிப்பதற்குள்,

"நீங்க செழியன் க்ரூப் ஆப் கம்பனீஸ் எம்.டி.செழியனின் தாய்! சரி தானே...?" என்று அவரை முந்திக்கொண்டு ஆச்சரியத்துடன் கூறிய எழிலை வியப்பாகப் பார்த்தார்.

"உங்களைப் பற்றி தேஜூ நிறையச் சொல்லியிருக்கா... அது தான் உங்க பெயரை சொன்னதும் நான் தெரிஞ்சிகிட்டேன்..." என்று விளக்கமளித்துவிட்டு, "ஒரு போன் கூடச் செய்யாமல் சர்ப்ரைசாக வீட்டுக்கு வந்திருக்கீங்க, என்ன சாப்பிடறீங்க காபியா? டீயா...?" என்று உபசரிக்க, அவரின் கையைப் பிடித்தமர்த்தி,

"அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம், நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வந்தேன்.

அதைக் கேட்டு விட்டு எனக்கென்ன கொடுக்கலாம் என்று அப்புறமா முடிவு செய் எழில்...!'' என்று புதிர் போட்டு உரிமையுடன் பேச, சிறியவருக்கு மேலும் ஆச்சரியம் உண்டாகியது.

"என் பெயர்...'' என்று இழுத்த எழிலிடம்,

"ஏன் என்னைப் பற்றித் தான் தேஜூ உன்னிடம் சொல்வாளா? உன்னைப் பற்றி என்னிடம் சொல்ல மாட்டாளா?" என்றதும் எழிலின் முகத்தில் சிறு முறுவல் மலர,

"சொல்லுங்க என்ன விஷயமா வந்தீங்க...?" என்றார் ஆர்வத்துடன்.

எழிலின் கேள்விக்கு சில வினாடிகள் மௌனமாக இருந்தவர், ஒரு பெருமூச்சுடன், "நான் சுத்தி வளைச்சுப் பேச விரும்பலை எழில், நேரடியாவே விஷயத்திற்கு வந்திடறேன்... உங்கள் மகள் தேஜூவை, என் பையன் செழியனுக்குப் பொண்ணு கேட்க வந்திருக்கிறேன்...!" என்று பட்டென்று விஷயத்தைப் போட்டு உடைக்க, எழிலுக்கு ஆச்சரியம் ப்ளஸ் சந்தோஷத்தில் வாயடைத்துப் போனது.

உடனேயே, "தேஜூ கல்யாணத்தைப் பற்றி பேசினாலே கோபப்படுகிறாள். விருது வாங்கிய பிறகு தான் கல்யாணம் என்ற முடிவில் தீர்க்கமாக இருக்கும் பொழுது, நாம் ஆசைப்பட்டு என்ன ஆகப் போகிறது...?" என்று மனசு தொட்டாற் சுணுங்கியாய் சுருங்கி, எதிரில் அமர்ந்திருந்தவருக்கு சட்டென்று பதில் கூற முடியாமல் அமைதியானார்.

"என்னம்மா, நான் சொன்னதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் அமைதியாக இருக்கிறே? ஏன் இந்தச்



சம்மந்தத்தில் உனக்கு விருப்பம் இல்லையா?" என்றார் நெஞ்சம் படபடக்க.

அவசரமாக, "ச்சே..ச்சே...! அப்படி இல்லைம்மா!" என்றவர் சற்று முன் தேஜூவைப் பற்றித் தான் நினைத்ததை அவரிடம் சற்றுக் கவலையுடன் பகிர்ந்து கொண்டதும்,

"அவ்வளவு தானே... ? இப்போதைக்குத் தானே கல்யாணம் வேண்டாம் என்றாள். இந்த ஜென்மத்தில் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லலையே...!" என்று கொஞ்சம் கூட டென்ஷனே இல்லாமல் பேசியவரைக் கண்டு எழிலுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"என்ன எழில் நான் பேசறது உனக்கு ஆச்சரியமாக இருக்கா...? அதை விட ஆச்சரியமான விஷயம் ஒன்று சொல்றேன் கேளு" என்றவர் தேஜூவுக்கும், செழியனுக்கும் இடையே நடக்கும் பனிப்போரைப் பற்றிக் கூறிச் சிரிக்க, எழில் ஆவென்று வாயைப் பிளந்தார்.

அது சரி! ஏற்கனவே கல்யாணமே வேண்டாம் என்கிற பெண்ணிற்கு, பிடிக்காத பையனைக் கட்டி வைப்பதாவது? இதெல்லாம் கனவில் கூட நடக்காது. இவங்க என்னடாவென்றால் கொஞ்சம் கூட பதற்றமே இல்லாமல் இருக்கிறார்களே? இவர்களைப் புரிந்து கொள்ள முடியவே இல்லை என்று யோசிக்க, அவரின் முன் கையை மேலும் கீழும் ஆட்டி, "என்ன எழில்? அடிக்கடி வேறு உலகத்திற்குப் போயிடறே..." என்று சிரித்தார்.

"எனக்கு உங்களைப் புரிஞ்சிக்கவே முடியலைமா"

என்று தன் மனதில் நினைத்ததை அவரிடம் கொட்டித் தீர்க்க,

"இதுக்கு ஏன் இவ்வளவு கவலைப்படறே? யார் எலியும் பூனையுமா இருக்கிறார்களோ அவர்களிடையே தான் அன்பும் காதலும் அதிகமாக இருக்கும் என்று அர்த்தம். என்ன நான் சொல்றது புரியலையா? இப்படி முழிக்கிறே..." என்று மேலும் சிரித்துவிட்டுத் தொடர்ந்தார்.

"அன்யோன்யமாய் இருக்கும் தம்பதிகளை விட அடிக்கடி சண்டை போட்டுக்கொள்கிறவர்கள் தான் அதிகம் பிள்ளை பெற்றுக் கொள்வார்களாம்! புரியும்படி எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால் அடிக்கிற கை தான் அணைக்கும். இப்போவாவது புரிந்ததா?" என்றவர்,

"எனக்கு இப்போ தேவையானது உன் கணவர் மற்றும் உன்னுடைய சம்மதம் தான். உங்கள் இருவருக்கும் ஓகே என்றால் அவர்கள் இரண்டு பேரையும் ராசியாக்கி விடலாம். என்ன சொல்கிறாய் எழில்...?" என்றார் ஆர்வமாக.

"அம்மா! இதில் என் சம்மதத்தை விட தேஜூவின் சம்மதம் தான் ரொம்ப முக்கியம். அப்படியே அவள் சம்மதித்தாலும், உங்கள் மகனுக்கு என் மகளைப் பிடிக்காத பட்சத்தில் நம்மால் என்ன செய்ய இயலும் என்று நினைக்கிறீர்கள். முதலில் அவர்கள் இருவரிடமும் கேட்டுக்கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரலாமே..." என,

"கெட்டது குடி! இப்போ அவர்களிடையே பனிப்போர் நடக்கிறது என்று சொல்லியும், நீ இப்படிச்



சொல்கிறாயே எழில். நீ கேட்ட உடனே அவர்கள் சம்மதம் என்று சொல்வார்கள் என்றா நினைக்கிறாய்? கனவிலும் அப்படி நினையாதே. எனக்கென்னமோ அவர்கள் இருவரின் மனதிலும் பரஸ்பரம் ஒரு ஈர்ப்பு இருக்கிறது. ஆனால் அதை வெளியிட முடியாத அளவிற்கு ஏதோ ஒன்று அவர்களைத் தடுக்கிறது.

இதில் நான் கவனித்த வரைக்கும், என் மகன் தான் அவர்களிடையே நடக்கும் பனிப்போருக்கு முக்கிய காரணகர்த்தா என்று நினைக்கிறேன். அதை நம்மால் தீர்த்து வைக்க முடியாது. ஆனால் திசை மாற்ற முடியுமில்லையா? அதை நாம் செய்தால் போதும். மீதியை காலமும், அவர்களின் வயதும் பார்த்துக் கொள்ளும். அதனால் தான் மீண்டும் கேட்கிறேன் என் மகனுக்கு உன் பெண்ணைத் தரச் சம்மதமா?" என்று நீண்ட விளக்கம் கொடுத்துக் கேட்டு நிறுத்தினார்.

சிறிதுநேரம் யோசித்தவர் ஒரு முடிவுடன், "அம்மா எனக்கும், தேஜூவுக்கு ஒரு கல்யாணத்தை செய்து வைக்கணும் என்று ஆசை தான். ஆனால் அவள் பிடிகொடுத்தே பேச மாட்டேன்கிறாள். அவள் அப்பாவும் அவளுடைய போக்கிற்கே போவதால் என் ஆசை நிறைவேற மாட்டேன்கிறது. என் மகளுக்கு, உங்கள் வீட்டு மருமகளாகும் பாக்கியம் தானாகவே வரும் பொழுது, அதை நான் ஏன் குறுக்கே நின்று தடுக்க வேண்டும்? அதனால் இந்தச் சம்மந்தத்தில் எனக்குப் பூரண சம்மதம். என் கணவரிடம் நான் பேசிக்கொள்கிறேன்!" என்று மன நிறைவோடு கூற சாளாவிற்கு மனதிலிருந்த பாரம் குறைந்து லேசாகியது.

உடனேயே அடுத்த சந்தேகம் நெஞ்சில் எழ,

"சரிம்மா நான் மீண்டும் கேட்கிறேனே என்று தவறாக நினைக்காதீர்கள். இப்போ நாம மட்டும் முடிவு செய்தால் போதுமா? தேஜூ இதற்கு ஒத்துக்கொள்ள வேண்டுமே" என்ற கவலை புதிதாக முளைத்தது.

"அதைப்பற்றி கவலைப்படாதே எழில், என் மருமகள் அவள் ஆசைப்படி ஒரு விருது வாங்கும் வரை காத்திருப்போம். அதற்குள் அவர்களிடையே நிச்சயம் ஒரு நல்ல புரிதல் தன்மை வளரும்..." என்றவரை இடைமறித்தார்.

"எப்படி! இருவரையும் பிரச்சனையிலிருந்து திசை திருப்பப் போறீங்க? ஏனென்றால் தேஜூ மிகவும் பிடிவாதக்காரி . அவளுக்கு ஒருத்தரைப் பிடிக்கவில்லையென்றால் அவரிருக்கும் பக்கம் கூடத் திரும்ப மாட்டாள்..." என்றவரின் குரலில் கவலை தெரிந்தது.

"எழில், நான் மறுபடியும் சொல்கிறேன்? அவர்களுக்குள் என்ன பிரச்சனையென்று எனக்குத் தெரியாது. கேட்டாலும் சொல்லப் போவதில்லை; நமக்கு அது தேவையும் இல்லாதது. ஆனால் இருவருக்குமிடையே உள்ள பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள, நாம சில காரியங்கள் செய்தாக வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயம் அவர்களிடையே ஒரு கோபதாபங்கள், ஈகோ இதெல்லாம் விலகிவிடும். அப்புறம் நாம நினைத்தது நிச்சயம் நடக்கும்..." என்று இலகுவாக திட்டம் வகுத்தவரை கண்கள் விரிய ஆச்சரியத்துடன் பார்த்தார்.

"ஓ!" என்றவர், "சரிம்மா, அதுக்கு நான் செய்ய வேண்டும் சொல்லுங்க..." என,



சரளா அவரின் ஆர்வத்தைக் கண்டு சிரித்து விட்டு, "சரி என்ன சாப்பிடுறீங்கன்னு இப்போ கேட்க மாட்டியா?" என்று குறும்பாகக் கேட்டதும்,

அவசரமாக அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, "சொல்லுங்கம்மா, என்ன சாப்பிடுறீங்க?" என்று கேட்டுக் கொண்டே பரபரப்பாக எழுந்தார்.

எழிலின் பதட்டத்தைக் கண்டு வாய்விட்டுச் சிரித்து, "இதுக்கு எதுக்கும்மா மன்னிப்பு, நான் சும்மா உன்னைச் சீண்டினேன். நீ என் பொண்ணு மாதிரி, எதுக்கு இந்தச் சம்பிரதாயம்? நீ உட்கார். எனக்கு எதுவும் வேண்டாம்..." என்று கூறியும் விடாமல் பணியாளிடம் காபியும்,சிற்றுண்டியும் எடுத்து வரச் சொன்னார்.

சிறிதுநேரம் இருவரும் எப்படி தேஜூவுக்கும், செழியனுக்கும் இடையே உள்ள சண்டையை சரி செய்வது என்று யோசித்து சில திட்டங்களை வகுத்து அதைச் செயல்படுத்த முடிவு செய்த பிறகு, கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, கிளம்பியவர், "எழில், நான் இங்கு வந்து போனதைப் பற்றி தேஜூவிடம் சொல்லாதே..." என்று எச்சரித்துவிட்டு அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

அவர் சென்றதும் வீடே வெறிச்சென்று தோன்றியது எழிலுக்கு. அவர் இரண்டு மணி நேரம் முன்பு தான் அறிமுகமானார் என்று நினைத்துப் பார்த்தால் நம்பவே சிரமமாக இருந்தது. அந்த அளவிற்கு செழியனின் தாய், எழிலின் மனதைக் கவர்ந்திருந்தார்.

ஆண்டவனின் கிருபையால் இவர் மட்டும் தன்

மகளுக்கு மாமியாரானால் மகளின் வாழ்க்கை நல்லபடியாக அமையும்...' என்று யோசித்தபடி அமர்ந்திருந்தவர் யாரோ தன்னை உலுக்குவதை கண்டு தன்னிலைக்கு வந்தார்.

"என்ன எழில், எவ்ளோ நேரமா உன்னை கூப்பிடறேன். நான் வந்தது கூடத் தெரியாமல், கனவுலகத்தில் சஞ்சரிக்கிறே? எந்த நாட்டிலே நாம டூயட் பாடறோம்? எந்த மாதிரி காஸ்ட்யூம் போட்டிருந்தோம்!" என்றார் ஈஸ்வர் குறும்பாக.

முதலில் அவரின் கேள்வி புரியாமல் விழித்து விட்டுப் பின், "ஹையோ! ஆசை பாரு! பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி குதித்தானாம்! அந்தக் கதையாக இருக்கு, நீங்க ஆசைப்படறது. வீட்டில் கல்யாண வயதில் பொண்ணை வைத்துக்கொண்டு பேசற பேச்சா இது?" என்று சிணுங்கிய மனைவியை ஆசையாகப் பார்த்தார் ஈஸ்வர்.

அவரைத் தன் கைவளையத்தில் கொண்டு வந்து, "கல்யாண வயதில் பொண்ணு இருந்தாலும், நீ இன்னும் சின்னப் பெண் போல கட்டுக் குலையாமத் தானே இருக்கே? அம்மாவும் மகளும் அருகருகே நின்றால், அக்கா தங்கையா என்று பார்ப்பவர்கள் கேட்கிற அளவிற்கு அழகா இருக்கியே! அப்புறம் ஏன் நான் உன்னோட டூயட் பாடக்கூடாது...?" என்று கண்சிமிட்ட, எழிலின் முகம் வெட்கத்தில் சிவக்க, ரசனையுடன் நோக்கினார்.

கணவரின் பார்வை அவரை மேலும் சிவக்க வைக்க, அவரைப் பிடித்துத் தள்ளி, "ஹ்ம்ம், நாம



டூயட் பாடுவது இருக்கட்டும். சார் என்ன இன்றைக்கு அநியாயத்திற்கு சந்தோஷமாக இருக்கிறார்...?" என்று அவரின் ப்ரீப்கேஸை கையில் வாங்கியபடியே விசாரித்தார்.

"கண்டிப்பா சொல்றேன், முதலில் நான் பிரெஷ் அப் ஆயிட்டு வரேன்...' என்று விடலைப் பையன் போல கடகடவென்று இரண்டிரண்டு படிகளாகத் தாவி ஏறிய கணவனை, கண் நிறைய நிரப்பிக் கொண்டு, காபி டிபன் எடுத்து வர உள்ளே சென்றார்.

வேறு உடை மாற்றிக்கொண்டு சோபாவில் வந்தமர்ந்த கணவருக்கு சிற்றுண்டி கொடுத்து உபசரிக்க, காபியை உறிஞ்சிக்கொண்டே, "எழில், இன்றைக்கு என் பேங்க் சீப் எக்சிக்யூடிவ் ஆபிசர் என்னைப் பார்க்க வந்திருந்தார்" என்றதும் ஏனென்று எழில் கேள்வியாக புருவத்தை உயர்த்தினார்.

"சொல்றேன்...சொல்றேன்..." என்று சிரித்து விட்டு, "என்னோடு தேஜூவை வெளியில் எங்கேயோ பார்த்திருக்கிறார், பார்த்ததுமே அவருக்குப் பிடித்து விட்டதாம். அதனால்..." என்று கூறி சஸ்பென்சோடு நிறுத்தினார்.

"சொல்லுங்க... அதனால் என்னவாம்...?" என்று கேட்கும் போதே மீதி என்னவாக இருக்கும் என்று யூகிக்க முடிந்தாலும், மனது அப்படி இருந்திடக் கூடாதே என்று வேண்டியும் கொண்டது. அவரின் ஆசையெல்லாம், செழியனுக்குத் தான் தன் மகள் என்ற முடிவில் இருந்ததினால்,வேறு யார் கூடவோ தன் பெண்ணை இணைத்துப் பேசுவதை மனம் வெறுத்தது.

அதன் காரணமாக கணவரை மேற்கொண்டு பேச விடாமல், "தேஜூ தான் இப்போதைக்குக் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிட்டாளே! நீங்களும் அதற்குச் சரின்னு வேறு சொல்லிட்டீங்க. அப்புறம் எதுக்கு மீண்டும் ஒரு கல்யாணப் பேச்சு? இங்கே பாருங்க முதலில் தேஜூ அவளின் ஆசைப்படி ஒரு விருது வாங்கட்டும். அதன் பிறகு இதைப் பற்றியெல்லாம் நாம பேசலாம்..." என்று பட்டுக் கத்தரித்தார் போல பேச்சை முடித்துவிட, ஈஸ்வர் மனைவியை வித்தியாசமாகப் பார்த்தார்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க, நானா இப்படிப் பேசறேன் என்றா?" என்று கேட்டு நிறுத்த,

"பின்னே என்ன எழில்? தேஜூவுக்கு இன்னும் கல்யாணம் ஆகலையே என்று புலம்பியே என் காது ஜவ்வு அறுந்து போச்சு. இப்போ திடீரென்று மாத்திப் பேசறே? எதுக்கு இந்த அந்தர் பல்டி...?" என்று குறும்பாக வாரினார்.

மகளுக்கும், செழியனுக்கு ஒரு நல்ல புரிதல் ஏற்படுகிற வரை கணவரிடம் இதைப் பற்றி மூச்சுவிடக்கூடாது என்று தீர்மானம் எடுத்திருந்த படியால் திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி தன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள முடியாமல் தன்னுள்ளே பொக்கிஷம் மாதிரி பொத்தி வைத்து விட்டு,

"ம்ச். அதில்லங்க... தேஜூவின் ஆசையைப் புரிந்து கொண்ட பிறகு, எதற்கு தொந்தரவு செய்ய வேண்டும்? அவளின் சம்மதம் வரைக்கும் காத்திருக்க வேண்டியது தான். அதை விட்டு அவளிடம்



இதைப்பற்றி பேசினாலே அவள் மூட் அவுட் ஆயிடறாள், அதான்...!" என்று நீண்ட விளக்கமளிக்க ஈஸ்வரும், மனைவியின் பேச்சை ஆமோதித்து ஒத்துக்கொண்டார்.

வீகென்ட் என்பதால் நிதானமாக ஜாகிங் போயிட்டு வேர்வையில் குளித்தபடி வீட்டுக்கு வந்த செழியனுக்கு வீட்டு வேலையாட்களும், தாயும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு புருவம் வில்லாக வளைந்தது.

"அம்மா..." என்றழைத்தபடி வேர்வையை துண்டால் துடைத்துக்கொண்டே சோபாவில் அமர்ந்த மகனுக்கு காபியை நீட்டியபடியே, "சீக்கிரம் போய் குளிச்சிட்டு வா செழியா ..." என்ற தாயை ஆச்சரியமாக நோக்கினான்.

அந்த காலையிலே பட்டுபுடவையில் நிறைய நகைகள் அணிந்து ரெடியாகியிருந்தவரை ஏற இறங்க பார்வையால் அளந்துவிட்டு, "இன்றைக்கு என்னம்மா விசேஷம்...?' என்று புரியாமல் கேட்டவனுக்கு,

"சொல்றேன். நீ போய் முதலில் குளிச்சிட்டு, பட்டு வேட்டி அணிந்து கொண்டு வா... சீக்கிரம் போ...!' என்று விரட்டினார்.

"என்னது பட்டு வேட்டியா? சான்சே இல்லை! அதைக் கட்டிக்கொண்டு எப்போ அவிழ்ந்து விழுமோ என்று பயந்துகொண்டு இருக்கணும். என்னால் முடியாது. வேண்டுமென்றால் பட்டில் பைஜாமா குர்தா இருந்தால் கொடுங்க; போட்டுக்கிறேன்" என்றவன்,

"சரி, இப்போ எதுக்கு நான் பட்டு வேட்டி கட்டணும்; என்ன விசேஷம் நம் வீட்டில்?" என்று

மீண்டும் முதலிலிருந்து ஆரம்பித்த மகனைப் பார்த்து வாஞ்சையாகச் சிரித்தார்.

"உனக்குச் சொல்லாமலா? கண்டிப்பாகச் சொல்கிறேன். நீ முதலில் போய் ரெப்ரெஷ் செய்துகிட்டு உடையை மாற்றிக்கிட்டு வா. எனக்கு நிறைய வேலைகள் இருக்கு..." என்று கூறியபடியே உள்ளே சென்றதும், தாயின் சொல்படி குளித்து முடித்து கட்டிலில் ரெடியாக எடுத்து வைத்திருந்த பட்டு வேட்டியை அணிந்து தன்னைக் கண்ணாடியில் பார்த்த செழியனுக்கு, ஏனோ அந்த நேரத்தில் தேஜூவின் நினைவுகள் அவனை ஈக்கள் போல மொய்த்தது.

தேஜூ தன்னிடம் பேசியே இரண்டு மாதம் ஆகப் போகிறது என்ற நினைவே, அவனுக்குப் பாரமாக இருந்தது. அவள் பேசிய பொழுதெல்லாம் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் அந்தச் சண்டைக்குப் பிறகு, அவள் பேசாமல் தன்னை வேண்டுமென்றே தவிர்க்கிறாள் என்றதும், எதிலோ தோற்றுப் போன உணர்வு அவனையும் அறியாமல் நெஞ்சில் எழுவதைத் தடுக்க முடியாமல் தவித்துப் போனான்.

அவள் பேசினாலே, எனக்குள் எரிச்சலும், ஆத்திரமும் கொப்பளிக்கிறது. ஆனால் பேசாமல் ஒதுங்கிச் சென்றால் எதையோ இழந்த மாதிரி இருக்கிறது. இது எந்த மாதிரி உணர்வு? அவள் பேசவில்லையென்றால் நான் ஏன் இப்படி தவித்துப் போகிறேன்ம ஏன்...? ஏன்...? என்று எண்ண ஓட்டங்களின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தவனை அவனின் செல்போன் சிணுங்கி மீட்டெடுத்தது.



# 8

"அம்மா நீ இதுவரைக்கும் என்னை எங்கே அழைச்சிக்கிட்டுப் போறேன்னு சொல்லவே இல்லை...? நானும் எத்தனை முறை தான் கேட்கிறது ? லீவு நாளில் கூட ஓய்வு எடுக்க விடாம அலைய விடறீங்க?" என்று வண்டியை ஓட்டுகிற தந்தையின் பக்கத்தில் அமர்ந்திருந்த தேஜூ எரிச்சலை உள்ளடக்கிய குரலில் நூறாவது முறையாகக் கேட்க, எழில் அவளுக்குப் பதில் சொல்லாமல் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டு அமுக்கமாக அமர்ந்திருந்தார்.

தாயிடமிருந்து எந்தப் பதிலும் வராததால், "அம்மா..." என்று சற்று கோபமாக அழுத்தி விளிக்கவும்,

இதற்கு மேல் எதுவும் பேசாமல் இருந்தால் டென்ஷனாகி விடுவாள் என்பதால் தன் கட்டாய மௌனத்தைக் கலைத்து, 'நான்தான் ஏற்கெனவே சொன்னேனே! எனக்குத் தெரிந்தவர் வீட்டில் இன்று மகாலட்சுமி பூஜை என்று. அதற்குத் தான் இப்போ போய்க் கொண்டிருக்கிறோம்..." என்று அலட்டிக் கொள்ளாமல் சொன்னவரை ஏறக்குறைய முறைத்தாள்.

"அம்மா நீ சொல்றதை நம்புகிற அளவிற்கு நான் ஒன்றும் சின்னப் பெண் இல்லை. நான் உன்னிடமிருந்து உண்மையைக் கேட்கிறேன். இதுவரை யாருடைய வீட்டில் எந்த பூஜை நடந்தாலும்

நீ போய், நான் பார்த்ததில்லை. இப்பொழுது என்ன திடீரென்று, இப்படி ஒரு வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறே?" என்றாள் கடுப்பாக.

"விடும்மா, இந்த பூஜை புனஸ்காரமெல்லாம் வயதாக வயதாக இலவச இணைப்பாக வந்து ஒட்டிக்குமாம்! அது மாதிரி உங்கம்மாவிற்கும் வந்திடுச்சு போலிருக்கு" என்ற தந்தையின் கேலிக்கு, தேஜூவுக்கு சிரிப்பு வரவில்லை; மாறாக மேலும் எரிச்சல் தான் உண்டாகியது.

"ஐயோ அப்பா, கொஞ்ச நேரம் பேசாம இருங்களேன்... !" என்று அவரை அடக்கிவிட்டு மீண்டும் அதே கேள்வியைக் கேட்க,

'ம்ஹீம், இவ சும்மா விட மாட்டாள் போலிருக்கே? ஆனால் சம்மந்தியம்மா எதைப் பற்றியும் மூச்சு விடக்கூடாது என்று சொல்லியிருக்கிறாரே! இவளானால் நண்டு வளையைத் தோண்டுகிற மாதிரி, தோண்டித் துருவுகிறாளே, இவளை எப்படிச் சமாளிப்பது?' என்று யோசனையூடே மகளை நோக்கியவர், அவள் தன் பதிலுக்காக தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு,

'ஹ்ம்ம், நாடகத்தை ஆரம்பிச்சாச்சு... ! இனியும் வேஷம் கட்ட மாட்டேன் என்று அடம்பிடிப்பதில் நியாயமில்லை. எழில் களத்தில் இறங்கி சலங்கை கட்டி ஆடு, உன் நடிப்புத் தாகத்தை இப்படியாவது நிறைவேற்றிக் கொள்...' என்று தனக்குள் பேசிக்கொண்டவர், தன்னை ஒரு சாவித்திரி அளவிற்கு கற்பனை செய்துகொண்டு,

"நீ சொல்றது சரி தான்? நான் இதுவரைக்கும்



போனதில்லை. ஆனால் எல்லாக் காலத்திலும் அப்படியே இருக்க முடியுமா...? மகாலட்சுமி பூஜையில் கலந்து கொண்டால் குடும்பத்திற்கு மிகவும் நல்லதுன்னு ஒரு தடவை கோவில் ஐயர் சொன்னார்.

அதுமட்டுமில்லை, உனக்கு காலாகாலத்தில் ஒரு நல்லது நடக்காதா என்று ஏங்கிகிட்டு இருக்கேன். அதான் உங்கப்பா சொன்ன மாதிரி இந்த பூஜை புனஸ்காரம் எல்லாத்திலும் கலந்துக்க ஆரம்பிச்சிட்டேன். இதிலே என்னடி தப்பு...? இதுக்குப் போய் ஆயிரம் கேள்விகள் கேட்டுகிட்டு இருக்கே...? இதோ அவங்க வீடு வந்தாச்சு, இறங்கு...!" என்று அமைதியாக ஆரம்பித்து சற்று அதிகாரமாகக் கட்டளையில் முடித்தார்.

உள்ளுக்குள் உதறிக்கொண்டு வெளியே ஜம்பமாக நடித்தாலும், மறுபடியும் தேஜூ கேள்விகள் கேட்டுவிடக் கூடாதே என்ற பயத்தில் அதட்டலாகப் பேசி நிலைமையைச் சமாளித்தார்.

காரை எடுக்கும்போதே, 'நீ என்னை எங்கு வேண்டுமானாலும் அழைத்துக்கொண்டு போகலாம். ஆனால் உன் பெண்ணிடம் எங்கே போகிறோம் என்று சொல்லாமல் அழைத்துப் போவது மிகவும் சிரமம் எழில். அதனால் எங்கே போகிறோம் என்று தெளிவாகச் சொல்லி விடு . அது தான் உனக்கு நல்லது' என்ற கணவரின் எச்சரிக்கை எவ்வளவு உண்மை என்று, செழியன் வீடு வந்து சேர்வதற்குள் புரிந்து கொண்டார்.

அவரின் பதிலுக்கு பதிலடி கொடுக்க நினைத்தவள், வீடு வந்துவிட்டது என்றதும் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு காரிலிருந்து இறங்கி, தாயுடன் வீட்டின் உள்ளே நுழைய, எதிர்கொண்டு

ஆரவாரமாக வரவேற்ற பெண்மணியைக் கண்டதும் தேஜூவின் விழிகள் ஆச்சரியத்தில் அகன்றன.

ஆனால் அடுத்த வினாடியே தாயின் மீது குற்றம் சாட்டும் பார்வையை வீச, அவளின் பார்வையை சட்டை செய்யாமல், "அம்மா நீங்க சொன்னமாதிரி என் குடும்பத்தோடு வந்திட்டேன். இப்போ சந்தோஷம் தானே...?" என்றவர், "இவர் என் கணவர், இவள் என் மகள் தேஜஸ்வி..." என்று அறிமுகப்படுத்த ஈஸ்வருக்கு கைகுவித்தார் சரளா.

"என்ன சொல்றே எழில், தேஜூ உன் மகளா...? இவளை எனக்கு ஏற்கனவே தெரியுமே. உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? இவள் தான் எங்கள் ஹோட்டலை கட்டுகிற ப்ராஜெக்ட் ஆபிசர்...!" என்று சரளா நடிகையின் திலகமாக மாறி எழிலுக்கே அறிமுகப் படுத்த, இளையவர் இன்னும் ஒரு படி மேலே போய் அப்பாவியாக, "அப்படியா !! ஏன் தேஜூ நீ என்னிடம் சொல்லவே இல்லை...?" என்று வியந்தவரிடம்,

"ம்ம்ம், உனக்குத் தெரிஞ்சவங்க இவங்கதான் என்று எனக்கெப்படித் தெரியும்?" என்றாள் கடித்த பற்களிடையே.

இவர்கள் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு நடிப்பை அள்ளித் தெளிப்பதை அறியாமல், உண்மையிலே அப்பாவி ஜீவனான ஈஸ்வர் புன்னகையுடன் கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, தேஜூவுக்கு ஏனோ இருவரின் பேச்சில் நம்பிக்கை வர மறுத்தது.

இவர் உண்மையில் செழியனோட வீடு என்றே தெரியாமல், இங்கே என்னை அழைத்துக் கொண்டு



வந்தாரா? இல்லை இருவரும் ப்ளான் செய்து என்னை இங்கே வரச் செய்தார்களா...? என்று தாயின் முகத்தை உற்று நோக்கியபடி ஆராய்ந்து கொண்டிருந்தவளுக்கு, அதில் எந்தவித கல்மிஷமும் இல்லாமல் இயல்பாக இருப்பது கண்டு பெரும் குழப்பமாக இருந்தது.

தேஜூ குழப்பத்துடன் யோசிப்பதை ஓரக்கண்ணால் கவனித்த சரளா, அதற்கு மேல் அவளை யோசிக்க விடாமல், "உள்ளே வா தேஜூ, இத்தனை நாள் உன்னைப் பலமுறை என் வீட்டிற்கு அழைத்தும், நீ வராமல் இருந்த பொழுதெல்லாம் எனக்கு உண்மையில் வருத்தமாக இருந்தது.

ஆனால் இன்று அந்த வருத்தமெல்லாம் காணாமல் போய்டுச்சு. பின்னே பாரேன் என் வீட்டில் மகாலட்சுமி பூஜைக்கு ஏற்பாடு செய்திருக்கேன்; அந்தச் சமயத்தில் எதிர்பாராதவிதமாக ஒரு மகாலட்சுமி மாதிரி நீ அடி எடுத்து வைச்சிருக்கே என்று நினைக்கும் போது ரொம்ப சந்தோஷமாக இருக்கும்மா..." என்று முன் பாதி பொய்யும், பின் பாதி மெய்யுமாக சொல்லவும், எழிலுக்கே மனம் நிறைந்து போனது.

அவரின் பேச்சில் தேஜூவுக்கு அதுவரை இருந்த சந்தேகம் பறந்து போனது. ஆனால் யாரைச் சந்திக்கவோ, பேசவோ விருப்பமில்லாமல் ஒதுங்கிச் சென்றாளோ அவனை சந்திக்க நேரிடுமோ என்ற கவலை புதிதாக முளைக்கத் தொடங்க, தாயின் மேல் கோபம் தங்கத்தின் விலை போல் கிடுகிடுவென்று ஏறத் தொடங்கியது.

திரும்பிப் போய்விடலாம் என்றால், சரளா அம்மாவோ அவளின் பேச்சை கேட்பதாகவே இல்லை.

தன் தந்தையிடம் அவளைப் பற்றி புகழ்ந்து தள்ளி... அவரைத் தன் பக்கம் கூட்டுச் சேர்த்துக்கொள்ள, பூஜை முடியும் வரை இருந்தாக வேண்டிய நிலைக்கு தேஜூ தள்ளப்பட, தன் கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக சோபாவில் அமர்ந்தாள்.

பூஜைக்காக ஏற்பாடு செய்திருந்த யாகத்தையும், ஏற்பாடுகளையும் கனன்று கொண்டிருந்த கோபத் தீயுடன் கவனித்துக் கொண்டிருந்தவளிடம், விளக்கை ஏற்று! சுவாமி படத்திற்கு பூ போடு. நூற்றியெட்டு தங்கக்காசுகளை எண்ணி வை என்று அவளை யோசிக்க விடாமல் வேலைகளைக் கொடுத்துக் கொண்டே இருக்க, தேஜூவுக்கும் அந்த வேலைகளில் ஈடுபாடு பிறக்க கர்மசிரத்தையாகச் செய்யலானாள்.

சரளா சொன்ன மாதிரி பூப்போட்டு, விளக்கேற்றி காசுகளை எண்ணி வைத்துவிட்டு நிமிர்ந்தவள், தன் முன்னே நின்று கொண்டிருந்தவனைக் கண்டதும், அவளின் அதரங்கள் தன்னையுமறியாமல் பிளந்தது.

அவசரமாக எழுந்து, "ஹேய் ஆதவ்! எப்படி இருக்கிறே...? இப்போ என்ன செய்யறே...? என்ன திடீர்னு இப்படி காட்சி கொடுக்கிறே...?" என்று கேட்டுக் கொண்டே வந்தவள், தன் தலையில் தட்டிக் கொண்டு, "ஹையோ, கேட்க மறந்துட்டேனே... நீ எங்கே இங்கே...?" என்று கடகடவென்று முகம் விகசித்தபடி கேட்க, ஆதவின் முகம் சிரிப்பில் தத்தளித்தது.

அவன் பதில் சொல்லாமல் சிரிக்கவும், "டேய் நான் கேட்டுக்கிட்டே இருக்கேன், நீ பதில் சொல்லாமல் சிரிச்சா என்ன அர்த்தம்...?" என்று பொய்க் கோபத்துடன் கேட்டவளை நோக்கி,



"நீ முதலில் என்னை பேசவிட்டால் தானே நான் பதில் சொல்ல முடியும்? நீ ஓட்டை வாய் மாதிரி பேசிகிட்டே போனால் எப்படி...?" என்று வார,

"டேய் போதும் நிறுத்துடா, நீ இன்னும் மாறவேயில்லை" என்று சிரித்தாள்.

சிரித்தாலும் அவளின் கேள்விகளுக்குண்டான பதிலை சொல்லத் தவறவில்லை. "இது என் வீடு தான், இரண்டு வார லீவில் வந்திருக்கிறேன்...!" என்றதும்,

"ஓ! இதுவரை உன் குடும்பத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. சாரி" என்றவள், "ரொம்ப ஆச்சரியமாய் இருக்குடா. ஒரு நல்ல தோழனை ரொம்ப நாள் கழித்து சந்திப்பது உண்மையிலே ரொம்ப சந்தோஷமாக இருக்கு ஆதவ்..." என்று சிலாகித்தாள்.

"ஹ்ம்ம், எனக்கும் தான். ரியல்லி ஐ அம் சர்ப்ரைஸ்ட்!" என்றவனுக்கு, தன் பெற்றோரை அறிமுகப்படுத்தி, தன் கல்லூரித் தோழனின் குறும்புகளைச் சொல்லிச் சிரிக்க, அந்த இடமே கலகலத்தது.

போனில் பேசிகொண்டிருந்த செழியனுக்கு ஒரு இளம் பெண்ணின் மதுரமான சிரிப்பொலி கேட்டதும் பேச்சை நிறுத்தி கீழே வர, யாரைப் பற்றி இவ்வளவு நேரம் நினைத்துக் கொண்டிருந்தானோ அவளும், அமெரிக்காவில் இருக்கவேண்டிய தம்பியும், பெற்றோர்களுடன் சிரித்துப் பேசிகொண்டிருப்பதைக் கண்டு அவன் கண்கள் நம்ப மறுத்தது.

ஒருவேளை தான் காண்பது கனவா? என்று கண்களை இறுக மூடித் திறக்க அப்பொழுதும் அந்தக்

காட்சியே அவன் கண்ணில் படவ ஒரு வேகத்துடன் படியிறங்கி, அவர்களை நோக்கி வந்தான்.

மகனை கவனித்து விட்ட சரளா, அவசரமாக தேஜூவின் தந்தைக்கும், தாய்க்கும் அறிமுகப்படுத்த, "அம்மா அவர்களுக்கு நான் ஏற்கனவே அறிமுகமானவன்..." என்றபடி கைகுவித்தவனின் பார்வை, தேஜூவின் பக்கம் ஆச்சரியமாகத் திரும்பியது.

அழகான பட்டுப்புடவையில், ஆடம்பர மில்லாமல் அளவான நகைகளோடு, நீளக் கூந்தலில் குண்டுமல்லிகை பூக்களோடு, தினக் காலண்டரில் காட்சியருளும் மகாலக்ஷ்மியின் உருவம் மாதிரி நின்று கொண்டிருந்தவளை பார்வையாலே அளவேடுத்தவன், "வெல்கம் டு மை ஹோம் மிஸ்.தேஜஸ்வி..." என்றான் மென்மையான புன்னகையோடு.

அவன் கீழே இறங்கி வருவதைக் கண்ட நாழி முதல், 'இன்றைக்கு என்ன சொல்லி என் மனதில் தீயை வைக்கப் போகிறானோ?' என்ற எரிச்சலில் அவனை பார்க்கப் பிடிக்காமல் கைகளை இறுகக் கோர்த்து, அதுவரை இருந்த சந்தோஷம் மறைந்து, முகம் இறுக வேறெங்கோ பார்த்தபடி நின்றிருந்தவள், செழியனின் வரவேற்பான மென்மையான வார்த்தைகளைக் கேட்டதும், அவள் பார்வை அவனையும் அறியாமல் அவன் முகத்தில் கூடாரம் போட்டது.

பேசுவது இவன் தானா இவனுக்கு இப்படி யெல்லாம் கூடப் பேசத் தெரியுமா...? என்று யோசனையில் மூழ்கியவளுக்கு, அன்று அவன் ஆபீஸ் சென்றிருந்த பொழுதும் இதே மாதிரி இன்முகத்துடன்



வரவேற்றான். அப்புறம் நடந்தது என்ன? என்று ஞாபக அடுக்குகள் அவளுக்கு அறிவுறுத்தியதும், மனம் மீண்டும் சோர்ந்து போனது.

எப்போ வேதாளம் முருங்கை மரம் ஏறுமோ என்ற தன் நினைவே அலுப்பாக இருக்க, வலுக்கட்டாயமாக தன்னை பூஜை வேலைகளில் ஈடுபடுத்திக் கொண்டாள்.

"ஹேய், நீ எப்போடா வந்தே...? நீ வரப் போறதா அம்மா சொல்லவே இல்லையே...?" என்று தம்பியை ஆறத் தழுவிக்கொண்டவன், "சரி உன் படிப்பெல்லாம் எப்படி போய்க்கிட்டு இருக்கு...?" என்று கேட்டவனுக்கு,

"ரெண்டு வாரம் ஹாலிடேஸ் இருக்குன்னு சொன்னான் . நான் தான் உனக்கு சர்ப்ரைஸ் கொடுக்கணும்னு வரச் சொன்னேன்..." என்று இளையமகனுக்காக சரளா பதிலளிக்க, செழியனின் புன்னகை விரிந்தது.

அதற்குள் ஐயர் வந்து பூஜையை ஆரம்பிக்க, அவருக்குத் தேவையானதை தேஜூவும், சரளாவும் எடுத்துக் கொடுக்க, அவர் சொன்னபடி தங்கக் காசையும், பூக்களையும் வைத்து அபிஷேகம் ஆராதனை செய்ய பூஜை இனிதே நிறைவடைந்தது.

ஆண்கள் மூவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க எழிலும், சரளாவும் சாப்பாட்டு வேலையை கவனிக்க, தேஜூவுக்கு போரடித்தது. தந்தையின் பக்கத்தில் போய் அமரலாம் என்றால், செழியன் அவருடன் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பது அவளுக்குப் பெரும் தடையாக இருந்தது.

அங்கேயே தனியாக அமர்ந்தாலும் சரியாக இருக்காது என்பதால் தோட்டம் எங்கே இருக்கிறது என்று தேடிச் சென்றவள், கொஞ்ச நேரம் காலாற நடந்துவிட்டு அங்கேயிருந்த சேரில் அமர்ந்து கொண்டு, டேபிளின் மேல் கிடந்த புக்கை புரட்டிக் கொண்டிருந்தாள்.

கை தான் புத்தகத்தின் பக்கத்தைப் புரட்டியதே தவிர, மனமோ செழியன் எப்படிப்பட்டவன் என்ற அவனைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியிருந்தாள். தாயிடம் காட்டும் மரியாதையும், தம்பியிடம் காட்டும் பாசமும், விருந்தினர்களிடம் அன்பாக நடந்து கொள்ளும் பாங்கும் அவளை ரொம்பவே கவர்ந்தது. இதுவரை இப்படி மென்மையாகவும், பாசமாகவும் சிரித்த முகத்துடனும் இருக்கிற செழியனைப் பார்த்ததில்லை என்பதால் அவனின் அந்த சிரித்த முகமே, அவள் நெஞ்சில் மெழுகுவர்த்தியின் தீபம் போல நிறைந்திருந்தது .

'வீட்டில் இவ்வளவு பாசமானவனாக இருக்கிறவன் என்னிடம் மட்டும் ஏன் தீயாகப் பேச வேண்டும்? என்னால் எந்தவிதத்தில் பாதிக்கப் பட்டிருக்கிறான்...? அப்படி யோசித்துப் பார்த்தாலும், இவனைப் ப்ராஜெக்ட் கொடுப்பதற்கு முன்னால், நான் சந்தித்ததே இல்லையே...? அப்புறம் எப்படி நான் இவனுக்கு எதிரியானேன்...? இவனும் மற்றவர்களைப் போல் என்னிடம் அன்பாக இல்லையென்றாலும், வெகு சாதாரணமாக பழகியிருந்தால் கூட எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும்...?'

"ஹ்ம்ம்..." என்று ஏக்கப் பெருமூச்சுடன்



நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தவள், செழியனின் நினைவில் புரட்டிக் கொண்டிருந்த புக்கை மார்பின் மேல் கவிழ்த்து வைத்தபடி, கண்களை மூடியவள் எப்பொழுது உறங்கினாளோ? யாரோ தன் பெயர் சொல்லி மென்மையாக அழைக்கும் சத்தம் கேட்டு கண்விழித்தவள், எதிரே நின்று கொண்டிருந்தவன் கேட்ட கேள்வியில் கடந்தகால பழைய நினைவுகள் அவளைப் புரட்டிப் போட்டது.

# 9

ஆதவ்வின் குரலில் சட்டென்று எழுந்தவள், "சாரி, ஏதோ அசதி..." என்று முணுமுணுப்பாக பதில் சொல்லிக்கொண்டே அவனைத் தாண்டிச் சென்றவளிடம், "ஒன் மினிட் தேஜூ..." என்று நிறுத்தினான்.

"ஏன்? என்னை இத்தனை வருடம் கழித்துப் பார்த்ததால் உன் பழைய நினைவுகளின் தாக்கம் அதிகமாகி, உன்னையும் மறந்து தூங்குகிற அளவிற்குக் கொண்டு போயிடுச்சா...?" என்று மென்மையாக கேட்ட நாழிகைக்குள் தேஜூவின் முகம் வெளிறியது.

ஆதவின் கேள்வியில் அதுவரை மறந்துவிட்டோம் என்று நினைத்திருந்த பழைய நினைவுகளைக் கிளறிவிட, அடுத்து எதையும் பேசவோ, செய்யவோ தோன்றாமல் அப்படியே சிலையாகச் சமைந்தாள்.

தேஜூவின் பதிலற்ற நிலை கண்டு அவளின் முன்னால் வர, அவளின் விழிகளில் கண்ணீர்

துளிர்த்திருப்பதைக் கண்டதும் பதறிப் போய், "சாரி தேஜூ... பழசையெல்லாம் ஞாபகப்படுத்தி உன்னைக் காயப்படுத்தணும் என்று கேட்கலை. நீ அப்செட்டாக இருக்கிறதைப் பார்த்து, கண்ட குப்பையைப் பற்றியெல்லாம் நினைத்து... உன்னை ஏன் பலவீனமாக்கிக் கொள்கிறாய் என்பதற்காகத் தான் கேட்டேனே ஒழிய வேறு ஏதும் இல்லை. ஒன்ஸ் அகைன் சாரி" என்றான் உண்மையான வருத்தத்துடன்.

"ஹேய் நத்திங், நீ எதுக்கு தவறு செய்த மாதிரி பீல் பண்றே...? நான் எதைப் பற்றியும், பேசவோ, நினைக்கவோ விரும்பவில்லை. லீவ் இட்...!" என்று கண்களைத் துடைத்துக் கொண்டு,

"ஆன்ட்டி தேடுவாங்க, வா உள்ளே போகலாம்..." என்று அவனைப் பார்த்துப் பேசக் கூட திராணியற்று விடுவிடுவென்று உள்ளே செல்ல, இப்பொழுது ஆதவ் சிலையாக நின்றான்.

சரளா அம்மா அவளைச் சாப்பிட அழைக்கவும் கடனே என்று அமர்ந்தவள், தன் தட்டில் போட்டதைச் சாப்பிடாமல் ஏதோ நினைவுகளுடன் போராடியபடி அளைந்துக் கொண்டிருக்க, "ஏன், ப்ரைட் ரைஸ் பிடிக்காதா தேஜூ உனக்கு...?" என்ற கிசுகிசுப்பான குரல் காதருகில் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பியவள், தன் பக்கத்தில் அமர்ந்திருந்த செழியனை அப்பொழுது தான் கவனித்தாள்.

அவளின் பார்வை தங்களைச் சுற்றி மற்ற நால்வரையும் அவசரமாகத் தொட்டுத் தடவிவிட்டு மீண்டும் தட்டில் முகத்தை புதைத்துக் கொள்ள, செழியனின் பார்வை அவளைத் துளைத்தெடுத்தது.



தேஜூவின் மனநிலை ஆதவ் தவிர வேறு யாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை என்பதால், அவளின் மனப்போராட்டத்தை அறியாமல் பெரியவர்கள் மூவரும் சிரித்துப் பேசியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆதவும் அவளை யாரிடமும் காட்டிக் கொடுக்காமல் மற்றவர்களின் அரட்டையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும், அவனின் பார்வை அடிக்கடி தேஜூவிடம் சென்று மீண்டது.

வெயிலில் பிடிங்கி எறியப்பட்ட மென்மையான மலர் போல, வாடிக் கிடந்த தன் தோழியின் முகத்தைப் பார்க்கவே ஆதவ்க்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. நான் ஏன் தேவையில்லாமல் அவளிடம் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டேன்? என்று தன்னையே குற்றம் சாட்டிக் கொண்டான். பக்கத்திலே செழியன் அமர்ந்திருந்தால் அவளிடம் எதையும் வாய்விட்டுப் பேசமுடியாமல் தவித்தவன், அவளிடம் எப்பொழுது தனியாகப் பேச நேரம் கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் .

ஆனால் எதிரில் அமர்ந்திருந்தவளுக்கோ, ஆதவின் கேள்வியால் இத்தனை வருடம் உள்ளே மறைந்திருந்த நினைவுகள் வெளியே வந்து பேயாட்டம் போட, அவளின் மனம் முழுவதும் ரத்தக் களரியானது.

தான் இந்த உலகத்தில் வாழத் தகுதியானவள் தானா என்று பல வருடங்களுக்கு முன் எழுந்த சந்தேகம் இப்பொழுது மீண்டும் எழ, அதற்கு மேல் தன்னால் சகஜமாக யாரிடமும் பேச முடியாது என்று தோன்ற, அந்த நிமிடம் அங்கிருந்து ஓடிவிடக் கையும், காலும் பரபரத்தது.

ஆனால் அப்படிச் சென்றால், எல்லோரையும் அசிங்கப்படுத்திய மாதிரி ஆகிவிடும் என்பதால் தன் பதட்டத்தை, உத்வேகத்தைக் கட்டுப்படுத்தி மீண்டும் தட்டில் பார்வையை பதித்தவள், செழியனின் பார்வை தன் மீதே இருப்பதை உணர்ந்து, அவன் ஏதும் கேட்பதற்கு முன் வேண்டா வெறுப்பாக சாப்பாட்டை விழுங்க ஆரம்பித்தாள். விருப்பமே இல்லாமல் உண்டதால் என்னவோ சாப்பாடு தொண்டையில் இறங்காமல், தொண்டைக் குழியில் சிக்கி முள் மாதிரி குத்த சட்டென்று புரை ஏறியது.

பக்கத்தில் அமர்ந்திருந்த செழியன் சட்டென்று அவள் தலையில் மென்மையாகத் தட்ட, அவனின் ஸ்பரிசத்தில் அதிர்ந்தவள்... லாவகமாக அவனிடமிருந்து விலகி, தண்ணீர் எடுத்துக் குடித்து தன்னைச் சமாளித்துக்கொண்டு, "தாங்க்ஸ்" என்று உலர்ந்த குரலில் கூறியவளை, இவளுக்கு என்னவாயிற்று என்கிற ரீதியில் நோக்கினான்.

அவளின் புன்னகை ஜீவனே இல்லாமல் இருப்பதை உணர்ந்து, அதைப் பற்றிப் பேச நேரம் பார்த்துக் கொண்டிருந்தவன், தேஜூ சாப்பிட்டு முடிந்ததும், அவன் பேச சந்தர்ப்பமே கொடுக்காமல், எவ்வளவு சீக்கிரம் அங்கிருந்து புறப்பட முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் தன் பெற்றோருக்கு கீ கொடுத்து கிளம்பிச் சென்றுவிட செழியனுக்கு பெருத்த ஏமாற்றம்.

அவளிடம் பேச முயன்று முடியாமல் போனதற்கும், வந்ததிலிருந்து ஆதவ்விடம் பேசிய அளவிற்குக் கூட தன்னிடம் பேசாதது, அவனின் ஈகோவை பாதிக்க, அவனின் முகத்தில் ரௌத்திரம்



தாண்டவமாடியது. அவள் சொன்ன நன்றியை கடுவன் பூனை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு பெற்றுக் கொண்டவன், அதற்கு மேல் அங்கு நில்லாமல் விடுவிடுவென்று மாடிக்குச் செல்ல, தேஜூவும், மகனும் சிறிது நேரமாவது பேசுவார்கள், அல்லது மகனாவது தேஜூவை வீட்டில் கொண்டு விடச் செல்வான் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்த சரளா அம்மாவிற்கு சிறிது ஏமாற்றம் தான்.

ஆனாலும் அதை முகத்தில் வெளிக் கொணராமல், எழிலிடம் நம்பிக்கையூட்டும் விதமாக பேசி அனுப்பிவிட்டு உள்ளே வந்தவர், ஹால் வெறிச்சோடி இருப்பதைக் கண்டு நெஞ்சு கனத்தது. "ஹ்ம்ம் இரண்டும் இரு துருவங்கள். எப்படித் தான் இரண்டையும் ஒன்று சேர்க்கப் போறேனோ...?" என்று சிறிய பெருமூச்செழுந்தது .

அடுத்த வினாடியே, "இருந்தாலும் எப்பொழுதும் எதிர் எதிர் துருவங்கள் தானே சுலபமாக ஈர்க்கும்?' என்று ஒரு முறுவலுடன் தனக்குள் பேசிக்கொண்டே தோட்டத்திற்குச் சென்றவர், வானத்தை வெறித்தபடி எதையோ பறிகொடுத்தபடி அமர்ந்திருந்த சிறிய மகனைக் கண்டு துணுக்குற்றார்.

மொட்டை மாடியில் இதமான காற்று மேனியைத் தழுவ, கையைக் கட்டியபடி, தூரத்தில் தெரிந்த கோவிலின் கோபுரத்தைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தவளுக்கு, இன்று மதியம் செழியன் வீட்டிலிருந்து கிளம்பும் போது, ஆதவ் அவளிடம் ஏதோ பேச முயற்சித்தது நினைவிற்கு வந்தது.

நல்லவேளை! அந்தநேரம் செழியன் இருவரையும் நோக்கி வரவும், ஆதவ் பேச்சை நிறுத்தி அப்புறம் பேசுகிறேன் என்றான் கண்ணாலே. தானிருக்கும் மனநிலையில் ஆதவ் மேலும் எதையும் பேசி... அது ஆறுதலாக இருந்தாலும் கூட, அதைத் தாங்கிக் கொள்ள மனதில் சக்தியில்லை என்ற பெருமூச்செழ,

"எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது? நான் என்ன பாவம் செய்தேன்? பெண்ணாகப் பிறந்ததே பாவமா? அது என் குற்றம் இல்லையே? உலகில் உள்ள ஆறு, தெய்வம் எல்லாவற்றிற்கும் பெண்ணின் பெயர்களை வைத்து ஆராதிக்கிற இந்த ஆணினம் ரத்தமும் சதையுமாக இருக்கிற பெண்குலத்தை மட்டும் வேரோடு அழிக்கத் துடிக்கிறதே...? ஏன் இவர்களுக்குள் இந்தக் கொலை வெறி...? ஆண் எந்த விதத்தில் உசத்தி...? பெண் எந்த விதத்தில் தாழ்ந்தவள்...?

மிருக இனத்தினுள்ளே எந்த ஆண் மிருகமும், தன் பெண் குழந்தையை அழிக்க முற்படுவதில்லையே...? கடவுள் படைத்த மனித குலத்தினுள்ளே மட்டும் கருவிலே இருப்பது பெண் குழந்தை என்று தெரிந்தவுடனே அழிக்கத் துடிப்பது ஏன்? ஐந்தறிவு படைத்த மிருகத்தை விடவும், ஆறறிவு படைத்த மனிதன் கேவலமாகப் போய் விட்டானா? பெண்ணினத்தின் விதைகளில், ஏன் கொதிநீரை ஊற்றும் அவலம் நடக்கிறது...? இதற்கெல்லாம் என்ன மூல காரணம்...? என்ற சிந்தனை மண்டையைக் குடைந்தது.

அதன் விளைவாக தலைவலி மண்டையைப்



பிளக்க, தலையை கையால் தாங்கியபடி அப்படியே சரிந்து அமர, அந்நேரம் மகளைத் தேடி வந்த எழில் அவளின் நிலையைக் கண்டு பயந்து ஓடிவந்து அவளை ஆதரவாகத் தாங்கினார்.

"தேஜு" என்னாச்சுடா...? ஏன் ஒரு மாதிரியா இருக்கிறே...? முகமெல்லாம் இப்படி வேர்த்து வழியுது...?" என்று பதறியபடி முந்தானையால் அவளின் முகத்தைத் துடைத்தார்.

தாயின் அக்கறையும் பாசமும் அவளை மேலும் பலவீனமாக்க, "நான் ஏனம்மா பெண்ணாகப் பிறந்தேன்...? பெண்ணாகப் பிறந்தது என் தப்பில்லையே...?" என்று திடீரென்று வெடித்து வாய்விட்டு அழ, திடுக்கிட்டுப் போன எழிலின் கண்களில் கலவரம் குடி கொண்டது.

மகளின் அழுகைக்கான காரணம் புரியாமலும், அவளின் கண்ணீரை காணச் சகியாமலும் 'ஏய் இப்போ எதுக்கு நீ தேவையில்லாமல் இப்படியெல்லாம் பேசறே...? யார் என்ன சொன்னார்கள் உன்னை...?" என்று சற்று அதட்டலாகக் கேட்டு அவளை உலுக்க, தாயின் அதட்டல் அவளின் காதிலே விழாதது போல அந்த இருபத்திரண்டு வயது குழந்தை... ஆதரவு தேடி தாயின் மடியை நாட, அவளைத் தன்னோடு இறுக்கி அணைத்துக்கொண்டார்.

"சொல்லுடா உன்னை யார் என்ன சொன்னது...? எதுக்கு நீ உன்னையே வருத்திக்கிறே...? காலையிலிருந்து நல்லாத் தானே இருந்தே...?" என்று அந்த தாயின் மனம் மகளின் கண்ணீரைப் பார்க்கச் சகிக்காமல் அவளைத் தன்னிடமிருந்து விலக்கி சற்றே

கடுமையாகக் கேட்டதும், கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து மீண்டும் தூரத்தில் தெரிந்த கோபுரத்தை வெறிக்க ஆரம்பித்தாள்.

பதில் சொல்லாமல் மௌனமாக இருந்த மகளைப் பார்க்கவே பயமாக இருந்தது அவருக்கு. தேஜூ அவ்வளவு சீக்கிரத்தில் உணர்ச்சிவசப்பட மாட்டாள், அழவும் மாட்டாள் என்று தெரியும். ஆனால் இன்று அவளின் கண்ணீருக்கான காரணத்தை அறிய ஏனோ மனதில் தைரியமில்லாமல் போனது.

தான் எதையோ யூகித்து கேட்டு அது பெரிய விபரீதத்தில் முடிந்து விடப் போகிறது என்ற பயத்தில், மகளே பேசட்டும் என்று படபடக்கும் நெஞ்சோடு காத்திருந்த எழிலுக்கு, தேஜூ மௌனமாக இருந்த அந்த ஐந்து நிமிடமே ஒரு யுகம் போலத் தோன்றியது.

அதற்கு மேலும் காத்திருக்கப் பொறுமை இல்லாமல், "தேஜூ..." என்று மென்மையாக அழைத்ததும்,

சட்டென்று திரும்பியவள், "ஏன்மா நீங்களும், அப்பாவும் இல்லையென்றால் நான் என்னவாகி இருப்பேன்...?" என்ற அவளின் எதிர்பாராத கேள்வி எழிலை நிலைகுலைய வைத்தது.

எதைப் பற்றி பேசக்கூடாது என்று அவர் பயந்து கொண்டிருந்தாரோ, அந்தக் கேள்வியை மகளே அவர் முன் வைக்க... அவளுக்கு பதில் சொல்ல முடியாமல் ஊமையாக, சிலை போல நின்றிருந்தவரின் அருகில் வந்து அவரின் தோளைப் பிடித்து உலுக்கி, "சொல்லும்மா...?" என்றாள் கரைந்த குரலில்.

தன்னை அந்த நிமிடத்தில் சமாளித்துக்கொண்டு,



"இப்போ எதுக்கு தேவையில்லாமல் கேட்கிறே...?" என்று எதிர்கேள்வியுடன் அவளின் வாயை அடைத்து, "வா கீழே போகலாம், நேரமாயிடுச்சு..." என்று பேச்சை வளர்த்த இஷ்டமில்லாமல் செல்ல முயன்றவரை நிறுத்தி,

"சொல்லும்மா...?" என்று வற்புறுத்த எழிலின் மனம் சோர்ந்து போனது.

ஒரு பெருமூச்சுடன், "நடந்து முடிந்து போன கதையைப் பற்றி பேசி ஆகப் போவது ஒன்றுமில்லை...? இருந்தாலும் உன் திருப்திக்காகச் சொல்கிறேன். நாங்கள் இல்லையென்றால் நீ ஒன்றும் ஆகியிருக்க மாட்டாய், நிச்சயம் நீ எங்களை மாதிரி வேறொரு நல்ல ஜீவன்களுக்கு மகளாக இருந்திருப்பாய்! போதுமா... ?" என்று அவளின் முடியை ஒதுக்கியபடி கனிவாகச் சொல்ல அவளின் இதழ்களில் விரக்திப் புன்னகை நெளிந்தது.

"இல்லேம்மா நீ எனக்காகச் சொல்றே. நீ சொல்றது என்னை சமாதானப்படுத்தத்தான் என்று எனக்குத் தெரியும். நான் சொல்றேன், நீங்க இரண்டு பேரும் இல்லையென்றால் இன்று நான் மண்ணோடு மண்ணாகி இருப்பேன்... " என்று முடிக்கும் முன்னரே அவசரமாக அவளின் இதழ்களைத் தன் விரலால் மூடினார் .

"அப்படிச் சொல்லாதே செல்லம். நீ இப்படிக் கஷ்டப்படும்படி என்ன நடந்தது? எதுக்குத் தேவையில்லாததை எல்லாம் நினைத்து மறுகுகிறாய்?" என்றவரின் குரலில் தெரிந்த வேதனை அவளின் விழிகளில் கண்ணீரைச் சுரக்க வைக்க, தன் இதழ்களை

மூடிய அவர் விரல்களில் முத்தமிட்டு, அதை தன் நெஞ்சோடு அணைத்துக் கொள்ள, 'கடவுளே என் மகளுக்கு, இனி ஒரு தடவை இந்த நினைவைக் கொடுக்காதே...' என்று மனதிற்குள் மன்றாடினார்.

கடவுளிடம் வைத்த பிரார்த்தனை அவருக்கு எட்டுவதற்கு முன், "எங்கேயோ ராஜஸ்தானில் பிறந்து உலகத்தைப் பார்ப்பதற்கு முன்னே மண்ணோடு மண்ணாகிப் போக இருந்த என்னை, தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்து வளர்த்து ஆளாக்கி, இன்று என்னை என் சொந்தக் காலில் நிற்கும் தகுதியைக் கொடுத்த உங்களைப் போல தெய்வங்களாக ஏன் அவர்களால் இருக்கமுடியவில்லை...?" என்று கேட்டவள் தொடர்ந்து,

"வேண்டாம்மா ... அவர்கள் தெய்வங்களா கூட இருக்க வேண்டாம்.ஒரு மனுஷனா இருந்திருக்கலாமே? தன் ரத்தத்தில் உதித்து, தன் கருவில் வளர்ந்த குழந்தை... பெண் என்ற ஒரே காரணத்திற்காக, பிறந்த உடனேயே பச்சிளம் குழந்தையை கொல்ல அவர்களுக்கு எப்படிம்மா மனசு வருகிறது? அவர்களுக்கு ஈவு இரக்கமே இல்லையா? அவர்கள் என்ன அரக்க ஜாதிகளா?" என்று பதற, எழிலின் மனதில் ரத்தம் வடிந்தது.

மகள் கேட்ட விதத்தில் கண்களை கண்ணீர் திரையிட, முந்தானையால் துடைத்துக்கொண்டார்.

"ஒட்டகம் பெண் குட்டியை ஈன்றால், ஊருக்கே இனிப்பு கொடுத்து கொண்டாடுகிற அவர்கள், ஏனம்மா பெண் குழந்தை பிறந்தால் மட்டும் மண் சட்டியைப் போட்டு உடைக்கிறார்கள்? பெண்ணாகப்



பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா என்று பாரதி சொன்னான். ஆனால் இவர்கள் பெண் குழந்தைகளைச் சற்றும் ஈவு இரக்கம் இல்லாமல் கொன்று குவிக்கிறார்கள். இந்த மாதிரி பிறந்த உடனேயே கள்ளிப் பால் குடித்தோ, உயிரோடு சமாதியாகியோ, கழுத்து நெரிபட்டு இறந்துப் போவதற்காகத்தான் மா...தவம் செய்திட வேண்டும் என்று அந்த முண்டாசுக் கவிஞன் பாடிவைத்தானா? சொல்லும்மா...? என்று பரிதவித்தவளுக்கு எழிலிடம் பதிலில்லை.

மேலும் தொடர்ந்து, "ஒரு வேளை காலம் கடந்து குழந்தை பிறந்து, அது பெண்ணாகப் போய்விட்டால் ஒண்ணுமில்லாததற்கு பொண்ணு பிறந்தது..." என்கிறார்கள் வேண்டா வெறுப்பாக.

ஹவ் அட்ராஷியஸ் இஸ் திஸ் ? பெண் குழந்தை எந்தவிதத்தில் தாழ்ந்து போய்விட்டாள்...? என்றவளின் தீனக்குரல் கொஞ்ச கொஞ்சமாகத் தேய்ந்து மேற்கொண்டு பேச முடியாமல் தொண்டை அடைத்துவிட அழக்கூட சக்தியில்லாமல் அவளின் கண்களில் தூரத்தில் தெரிந்த காட்சியில் நிலைகுத்தி நின்றது.

அதுவரை மகளின் பேச்சில் இடைபுக விருப்பமில்லாமல், எதற்காக திடீரென்று அவளுக்குப் பழைய நினைவுகள் என்று யோசித்தாலும், மனப்பாரங்களை கொட்டித் தீர்க்கட்டும் என்று வேதனைகளை உள்ளடக்கி வாளாயிருந்தார்.

சிங்கம் தன் காயத்தை வலிக்க வலிக்க நக்குவது போல, மகள் அவள் நெஞ்சுக்குள் புதைத்து

வைத்திருந்த வேதனைகளைக் கொட்டித் தீர்த்தது மனதை ரணமாக்கியது.

அவள் ஒரு தத்துக் குழந்தை என்ற உண்மையை, பொக்கிஷம் போல மறைத்து பாதுகாத்து வந்த ஈஸ்வர் தம்பதிகளுக்கு... ராஜஸ்தானில் ஈஸ்வரின் கூட வேலை பார்த்த ஓட்டை வாய் நபரின் மூலம் தேஜூவின் எட்டாவது வயதில், அவளின் பிறப்பின் ரகசியம் அவளுக்குத் தெரிய வர... அன்று அவளின் வாழ்வில் ஒரு பெரிய ஆழிப் பேரலை அடித்து அவர்களின் அமைதியை, சந்தோஷத்தைத் தன் கோர நாக்குகளால் சுருட்டி விழுங்கி வாழ்க்கையையே மயானமாக்கியது.

அவர்களின் சந்தோஷமான வாழ்க்கையை மீண்டும் சீர்படுத்துவதற்கே ஈஸ்வருக்கு இன்னொரு ஜென்மம் எடுக்க வேண்டியிருந்தது. அதுவரை சராசரி பிள்ளைகள் மாதிரி எப்பொழுதும் அரட்டையும், செல்லமும் கொஞ்சிக் கொண்டு படிப்பில் சுமாராக இருந்த பெண், கடவுள் தனக்குக் கொடுத்த தாய் தந்தை ஒரு சாதாரண மனிதப் பிறவிகள் அல்ல, அவர்கள் தெய்வங்கள் என்று உணர்ந்த வினாடியிலிருந்து தன் வாழ்க்கை முறையை அசாதாரணமாக மாற்றிக்கொண்டாள்.

தனக்குக் கிடைத்த புதுப்பிறவியை அர்த்தமுள்ளதாக, அதே சமயம் பெண்ணை இழிவாகப் பேசி, அவளை கொல்லத் துணிந்த சமுதாயத்திற்கு கரியை பூசும் நோக்கத்தோடு வெறியோடு படிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

மகளின் இந்த திடீர் மாற்றம் இருவரையும் கவலைக்குள்ளாக்க , அதிலிருந்து ஈஸ்வர் நெருங்கிய



நண்பர் சிவராமனைத் தவிர வேறு யாரையும் வீட்டிற்கு அழைத்ததுமில்லை, சென்றதுமில்லை. தொடர்ந்து அங்கேயே இருந்தால் மகளின் வாழ்க்கையைச் சீரழித்து விடுவார்கள் என்று பயந்து தமிழ்நாட்டிற்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வர, அடுத்த ஐந்தாம் மாதமே சிவராமனும், நண்பனுக்காக மாற்றல் வாங்கி கொண்டு வந்தார்.

இதுவரை இந்த உண்மை சிவராமனின் பிள்ளைகளான விஷ்வா மற்றும் காயத்ரிக்குக் கூடத் தெரியாது. தன் சொந்தங்களுக்குக் கூட, இந்த உண்மையை, தெரியாமல் இதுவரை போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள் தம்பதியர் இருவரும்.

தங்களுகென்று குழந்தை பிறந்தால் தேஜூவின் பாசத்தை பங்கு போடவேண்டுமோ என்ற அச்சத்தின் காரணமாக எழில் தன் வயிற்றில் ஒரு உயிர் ஜனிக்க இடம் கொடுக்கவில்லை . அவர்களைப் பொறுத்தவரை உலகம் என்றால் தேஜு! தேஜு என்றால் உலகம்! இது தான் அவர்களின் வாழ்க்கை ஸ்லோகன் ஆகிப்போனது

ஆனால் இன்று, தாங்கள் உயிருக்கு உயிராக வளர்த்த ஆசை மகள் மனம் நொந்து பேசுவதைக் கேட்க முடியாமல், அவளை சமாதானப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

தேஜூவின் திடீர் மௌனம் அவரின் உயிரை உலுக்கிவிட, அவளின் அருகில் சென்று அவளைத் தன் தோளில் சாய்த்து, "தேஜூ, பெண் தாழ்ந்தவள் என்று யார் சொன்னது ...? எப்பொழுதுமே பெண் குழந்தைகள் தாழ்ந்தவர்கள் இல்லை. அவர்கள் ஆதிபராசக்தியின் மறு உருவம். பெண்களிடம் தான் இந்த உலகமே அடங்கியிருக்கு.

பெண் என்பவள் இல்லையென்றால் இந்த உலகில் பிறப்பு என்ற ஒன்று இல்லாமலே போயிருக்கும்! இதைப் புரிந்து கொண்டவர்கள் மனிதர்களாக வாழ்கிறார்கள், புரிந்து கொள்ளாதவர்கள் களிமண்ணிற்குச் சமமானவர்கள்..." என்றவர் ஒரு நெடிய பெருமூச்சுடன்,

"ம்ச்ச், பேசி என்ன செய்ய முடியும்...? பெண்கள் வாங்கி வந்த வரம் அப்படி. மரத்தை அழித்தால் பூமிக்கு எந்தளவுக்கு அழிவு ஏற்படுமோ, அந்த அளவிற்கு பெண்ணினத்தை அழித்தால் இந்தச் சமுதாயம் ஒரு கட்டத்தில் மலடாகிவிடும் என்று புரிந்துகொள்ளும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

விடு கண்ணம்மா, இப்போ எதுக்கு தேவையில்லாமல் பேசி உன்னையே கஷ்டப்படுத்திக்கிறே? எங்களைப் பொறுத்தவரை விலைமதிக்க முடியாத வைரம் நீ. அதை எந்த காரணதிற்காகவும் நாங்கள் இழக்க மாட்டோம். நீ கண்டதையும் நினைத்து உன்னைக் குழப்பிக்காதே..." என்றவர் அவளின் முகத்தை தன் முந்தானையால் அழுந்தத் துடைத்தார்.

"பார் அழுதழுது முகமே வீங்கிப் போச்சு..." என்று கவலையுடன் தண்ணீரைப் பிடித்து சிறு குழந்தைக்கு முகத்தைத் துடைப்பது போல செய்யவும், அதற்குள் தன்னை சமாளித்துக் கொண்ட தேஜூவின் முகத்தில் ஒரு சிறு புன்னகை, கீற்றாக வெளிப்பட்டது.

அதைக் கண்டதும், "அப்பா! இப்போ தான் அம்மாவிற்கு நிம்மதியா இருக்கு. பார் கொஞ்ச நேரத்தில் என்னைத் துடிக்க வைச்சிட்டியே...?" என,

"சாரி மா! என்னமோ தெரியலை மதியத்திலிருந்து



மனசே சரியில்லை. அதான் கொஞ்ச நேரத்திலே என் கட்டுப்பாட்டை இழந்துட்டேன்..." என்று மெலிதாகப் புன்னகைக்க, "சரி... சரி...கீழே வா பனி கொட்டுது..." என்று அவளை கீழே அழைத்து சென்றார்.

# 10

**அ**டுத்த நாள் எப்பொழுதும் போல அழகாகப் புலர. அலாரத்தின் உபயத்தால் விழித்த தேஜூ, வழக்கம் போல ரெடியாகி தாயிடம் சொல்லிவிட்டு ஆபிஸ் கிளம்பியவளை நிறுத்தி, 'மதியம் நீ வெளியில் சாப்பிட்டுக்கோ தேஜூ; நான் கோவிலுக்குப் போறேன் என்றவரை ஆழமாகப் பார்த்துவிட்டு, சரி என்ற ஒற்றை வார்த்தையோடு புறப்பட மகளை நினைத்து தாயின் மனம் பெருமூச்செறிந்தது.

ஆபிசில் வேலைகளை முடித்துக்கொண்டு சைட்டுக்குப் புறப்படும் சமயம், "தேஜூ, அடுத்த வாரம் நம்ம ஆபிசிலிருந்து எல்லோரும் பிக்னிக் போக ப்ளான் போட்டிருக்கோம். சேர்மன்கிட்டேயும் பெர்மிஷன் வாங்கியாச்சு! நீயும் அதில் கலந்துக்கிறே! நாளை இது பற்றிய சர்க்குலர் உன் டேபிளில் இருக்கும் அக்செப்ட் செய்து சைன் பண்ணு..." என்ற சரயுவின் உரிமை கலந்த கட்டளை, அவளின் முகத்தில் புன்னகையைக் கொண்டு வந்தது.

"பிக்னிக் போறது நல்ல விஷயம் தான்; ஆனால் எனக்கு டைம் கிடைக்கிறது கஷ்டம். என் ப்ராஜெக்ட்

கிட்டத்தட்ட முடியற நிலையில் இருக்கு. இந்த நேரத்தில்..." என்று இழுத்தாள்.

"ஹலோ மேடம், உன்னிடம் நீ பிக்னிக் வரியா என்று அனுமதி கேட்கலை! வந்தே ஆகணும் என்று சொல்றேன். வேலை இருக்கு அது இதுன்னு சும்மா சாக்கு சொல்லிக்கிட்டு இருக்காதே...? அப்புறம் எனக்கு பயங்கர கோபம் வரும்..." என்றாள் சுட்டுவிரலைக் காட்டி மிரட்டாத குறையாக .

"ஹே...கூல்...கூல்...! நான் கண்டிப்பா வர முயற்சி செய்கிறேன். இப்போ அவசரமா போகணும் வரேன்..." என்று அவளிடம் இருந்து கழண்டு, சைட்டுக்கு சென்றவளின் நினைவு முழுவதும் பிக்னிக் போகாமல் எப்படித் தப்பிக்கலாம் என்று யோசித்துக் கொண்டே, கட்டிட வேலைகளைப் பார்வையிட்டு, தன் டீம் மெம்பர்களிடம் அடுத்து என்னென்ன செய்ய வேண்டும் என்று டிஸ்கஸ் செய்து விட்டு கேபினுக்கு வந்தவளுக்கு, அங்கே அமர்ந்திருந்தவனைக் கண்டதும் விழிகளில் ஆச்சரியம் விரவியது.

ஆனால் அடுத்த நிமிடமே, இவன் ஏன் இங்கு வந்தான்...? என்று தோன்ற, "வா ஆதவ், என்ன இந்தப் பக்கம் ? ரொம்ப ஆச்சரியமா இருக்கு...!' என்று வரவேற்க அவளைச் சலனமே இல்லாமல் உற்று நோக்கினான்.

"ஹ்ம்ம்! உன் வாய் ஆச்சரியமா இருக்கு என்று சொல்லுது . ஆனால் உன் முகம் சொல்லலையே...? இவன் ஏன் இங்கு வந்தான்னு தானே நினைக்கிறே...?" என்று அவள் எண்ண ஓட்டத்தைப் போட்டு உடைக்க, ஒரு நிமிடம் தடுமாறி, "ச்சே...ச்சே...அதெல்லாம்



ஒன்றுமில்லை. ரியல்லி ஐம் சர்ப்ரைஸ்ட்! சொல்லு, ஹோட்டல் எப்படி வந்திருக்குன்னு பார்க்க வந்தியா? வா, சுற்றிக் காட்டறேன் ...' என்று எழுந்தவளை அமர்த்தினான் .

"பேச்சை மாத்தாதே .நான் கட்டிடடத்தைப் பார்க்க வரலை. எனக்கு உன் திறமையைப் பத்தி நல்லாவே தெரியும். வரும் பொழுதே பார்த்தேன் அழகா வந்திருக்கு. இப்போ நான் அதைப் பத்தி பேச வரலை! நேற்று உன்னைப் பார்த்ததில் இருந்து என்னால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. உன்னை காயப்படுத்திட்டேனோ என்ற குற்ற உணர்வு என்னை ஆட்டிப் படைக்குது. அதான் உன்னைப் பார்த்து பேசிட்டுப் போகலாம் என்று வந்தேன்..." என்று தவிப்போடு பேசியவனை, நிச்சலனமாக நேருக்கு நேர் பார்த்தாள்.

சில வினாடிகள் கழித்துத் தன் இருக்கையை விட்டு எழுந்தவள், கேபினை விட்டு வெளியே வர, அவளைப் பின் தொடர்ந்தவனிடம், ' என் மனதில் இந்த நிமிடம் எதைப் பற்றியும் நினைவில்லை. அப்கோர்ஸ் நேற்று உன்னால் எனக்கு அந்த நினைவுகளின் தாக்கம் அதிகமாக இருந்ததென்னவோ உண்மை. ஆனால் இப்போ இல்லை. நிம்மதியாக இருக்கேன் போதுமா?" என்று ஒரு சிறு முறுவலுடன் சொன்னவளை விழிகள் அகல பார்த்தான்.

"அப்போ, நீ எல்லாத்தையும் மறந்துட்டியா தேஜூ...?" என்று ஆச்சரியப்பட்டவன், அடுத்த நிமிடம், "நீ எல்லாத்தையும் மறந்து தான் ஆகணும். அது தான் உனக்கு நல்லது. நான் இப்போ வந்தது

மன்னிப்பு கேட்கத்தான். சாரி பார் மை இடியாட்டிக் கொஸ்டீன்...'' என்றவனை புன்னகையோடு பார்த்தாள்.

“நீ இன்னும் மாறவே இல்லை ஆதவ், அதே இன்னொசென்ட் அண்ட் ஸ்ட்ரைட் பார்வர்ட்!'' என்றவள் ஒரு பெருமூச்சுடன், “நீ செய்த உதவிக்கு, எந்த ஒரு பெண்ணுக்கும் உன் மேல் காதல் வந்திருக்கும். ஆனால் என்னால் உன்னை அப்படி நினைத்துப் பார்க்க முடியவில்லை. உன்னை ஒரு சகோதரனாகத் தான் என்னால் நினைக்க முடிகிறது...'' என்று முடிக்கும் முன்னரே ஆதவ் இடிஇடியென சிரித்தான்.

சிரித்து முடித்து, “ஹேய்..., என்னாச்சு தேஜூ இப்படி வயலின் வாசிக்கிறே? பார்த்து கம்பி அறுந்திடப் போகுது'' என்ற கேலிக்கு தேஜூவின் முறைப்பைப் பரிசாக வாங்கியவன், “தென், டிபிகல் சினிமா கதாநாயகி மாதிரி பேசினா சிரிப்பு வராதா?'' என்று அவளை மீண்டும் வார, அவளுக்கே தன்னையும் மீறி சிரிப்பு வந்தது.

“சீய் போடா...! பெரிசா கிண்டல் செய்ய வந்திட்டான்'' என்று முறைத்து விட்டு, “அது சரி அமெரிக்காவில் ஒழுங்கா படிக்கிறியா...? இல்லை கேர்ள் ப்ரெண்டோட ஊர் சுத்திகிட்டு இருக்கியா?'' என்று பதிலுக்கு வாரினாள்.

“என்னது கேர்ல் ப்ரெண்டா...? சரியாப் போச்சு. படிக்காமல் ஊர் சுத்தினேன் என்று அண்ணனுக்குத் தெரிஞ்சது என் தோலை உரிச்சி, ஆட்டுத் தோல், மாட்டுத் தோலோடு என் தோலையும் எக்ஸ்போர்ட் பண்ணிடுவார்...!'' என்று சிரிக்க, ஆதவுக்கு தன்



அண்ணன் மேல் இருக்கும் மரியாதையும் பயமும் கண்டு ஆச்சரியமாக இருந்தது தேஜூவுக்கு.

ஆனாலும் என் திருமணம் காதல் கல்யாணமாகத் தான் இருக்கும். ஆனால் நான் அதற்கு லைபில் செட்டில் ஆகணும். அதற்கு முன்னால் அண்ணனுக்குக் கல்யாணமாகணும்...!'' என்றவன், “சரி, அதெல்லாம் விடு... நீ யாரையாவது விரும்பறியா தேஜூ...? இல்லை உன் கல்யாணத்தைப் பத்தி ஏதும் ஐடியா இருக்கா...?'' என்றான் சீரியசாக.

தன் ஆச்சரியத்தை மறைத்து அவன் பேச்சில் கவனத்தை வைத்தவள், அவன் தன் கல்யாணத்தைப் பற்றிக் கேட்டதும்... செழியனின் முகம் அவள் கண்முன்னே காட்சிப் பிழை போல வந்து மறைந்து போக, அதுவரை இருந்த முகபாவம் மாறி, “ம்ச்ச், இல்லை ஆதவ், நான் கல்யாணம் செய்து கொள்ள தகுதியானவள் தானா என்று எனக்குத் தெரியலை? அதனால் நான் அதைப் பற்றி யோசிக்கிறதில்லை...!'' என்றாள் உயிரற்ற குரலில்.

உடனேயே தன் சோகத்தை மறைத்து, “ஹேய் இப்போ தான் எல்லாத்தையும் மறந்துவிடு என்று சொன்னே, மீண்டும் அதை ஞாபகப்படுத்தற மாதிரி கேள்வி கேட்கிறே?'' என்றாள் கேலியாக.

“ஹேய் முட்டாள் மாதிரி பேசாதே! நீ என்ன தவறு செய்தேன்னு கல்யாணம் செய்து கொள்ளத் தகுதியானவள் தானா... அது இதுன்னு பேசறே...? ஏன் உனக்கு அந்தத் தகுதி இல்லேன்னா வேறு யாருக்கு இருக்குன்னு நினைக்கிறே?

குழந்தையிலே மரணத்தின் வாசலை தொட்டு,

கடவுளின் அருளால் மறு ஜென்மம் எடுத்து வந்த உன்னை மாதிரிப் பெண்கள் இப்படித் தன்னம்பிக்கையை இழக்கலாமா? சில பேர் செய்கிற தவறால் உன்னை மாதிரி பெண்கள் பாதிக்கப்படுவது கண்டனத்துக்குரியது தான்! அதற்காக வாழ்க்கையே வேண்டாம் என்று பயந்து ஓடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

பெண்களுக்கே உண்டான போர் குணம் உன்னிடம் அதிகமாகவே இருந்தும் நீ இப்படி பேசுவதைக் கேட்க உண்மையிலே வருத்தமாக இருக்கிறது. பழசை மறந்துவிட்டு புதிதாக உனக்கென்று ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்...!" என்றான் கோபமும் வருத்தமுமாக.

அவனை இடைமறித்து, "அதில்லை ஆதவ்..." என்ற அவளின் பேச்சு, தூரத்தில் செழியன் காரிலிருந்து இறங்குவதைப் பார்த்ததும், அவளின் முகம் இருண்டது.

"நாம அப்புறம் பேசலாம் ஆதவ், செழியன் வராரு..." என்றதும் சட்டென்று தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டவன், அவளிடம் விடைபெற்று தன் அண்ணனை நோக்கிச் செல்ல, தேஜூ கேபினை நோக்கி நடந்தாள். ஆனால் காரிலிருந்து இறங்கும் முன்பே இருவரும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்ததை பார்த்துவிட்ட செழியனின் முகம் இறுகியது.

முதல் நாள் அவளிடம் ஆசையாக பேச நெருங்கிய பொழுது அவள் காட்டிய ஒதுக்கம், முகபாவனை இதெல்லாம் அவள் மேல் கோபத்தை உண்டு பண்ணியிருந்தது. இன்று தன்னைக் கண்டதும் அவளின் முகம் இறுகிவிட, பார்க்காத மாதிரி அவள் உள்ளே செல்வதைக் கண்டதும் சினத்தில் கைமுஷ்டி இறுகியது. அவளின் விலகல் அவனை தன் வசமிழக்க வைக்க, கோபத்துடன் இறங்கினான்.



ஆனால் ஆதவ் தன்னை நோக்கி வருவதை கண்டு தன் சினத்தை அடக்கி, "என்ன ஆதவ் இங்கே? ஹோட்டலைப் பார்க்க வந்தியா? எப்படி இருக்கு...?" என்று சாதாரணமாக விசாரித்தான்.

"ஹ்ம்ம் சூப்பர்ண்ணா! கிளாசா வந்திருக்கு...!" என்றவன் சிறிது நேரம் பேசிவிட்டு கிளம்ப, ஒரு வேகத்தோடு கேபினை நோக்கிச் சென்றான்.

இவன் வந்தது கூட அறியாமல், தேஜூ மும்முரமாக தன் லேப்டாப்பில் வேலை செய்து கொண்டிருந்ததைப் பார்த்ததும்... பெரிய நடிகை என்று கோபம் வந்தாலும், ஏனோ அந்த நேரத்தில் அவளிடம் தன் கோபத்தைக் காட்டத் தோன்றாமல் ...கண்களை இறுக மூடித் திறந்து, "சாரி பார் த டிஸ்டர்பன்ஸ்..." என்றான் உணர்ச்சியைத் துடைத்த குரலில்.

அவனின் குரலில் நிமிர்ந்தவள், தன் எதிரே பார்மல் பாண்ட், ஷர்ட்டில் கம்பீரமாக நின்றிருந்தவனைக் கண்டதும், முதல் நாள் பட்டு வேட்டி சட்டையில் நெற்றியில் குங்குமக் கீற்றோடு பார்ப்பதற்கு மனதை அள்ளும் அழகோடு இருந்தது. தேவையில்லாமல் நினைவிற்கு வந்து தொலைத்தது.

இவனின் கலருக்கும், அழகிற்கும், உயரத்திற்கும் எல்லா உடையும் பாந்தமாக இருக்கிறது. ஹ்ம்ம், குணம் மட்டும் இன்னும் அழகாக இருந்திருந்தால்,

இவனை அடித்துக் கொள்ள ஆள் இல்லை... !' என்று நினைவு எழுந்த வினாடியே,

சட்! என்ன நினைப்பு இது? ஆதவ் சொன்ன மாதிரி, சினிமா பார்த்துக் கெட்டுப் போயிட்டேனோ...? என்று யோசித்தவளை, செழியனின் சொடக்குச் சத்தம் நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தது.

"ஹலோ ஆர் யு ஹியர்... ?" என்று சற்று கேலியாகக் கேட்டாலும் அவளின் கண்கள் வாரியிறைத்த வர்ணஜாலங்களை ரசித்துக்கொண்டு தான் இருந்தான்.

அவன் கேட்டதும், "ஐயோ, இவ்வளவு நேரம் இவன் முகத்தையா பார்த்துகிட்டு இருந்தேன்... ?" என்று மிரள, அவளின் கண்களில் தெரிந்த மிரட்சியைக் கண்டு கோபத்தையும் மீறி, உதட்டுக்குள் சிரிப்பு அலைஅலையாக எழுந்தது.

அவனின் முகபாவம் அவளைக் குழப்ப, "நத்திங் சார்? உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி பேசணும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதான் நீங்க திடீர்னு அழைத்ததும் கொஞ்சம் குழம்பிட்டேன்...!'என்று சற்று மிடுக்காகக் கூறிய விதம் அவனை ஈர்க்க, "ஓ! சொல்லுங்க தேஜூ..." என்றான் பெயரைச் சுருக்கி.

தன் பெயரை அவன் இதுவரை இப்படி அழைத்ததில்லை என்பதால், அவனின் அழைப்பில் அவளுள் ஏதோ ஒன்று பிழற, அவனை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் லேப்டாப்பில் கண்ணைப் பதித்தாள்.

துர்வாசர் எப்போ புத்தரா கன்வெர்ட் ஆனார்...?



இவனுக்கு என்னிடம் சிரிச்சுக் கூட பேசத் தெரியுமா ...? அதிசயம் தான்...' என்று கேலியாக மனதில் ஓடிய சிந்தனை ரேகைகளை கஷ்டப்பட்டு ஓரம் தள்ளி, அவன் சுருக்கி அழைத்ததை கண்டுகொள்ளதது போல,

"சார் ஹோட்டல் கட்டுமான வேலைகள் அனேகமா இன்னும் இரண்டு மாதத்தில் முடிந்துவிடும். இன்டிரியர் டேகரேஷனுக்கு என்ன ஐடியா வைச்சிருக்கீங்க?" என்றாள் கேள்வியாக.

"ஹ்ம்ம், என் எல்லா கன்சர்னையும் செய்த அதே ஏஜென்சியிடம் தான் ஒப்படைக்கணும்..." என்று தோளைக் குலுக்கியவன், "ஏன், நீங்க ஏதும் சஜஷன் வைச்சிருக்கீங்களா...?" என்று எதிர்க்கேள்வி கேட்டான்.

அதற்காகவே காத்திருந்தது போல, சரணைப் பற்றியும், அவனின் டெகரேஷன் ஸ்டைல் பற்றியும் கூறியவள், "ஒரே ஏஜென்சியிடம் ஒப்படைத்தால், ஒரே மாதிரி இருக்குமே தவிர... வித்தியாசம் கிடைக்காது. அதனால் இந்த ஹோட்டலை இவரிடம் கொடுத்தால் நீங்கள் எதிர்பார்க்கிற மாதிரி, திருப்தியாகச் செய்து தருவார் என் எண்ணம்..." என்றவள் உடனேயே,

"சாரி சார் இது வெறும் யோசனை தான். நீங்க கன்சிடர் பண்ணிட்டு சொல்லுங்க...!" என்று சலனமே இல்லாமல் கூறியவளை, தலையைச் சரித்துப் பார்த்தான்.

சில வினாடிகள் கழித்து, என்ன நினைத்தானோ, "ஓகே! நீங்க சொன்னபடியே செய்திடலாம்! அவரை வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்க...!" என்று உடனேயே சம்மதம் தெரிவித்துவிட, தேஜூவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவனுக்கு நன்றி கூறிவிட்டு வெளியே செல்ல எத்தனித்தவளை, "ஒரு நிமிஷம்..." என்று நிறுத்தினான்.

திரும்பாமலே அவன் பேசுவதற்காகக் காத்திருந்தவள், அவனிடமிருந்து எந்த பதிலும் வராததால் திரும்பி, "சொல்லுங்க சார்...!" என அவளின் அந்தக் குரலும், பார்வையும், கேட்ட விதமும்... அவனை மிகவும் தூரத்தில் நிறுத்திப் பார்ப்பதாக அவனுக்குத் தோன்ற, கையை இறுக மூடித் திறந்து முகத்தில் எவ்வித உணர்ச்சிகளையும் காட்டாமல், "நத்திங்! நீங்க போகலாம்...!" என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

அவனை ஒரு மாதிரி பார்த்துவிட்டு, வீட்டுக்குக் கிளம்பியவளின் மனதை, செழியன் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான். இன்று அவன் நடவடிக்கையே வித்தியாசமாக இருந்தது, தேஜூவுக்கு வியப்பாக இருந்தது.

யாரிடமாவது பேசிக் கொண்டிருந்தால் கடுகடு வென்று எரிந்து விழுபவன், இன்று அமைதியாக இருந்தான்; முகத்தில் சிரிப்பு கூட இருந்தது. யோசனை சொன்ன உடனே ஏற்றும் கொண்டு விட்டான். அதெல்லாம் விட பெயரை மென்மையாக தேஜூ என்று சுருக்கி அழைக்கிறான்!

ஆனால் ஏதோ பேச அழைத்துவிட்டு, எதுவும் பேசாமல் மீண்டும் இறுகிவிட்டானே...? இன்று என்னவாயிற்று இவனுக்கு...? இவன் ஏன் அடிக்கடி குணம் மாறுகிறான்? என்னிடம் மட்டும் தான் இப்படி நடந்துகொள்கிறானா? இல்லை எல்லாரிடமுமா? என்று நூறாவது முறையாக எழுந்த சந்தேகத்திற்கு விடை தேட ஆரம்பித்தாள்.



வீட்டை அடைந்து தாய் தந்தை இருவரிடமும், அன்று நடந்த நிகழ்சிகளைப் பகிர்ந்து சிறிது நேரம் பேசிவிட்டு தன் அறைக்குச் சென்றவள், களைப்புத் தீர குளிப்பதற்காக துண்டை எடுத்துக் கொண்டு குளியல் அறைக்குச் செல்ல, அவளின் செல்போன் சிணுங்கி அழைத்தது.

யார் இந்த நேரத்தில்...? என்று அலுப்புடன் எடுத்துப் பார்க்க செழியன் என்றதும் புருவம் வியப்பில் நெரிய, "சொல்லுங்க சார்..." என்றாள், குரலில் எவ்வித உணர்வையும் காட்டாமல் .

"ஹோட்டலுக்குத் தேவையான கிரானைட்ஸ் மற்றும் மார்பிள்ஸ் எல்லாம் ஆர்டர் கொடுக்கணும் என்று சொல்லிகிட்டு இருந்தீங்களே? கொடுத்திட்டீங்களா?" என்றவன், "பிகாஸ், எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் இருக்கார், அவரிடமே ஆர்டர் கொடுத்திடலாம் என்று தான் கேட்டேன்" என்று அவனின் கேள்விக்கு விளக்கமும் கொடுத்தான்.

"ஓ! தாங்க் யூ சார், பட் எல்லாத்தையும் ஆர்டர் கொடுத்தாச்சு. நீங்க ஏற்கனவே கலர் சொல்லிட்டதால், நானே சரண் ஏஜென்சி மூலமா நேரடியா ராஜஸ்தானில் இருந்து கொள்முதல் செய்திட்டேன். எனி ஹவ் தேங்க்ஸ்...!" என்றாள்.

"ஹ்ம்ம், வெரி குட்...!" என்று மெச்சிவிட்டு, "சாரி, இந்த நேரத்தில் தொல்லை செய்ததற்கு ..." மென்மையாக என்று எதையோ எதிர்பார்த்து சொன்னவனுக்கு, "நோ ப்ராப்ளம் சார், திஸ் இஸ் மை ட்யூட்டி!' என்றாள் கடமையாக.

மொட்டை மாடியில் இதமான தென்றல் மேனியைத் தழுவ, போனில் தேஜூவுடன்

பேசிக்கொண்டிருந்த செழியனுக்கு, அவளின் உப்பு சப்பற்ற பதில், சற்று எரிச்சலைக் கிளப்பியது.

இவளை எப்படி நெருங்குவது என்று யோசித்துக் கொண்டே குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தவனுக்கு... மின்னல் கீற்றுப் போல ஒரு யோசனை உதிக்க, முகம் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்டது ஒளிர்ந்தது.

"எஸ், ஐ காட் இட்...!" என்று சற்று உற்சாகமாக உரக்கவே சொல்லிவிட, "என்னப்பா கிடைச்சது ...? என்று சிரிப்புடன் கேட்டபடி மாடியேறி வந்த தாயை கண்டதும் முகபாவனையை மாற்றி, அவரை எப்படிச் சமாளிப்பது என்று முகவாயைத் தடவியபடி யோசித்தான்.

# 11

"ஏன் செழியா என்னிடம் மறைக்கிற அளவிற்கு அப்படி என்னப்பா விஷயம்...? இந்த அம்மாவிடம் சொல்லக் கூடாத விஷயமா...?" என்று துருவியவர் வேண்டுமென்றே, "ஏதாவது காதல் விவகாரமா? அப்படி என்றால் உடனே சொல்லுப்பா. அது கழுதையாக இருந்தாலும் உனக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைச்சிட்டு இந்தக் கிழவி கிருஷ்ணா... ராமா... என்று ஒரு பக்கம் கிடப்பேன்..." என்று உள்ளுக்குள் அடக்கிய சிரிப்புடன் கூற, செழியனின் முகம் எரிச்சலில் சுருங்கியது.



"ஐயோ அம்மா, உங்களுக்கு எப்போ பார்த்தாலும் என் கல்யாணத்தைப் பத்தி தான் யோசனையாம? முதலில் ஆதவ் படிப்பு முடியட்டும். அப்புறம் பார்க்கலாம் என் கல்யாணத்தைப் பற்றி..." என்றான் ஒரு வேகத்தோடு, அந்தப் பேச்சிற்கு ஒரு முற்றுபுள்ளி வைத்து விடும் நோக்கோடு.

"சரிப்பா! அப்போ வேற என்ன கிடைச்சது உனக்கு...? ஏதும் புது பிசினெசா...? என்று மீண்டும் துருவ, அவரின் நச்சரிப்பைத் தாங்க முடியாமல், 'ஒன்றுமில்லேம்மா, எல்லாரையும் பற்றி சுலபமாக புரிந்து கொள்ள முடிந்த என்னால், ஒரு வாடிக்கையாளரை மட்டும் புரிந்து கொள்ள முடியவில்லை...!" என்று முடிக்கும் முன்னரே,

"ஏன், உனக்குச் சந்தேகம் வரும் வகையில் நடந்துகொண்டாரா?" என்ற கேள்விக்குச் சற்று யோசித்து தலையாட்டினான்.

"ஹ்ம்ம்! அப்படியும் சொல்லலாம். அவரை நம்பலாமா வேண்டாமா என்று கொஞ்சம் குழப்பமாக இருக்கு...?" என்று சரிபாதி உண்மையும் பொய்யுமாகக் கலந்து கட்டிக் கூறியவனை கூர்மையான பார்வையால் அளவிட்டார்.

"புரியலையே...? அவர் உன் கிளையன்ட் எனும் போது அவரைப் புரிந்து கொள்ள நீ ஏன் மெனக்கெடணும்? ஹ்ம்ம்..." என்றவர், "அப்படி ஒருத்தரைப் பற்றி புரிந்து கொள்ள நினைக்கிற என்றால், அந்த நபர் ஏதாவது ஒரு வகையில் உன்னைக் கவர்ந்தவரா இருக்கணும்; அம் ஐ கரெக்ட் ...? ஒருவர் மனதை ஈர்ப்பது சுலபமான விஷயம் அல்ல!

அப்படிப்பட்டவரை நீ சந்தேகிப்பது உன் மனசாட்சிக்குச் செய்கிற துரோகம். நம்பிக்கை தான் வாழ்க்கை செழியா. அதைப் புரிந்துகொள்..." என்றார் அறிவுரையாக.

"அது சரி கிளையன்ட் ஆணா...? இல்லை பெண்ணா ...?" என்றார் முகத்தில் குறும்பு கூத்தாட.

அவரின் விளக்கத்தை அசுவாரசியமாக செல்போனை ஆராய்ச்சி செய்து கொண்டே கேட்டுக் கொண்டிருந்தவன், அவரின் அடுத்த கேள்விக்கு... சட்டென்று உஷாராகி, "மச் அம்மா...! எனக்கு நிறைய வேலை இருக்கு. நான் போறேன்...!" என்றபடி படிகளில் தடதடவென்று இறங்கிச் செல்ல, சரளாவுக்கு மகனின் நடவடிக்கை சந்தோஷத்தைக் கொடுத்தாலும், இன்னொரு பக்கம் ஒருவேளை இது தேஜூவாக இல்லாமல், வேற ஆளாக இருந்தால்...? என்ற பயம் அவரை பீடித்தது.

அவசரமாக செல்போனை உயிர்ப்பித்து எழிலை தொடர்பு கொண்டு தேஜூவின் மன நிலையைப் பற்றி விசாரிக்க, கணவருடன் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்த எழிலுக்குக் குழப்பமாக இருந்தது. ஆனாலும் அவரின் கேள்விக்கு தேஜூவிடம் எந்த மாற்றமும் இல்லை; எப்பொழுதும் போல தான் இருக்கிறாள் என்ற பதிலைக் கொடுத்துவிட்டு, "என்னம்மா நடந்தது...? செழியன் தம்பி ஏதாவது சொன்னாரா...?" என்றார் நெஞ்சம் படபடக்க.

"பயப்பட ஒன்றுமில்லை எழில், சும்மாதான் கேட்டேன். இங்கே பையன்கிட்டே ஒரு சிறு மாறுதல், அதே மாதிரி அங்கே தேஜூவிடம் வித்தியாசமா ஏதாவது



தெரிஞ்சுதா என்று கேட்டேன். சரி எழில், நான் அப்புறமா பேசறேன்..." என்று முடித்துவிட, சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி போல எழிலின் மனம் அல்லாடத் தொடங்கியது.

தேஜூவின் நாட்கள் வழக்கம் போல நகர, சரயுவின் நச்சரிப்பு தான் அவளைக் கொஞ்சம் எரிச்சலூட்டியது. எந்தக் காரணம் சொன்னாலும், சரயு அதை ஏற்றுக் கொள்ளாமல் பிக்னிக் வந்தே ஆகணும் என்று அடம்பிடிக்க, அன்று மாலைக்குள் முடிவு சொல்வதாகச் சொல்லிவிட்டு சைட்டுக்குச் செல்ல, அங்கேயும் ஒரு தொல்லை காத்திருந்தது.

தேஜூவுக்கு முன்னாலே வந்து காத்திருந்த செழியனைக் கண்டதும் அவளின் புருவம் நெரிய, அவனுக்கு காலை வணக்கத்தை கூறிவிட்டு தன் வேலையைப் பார்க்கச் சென்றவளை நிறுத்தினான்.

"உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசத்தான், இவ்வளவு நேரம் காத்திருந்தேன்..." என கேள்வியாக திரும்பினாள் .

"அடுத்த வாரம் என் எக்ஸ்போர்ட்ஸ் கம்பெனியின் ஆண்டுவிழா வருது. அதற்கு நீ, சாரி நீங்க, கட்டாயம் கலந்துக்கணும். அதனுடைய இன்விடேஷன் இது..." என்றான் அழைப்பு அட்டையை நீட்டியபடி.

ஒரு நிமிடம் வாங்கலாமா வேண்டாமா என்று தயங்கிப் பின் வாங்கி அதை கண்ணை ஒட்டியவள், இந்த விழாவிற்கு போயே ஆகணுமா? என்று ஒரு வினாடி யோசித்தாள்.

இப்பொழுதெல்லாம் இவன் அருகில் இருந்தாலே மனம் இவனை நினைத்து அலைபாய்கிறது. இந்த

லட்சணத்தில் இவன் இழுத்த இழுப்பிற்கெல்லாம் நடந்துகொண்டால் அப்புறம் என்னையும் மீறி, என் மனம் இவன் பக்கம் சாய்ந்துவிடும். இவனுக்கு ஏற்கனவே என் மேலே சரியான அபிப்பிராயம் கிடையாது. ம்ஹீம், இதை வளர விடக்கூடாது. என்ன செய்யலாம்...? என்று யோசித்தவளுக்கு சரயு பிக்னிக் அழைத்தது, ஞாபக அடுக்குகளில் மின்னி மறைந்தது.

"ஹ்ம்ம்..., பிக்னிக் சென்றால் இவன் ஆண்டு விழாவை ஈசியாகத் தவிர்த்துவிடலாம் என்ற எண்ணம் உதித்ததுமே, உள்ளம் குதூகலித்தது.

ஆனால் முகத்தில் சோகத்தைத் தேக்கி, "சாரி டு சே சார்... என்னால் உங்க ஆண்டு விழாவுக்கு வர முடியாது. அன்று எனக்கு ஒரு முக்கியமான வேலை ஒன்று இருக்கு. மோஸ்ட்லி நான் வர ட்ரை பண்றேன்...!" என்று தயக்கத்துடன் கூறியவள், "டோன்ட் மிஸ்டேக் மீ..." என்று மன்னிப்புக் கேட்க, செழியனின் மனது கோபத்தில் தகதகத்தது.

இன்னும் எத்தனை நாளைக்கு நீ என்னை விட்டு விலகிப் போறேன்னு பார்க்கலாம் என்று நற நறத்துக் கொண்டே, "தட்ஸ் ஓகே தேஜஸ்வி, நோ இஷ்யூஸ்..." என்று இறுகிப்போன முகத்தோடு கூறியவன் அங்கிருந்து வேகமாக விலகிச் செல்ல, அவன் செல்வதையே ஒரு எக்கப் பெருமூச்சுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏனோ மனம் அவளையும் மீறி, அவன் பின்னால் ஒரு குழந்தை போல ஓடியது.

ஆபிஸ் வேலை முடிந்து வீட்டிற்கு கிளம்பிக் கொண்டிருந்த சரயு கோபத்தின் உச்சியில் இருந்தாள். இன்னும் இரண்டு நாளில் பயணத்திற்குத் தேவையான



ஏற்பாடுகளை செய்தாகணும். இவள் இன்னும் ஒப்புதல் தரவே இல்லையே...? இன்று மாலைக்குள் முடிவு சொல்கிறேன் என்றவள், இவ்வளவு நேரமாகியும் இன்னும் சொல்லவில்லை. நாளை வரட்டும் அவளை கவனித்துக் கொள்கிறேன் என்று பொருமிக் கொண்டே பேகை மாட்டிக்கொண்டு ஆபிசை விட்டு வெளியே வந்தவளை அழைத்தாள் தனுஷி.

"ஒரு நிமிஷம்!" என்று மூச்சிரைக்க ஓடிவந்தவள், "தேஜூ பிக்னிக் வர ஓகே சொல்லிட்டாள். இதை உன்னிடம் சொல்லச் சொன்னாள்..." என்றதும் அவளின் முகம் பூவாய் மலர, அவளுக்கு நன்றி கூறிவிட்டு மனம் வானில் சிறகடிக்க வீட்டுக்குப் புறப்பட்டாள்.

அரசு விடுமுறை நாட்களில் பிக்னிக்கை ஏற்பாடு செய்திருந்தால், தேஜூவுக்கு வேலையைப் பற்றிய டென்ஷன் இல்லாமல், கன்னியாகுமரிக்குச் செல்ல ஆயத்தமாக, அவளுக்குத் தேவையானவற்றை எடுத்து வைக்க உதவிய எழிலிடம் மீண்டும், "நீங்களும் என்னுடன் வாங்களேன்..." என்றழைத்தாள்.

அவளின் அழைப்பிற்கு சிரிப்பை பதிலாகக் கொடுத்து, அவள் தலையை வாஞ்சையாக தடவி, "இல்லேடா, நீ மட்டும் போயிட்டு வா. நான் வந்தால், நீ என்னுடன் தான் சுற்றுவே, சரயு, தனுஷியை மறந்திடுவே! அப்புறம் நான் தான் அவர்களிடம் திட்டு வாங்கணும்..." என்று பயந்தபடி குறும்புடன் கூறிச் சிரிக்க, மற்ற இருவருக்கும் அவரின் பாவனையில் சிரிப்பு வந்தது.

"ஓகே...ஓகே... அப்பாவுடன் டூயட் பாட இப்படி ஒரு பிட்டு போடறே...நடத்து...!' என்று கன்னங்குழியச்

சிரிக்க, அவளின் தலையில் செல்லமாக ஒரு தட்டு தட்டினார்.

“வாலு, இப்படியே பேசிகிட்டு இருந்தால் நேரமாகிவிடும், வண்டி இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடும் என்று சரயு போன் செய்தாள், சீக்கிரமா கிளம்பு...” என்று அவளை அவசரப்படுத்தினார்.

சிறிது நேரத்திலே எழில் சொன்ன மாதிரி சுற்றுலா வேன் வந்துவிட, பெற்றோரிடம் விடை பெற்றுக் கொண்டு வண்டியில் ஏறிய தேஜூவிற்கு வண்டியில் நடந்த கலாட்டக்கள், ஆட்டம் பாட்டம் இதெல்லாம் அவள் மனதை லேசாக்கியது. கொஞ்ச கொஞ்சமாகத் தன்னை அதில் ஈடுபடுத்தி ரசிக்க ஆரம்பித்தது மனது.

எல்லாமே மதுரையை அடைந்து அங்கு மதிய உணவிற்காக ரெஸ்டாரெண்டில் நிறுத்தும் வரைதான். வண்டி நின்றதும் தோழிகளிடம் சிரித்துப் பேசியபடி இறங்கியவள் ரெஸ்டாரெண்டின் பெயரைப் பார்த்ததும், இதழ்களில் ஒரு ரகசியக் குட்டிப் புன்னகை ஜனித்தது.

செழியன் சைவ உணவகம் என்ற பெயர் தாங்கிய பலகையைக் கண்டு தேஜூ ஸ்தம்பித்துப் போய் நிற்பதைக் கண்டு, “ஹேய் என்ன இங்கேயே நின்னுட்டே? வா, எல்லோரும் உள்ளே போய்ட்டாங்க” என்றபடி தனுஷி அவள் கையைப் பிடித்துக்கொண்டு இழுத்துப் போகாத குறையாகச் செல்ல, அவளைப் பின் தொடர்ந்த சரயுவின் பார்வை அவளை ஆராய்ந்தது.

சாப்பிட்டு முடிந்ததும் மீண்டும் வண்டியில் அமர்ந்த தேஜூவுக்கு கிளம்பும் போது இருந்த உற்சாகம் தொலைந்துவிட, எதையோ இழந்த மாதிரி தோன்ற,



சுவாரசியமே இல்லாமல் வெளியே வேடிக்கை பார்த்தபடி வந்தவளை சரயுவின் பார்வை துளைத்தது.

கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்தவள், “அப்புறம் தேஜூ, செழியன் சார் பற்றி என்ன முடிவெடுத்து இருக்கிறே...? என தடாலடியாக, செழியனைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

“என்ன உளர்றே...? நான் எதுக்கு செழியனைப் பற்றி முடிவெடுக்கணும்...? எனக்கும் அவருக்கும் என்ன சம்மந்தம்?” என்று கோபத்துடன் பொரிந்தவளை கையமர்த்தினாள் .

“ஸ்டாப் இட் தேஜூ, இன்னும் எத்தனை நாளைக்கு உன் மனசை முகமூடி போட்டு மறைக்கிறதா உத்தேசம்? உன் மனசைத் தொட்டுச் சொல். நீ செழியன் சாரை விரும்பலை என்று? அப்போ நான் நம்பறேன்...!” என்றாள் சவாலாக.

சரயுவின் கேள்விக்கு சட்டென்று பதிலைக் கூற முடியாமல் தடுமாறி, “சாரி, அப்படி ஒரு நினைப்பே எனக்கு இல்லை...” என்று அவள் முகத்தைப் பார்க்காமல் வெளிப்பக்கம் திரும்பியபடி கூற, அவள் முகத்தை வலுக்கட்டாயமாகத் தன் பக்கம் திருப்பினாள்

“பொய் சொல்றதுன்னு முடிவு பண்ணியபிறகு, எதற்கு வெளிப்பக்கம் திரும்பியபடி சொல்றே? என்னைப் பார்த்து சொல்லிட்டுப் போ...” என்றாள் மீண்டும் விடாப்பிடியாக.

அவள் பக்கம் நன்றாகத் திரும்பி அமர்ந்த தேஜூ, “ரியல்லி சரயு, எனக்கு யாரையும் பற்றி எந்த அபிப்பிராயமும் இல்லை நம்பு...!” என்று கெஞ்சாத

குறையாகக் கூறியும் சரயு விடாமல், "அப்போ செழியன் என்ற போர்டை, நீ முறைச்சிப் பார்த்துகிட்டு இருந்ததற்கு என்ன அர்த்தம் என்று கொஞ்சம் சொல்ல முடியுமா?" என்றாள் சற்று நக்கலாக.

தன் செயலுக்குத் தன்னையே நொந்து கொண்டு, "ஓ! அதைப் பற்றி கேட்கறியா...? அந்தப் பெயரை பார்த்ததும் சைட் ஞாபகத்தில் அப்படியே நின்னுட்டேன். நீ நினைக்கிறபடி ஒன்றுமில்லை...!" என்றவள் எங்கே மீண்டும் துருவினால் மனம் பலகீன மடைந்து உளறிக் கொட்டிவிடுவோமோ என்ற பயத்தில், "எனக்கு களைப்பா இருக்கு; நான் தூங்கறேன்..." என்றபடி கண்ணை மூடிக் கொள்ள சரயுவுக்கு அவளின் நடிப்பைக் கண்டு சிரிப்பு வந்தது.

"ஹ்ம்ம், பூனை கண்ணை மூடினால் பூலோகம் இருண்டுவிடும் என்று சில பேர் தவறாக நினைச்சிகிட்டு இருக்காங்க. கைப்புண்ணுக்கு எதுக்கு கண்ணாடி...? அது தான் முகத்திலே எழுதி ஒட்டியிருக்கே, உன் மனசில் என்ன இருக்குன்னு. கத்திரிக்காய் மலிஞ்சா சந்தைக்கு வந்துதானே ஆகணும்..." என்று கேலியாக தனக்குள்ளே பேசியபடி, கையில் வைத்திருந்த மில்ஸ் அண்ட் பூணில் தலையைப் புதைத்துக்கொண்டாள்.

தேஜூவுக்கு அவளின் கடைசி வாக்கியம் மட்டும் காதில் விழ, சட்டென்று கோபம் உற்பத்தியாக சரயுவின் கையில் இருந்த புக்கைப் பிடிங்கி, "வாட் நான்சென்ஸ்! யாருடைய காதலை சீப்பா நினைக்கிறே... செழியனை எந்தளவு நேசிக்கிறேன்னு உனக்குத் தெரியுமா...? அப்கோர்ஸ் எனக்கு ஆண்வர்க்கத்தின் மேல் நல்ல



அபிப்ராயம் இல்லை தான். ஆனால் என் செழியன் அப்படி இல்லை.? ஹி இஸ் எ ஜெம் ஆப் பெர்சன்..." என்று கடுகு போல பொரிந்தவளுக்கு, தானே வலிய வந்து அவளின் வலையில் சிக்கிக்கொண்டோம் என்று புரியவில்லை.

தேஜூவின் கோபத்தை இதுவரை கண்டறியாத சரயுவுக்கு, அதிர்ச்சியில் பேச்சு வராமல் ஸ்தம்பித்துப் போக, தேஜூ தன் மனசென்னும் இரும்புப் பெட்டகத்தை திறந்து காட்ட, அவள் பார்வையில் அதிர்ச்சி விலகி ஆச்சரியம் குடி கொண்டது.

தொடர்ந்து, "யெஸ், நான் அவரை விரும்பறேன் தான்... ஐ லவ் ஹிம். ஆனால் நீ நினைக்கிறே மாதிரி பணத்திற்காக வந்த நேசம் இல்லை...!" என்று அடுப்பிலிட்ட மிளகாய் மாதிரி காரத்தோடு வெடித்தவளின் குரல் தணியவும், சரயுவுக்கு அவளை நினைத்து பரிதாபமாக இருந்தது.

"பேசி முடிச்சிட்டியா தேஜூ...? என்னமோ கொஞ்ச நேரத்திற்கு முன் நான் ஒன்றுமே தெரியாமல் உளறுகிறேன், அது இது என்று காய்ந்தே...? இப்போ உன் வாயாலே ஓபன் ஸ்டேட்மென்ட் கொடுக்கிறே...!" என்றவள், "அது சரி, உன் காதல் பணத்திற்காக வந்த காதல்னு எப்போ சொன்னேன்..." என்றாள் கொஞ்சம் குறும்புடனும், கேள்வியுடனும் .

"என் காதல் மலிவு, சந்தை என்று ஏதோ சொன்னியே...?" என்று காற்றில் கரைந்து போன குரலில் கேட்டவளை கையமர்த்தி,

"அதைப் பற்றி அப்புறம் பேசலாம். இப்போ நான் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்..." என்று

கட்டளையிட்டுவிட்டு, "சரி, உன் காதலை உன் அவரிடம் சொல்லிட்டியா...?" என்று காலங்காலமாக தோழிகள் கேட்கும் கேள்வியை சரயுவும் கேட்டதும், இல்லை என்று பரிதாபமாக தலையாட்டினாள்.

"ஏன்...?" என்று புருவத்தை நெரித்த தோழியிடம்,

"ம்ச்ச், எப்படிச் சொல்ல முடியும்...? அவர் என்னைப் பார்த்த நாள் முதல், என்னிடம் அவர் நடந்து கொள்கிற முறையே என்னால் ஜீரணிக்க முடியவில்லை. என்னை ஏதோ தவறாக நினைத்து கோபமாக நடந்து கொண்டிருக்கிறார். இதில், எப்படி நான் என் மனசை வெளிப்படுத்த முடியும்...? அது மட்டுமில்லை, அவரின் அந்தஸ்தின் முன் நான் ஒரு தூசு...!" என்று மனதில் இருந்த ஆதங்கத்தைக் கொட்டித் தீர்க்க, சரயுவுக்குமே சரியெனப்பட்டது.

"டோன்ட் வொர்ரி தேஜு, இதற்கு நிச்சயம் ஒரு தீர்வு கிடைக்கும்...!" என்ற வினாடி பஸ் ஒரு வேகத்துடன் குலுங்கி நின்றது.

# 12

**ப**ஸ் நின்ற வேகத்தில் இருவரின் பேச்சும் தடைப்பட, குறட்டையோடு சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்த எதிர்சீட்டு விநாயகம், ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துவிட்டு மீண்டும் தூக்கத்தைத் தொடர்ந்தார்.

சரியான தத்தி! பாரேன் மறுபடியும் தூங்குது...!" என்று அவரை தேஜூவிடம் அர்ச்சனை செய்து



கொண்டே அவரை எழுப்பி விசாரித்த சரயுவிடம், "நத்திங் டு சீரியஸ், யாரோ ஒருத்தரின் கார் பங்க்சர் ஆயிடுச்சாம். கன்னியாகுமரி வரைக்கும் வண்டியைக் கட்டி இழுத்துக் கொண்டு வரமுடியுமா என்று கேட்கிறார். அவர் கூட நம்ம கம்ப்யூட்டர் செக்ஷன் முரளிதரன் தான் பேசிகிட்டு இருக்கார்..." என்ற தகவலை அள்ளித் தெளித்துவிட்டு, அவசரமே இல்லாமல் மீண்டும் தன் தூங்கும் வேலையை கண்டினியூ செய்தார்.

"இதுக்கு இடியே விழுந்தாலும், யார் தும்மினது என்று கேட்கும்!. இதுக்கு யார் விநாயகம் என்று பேரை வைச்சது...? கும்பகர்ணன் என்று வைத்திருக்கலாம்...!" என்று எரிச்சலுடன் மீண்டும் அவரை திட்டிய சரயுவை பார்த்து புன்னகைத்துவிட்டு,

தேஜூவும் சீட்டில் சாய்ந்து கண்ணை மூடி அமைதியாகத் தூங்க முயற்சித்த வேளையில் அவளின் செல்போன், "டியர், சம்படி காலிங்..." என்று இனிய குரலில் அழைத்தது. அதை எடுக்கலாமா வேண்டாமா என்று யோசித்து... பின் எடுத்தவள், புது நம்பரைக் கண்டு குழம்பினாள்.

தயக்கத்துடன், "ஹலோ..." என்றவளிடம், "ஹேய், நான் ஆதவ் பேசறேன், எப்படி இருக்கே...?" என்ற குரல் கேட்டதும் தான் அவளுக்கு மூச்சு சீராக வந்தது. "என்னாச்சு, அவனிடம் பதில் நலம் விசாரித்துவிட்டு, கொஞ்ச நாளா ஆளையே காணோம்...? நீ மீண்டும் அமெரிக்கா போயிட்டியோன்னு நினைச்சேன்..." என்றாள்.

"அதெப்படி உன்னிடம் சொல்லாமல் போவேன் என்று நினைச்சே...? இந்த வாரம் எங்க கம்பெனி ஆண்டு விழா இருக்கு. முடிஞ்சதும் கிளம்பிடுவேன்" என்றவன்,"முக்கியமான விஷயத்தைக் கேட்க மறந்துட்டேனே, அண்ணன் சொன்னார் உன்னை இன்வைட் செய்தாராம், நீ ஏதோ முக்கியமான வேலை இருக்கு என்று சொல்லிட்டியாம். ஏன் தேஜு அப்படிச் சொன்னே...? ஏன், உனக்கு எங்க கம்பெனி விழாவை அட்டெண்ட் செய்யப் பிடிக்கலையா?" என்றான் குறையாக.

அவன் குற்றஞ்சாட்டுவதை தாங்க முடியாமல், "ம்ச்ச்,அப்படியில்லை, நான் இப்போ ஆபிஸ் பீப்பிளோட கன்னியாகுமரி போய்கிட்டு இருக்கேன். அதனால் தான் என்னால் வர முடியவில்லை. மற்றபடி ஒன்றுமில்லை..." என்றாள் சமாதானமாக .

"என்னிடம் பொய் சொல்லாதே, என் அண்ணன் கூப்பிடும் வரை உனக்கு எந்த ஐடியாவும் இல்லையென்று தெரியும்..." என்றதும் தேஜூவுக்கு அதிர்ச்சியில் என்ன சொல்வது என்று தெரியாமல் சற்று நேரம் விழித்துவிட்டு, "அப்படியென்று யார் சொன்னது...? உண்மையிலே எனக்கு கன்னியாகுமரி ட்ரிப் இருந்ததினால் தான் வர முடியவில்லை என்று சொன்னேன்..." என்று சாதித்தாள்.

"ப்ளீஸ் தேஜு, மீண்டும் மீண்டும் பொய் சொல்லி உன்னையே நீ அசிங்கப்படுத்திக் கொள்ளாதே. உனக்குப் பொய் சொல்லத் தெரியவில்லை! நான் ஆன்ட்டியிடம் கேட்டுவிட்டுத் தான் உன்னிடம் பேசுகிறேன். சொல்லு, எதற்கு இப்படிச் செய்கிறாய்?



என் அண்ணனைக் கூட விடு, அம்மாவின் மேலும், என் மேலும் உண்மையிலே அக்கறையும் பாசமும் இருந்தால்... நீ இந்த ட்ரிப்பை கேன்சல் செய்துவிட்டு, நீ நாளை நடக்கவிருக்கிற விழாவிற்கு வருகிறாய்..." என்று அழுத்தம் திருத்தமாகக் கட்டளையிட, என்ன சொல்லி இவனுக்குத் தன் நிலமையைப் புரிய வைப்பது என்று யோசித்தாள்.

மறுபக்கத்திலிருந்து எந்தச் சத்தமும் இல்லாததால், பலமுறை அவளை ஆதவ் அழைத்து விட, மனதிலிருந்த ஆதங்கம் நீர்க்குமிழி போல பட்டென்று உடைந்து, "சாரி ஆதவ், என்னால் வரமுடியாது. இப்படிச் சொல்றதுக்காக என்னைத் தவறாக நினைக்காதே. நான் எது செய்தாலும், அதற்கு ஒரு சரியான காரணம் இருக்கு என்று உனக்குத் தெரியும். இதிலும் அப்படித் தான். ப்ளீஸ் ட்ரை டு அண்டர்ஸ்டாண்ட் மீ...!" என்றாள் கெஞ்சாத குறையாக.

"ஓகே... ஓகே... நீ வர வேண்டாம். ஆனால் காரணத்தை நான் தெரிஞ்சிக்கலாமா...? உன்னுடைய உண்மையான நண்பன் என்று என்னை நீ கருதினால்...?" என்று ஒரு கொக்கி வைத்து நிறுத்தினான்.

அதற்கு மேல் தேஜுவால் அவனிடம் எதையும் மறைக்க முடியாமல், செழியன் தன்னிடம் நடந்து கொள்கிற முறையை, அவன் தன்மேல் வைத்திருக்கும் தவறான அபிப்பிராயத்தை, ஏன் எதற்கு என்று தெரியாமல் தான் தடுமாறுவதைப் பற்றி எல்லாம் கொட்டித் தீர்த்துவிட்டு, "இப்போ சொல்லு ஆதவ், என்னால் எப்படி வர முடியும்...?" என அவனையே திருப்பிக் கேட்டாள்.

"ஏன் எதற்கு என்று கேட்க வேண்டியது தானே...? காரணம் இல்லாமல் ஒருத்தர் உன்னிடம் இப்படி நடந்துகொண்டால் நீ ஏன் வாயை மூடிக் கொண்டு இருக்கிறாய்? திருப்பி பதிலுக்குச் சூடாக நாலு வார்த்தை கேட்க வேண்டியது தானே...? என்னடா இவன் இப்படிப் பேசறானே என்று நினைக்காதே...? அப்கோர்ஸ், அவர் என் அண்ணன்தான்... அதற்காக தெரியாத பெண்ணிடம் இப்படிப் பேசினால் எப்படிச் சும்மா இருப்பது.....?" என்று பட்டாசாய் வெடித்தான்.

"தட்ஸ் ஓகே ஆதவ், ஆனால் உன் அண்ணன் கெட்டவர் இல்லை. ஏதோ மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்! தட்ஸ் இட்...!" என்ற அவளின் பொறுமையில், இவனுக்கு ஆத்திரமும் சிரிப்பும் கலந்து வந்தது.

"என்னவோ இமயமலையில் பல வருடம் தவத்தில் இருந்த முனி போலப் பேசறே..." என்று நக்கலடித்துவிட்டு, "சரி, நானாவது காரணத்தைக் கேட்கவா?" என்றவனிடம்,

"அப்படி எதுவும் செய்து வைக்காதே...! என்றாவது ஒரு நாள், அவருக்கு என்னைப் புரியும். அப்பொழுது கண்டிப்பாக என்னிடம் சொல்வார். அதுவரை பொறுமையா இருப்பதில் என்ன ஆகிவிடப் போகிறது...?" என்று அவனை சமாதானப்படுத்த, ஆதவின் வாய் அடைத்துப் போனது.

"இவள் என்ன சொல்கிறாள்...? ஒருத்தன் காரணமில்லாமல் சண்டை போட்டாலோ, திட்டினாலோ நியாயமாக கோபம் தானே வரணும்...? ஆனால் இவள் நேர்மாறாக இருக்கிறாளே? வினோதம் தான்...!" என்று தனக்குள் சிரித்துகொண்டு,



"ஓகே, எனதருமை தோழியே... இதுக்கும் மேலே நான் உன்னை வற்புறுத்த மாட்டேன். என்ஜாய் யுவர் ட்ரிப். தென், நான் அமெரிக்கா திரும்பிச் செல்வதற்குள் தாங்கள் தயை கூர்ந்து அடியேனுக்கு தரிசனம் தருமாறு மிக மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்..." என்று பணிவாக செந்தமிழில் பேச,தேஜு ரொம்ப நாளைக்குப் பிறகு மனம் விட்டுச் சிரித்தாள்.

சிறிது நேரம் அவனிடம் பேசி விட்டு போனை வைத்ததும், மனதிலிருந்த பாரம் இறங்கியது போல இருந்தது. ஏனோ ஆதவிடம் தன் மனக்குறையை சொல்லும் வரை மனதை பாரமாக அழுத்திக் கொண்டிருந்த விஷயம், தன் தோழனிடம் பகிர்ந்து கொண்டதும் லேசாக மாறியது..

கன்னியாகுமரி அடைய மாலை ஆகிவிட்டதால், ஓட்டலுக்கு அருகில் இருந்த கடற்கரைக்குச் சென்று, சூரிய அஸ்தமனத்தை ரசித்துவிட்டு... தங்களுக்குத் தரப்பட்ட ரூமிற்கு வந்ததும் களைப்பு தீர குளித்துவிட்டுப் படுத்தவளுக்கு, உறக்கம் வர மறுத்தது. என்ன தான் செழியன் மேல் கோபமிருந் தாலும், ஒரு நாள் முழுக்க அவனைப் பார்க்காமல் இருந்தது மனதிற்கு என்னவோ போலிருந்தது.

எங்கு சென்றாலும், யாரைப் பார்த்தாலும் அவனைப் பற்றிய ஞாபகங்களே காலைச் சுற்றும் நாய்க் குட்டியாய் சுற்றிவர, ஆயாசம் அவளை அடித்துக் கொண்டு சென்றது. புரண்டு புரண்டு படுத்து கண்களை இறுக மூடி, தலைகீழாக ஒன்று இரண்டு சொல்லி... தூக்கத்தை வரவழைக்க அவள் படாத பாடு படுவதைத் தாங்க முடியாமல் நித்ரா

தேவியே பரிதாப்பட்டு அவளை ஆரத் தழுவிகொள்ளும் பொழுது மணி மூன்றைத் தொட்டிருந்தது.

யாருமில்லாத கடற்கரையில் இரவு நேரத்தில் நைட்டியின் மேல் கம்பளி ஸ்வெட்டரை அணிந்து கையைக் கட்டியபடி செழியனைப் பற்றி யோசித்தபடி நடந்து கொண்டிருந்த தேஜூவுக்கு, சிறிது தூரத்தில் மங்கலாக ஓர் உருவம் நடந்து வருவதைக் கண்டு மனதிற்குள் லேசாக குளிர் பிறந்தது.

நிலவின் ஒளியில் கடற்கரை வெள்ளித் தகடுகளாய் ஜொலிஜொலிக்க, அதன் ஓதம் சுருதி தப்பாமல் வரும் நாதஸ்வர ஓசை போல மனதைக் கவர்ந்திழுத்தாலும், எதிரில் வருகிற மானுடன் யாரோ என்கிற பயத்தில், பெண்ணிற்கே உரிய எச்சரிக்கை உணர்வும் பயமும் தலைதூக்க, அவளின் கால்கள் ஒரே இடத்தில் அசைவற்று நின்றது. கால்கள் நிலத்தில் வேர்கள் ஊன்றியது போல அந்த இடத்திலிருந்து அசைக்க முடியவில்லை.

நெஞ்சத்தின் துடிப்பு லயம் தப்பி தன் காதிற்கே கேட்கும் அளவிற்கு இதயக் குதிரை வேகமாக ஓட, அந்த உருவம் அருகில் நெருங்க நெருங்க, தேஜூவுக்கு அந்தக் குளிரிலும் வேர்வை முத்துக்கள் அரும்பத் தொடங்கியது.

அங்கிருந்து ஓட நினைத்து கால்களை கஷ்டப் பட்டு இழுத்து ஓர் அடி வைக்க, அதற்குள் அவளை நெருங்கிவிட்டிருந்த அந்த உருவம், அவளின் தோளின் மேல் தன் வலிமையான கையை வைத்ததும், பயத்தில் கண்ணை மூடிக் கொண்டு அலறிய தேஜூவை



முரட்டுத்தனமாகத் தன் பக்கம் திருப்பிய அந்த உருவம், “ஹேய், பயப்படாதே ,நான் தான்! கண்ணைத் திறந்து என்னைப் பார்...'' என்று சொல்லியும், தேஜூவின் அலறல் நிற்காமல் தொடர்ந்தது.

“தேஜு, எழுந்திரு, எதுக்கு இப்படி அலர்றே? கண்ணைத் திறந்து பார்... கமான் கெட் அப், டைம் ஆயிடுச்சு...'' என்று அவளின் தோளைப் பிடித்து தனுஷி உலுக்கிக் கொண்டிருந்தாள்.

அடித்துப் பிடித்து எழுந்தவளிடம், “ஏய் என்னதான் ஆச்சு உனக்கு...? இப்படியா காலையிலே கத்தி பயமுறுத்துவே...? எல்லோரும் பத்பநாப அரண் மனைக்குக் கிளம்பிட்டாங்க. சீக்கிரம் போய்க் குளிச்சிட்டு வா...'' என்ற சரயு, அவளை பாத்ரூம் பக்கம் தள்ளிவிட்டு, “ம்ஹீம், இதுக்கு சீக்கிரம் வைத்தியம் செய்யணும்...'' என்றாள் தனக்குள் .

அடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் எல்லோரும் பத்பநாப அரண்மனைக்கு சென்று சுற்றி பார்க்க, தேஜூவுக்கு இந்த மாதிரி புராதன கட்டிடக் கலைகள் மீது தீராத ஆர்வம் இருந்தும் அன்று ஏனோ சுவாரசியம் அற்று, கடமையே என்று தோழிகளோடு சென்று கொண்டிருந்தாள்.

அவளுக்கே சிறிது நேரத்திலே அந்த இடம் போரடித்து, அப்பொழுதே சென்னைக்குக் கிளம்பிவிட மனதும் கையும் காலும் பரபரத்தது. ஆனால் இன்னொரு மனது இன்றைக்குத் தானே கம்பெனி ஆண்டு விழா?, அந்த நேரத்தில் கண்டிப்பாக நான் அங்கிருக்கக் கூடாது. அவனைத் தவிர்க்கத் தானே இங்கே வந்தேன்...?

இப்பொழுது நான் அங்கு போய் நின்றால், என்னைப் பற்றி இன்னும் கீழ்த்தரமாக தானே செழியனால் நினைக்கத் தோன்றும்?

"ம்ஹீம், என்ன ஆனாலும் சரி... நான்கு நாட்கள் அவன் கண்ணிலே படக்கூடாது. எதிர்காலமே இல்லாத இந்த காதலை வளர்ப்பதை விட, கருவிலே அழிப்பது தான் எனக்கு நல்லது.

இங்கிருக்கும் இந்த நான்கு நாட்களுக்குள் செழியனைப் பற்றிய நினைவுகளை என் மனதிலிருந்து அழித்தே ஆகவேண்டும். கணினியில் இருப்பது போல டெலிட் என்ற ஒரு பட்டன் மனித இதயத்தில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திற்க்கும்....? பிடிக்காத, வேண்டாத நினைவுகளை டெலிட் என்ற பட்டனை அழுத்தி மிகச் சுலபமாக அழித்து விடலாம்...!" என்ற சிந்தனைக் குதிரை ஓட அவளையும் மீறி ஒரு பெருமூச்செழுந்தது.

கடவுளே, நீ தான் எனக்கு உறுதுணையாக இருக்கணும் என்ற ரீதியில் யோசித்துக் கொண்டிருந் தவள், தன்னையும் அறியாமல் அரண்மனைக்குள்ளே இருந்த கடவுளின் படத்தின் முன் கரம்கூப்பி நின்றுவிட, என்னவென்று என்று விசாரித்த தோழிக்கு அவசரமாக ஒன்றுமில்லை என்று தலையாட்டினாள்.

முடிவெடுப்பது மிகச் சுலபமாக இருந்தது. ஆனால் அதை செயல்படுத்தத் தான் திண்டாட வேண்டி இருந்தது புரிந்தது தேஜூவிற்கு. மருந்தை குடிக்கும் போது குரங்கை நினையாதே என்ற பழமொழி போல, அவனை நினைக்காதே என்று மனதிற்கு கடிவாளம் போட்டு அதை வேறு பக்கம் திருப்பினால், விஷம்



போல அவனின் நினைவுகள் கிடு கிடுவென்று ஏறியது.

அங்கிருந்து எல்லோரும் முட்டம் கடற்கரைக்குச் செல்ல, கடற்கரை அழகில் மனதைக் கஷ்டப்படுத்தி ஈடுபடுத்தி, சரயுவின் உதவியோடு அவனின் நினைவை ஓரளவிற்கு வென்று வெற்றி பெற, மனதும் சற்றே அமைதியானது .

அங்கிருந்து கொஞ்ச தூரத்தில் அமைந்திருந்த சர்ச்சிற்கு சென்ற தேஜு, மண்டியிட்டு செழியனை மறக்க நினைக்கும் தன் வேண்டுதலை முன் வைத்து சிறிது நேரம் பிரார்த்திக்க, மனதின் சஞ்சலம் மேலும் குறைந்திருந்தது எனலாம்.

மதிய உணவிற்குப் பின் பயணத் திட்டத்தின் படி, உலக்கை அருவிக்குச் சென்றார்கள். அருவியை நெருங்கும் போழுதே அருவியின் இயற்கை அழகு, தேஜூவை ஈர்த்தது. வண்டியை விட்டு இறங்கி அருவியின் அருகில் நெருங்க நெருங்க, அருவியின் சாரல் அவர்களை சுகமாக நினைக்க, மனது ஆனந்தத்தில் சிலிர்த்து போனது.

மூவரும் வெயில் சுற்றிய களைப்பு தீர அருவியில் இறங்கிவிட, சில பயணிகள் தவிர மற்றவர்கள் எல்லோரும் தண்ணீரில் கும்மாளம் போட்டார்கள்.

கண்ணை மூடி ரசித்துக் கொண்டே சுகமாக அருவியில் குளிக்க, ஒரு வானுலக தேவதையே இறங்கி வந்து நீராடி, இதுவரை தான் தோன்றிய பிறவிப் பயனை அடைந்தது போல, அருவியும் அவளை இதமாகத் தாலாட்டியது.

அருவியின் ஓவென்ற இரைச்சலில் தன்னை மறந்து நீராடிக் கொண்டிருந்தவளுக்கு, ஏதோ ஒன்று

உரைக்க கண்ணைத் திறந்து பார்த்தவள், தன் கூட குளித்துக் கொண்டிருந்த தோழிகளைக் காணவில்லை என்றதும் பயத்தில் சிலீரென்றது.

அவசரமாக அருவியை விட்டு வெளியே வர எத்தனிக்கும் பொழுது, தன் பிறவிப் பயனை தீர்க்க வந்த தேவதையை அனுப்ப மனமில்லாதது போல, அவளின் ஈரப்புடவை காலை இடறிவிட, கீழே விழுந்தவளை கரடுமுரடாக இருந்த பாறை பதம் பார்க்க,கை கால்கள் சிராய்த்து ரத்தம் கசிந்தது.

வலியை பொருட்படுத்தாமல் தடுமாறி எழ முயற்சி செய்து கொண்டிருந்தவள் முன் ஓர் கரம் நீள, யாரது என்று தலையை நிமிர்த்தியவளின் விழிகள், தன் முன்னே நின்று கொண்டிருந்த செழியனைக் கண்டு ஆச்சரியம் ப்ளஸ் குழப்பத்தில் விரிந்தாலும், அவனின் கையைப் பிடித்துக் கொண்டு மேலேறி வந்தாள்.

குளித்திருந்தாலும் காஜலின் வசீகரம் கலையாமல் இருந்த பெரிய கண்களும், லேசாக பிளந்த இளம் சிவப்பு இதழ்களும், கட்டியிருந்த மெல்லிய ஷிபான் சேலை ஈரத்தில் உடலோடு ஒட்டி வெளிச்சம் போட்டுக் காட்டிய அவளின் ஆபத்தான வளைவுகளும், தங்க மேனியில் வெள்ளி நீர் முத்துக்கள் வழுக்கிக் கொண்டு ஓடிய அழகும், நெற்றியில் போட்டிருந்த ஈரக் கூந்தலின் கோலமும், மொத்தத்தில் அஜந்தா ஓவியமே உயிரோடு எழுந்து வந்தது போல இருக்க, செழியனின் மனம் அவளின் அழகில் சிக்கி சின்னாபின்னமாகியது.

இருவருமே சில வினாடிகள் தங்களை மறந்து பார்த்துக்கொண்டிருக்க, தேஜூவின் பெண்மை சட்டென்று விழித்துக்கொண்டது. செழியன் முன் தான்



இருக்கும் கோலம் அவளை நாணத்தில் அமிழ்த்த, அதுவரை அவன் கையைப் பிடித்திருந்த தன் கையை விடுத்து, விழிகளைத் தாழ்த்தி, "தாங்க்ஸ்...!" என்றாள் வெட்கமும், கூச்சமும் போட்டி போட.

அடுத்த வினாடியே மற்றவர்கள் எங்கே என்று துழாவிய அவளின் விழிகள் அங்கே யாருமில்லாததால் செழியனின் முகத்தில் கேள்வியாய் நிலைக்க, "எல்லோரும் போய் அரைமணி நேரம் ஆகுது..." என்றதும் அவளின் முகம் குழப்ப முலாம் பூசிக்கொண்டது.

தேஜூவின் தவிப்பை உணர்ந்து சரயு செழியனுக்குப் போன் செய்தது, அவன் விழாவின் பாதியிலே பிளைட் பிடித்து வந்தது, தேஜூவைத் தவிர எல்லோரையும் போகச் சொல்லி செழியன் சொன்னது... இது எதுவும் தேஜூவுக்குத் தெரியாதால், "நீங்க... இங்கே... எப்படி..." என்று திக்கினாள்.

இதழ்களுக்குள் சிரித்து, "எனக்கும் அது தான் ஆச்சரியம்! என் மன அமைதி தேடி இங்கே வந்தேன். அதிசயமாக ஒரு தேவதை நீராடிக் கொண்டிருந்ததைப் பார்த்து என்னை மறந்து நின்றுவிட்டேன். அப்புறம் தான் தெரிந்தது, அது மிஸ் தேஜஸ்வி" என்றான் சற்றுக் குறும்பாக.

அவனின் பாவனையில் வெட்கமும் சிரிப்பு அவளை அலைக்கழிக்க, அதை வெளிக்காட்டாமல் இருப்பதே பிரம்மயத்தனமாக இருந்தது. இதயத்தில் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தாலும் மனதை மறைத்து, "ப்ளீஸ் பீ சீரியஸ்..." என்று கண்ணில் கடுமையை வரவழைத்துக் கொண்டு கேட்டதும், "ஓகே...ஓகே... ஐ அம் சரண்டர்..." என்று இரு கையை தூக்கி,

முதலிலேயே நான் சொன்ன மாதிரி மன அமைதிக்காக வந்த பொழுது, எல்லோரும் கிளம்பிக் கொண்டு இருந்தார்கள். சரயுவை பார்த்ததும் தான் புரிந்தது, நீ விழாவிற்கு வர முடியாத காரணத்தை.

எல்லோருக்கும் குளித்த அசதியில் பசி வந்துவிட்டது போலும்...? உன்னை பலமுறை சரயு அழைத்தும் நீ கவனிக்காததால், என்னை அழைத்து வர வேண்டுகோள் வைத்துவிட்டு அவர்கள் கிளம்பி விட்டார்கள். இது தான் முன் கதைச் சுருக்கம்...' என்னும் பொழுதே அவனின் கண்கள் ரகசியச் சிரிப்பில் பளபளத்தது.

ஆனால் தேஜூவிற்கு சரயுவின் மேல் சந்தேகம் முளைக்க,இருக்கட்டும் உன்னைக் கவனித்துக் கொள்கிறேன் என்று அவளை மனதிற்குள் திட்டிக்கொண்டே, காற்றில் காய்ந்து விட்டிருந்த புடவையை நீவி சரி செய்து, தலையை உதறிக் காயவைத்து சிறிது முடியை எடுத்துப் பின்னி, கூந்தலைத் தளரவிட்டுக் கொள்ள மேக்கப் இல்லாமல் துடைத்து வைத்த குத்துவிளக்கு போலிருந்த அவளின் அதீதமான அழகு, அவனை கொஞ்சம் கொஞ்சமாகத் தன் வசமிழக்க வைத்தது.

அவளின் மேல் வைத்த கண்ணை எடுக்க முடியாமல் தடுமாறியவன் வலுக்கட்டாயமாக பார்வையைத் திருப்பி, "போகலாமா...?" என இந்த மாதிரி தனிமையில் இவனுடன் இருப்பது சரியில்லை என்று அவளின் பெண்மை எச்சரிக்க, நோ தேங்க்ஸ்! என்று சொல்ல நினைத்து சரி என்றாள்.

வண்டியில் அவன் பக்கத்தில் தன்



மனதிற்கினியவள் அமர்ந்ததும் விடலைப் பையன் போல செழியனின் மனதில் ஓர் இனம் புரியாத படபடப்பு. என்ன தான் உணர்வுகளை கட்டுப்படுத்தி ஒரு விலகல் தன்மையுடன் நடந்து கொண்டாலும் தேஜூவின் மனதிலும் அதே உணர்வு எழ இருவரின் பார்வையும் ஒன்றாக சங்கமித்தது.

# 13

ஒரு விதபடபடப்போடு விரல் நகத்தைக் கடித்துத் துப்பியபடி, அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே ஜன்னலை அடிக்கடி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சரயுவை நிறுத்தி, 'ஹேய், இப்போ எதுக்கு நீ, குட்டி போட்ட பூனை மாதிரி நடந்துகிட்டு இருக்கே...? அங்கே என்னடா வென்றால் செழியன் சார் திடீரென்று பிரசன்ன மாகிறார்? அவரிடம் தேஜூவை அழைத்து வரச் சொல்லிட்டு எல்லோரையும் அவசரப்படுத்தி கிளப்பிக் கொண்டு வந்துட்டே? என்னதான்டி நடக்குது இங்கே?' என்ற தன்ஷியை கையமர்த்தினாள்.

"வெயிட்...வெயிட்... சொல்கிறேன்..." என்று மீண்டும் ஜன்னல் வழியாக எட்டி பார்க்க, ஹோட்டலில் ஒரு கார் நுழைவதை கண்டதும் சரயுவின் முகத்தில் சூரிய வெளிச்சம் படர்ந்தது .

அவளின் சந்தோஷத்திற்குக் காரணம் புரியாமல் கேள்வியாக நோக்கிய தனுஷிக்கு ஜன்னலின் வெளியே காட்டி, "இங்கே பார் தேஜூவும், செழியன் சாரும்

ஒன்றாக வராங்க பார்!" என்று கூறியும், தனுஷியின் குழப்பம் தீர்ந்தபாடில்லை.

"அட மண்டு, இன்னுமா உனக்குப் புரியலை? நம்ம தேஜு மனசில, செழியன் சத்தமில்லாம குடி வந்து ரொம்ப நாளாச்சு. அதுக்குத் தான் இந்த ஏற்பாடு செய்தேன்!" என்று தேஜூவின் மனசையும், அவளின் குழப்பத்தையும் சொல்லச் சொல்ல தனுஷியின் வாய் பிளந்தது.

அதற்குள் வண்டியிலிருந்து இறங்கிய தேஜு, விடு விடுவென்று இறங்கி வருவதைப் பார்த்த சரயு, "ஹேய் தனுஷி, நான் சொன்னதை அவளிடம் சொல்லிவிடாதே..." என்று எச்சரிக்கை செய்துவிட்டு கட்டிலில் அமர்ந்து, அங்கே கிடந்த ஒரு புக்கை கையில் எடுத்து வைத்து படிக்கிற மாதிரி பாவனை செய்ய, தனுஷிக்கு தான் என்ன செய்வது என்று தெரியாமல்... மடித்த வைத்திருந்த துணியைப் பிரித்து மீண்டும் மடித்து வேலை செய்வது போல பாவனை செய்ய, சரயுவுக்கு தன் தோழியின் திண்டாட்டத்தை நினைத்துச் சிரிப்பு வந்தது.

ஒரு வேகத்துடன் தங்கள் அறைக்கு வந்த தேஜு கட்டிலில் அமர்ந்திருந்த தோழியின் முன் வந்து அமைதியாக நிற்க, சரயுவின் உள்ளே குளிர் பிறந்தது.

ஆனாலும் தன் நடிப்பைத் தொடர்ந்தவளுக்கு எவ்வளவு நேரம் தான் தாக்குப் பிடிக்க முடியும்? அப்பொழுது தான் கவனித்த மாதிரி புக்கைத் தாழ்த்தி, "ஹேய், எப்போ வந்தே தேஜு? சாரிடி நீ சந்தோஷமா குளிச்சிகிட்டே இருந்தே, அதான் டிஸ்டர்ப் செய்ய வேண்டாமே என்று..." முடிக்கும் முன்னரே தேஜு



அவளை பளாரென்று அறைந்தாள்.

எதிர்பாராமல் விழுந்த அடியால் பொறி கலங்கிப் போய் கன்னத்தைப் பிடித்துகொண்டு பேசக் கூட திராணியில்லாமல் விழிக்க, ஏற்கனவே மிரண்டு போயிருந்த தனுஷிக்கு உள்ளுக்குள் உதறினாலும், 'ஏண்டி,இப்போ அவளை அடிச்சே?" என்று வக்கலாத்து வாங்கி வர அவளை உக்கிரமாக முறைத்தாள்.

அவளின் முறைப்பில் ஓரடி பின் வாங்கியவளிடம், "உங்களிடம் நான் கேட்டேனா... செழியனோடு என்னைச் சேர்த்து வையுங்க என்று? என் அனுமதி இல்லாமல், என் காதலை அவரிடம் சொல்ல... உனக்கு யார் அந்த உரிமையைக் கொடுத்தது? புல் ஷிட்" என்று உஷ்ணமாய் பேசப் பேச, சரயுக்கு தான் தவறு செய்திட்டோமே என்று உறுத்த ஆரம்பித்தது.

மெதுவாக, "சாரி தேஜு, உன் மனதின் ஆசைகளை நிறைவேத்த தான் இப்படிச் செய்தேனே தவிர, வேறு எந்த எண்ணமும் இல்லை..." என்றவளை கடுமையாக முறைத்து,

"ஆமாம், நான் காதலிக்கிறேன் தான்...அதற்காக, என்னைப் பற்றி தவறாகவே நினைத்துக் கொண்டிருக்கிற ஒருத்தரிடம் போய், என் காதலை போட்டு உடைப்பதா?" என்னும் போதே முகம் சிவந்துவிட,

"என்னடி நடந்தது? செழியன் சார் மறுபடியும் உன் மனசு நோகும்படி சொன்னாரா?" என்ற தனுஷியின் கேள்விக்கு,

"அது கூடப் பரவாயில்லை!, ஆனால் என் மேல் உள்ள காதலை என்னிடமே நேரடியாகச்

சொல்லியிருக்கலாமே? எதற்கு சரயுவின் தூது...? என்னும்பொழுது எனக்கு அப்படியே கூசிப் போச்சு தெரியுமா!'' என்றவளின் கண்கள் கண்ணீரில் தத்தளித்தது.

ஒரு வைராக்கியத்துடன் கண்ணீரை உள்ளுக்கிழுத்து, ''போதும் நான் பட்ட அவமானம். எனக்கு இப்படி ஒரு நட்பு தேவையில்லை!'' என்று கையெடுத்துக் கும்பிட மற்ற இரு பெண்களுக்குமே திக்கென்றது.

அவள் அத்தோடு நிற்காமல் தன் பெட்டியைத் திறந்து புடவையை எடுத்துக் கொண்டு குளியறைக்குச் சென்று மாற்றிக்கொண்டு வெளியே வரும் வரை, இருவருமே பிரமை பிடித்தவர்கள் மாதிரி நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்களை சட்டை செய்யாமல் கடகடவென்று தன் உடமைகளோடு வெளியே சென்றவள் கீழே ரிசப்ஷனில் நின்று பேசிக் கொண்டிருந்த செழியனிடம், ''சென்னைக்கு உங்களோடு நானும் வரலாமா?'' என்று அனுமதி கேட்க, செழியனின் பார்வை அவளை ஆச்சரியத்தோடு ஆராய்ந்தது.

எதுவும் சொல்லாமல் கண்ணில் சிரிப்புடன் நின்றிருந்தவனை, ''எக்ஸ்கியூஸ் மீ...'' என்றழைக்க,

''ஓ! சாரி, ஷ்யூர்... வாங்க போகலாம்'' என பெட்டிகளோடு அவன் வண்டியில் ஏறியதும் ஸ்டார்ட் செய்த செழியனுக்கு தேங்க்ஸ் என, அவனை வித்தியாசமாகப் பார்த்தான்.

ஆனால் அவளின் பார்வையோ ரியர்வியூ மிரரில், வாசலில் பரிதாபமாகப் பார்த்தபடி லாபியில்



நின்றிருந்த தோழிகளின் மீதே இருந்தது. அவர்களின் மேல் தவறு இல்லையென்றாலும், சரயுவின் செயலை நியாயபடுத்திப் பார்க்க முடியவில்லை.

நெடுஞ்சாலையைத் தொட்டதும்,' சாரி பார் த டிஸ்டர்பன்ஸ்!'' என்று அவனிடம் முணுமுணுத்து விட்டு, செழியனின் பதிலைக் கூட எதிர்பாராமல் பின் சீட்டில் சாய்ந்து கண்ணை மூடிக்கொள்ள, அவளைப் புரிந்து கொள்ள முடியாமல் குழம்பினான்.

அருவியிலிருந்து திரும்பி வரும் பொழுது கூட,அதிகமாகச் சிரித்துப் பேசவில்லை என்றாலும் கேட்ட கேள்விகளுக்கு சாதரணமாக பதில் சொல்லிக் கொண்டு தானே வந்தாள்? அதற்குள் என்ன நடந்திருக்கும் என்று யூகிக்க முடியாமல், வண்டியை கையாண்டு கொண்டே அவளை திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு வந்தான்.

மதுரையில் வண்டியை நிறுத்தி, காபி குடிக்கச் சொன்ன பொழுது கூட வேண்டாம் என்று திட்ட வட்டமாக மறுத்து, ''தயவுசெய்து என்னை சென்னையில் கொண்டு விட்டால் மட்டும் போதும்!'' என்றவளை வற்புறுத்த முடியாமல் ,அமைதியாகப் பயணத்தைத் தொடர்ந்தான். சென்னையை அடையும் வரை செழியனும் அவளிடம் மீண்டும் பேச முயற்சி செய்யவில்லை; தேஜூவும் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

அவளை அவள் வீட்டின் முன் இறக்கிவிட்டதும், அவள் ஏதாவது பேசுவாள் என்று ஒரு எதிர்பார்ப்புடன் அவள் முகத்தை நோக்கியவனிடம், இறுகிப்போன குரலில், ''தேங்க்ஸ் எ லாட் சார்!'' என்று சம்பிரதாயமாகச்

சொல்லிவிட்டுச் செல்ல, செழியனின் கோபம் மீண்டும் தலைதூக்கியது.

அவளின் அந்தச் செயல், அவனை யாரோ கன்னத்தில் அறைந்த மாதிரி இருக்க,கோபத்தில் விருட்டென்று வண்டியைக் கிளப்பி புழுதி பறக்கச் செல்ல... உள்ளிருந்து அவன் சென்ற திசையையே கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்த சம்பவத்திற்கு பிறகு தேஜு சரயுவிடமும், தனுஷியிடமும் பேசாமல் ஒதுங்கிச் செல்ல சரயு தான் துடித்துப் போனாள். பலமுறை தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டும் தேஜூவின் மனம் இளகாமல் போக, எப்படி இவளைச் சமாதானப்படுத்துவது என்ற வகை தெரியாமல் தவித்துப் போனாள்.

சைட்டிற்கு வழக்கம் போல சென்று தன் வேலைகளைப் பார்த்தாலும், செழியனை நேருக்கு நேர் பார்க்க விரும்பாமல்... முடிந்தவரை அவன் வராத நேரங்களில் தன் சைட் விசிட்டை அமைத்துக் கொண்டாள்.

அவன் பலமுறை தன்னைச் சந்திக்க முயன்றதை, டீம் மெம்பர்கள் மூலம் தெரிந்து கொண்டாலும், தெரியாத மாதிரியே நடந்துகொள்ள, சரயுவின் மூலம் இரு அம்மாக்களும் தேஜூவின் கோபம் தெரிய வர, இதை எப்படிக் கையாள்வது என்று திணறிப் போனார்கள் .

ஒரு நாள் மாலை ஆபிசிலிருந்து களைப்பாக வீடு திரும்பிய மகளுக்குக் காபியை கொடுத்தபடி, 'உன் ப்ராஜெக்ட்டை வெற்றிகரமா முடிச்சி கொடுத்திட்டே போலிருக்கே...? செழியன் அம்மா சொன்னார்கள்..."



என்று பெருமையாகப் பேசிய தாயை, சலனமில்லாமல் நோக்கிவிட்டு. மீண்டும் டிவியில் பார்வையைப் பதித்தாள் .

"மதியம் நீ ஆபிசில் இல்லையா? நீ வீட்டிற்கு வந்தால் செழியன் தம்பி போன் செய்யச் சொன்னார்..." என்ற தாயின் கேள்வியில் மீண்டும் தேஜூவின் பார்வை உயர்ந்தது.

"உன் செல்லுக்கு முயற்சி செய்தாராம்; சுவிட்ச் ஆப் என்று வந்ததாம்!' என்ற தாயை இடைவெட்டி,

"ஹ்ம்ம்,செய்திட்டேன். ப்ராஜெக்ட்டை நல்ல படியா முடிச்சுக் கொடுத்ததற்காக பார்ட்டி வைச்சிருக்காராம், அதற்காக இன்வைட் செய்தார்..." என்று ஜீவனே இல்லாமல் சொல்லிவிட்டு மாடிக்குச் செல்ல, மீண்டும் புதிதாக இவர்களுள் என்ன பிரச்சனை என்ற கவலை எழுந்தது.

ப்ராஜெக்ட்டை முடித்து செழியனிடம் ஒப்படைத்த கையோடு, அவனைச் சந்திக்க திராணியில்லாமல் பத்து நாள் ஆபிஸ்க்கு லீவ் போட்ட தேஜூ, எங்கேயும் போகாமல் வீட்டுக்குளே அடைந்து கிடந்தாள்.

எழிலுக்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல், சரளா அம்மாவின் உதவியை நாட, "எப்படியாவது அவளை பார்ட்டிக்கு அனுப்பி வை. மீதியை செழியன் பார்த்துக்குவான். கவலைப்படாதே எல்லாம் சீக்கிரமே சரியாகும்!" என்றவரின் வார்த்தையில் சற்று நம்பிக்கை பிறந்தது .

லீவ் என்பதால் தாமதமாக எழுந்து குளித்து சாப்பிட்டு டிவியின் முன் அமர்ந்த மகளிடம் வந்த

எழில், "தேஜூ இன்று மாலை செழியன் குருப் ஆப் கம்பெனீஸ் கொடுக்கிற பார்ட்டி இருக்கு இல்லையா? அதற்கு எந்தச் சேலை கட்டிக்கப் போறே...?" என்று கேஷ்வலாக கேட்டபடி வந்தமர்ந்த தாயிடம் உச்ச கொட்டிவிட்டு, "நான் போகலை. ..' என்றாள் சலிப்பாக.

இதை எதிர்பார்த்திருந்த எழில், "உன்னை யார் விட்டா? நீ போயே ஆகவேண்டும் மகளே' என்று எண்ணிக்கொண்டு , "ஓ! அப்படியா...? ஓகே தேஜூ, அப்போ உன்னால் விழாவிற்கு வர முடியாது என்று செழியன் அம்மாவிற்கு போன் செய்து சொல்லிடறேன் அது தான் மரியாதை..." என்று மிகவும் யதார்த்தமாக சொல்லியபடி போனை நோக்கி நடக்க, அதிர்ந்து போனாள்.

சரளா அம்மாவிற்குத் தெரிந்தால் அவர்கள் செழியனிடம் சொல்வார்கள். அப்புறம் அவன் இங்கே வந்து நிற்பான். விழாவிற்கு வராததற்கு ஏதாவது சொல்லுவான். இதெல்லாம் தேவையா...? என்று யோசிக்கும் போதே எரிச்சல் பிறந்தது.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், நான் போறேன்..." என்று வேண்டா வெறுப்பாக அந்த இடத்தை விட்டு எழுந்து செல்ல, எழிலுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் மகளை நினைத்து சற்று பரிதாபமாகத் தான் இருந்தது.

ஆபிஸ் நண்பர்களைப் பார்த்து சில நாள் ஆகிவிட்டதால், அவர்களை பார்த்தால் மனது சற்று லேசாகும் என்று தன்னையே சமாதானம் செய்துகொள்ள, அவளின் உள் மனது ஆபிஸ்



நண்பர்களையா? அல்லது செழியனையா? என்று எதிர்க் கேள்வி கேட்டது.

இந்தக் கேள்வியில் அவளின் நெஞ்சம் திடுக்கிட்டாலும், "ச்சே... ச்சே! நான் ஏன் அவனைப் பார்க்க வேண்டும்...? ஹி இஸ் நத்திங் டு மீ!" என்று அலட்சியமாக எண்ணிக்கொண்டு பார்ட்டிக்கு செல்லத் தயாரானாள்.

கிரே கலர் ஆர்ட் சில்க் டிசைனர் சாரியில் அதற்கு ஏற்றவாறு வெள்ளியில் நகைகள் அணிந்து ஒரு தங்கப் பதுமையாக... தப்பு தப்பு வெள்ளி பதுமையாக வந்து நின்றவளை, செழியனின் விழிகள் சுவாரசியமாக அளந்தது.

இந்தப் பார்ட்டிக்குப் பிறகு தனக்கும் செழியனுக்கும் எந்த சம்மந்தமுமில்லை' என்பது மனதில் வலியைத் தோற்றுவித்தாலும், எல்லாவற் றையும் மனதில் புதைத்து ஆரவாரமாக வரவேற்ற வனுக்கு, அமைதியான புன்னகையே பதிலாகக் கொடுத்தாள்.

இவளைக் கண்டதும் ஆர்வமாப் பேச வந்த தோழிகளை தவிர்த்து, லைவ் கான்செர்ட் நடந்து கொண்டிருந்த பக்கம், தன் ஆபிஸ் நண்பர்களுடன் அமர்ந்து கொள்ள இரு பெண்களின் முகம் வாடிப் போனது.

லைவ் கான்செர்ட் முடிந்து மேடையில் ஆளாளுக்கு அவளின் ஹோட்டலில் டிசைன் பற்றியும், அதன் அழகைப் பற்றியும் புகழ்ந்து பேச அமைதியாக உள்வாங்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

செழியன் மேடையேறிய பொழுது என்ன பேசப் போகிறான் என்று ஆர்வம் நிறையவே இருந்தாலும், இல்லாத மாதிரியே காட்டிக் கொண்டு அமர்ந்திருக்க, அவனையே பார்த்தபடி அவனின் திறமைகளையும், சுறுசுறுப்பையும், புத்திசாலித்தனத்தையும் வியந்து பேசப் பேச தேஜூவின் மனம் வானில் ஜிவ்வென்று சிறகடித்துப் பறந்தது.

பேச்சின் முடிவில் செழியன் அந்த ஹோட்டலை உருவாக்கிய டீம் மெம்பர்களுக்கு கிறிஸ்டல் பூச் சாடியின் உள்ளே, அவர்கள் உருவாக்கிய ஹோட்டலின் டிசைனை வடிவமைத்த ஒரு நினைவுப் பரிசை வழங்கி கௌரவிக்க, எல்லோருக்குமே உச்சி குளிர்ந்து போனது.

தேஜூவின் முறை வரும்பொழுது பரிசைக் கொடுத்து கைகுலுக்கும் பொழுது... இதழ்களில் ரகசியச் சிரிப்புடன் அவளின் கையை லேசாக அழுத்தியதும், தேஜூவுக்கு தேகம் சிலிர்க்க கையை வேகமாக உருவிக் கொண்டாள்.

பபே சிஸ்டம் என்பதால் தனக்குத் தேவையான சாப்பாட்டை எடுத்துகொண்டு ஓர் ஓரமாக அமர்ந்தவள், தன்னைச் சுற்றி மற்றவர்கள் சிரிப்பும் சந்தோஷமாக பார்ட்டியை என்ஜாய் செய்வதை சிறு ஏக்கத்தோடு கவனித்துக் கொண்டிருந்தாள்.

செழியன் மட்டும் நல்லபடியாகப் பழகியிருந் தால், இந்நேரம் இந்தப் பார்ட்டி அவனுடன் எவ்வளவு இனிமையாகக் கழிந்திருக்கும்.? என்றவளின் நினைவு, "ம்கும்..." என்ற செழியனின் கனைப்பில் பாதியிலே தடைப்பட்டது.



"என்ன மேடம், ரொம்ப தீவிரமா எதையோ யோசிச்சுகிட்டு இருக்கீங்க போலிருக்கே? உங்க யோசனையில் நான் இருக்கேனா?" என்று செழியன் அவளை நெருங்கி அமர்ந்தபடி, முகத்தில் குறும்பு கூத்தாடக் கேட்க, தேஜூவின் பார்வை ஒரு வினாடிக்கும் குறைவாக அவன் முகத்தில் நிலைத்தது.

அவனின் கேள்விக்கு அமைதியாகப் புன்னகைத்து பதில் சொல்லாமலே சாப்பிட, "என் மேல் இன்னும் கோபம் குறையவில்லை போலிருக்கு? என்றவனை நிதானமாகப் பார்த்து, 'நான் ஏன் உங்கள் மேல் கோபப்படணும்?" என்று எதிர்க்கேள்வி கேட்டாள்.

"உன் காதலை சரயுவின் மூலம் நான் தெரிந்து கொண்டது தானே உனக்குக் கோபம்? என்றதுமே முகம் அவமானத்தில் சூடாகிவிட, சட்டென்று நிமிர்ந்தாள்.

"சாரி, நான் யாரையும் காதலிக்கவில்லை,என் மனதில் யாருமில்லை" என்று வெடுக்கென்று பதிலடி கொடுக்க, செழியனின் உள்மனம் உரக்கச் சிரித்தது.

"அப்போ சரயு சொன்னதற்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்?" என்று சிறிது கேலி இழை யோடக் கேட்டவனை நேருக்கு நேர் பார்த்து, "மற்றவர்கள் உளறல்களுக்கு நான் என்ன பதில் கொடுக்க முடியும்?" என்று நிதானமாகக் கூறிவிட்டு சாப்பாட்டை மீண்டும் ருசிக்க, செழியனின் மனது கனன்றது.

ஆனாலும் மனதை அமைதிப்படுத்தி, "தட்ஸ் ஓகே தேஜஸ்வி, ஐ அக்ரீட். பட், நான் உங்களைக்

காதலிக்கிறேன். எஸ், ஐ அம் இன் லவ் வித் யு! இதற்கு உங்களின் பதில் வேண்டும்" என்று மிக மிக நிதானமாகக் கூற தேஜூவின் பார்வை தன்னாலே அவனை நோக்கி உயர, கண்களில் சந்தோஷ மின்னல்கள் ஒரு சில வினாடிகள் தோன்றி மறைந்தது.

ஆனால் அடுத்த வினாடியே அவன் தன்னிடம் நடந்து கொண்ட முறை நினைவில் வலம் வர, முகம் சுருங்கி அவ்விடத்தை விட்டு எழ முயற்சி செய்ய, அவளின் கையை இறுகப் பற்றினான்.

"நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் போனால் என்ன அர்த்தம்?" என்று மென்மையாக அதே சமயம் அழுத்தமாக அவன் கேட்ட விதம் அவளுள் குளிரை உண்டாக்க, மனதில் தைரியத்தை வர வழைத்துக் கொண்டு, "சொல்ல எதுவுமில்லை என்று அர்த்தம்!" என்றாள் மிடுக்காக.

"எனிவே, கொடுத்த ப்ராஜெக்டை வெற்றிகரமாக உங்களுக்குத் திருப்தியான வகையில் முடித்திருக் கிறோம் என்று நம்புகிறோம்! தேங்க்ஸ் பார் திஸ் ஆபர்ச்சுனிட்டி அண்ட் திஸ் பார்ட்டி சார்!" என்று இனிமையாகக் கூறி பார்மலாக புன்னகைக்க, செழியனின் உள்ளம் உலைக்களமாக கொதித்தது.

தொடர்ந்து, "அப்புறம் சரணிடம் டெகரேஷன் வேலைகளை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டேன். உங்கள் விருப்பப்படி முடித்துத் தருவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது!" என புதிதாக ஒருத்தனிடம் பேசுவதைப் போல பேசியவளை, சலனமே இல்லாமல் பார்த்துக் கொண்டிருக்க,



"எனிதிங் எல்ஸ் சார்' என்று கேட்டவளை ஊடுருவும் பார்வையோடு, "நத்திங்! கங்க்ராட்ஸ்!" என்ற இரண்டே வார்த்தைகளோடு கைகுலுக்கி அவளிடம் பேச்சை முடித்துக்கொண்டு சேர்மனிடம் செல்ல, தேஜூவுக்கு என்னவோ போலிருந்தது.

அவன் கிட்டே நெருங்கி வந்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாமல், விலகிச் சென்றாலும் எதையோ இழந்த மாதிரி தோன்றும் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் மனது துவண்டு போனது.

அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் வீட்டிற்குச் சென்றவள், யாரிடமும் பேசாமல் அறைக்கதவை பூட்டிக்கொண்டு கட்டிலில் படுத்துவிட, எழில் என்ன ஏதென்று தெரியாமல் முட்டி மோதிக் கொண்டிருந்தார்.

செழியனிடம் தேஜூவை பற்றிக் கேட்டால் அவன் ஒன்றுமே நடக்காத மாதிரி மிகச் சாதரணமாக ஆபிஸ் விஷயங்களைப் பற்றி மட்டும் பேச, சரளா வெறுத்து போனார்.

சோபாவில் அமர்ந்து மடியில் ஐபேடை வைத்துக்கொண்டு ஆபிஸ் வேலையில் மும்முரமாக இருந்த மகனின் முன் வந்தமர்ந்த சரளா, சிறிது நேரம் தீவிரமாக அதிலே இயங்கிக் கொண்டிருந்த மகனை ஒரு பெருமூச்சுடன் கவனித்துவிட்டு, "செழியா, நான் உன்னிடம் கொஞ்சம் பேசணும்!" என,

வேலையிலிருந்து கண்ணை எடுக்காமலே, "சொல்லுங்க" என்றான்.

உன் வேலையை கொஞ்சம் எனக்காகத் தள்ளி வைத்துவிட்டுத் தானே வாயேன்..." என்றவர் ஐபேடை நிறுத்த, வேலை தடைப்பட்ட கோபத்தில்,

"சொல்லுங்க, இப்போ என்ன முக்கியமா பேசணும்?" என்று எரிந்து விழுந்தான்.

அவனின் கோபத்தைக் கண்டு அவருக்கும் கோபம் வந்துவிட, சட்டென்று அந்த இடத்தை விட்டு எழுந்து , "பேச ஒன்றுமில்லை!" என்று விருட்டென்று செல்ல...

அவரின் கையைப் பிடித்து அமரவைத்து, "சாரி மா ஏதோ கோபத்தில் பேசிவிட்டேன், சொல்லுங்க என்ன பேசணும்?' என்றான் முடிந்த வரை நிதானமாக

"வேற என்ன பேசிவிடப் போகிறேன்! எல்லா உன் கல்யாண விஷயத்தைப் பற்றித் தான்..." என்றவுடன் அவனின் முகம் வேப்பெண்ணை குடித்த மாதிரி ஆகிவிட,

"இப்போ என்ன... நான் கல்யாணம் செய்துக்கணும் அவ்வளவு தானே?என்றதும் சரளா அகமகிழ்ந்து, "ஆமா" என்று வேக வேகமாகத் தலையாட்ட, "அதைப் பற்றி நீங்க கவலைப்படாதீங்க... நானே கூடிய சீக்கிரம் ஒரு கழுதையைக் கொண்டு வந்து உங்கள் முன் நிறுத்தறேன்!" என்றதும் தாயின் முகம் அஷ்டகோணலாகியது.

"என்னப்பா சொல்றே?" என்று அரண்டு போய் கேட்டவரிடம் கொஞ்சம் கூட அவசரமே இல்லாமல் 'நீங்க தானே சொன்னீங்க ஒரு கழுதையைக் கொண்டு வந்து நிறுத்தினாலும் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று. அதைத் தான் சொன்னேன்..." என்று மீண்டும் வேலையில் இறங்கிவிட சரளா நொந்து போனார்.

"இவன் எதற்கும் பிடிகொடுக்காமல் பேசுகிறானே? எப்படி நம் வழிக்குக் கொண்டு வருவது" என்று யோசித்துக் கொண்டே எழுந்து செல்ல, "அம்மா,



மறக்காமல் மாத்திரை சாப்பிட்டு படுங்க" என்ற அவன் குரல் காற்றில் கரைந்து போனது.

கதவு தட்டும் சத்தம் கேட்டு கண்விழித்த தேஜூவின் பார்வை சுவற்றில் மாட்டியிருந்த டிஜிடல் கடிகாரத்தில் பதிந்தது. காலை இளம் வெயில் மூடிய ஜன்னல் வழியாக திமிறிக்கொண்டு, சிறு கீற்றாக உள்ளே வர, மணி ஏழு என்றதும் அடித்துப் பிடித்து எழுந்து, கதவைத் திறந்து விட்டு குளிக்கச் சென்றவளை நிறுத்தினார் எழில்.

நீ கன்னியாகுமரி போயிட்டு வந்ததில் இருந்து ஆளே சரியில்லை. சரியா சாப்பிடுவதில்லை, தூங்குவதில்லை, யாரிடமும் பேசுவதில்லை, என்ன நினைச்சிக்கிட்டு இருக்கே உன் மனசில்?

அப்படி என்னதான்டி உனக்குப் பிரச்சனை? எங்களிடம் சொன்னால் தானே புரியும்! உன் மனசுக்குள்ளே வைத்து மருகிக் கொண்டிருந்தால் நாங்கள் என்ன செய்வது? என்று புலம்ப, தேஜூவுக்கு அந்த புலம்பல் எரிச்சலைக் கொடுத்தாலும், அவரின் ஆதங்கம் புரியத் தான் செய்தது.

பேசாமல் அமைதியாக இருந்தவளுக்கு தாயின் கண்களில் துளிர்த்த கண்ணீரைக் கண்டதும் மனம் இளகிவிட, "எனக்கு ஒன்றுமில்லைம்மா? நான் நல்லாத் தான் இருக்கேன். நீங்க போய் டிபன் எடுத்து வையுங்க. நான் ரெடியாகி வந்திடறேன்" என்ற மகளின் கனிவான பதில் அவரை சற்றே தெம்பூட்டியது.

டேபிளில் டிபன் எடுத்து வைத்துக் கொண்டிருந்த எழில், மகள் ரெடியாகி வந்து சாப்பிட அமர்ந்ததும் அவளுக்கு டிபன் பரிமாறிக்கொண்டே, "தேஜூ, நேத்து

உன் சேர்மன் போன் செய்தார்!" என்றதும் மகள் கேள்வியாக நிமிர,

"நீ முடித்த ஹோட்டல் ப்ராஜெக்டைப் பார்த்துவிட்டு, அதே மாதிரி இன்னொரு ப்ரஜெக்ட் வந்திருக்காம். அது பற்றி உன்னிடம் பேசணுமாம்!" என்றவரின் பேச்சில் மனம் பதியாது, நேற்று மாலை தனது கைபேசி செழியனின் அழைப்பில் சிணுங்கியது ஞாபகத்தில் வர, சாப்பிட்டு விட்டு தாயிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

ஆபிஸ் உள்ளே நுழைந்ததுமே, "சேர்மன், உன்னை அவர் கேபினுக்கு வரச் சொன்னார்..." என்ற தகவல் கூறிய சரயுக்கு, தேங்க்ஸ்!" என பார்மலாக,

"இன்னுமா என் மேல கோபம் போகலை? இன்னும் எத்தனை நாள் தான் என்னிடம் பேசாம இருப்பே? ப்ளீஸ் தேஜூ, ஐ அம் சாரிடி!" என்று கெஞ்ச, காது என்ற உறுப்பே இல்லாதது போல தேஜூ சேர்மன் அறையை நோக்கி செல்வதை கண்டு, சரயுவின் கண்களில் கண்ணீர் கோர்த்தது.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றவள், சேர்மனின் சீட்டில் அமர்ந்திருந்த செழியனைக் கண்டு திடுக்கிட்டு, "சாரி" என்று முணுமுணுத்துவிட்டு மீண்டும் வெளியே செல்லத் திரும்ப, "நில்லு!" என்றான் கடினமான குரலில்.

அவன் பக்கம் திரும்பாமலே நின்றவளை நோக்கி அழுத்தமான காலடிகளோடு செழியன் அவளை நெருங்கி வர, அவளின் இதயம் ரேஸ் குதிரையின் வேகத்தோடு ஓடத் தொடங்கியது.



# 14

"தேஜூ கதவைத் திற, எவ்வளவு நேரம் தான் குளிப்பே..." என்று படபடவென்று கதவை த்தட்டி தாய் அழைக்கும் சத்தம் கேட்டு, அதுவரை ஷவரின் அடியில் நின்றிருந்தவளுக்கு சுய நினைவு வர, அவசரமாக டவலை கட்டிக்கொண்டு வெளியே வந்தாள்.

சாயங்காலம் ஆறுமணிக்கு மேல் தலையில் தண்ணீர் ஊற்றி க் கொண்டு சொட்ட சொட்ட வந்து நிற்கும் மகளைக் கண்டு தாயின் உள்ளம் பதற, "இந்த நேரத்திற்கு ஏண்டி தலைக்கு குளிச்சே..? உடம்புக்கு ஏதாவது வந்துச்சுன்னா என்னடி செய்வேன் நான் ...? இன்னும் குழந்தையாகவே இருக்கியே" என்று அக்கறை மிகுதியுடன் கேட்டுக்கொண்டே அவளின் கூந்தலின் ஈரத்தை உலர்த்தி ஹீட்டர் போட்டு விட்டு, காபி எடுத்து கொண்டு வர ச்சென்ற தாயையே பார்வையால் பின் தொடர்ந்தாள்.

ஆனால் அவளின் மனதில் எதுவும் பதியாமல், அன்று சேர்மனின் அறையில் நடந்ததை அசை போட்டுக் கொண்டிருந்தது. எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத நேரத்தில் செழியனைக் கண்டதால் இதயம் படபடக்க நின்றிருந்தவளிடம், "என்னைக் கண்டாலே ஓடி ஒளியறியே ...? ஏன் என்னைப் பிடிக்கலையா?" என்ற கேள்வியில் சட்டென்று திரும்பி, அவனைக் கண்ணாலே அளந்தாள்.

ஆறடிக்கும் அதிகமான உயரத்தில் கோதுமை நிறத்தில், ஆண்மைக்கே உரிய அலட்சியமும், கம்பீரமுமாக நின்றிருந்தவனைக் கண்டவளுக்கு இவனையா பிடிக்காது...? என்று மருக, விரக்தியான புன்னகை இதழின் ஓரத்தில் நெளிந்தது.

அவனின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் பேசாமல் அங்கிருந்து விலக நினைத்து ஓரடி எடுத்து வைக்க, அவள் தன்னை அலட்சியப்படுத்திவிட்டு செல்கிறாளே என்கிற கோபம் தலைகேறியது. அதே கோபத்தில் அவளின் கையைப் பிடித்து இழுக்க, அந்த வேகத்தில் மொத்தமாய் அவன் மேல் சரிந்தவளை, இறுக அணைத்துக் கொண்டான்.

இதைச் சற்றும் எதிராபாராத தேஜூ முதலில் திகைத்தாலும் அவனின் அணைப்பில் தன்னை இழக்கத் தொடங்கியவள், உடனேயே தன்னை சுதாரித்து, அவனிடமிருந்து விடுபட போராடினாள்.

ஆனால் செழியனின் வலிமையான கரங்கள் அவளின் இடையை இரும்பாக பற்றி வளைத்து, அவளின் கழுத்தில் முகத்தைப் பதிக்க, தேஜூவின் தேகம் சூடாக ஆரம்பித்தது.

அவனிடம் போராட முடியாமல் அவனை ஒரு கையால் தள்ளியபடி, "ப்ளீஸ் செழியன் என்னை விடுங்க..." என்று அழுகையுடன் கெஞ்ச, என்ன நினைத்தானோ சட்டென்று அவளை தன்னிடமிருந்து விலக்கினான்.

ஒரு வேக பெரு மூச்சுக்களுடன், "ஐ அம் சாரி... ரியல்லி சாரி... ஏதோ ஒரு கோபத்தில் இப்படி நடந்துகிட்டேன்... சாரி அகைன் " என்று தலையை கோதியபடி கதவருகே சென்றவன் ஒரு நிமிடம் நின்று



திரும்பி, "உன் மேல் உள்ள காதல் தான் என்னை இப்படிச் செய்ய வைத்தது.

இப்பொழுதாவது நீ என்னையும் புரிஞ்சிகிட்டு, உன்னையும் புரிஞ்சிகிட்டு இருப்பே என்று நினைக்கிறேன். சீக்கிரமே உன்னிடமிருந்து நல்ல பதில் வரும் என்று நம்புகிறேன்..." என்று புன்னகைத்துவிட்டு வெளியேற, தேஜூ அவனின் செயலில், பேச்சில் பனிச் சிற்பமாய் உறைந்தாள்.

எப்பொழுது ஆபிஸ் முடிந்தது, எப்பொழுது வீடு வந்து சேர்ந்தோம் என்று எதுவுமே அவள் மனதில் பதியவில்லை. ஆனால் வீட்டுக்கு வந்தவள் பிரஷ் அப் ஆயிட்டு வரேன் என்று தாயிடம் முணுமுணுத்துவிட்டு பாத்ரூம் சென்று ஷவரின் அடியில் நின்றது வரைக்கும் தான் தெரியும்.

எவ்வளவு நேரம் கடந்தது என்று கூடத் தெரியவில்லை, ஆனால் தேகம் குளிர்ந்து நடுங்க ஆரம்பித்தும் கூட வெளியில் வரத் தோன்றாமல் செழியனின் அணைப்பில் தன்னை இழந்ததை ஜீரணிக்க முடியாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

என்னைப் பற்றி தவறான அபிப்ராயம் வைத்திருக்கிறான் என்று கோபம் கொண்டிருந்த ஒருவனின் அணைப்பில் நான் என்னை இழந்த்திருக்கிறேன் என்றால், என் மனதில் செழியன் அந்தளவிற்கு ஆழமாக பதிந்திருக்கிறானா?

அப்படிபட்டவனின் காதலை எத்தனை நாள் என்னால் நிராகரிக்க முடியும்...? இன்னும் எத்தனை நாள் என் மனதில் காதலில்லை என்று சொல்லி ஏமாற்ற முடியும்...? என்று நினைக்கும் போதே அடுத்து என்ன செய்வது என்று திகைப்பாக இருந்தது.

தாய் சென்றதும் மனம் செக்கு மாடாக தன் போக்கில் சுற்றிக்கொண்டிருந்தாலும் எந்திரம் போல உடையை மாற்றி கையில் கிடைத்த புக்கை எடுத்துக்கொண்டு சோபாவில் அமர்ந்தவளிடம், சூடான காபியை திணித்தார்.

மறுபேச்சு பேசாமல் குடித்து, கப்பைக் கொடுத்தவளிடம், "உன் செல்போன் என்ன ஆச்சு தேஜூ...? உன் ப்ரெண்ட் ஆதவ் லேண்ட் லைனுக்கு கால் செய்தார். மறுபடியும் போன் செய்கிறேன் என்று சொன்னார் பேசு..." என்றபடி அவள் கையில் கார்ட்லெஸ் போனைக் கொடுத்துவிட்டு கீழே செல்ல அவளுக்கு ஆயாசமாக இருந்தது.

தனக்கு இருக்கும் குழப்பத்தில் இப்பொழுது ஆதவிடம் தன்னால் சரியாகப் பேச முடியுமா...? மறுபடியும் கால் செய்தால் கட் செய்துவிடலாமா? என்று யோசிப்பதற்குள் போன் விடாமல் சிணுங்க, சலிப்பாக எடுத்து, "சொல்லு ஆதவ்..." என்றாள் .

"என்ன மேடம் குரல் என்னவோ மாதிரி இருக்கு...? ஆர் யு ஒகே தேஜூ...? என்றவன் தொடர்ந்து, " ஆபிஸ் விட்டு வந்ததிலிருந்து என்னவோ மாதிரி இருக்கிறே என்று ஆன்ட்டி புலம்பித் தள்றாங்க. சொல்லு என்னாச்சு...? எனிதிங் ராங்...? என்றான் அக்கறையாக.

"ம்ச்ச் இந்த அம்மா வேற எல்லாத்தையும் ஒப்பிச்சிடுவாங்க... " என்று மனதினுள் அவரை அர்ச்சித்துக்கொண்டே அவனிடம் எவ்வளவோ மழுப்பியும் பலனில்லாமல் போக, வேறு வழியில்லாமல் செழியன் தன்னை அணைத்தைத் தவிர மற்ற எல்லாத்தையும் அவனிடம் ஒப்பிக்க, அந்த பக்கம் ஆதவினால் நம்பவே முடியவில்லை.



அவனுக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை எக்ஸ்பிரஸ் செய்ய முடியாமல் சில நிமிடங்கள் தடுமாறிவிட்டு, உன் பதிலென்ன தேஜு..." என்று ஆவலுடன் கேட்டவனுக்கு, " தான் ஒன்றும் சொல்லவில்லை..." என்றதும் அவனின் முகம் சுருங்கியது.

"என் அண்ணன் இதுவரை எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. ஆச்சரியமாக அவரே உன்னிடம் தன் காதலை சொல்லியிருக்கிறார். ஆனால் நீ ஏன் எதுவும் சொல்லவில்லை...?'' என்று படபடவென்று கேட்டுக்கொண்டு வந்தவன், "உனக்கு என் அண்ணனைப் பிடிக்கவில்லையா தேஜு...? என்றான் சற்று ஏமாற்றத்தோடு.

அவசரமாக, "ச்சே...ச்சே... அப்படியெல்லாம் இல்லை ஆதவ். யாருக்குத் தான் அவரைப் பிடிக்காது...? உன்னிடம் சொல்வதற்கு என்ன...? இன்பாக்ட் அவரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால்....?'' என தயக்கமாக நிறுத்தினாள் .

"ஆனால் என்ன...?'' என்று புரியாமல் கேட்டவன், "ஓ! அண்ணன் உன்னிடம் மிஸ் அண்டர்ஸ்டான்டிங்கா இருக்கார் என்பதா உன் தயக்கத்திற்கு காரணம்'' என்று அவனே யூகித்து கேட்டும், இல்லை என்ற அவளின் பதில் அவனைக் குழப்பியது.

"அவரின் மேல் எனக்கு எந்தவித கோபமும் இல்லை. ஆனால் என்னால் அவரின் காதலை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வாட் கேன் ஐ டூ ஆதவ்...?'' என்று பரிதாபமாகக் கேட்க, அவனுக்கு கோபம் தான் வந்தது.

"ஆர் யு பூல்... ? எந்த காரணமும் இல்லாமல் ஒருத்தரை வெறுப்பதற்கும், அவரின் காதலை

நிராகரிப்பதற்கும் நீ என்ன லூசா...?'' என்று தன் தோழிக்கு கிடைக்கவிருக்கும் நல்ல துணையை இழக்கிறாளே என்ற ஆதங்கத்தில் கடுகு போல பொரிந்தான்.

அவனின் கோபத்தைத் தாங்க முடியாமல், "ப்ளீஸ் ஆதவ் நீயாவது என்னைப் புரிந்து கொள். எல்லாம் தெரிந்த நீயே என்னை ப்ளேம் செய்தால் நான் என்ன தான் செய்வேன்? உன் அண்ணன் என்னை விரும்பினாலும் அவருக்கு நான் ஏற்ற துணையாக இருப்பேன் என்று நீ நினைக்கிறாயா? நீயே சொல்... உனக்கு சரியாக இருந்தால் நிச்சயம் எந்தவித குற்ற உணர்ச்சியும் இல்லாமல் அவருக்கு கழுத்தை நீட்டுகிறேன்..." என்று தன் தயக்கத்தை அவனிடம் கொட்ட, ஆதவிடமிருந்து சில வினாடிகள் சத்தமே இல்லை.

அவனின் அமைதியைக் கண்டு, "பார்த்தாயா? இவ்வளவு நேரம் நீ எல்லாவற்றையும் மறந்து பேசியிருக்கிறாய். இப்பொழுது ஞாபகம் வந்ததும் உன் அண்ணனுக்கு நான் சரியானவள் இல்லை என்று நீயே யோசிக்கிறே பார்..." என்று அழுகை குரலில் கூறியதும் தான் தாமதம் ,

"வில் யு ஷட் அப்... எத்தனை முறை சொன்னாலும் நீ புரிந்து கொள்ள மாட்டாயா? நீ என் அண்ணனுக்கு சரியானவள் தானா என்று நான் யோசித்தேன் என்று உனக்குத் தெரியுமா...?'' என்று எகிறியவன், அவளின் திகைப்பை,மௌனத்தை புரிந்து தணிந்து,

"ஏன் உன்னையே தாழ்த்தி எடை போடுகிறாய்...? நடந்த தவறு எதற்கும் நீ பொறுப்பில்லை, முதலில் அதைப் புரிந்து கொள். தட் வாஸ் எ பாசிங் கிளௌட்ஸ்.



நடந்து முடிந்துப் போனதையே திரும்ப திரும்ப நினைத்து உன்னையே ஏன் ரணமாக்கிக்கற...?'' என்று மென்மையாக கூற, அவனின் அன்பில், தோழமையில் அவளின் கண்கள் உடைபெடுத்தது.

"நாளைக்கு அண்ணனிடம் நீயே போய் உன் காதலைச் சொல். அப்படி இல்லையென்றால் நானே அம்மாவிடம் சொல்லி மற்ற விஷயங்களை ஏற்பாடு செய்யச் சொல்லிவிடுவேன். உன்னை மாதிரி ஒரு நல்ல மருமகளை எங்க வீடு இழப்பதை நான் விரும்பவில்லை..." என்று உற்சாகத்துடன் பேசியவனை இடைமறித்தாள்.

"இந்த விஷயத்தைப் பற்றி செழியனிடம் சொல்ல வேண்டாமா ஆதவ்...? அவரிடம் மறைப்பது நான் அவருக்கு செய்கிற துரோகம் இல்லையா?'' என்று வெகுளியாகக் கேட்டாள் .

"ஐயோ தேஜூ இப்போ இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்வது ரொம்ப முக்கியமா? நீ ஒன்றும் யாருக்கும் துரோகம் செய்யவில்லை. சோ இனி ஒரு தடவை இதைப் பற்றி பேசாதே..." என்று கட்டளையிட்டவன்,

"ஓகே நீ ரொம்ப குழப்பத்தில் இருக்கிறே. இப்போ எந்த முடிவும் நீ எடுக்க வேண்டாம். நேரமாச்சு போய் தூங்கு. உடம்பைப் பார்த்துக்கோ. நாளை மறுபடியும் இதே நேரத்திற்கு அடிக்கிறேன். டேக் கேர்..." என்று போனைத் துண்டிக்க, அவன் பேசியதை நினைத்துக் கொண்டே அப்படியே சோபாவில் உறங்கிவிட்டாள்.

அடுத்த நாள் காலையில் எழுந்திருக்க முடியாமல் தலை பாரமாக இருக்க, உடல் அனலாகக் கொதித்தது. ஆபிஸ் போக வேண்டுமே என்று கஷ்டப்பட்டு எழுந்து பாத்ரூம் சென்றவள் அங்கேயே நிலை தடுமாறி மயங்கி

விழ, சத்தம் கேட்டு ஈஸ்வரும், எழிலும் ஓடிவந்த வரைக்கும் நினைவிருந்தது தேஜூவுக்கு.

மயக்கம் தெளிந்து கண்விழித்த பொழுது, தான் ஒரு மருத்துவமனையில் இருப்பது புரிய, "ஐயோ தன்னை நினைத்து அம்மா கவலைப்படுவார்களே...? அவர்களுக்கு என்னால் எத்தனை துன்பம் என்று யோசித்தவாறே அவர்கள் எங்கேயென்று அந்த அறையைச் சுற்றி கண்ணைச் சுழற்றினாள் .

சரளா அம்மாவுடன், தன் தாயும், தந்தையும் தான் நினைத்ததற்கு எதிர்மாறாக முகம் கொள்ளா சந்தோஷத்துடன் பேசிக்கொண்டே உள்ளே வர, அவளுக்கு குழப்பமாக இருந்தது.

தேஜூ கண்விழித்திருப்பதை கண்டதும் மூவரும் வேகமாக அருகில் வர, "கங்க்ராட்ஸ் செல்லம்! இந்த அப்பாவுக்கு வேலையை குறைச்சிட்டியே...? என்று அவளின் கையைப் பிடித்துக் குலுக்க, எழில் அவளின் முகத்தை வழித்து நெட்டி முறிக்க,

அதற்கும் ஒரு படி மேலே போய் சரளா அவளின் கன்னத்தில் அன்பாக முத்தமிட்டு, "ரொம்ப நன்றிம்மா..." என, மலங்க மலங்க விழித்தாள் சிறியவள்.

என்ன விஷயம் என்று கேட்பதற்குள் நர்ஸ் வந்து, "நோயாளியை தொல்லை செய்யாதீர்கள். டாக்டர் ரௌண்ட்ஸ் வருகிறார்..." என்று எச்சரிக்கை விடுக்க, அவளை ரெஸ்ட் எடுக்கச் சொல்லிவிட்டு மூவரும் வெளியே சென்ற கொஞ்ச நேரத்திலே டாக்டருடன் உள்ளே வந்தவனைக் கண்டு தேஜூவின் விழிகள் பெரிதாக விரிந்தது.

அவனையே வைத்த கண் எடுக்காமல்



பார்த்துக்கொண்டிருந்தவளிடம் விசாரித்த டாக்டருக்கு அரைகுறையாகப் பதில் கூற அவளை பரிசோதித்துவிட்டு செழியனை தனியே அழைத்துப் போய் ஏதோ பேசிவிட்டு வெளியே சென்றதும், கதவை சாத்திவிட்டு அவளின் கட்டிலின் அருகே கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

அவளின் முகத்தில் விரவியிருந்த குழப்பமும், சந்தேகமும் அவனுக்கு எப்படித் தோன்றியதோ, "ரொம்ப தேங்க்ஸ்... என் நீண்ட நாள் லட்சியம் நிறைவேறப் போகிறது. தேங்க்ஸ் அகைன்..." என தேஜூவின் புருவங்கள் கேள்வியாக நெறிய,

"ஹேய் என்ன அப்படிப் பார்க்கிறே...? ஆதவ் நேற்று போன் செய்து உன் சம்மதத்தைச் சொன்னான்..." என்று புன்னகைத்துவிட்டு, "கல்யாணத்திற்கு ரெடியா இரு. ஓகே டேக் ரெஸ்ட்... கெட் வெல் சூன்... " என்று விட்டுச் செல்ல தேஜூவின் மனதிலிருந்த பெரிய பாரம் குறைய நிம்மதியாக உணர்ந்தாள்.

ஆதவ் இப்படி முந்திரி கொட்டைத்தனமாக செய்தாலும் ஒரு விதத்தில் தன் வேலையை சுலபமாக்கிவிட்டான் என்றே தோன்ற, அவனுக்கு மானசீகமாக நன்றியை தெரிவித்தவளின் மனது சந்தோஷத்தில் குளித்தெழுந்தது.

அதன் பிறகு கடகடவென்று கல்யாண வேலைகள் எக்ஸ்ப்ரெஸ் வேகத்தில் நடைபெற, எழிலும், ஈஸ்வரும் நகைகளுக்கும், புடவைகளுக்கும் பணத்தை வாரியிறைத்தார்கள்.

தேஜூ வேண்டாம் என்று எவ்வளோ மறுத்தும் கேளாமல், "எங்களுக்கு இருப்பது ஒரே பெண் உனக்குச்

செய்யாமல் வேறு யாருக்கு செய்யப் போகிறோம் என்று அவளின் வாயை அடைத்துவிட்டார்கள்.

சரளாவுக்கும், எழிலுக்கும் தங்கள் திட்டம் நிறைவேறியது வேறு பெருமிதமாக இருக்க, அதனால் எதை செய்தாலும் இருவரும் கலந்தாலோசித்து அதன் பிறகே செய்தார்கள்.

நிச்சயத்திற்கு மிகவும் ஆடம்பரமாக ஏற்பாடு செய்திருக்க, செழியன் வீட்டு சொந்தங்களைக் கண்டு மலைப்பாக இருந்தது. எல்லோருமே பணத்தில் புரள்பவர்களாக இருந்தது சற்று பயமாகத் தான் இருந்தது. சொந்தங்கள் அளவிற்கு ஆபிஸ் நண்பர்கள், பிசினெஸ் நண்பர்கள் என்று நிறைய பேர் வருகை தர, பெரிய மண்டபமாக இருந்தும், நிரம்பி வழிந்தது.

"எக்ஸாம் நேரம் என்பதால் கல்யாணத்தில் கலந்து கொள்கிறேன்..." என்ற ஆதவின் எஸ்.எம்.எஸ் தேஜூவிற்கு சற்று ஏமாற்றத்தைக் கொடுத்தாலும், கல்யாணத்திற்கு வந்துவிடுவான் என்பதே ஆறுதலாக இருந்தது.

நிச்சயம் என்பதால் அதிக அலங்காரம் இல்லாமல் எளிமையான அலங்காரத்தில் கழுத்தில் பெரிய மாலையோடு தேவதையாக ஜொலித்த தேஜூவின் பக்கத்தில் கம்பீரமாக வந்தமர்ந்த செழியனைக் கண்டதும் முகம் வெட்கத்தில் சிவக்க மெல்ல தலையை குனிந்துகொண்டாள் .

அவளின் குனிந்த வெட்க முகத்தை ஒரு சிறு சிரிப்புடன் கவனித்துவிட்டு அமர, ஐயர் வேதம் ஓதி, முஹூர்த்த நாள் குறித்து சுப ஓலை படித்ததும் செழியன் அவளின் மெல்லிய விரலுக்கு பிளாட்டினம் மோதிரம்



அணிவிக்க, பதிலுக்கு அவனுக்கு மோதிரம் அணிவிக்க விழா இனிதே நிறைவடைந்தது.

நாட்கள் வாயு வேகத்தில் காற்றில் கரைய, செழியன் ஹோட்டல் டெகரேஷன், திறப்பு விழாவிற்கு ஏற்பாடுகளைச் செய்வது என்று பிசியாக இருக்க, தேஜூவோ திருமணத்திற்கு முன் தனக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை முடிக்க வேண்டும் என்று மும்மரமாகிவிட, இருவருக்குமே மனம் விட்டுப் பேசிக் கொள்ள நேரம் கிடைக்கவில்லை.

எழிலும், சரளாவும் இருவரையும் தனியாக ஷாப்பிங் அனுப்ப முடிவு செய்து ஒருநாள் தேர்ந்தெடுக்க அன்று பார்த்து செழியனுக்கு அவனுடைய கம்பனியில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் என்று போன் வர அதுவும் தடைபட்டுப் போனது.

திருமணத்திற்கு ஒரு வாரம் முன் வந்திறங்கிய ஆதவ், வந்ததும் வாரதுதுமாக அவளிடம் நிச்சய விழாவைப் பற்றி விசாரித்துவிட்டு, அண்ணனிடம் எதைப் பற்றியுமே கூறவில்லையே என்று கேட்டுத் தெரிந்து கொண்டவன், இனியும் எதைப் பற்றியும் பேசக் கூடாது என்று சத்தியம் வாங்கிய பிறகு தான் அடுத்த வேலையை கவனிக்கச் சென்றான்.

சம்பந்தப்பட்ட இருவரைத் தவிர மற்ற எல்லோருமே செழியனும், தேஜூவும் பேசிக்கொள்ள வில்லையே என்று வருத்தபட்டாலும் நாட்கள் நகராமல் இருக்குமா..? திருமண நாளும் நெருங்கி அடுத்த நாள் முஹூர்த்தம் என்னும் போது ஆதவ் தேஜூவிடம், இருவருமே சகஜமாக பேசிப் பழகவில்லையே என்ற தன்

சந்தேகத்தை வெளியிட, தேஜூவிடமிருந்து சிரிப்பு தான் பதிலாக வந்தது.

அவளின் சிரிப்பு அவனுக்குத் தேவையான பதிலைத் தரவில்லை என்பதால் எரிச்சலுடன், "கேட்டதற்கு பதில் சொல் தேஜூ, உன் முழு விருப்பத்துடன் தானே அண்ணனை மணக்கச் சம்மதித்தாய்..." என்றவனுக்கு,

"இதில் என்ன சந்தேகம் ஆதவ் உனக்கு... யாரும் என்னை கட்டாயப்படுத்த முடியாது... ஐ லவ் ஹிம்..." என்று முறுவலுடன் பதிலளித்தாள்.

"பின்னே ஏன் உங்க ரெண்டு பேருக்கும் இடையே ஒரு ஒட்டுதல் இல்லையே...? இது என் சந்தேகம் மட்டுமில்லை, எங்க எல்லோருடைய சந்தேகம் தான்..." என்று சஞ்சலத்துடன் கேட்டவனைப் பரிவுடன் பார்த்தாள்.

"ஒட்டுதல் என்றால் என்ன மாதிரி ஆதவ்...? தட் மீன்ஸ் மணிக்கணக்கில் போனில் வழிந்து, ஒன்றாக ஊர் சுற்றி ஊரே பார்க்கிற மாதிரி காதலித்தால் தான் நம்புவீர்களா?" என்று சிரித்துவிட்டு,

"அடுத்த மாதம் ஹோட்டல் திறப்பு விழா வைத்திருப்பதால் அதற்குண்டான வேலைகளை அவர் செய்து முடிக்க வேண்டாமா? அதுமட்டுமில்லை எனக்கும் கொடுத்த வொர்க்கை முடிக்க வேண்டிய நிர்பந்தம்... சோ இரண்டு பேரும் பேசி ஒரு முடிவெடுத்து தான் நாங்கள் எங்கள் வேலையை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திருமணத்திற்குப் பின் இரண்டு பேரும் சேர்ந்து தானே இருக்கப் போகிறோம், அப்போது பேசிக் கொண்டால் ஆயிற்று" என்று இரண்டு கைகளை விரித்து



தோளைக் குலுக்கி கவலையற்று கூற, ஆத்வின் முகம் குழப்பம் நீங்கி தெளிவடைய சிறு சிரிப்பும் கூட வந்தது.

எல்லோரும் ஆசையாக எதிர்பார்த்த திருமண முஹூர்த்தமும் வர, உற்றார் உறவினர், நண்பர்கள் என்று மண்டபம் நிரம்பி வழியும் அளவிற்கு வருகை தந்திருக்க, சுபயோக நேரத்தில் செழியன், செல்வி தேஜஸ்வி ஈஸ்வரனின் சங்கு கழுத்தில் மங்கள நாணைப் பூட்டி திருமதி. தேஜஸ்வி செழியனாக ஆக்கிக்கொண்டான்.

மனம் கவர்ந்தவனின் கையால் தாலியை வாங்கியதும் தேஜூவின் கண்களில் இருந்து அவளையுமறியாமல் கண்ணீர் துளிர்க்க, விழிகளை உயர்த்தி அவன் திருமுகத்தை நோக்கி புன்னகைக்க, பதிலுக்கு அவனின் வெற்றிப் புன்னகை அவளின் இதயத்தை நிரப்பியது.

சம்பிரதாயம், சடங்கு என்று உறவினர்களின் தலையீடு என்று எப்பொழுதும் தங்களைச் சுற்றி ஈ மாதிரி கூட்டம் இருந்ததால் தேஜூவால் செழியனிடம் தனித்துப் பேச முடியாமல் தவித்து போனாள்.

எப்பொழுது தனிமை கிடைக்கும்...? அவனின் கம்பீரக் குரலை, காதல் மொழியை ரசித்துக் கேட்போம் என்று நெஞ்சு நிறைய ஆசையும், மோகத்தையும் சுமந்து கொண்டு காத்திருந்த தேஜூவுக்கு கனவிலும் நினையாத ஒன்று அவள் வாழ்வில் நடந்தது. தான் கண்டது நீரை அல்ல வெறும் கானல் நீர் என்று புரிந்தது அந்தப் பெண் மானிற்கு.

# 15

முதலிரவு அறைக்குள் ஆயிரம் கனவுகளுடன் காலடி வைத்த தன் புது மனைவியை எவ்வித ஆரவாரமோ, ஆர்வமோ எதுவுமே இல்லாமல் கடமையே என்று நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் தன் மடியில் வைத்து வேலை செய்துகொண்டிருந்த ஐபேடில் தலையைப் புதைத்துக் கொள்ள தேஜூவுக்கு சற்று அதிர்ச்சியும், ஏமாற்றமுமாக இருந்தது.

வேலை மும்மரத்தில் தன்னை சரியாக கண்டு கொள்ளவில்லையா என்ற ஐயம் எழ, தொண்டையை லேசாக செருமி அவன் கவனத்தை ஈர்க்க முயல, தவம் கலைந்த விசுவாமித்திரன் போல எரிச்சலுடன் விலுக்கென்று நிமிர்ந்து, "அதான் வந்துட்டியே அப்புறம் என்ன..." என அலட்சிய முகம் காட்ட, தேஜூவுக்கு ஒரு நிமிடம் ஒன்றுமே புரியவில்லை.

தன் காது சரியாகக் கேட்கிறதா? இல்லை ஏதும் செவியில் கோளாறா? என்று மீண்டும் சந்தேகம் எழ, பால் சொம்பை வைத்துவிட்டு, அவனெதிரில் வந்து நின்று, "செழியன்..." என்று காதல் செறிவுடன் கூடிய கிசுகிசுப்பான குரலில் அழைக்க, அக்குரல் அவனை ஒரு கணம் தடுமாற வைத்தது.

ஆனால் அடுத்த வினாடியே அவளின் பேச்சோ, அழகோ, மனைவி என்கிற அந்தஸ்தோ எதுவுமே தன் மனதை எந்த விதத்திலும் திசை திருப்பிவிடக் கூடாது



என்கிற தீவிரம் உண்டாக ஒரு முடிவுடன், ஐபேடை கட்டிலில் வைத்துவிட்டு எழுந்தவன், "வெல் நான் உன்னிடம் கொஞ்சம் பேசணும்..." என்றான் உணர்ச்சியை துடைத்த குரலில்.

"சொல்லுங்க..." என்று வெட்கமும் நாணமும் போட்டிபோட, மென்மையாக கேட்டதும் நிமிர்ந்தவன், அதிக ஜரிகை இல்லாத மெல்லிய தங்க கலர் பட்டில் சிம்பிளான ஒயிட் கோல்ட் நகைகளில் நீல கூந்தலில் தலை நிறைய மல்லிகைப் பூவைச் சூடி ரவிவர்மாவின் ஓவியம் போல வெட்க முகம் சுமந்து தன் முன்னே நின்றிருந்த மனைவியை நிதானமாகப் பார்வையால் அளக்க, ஏனோ அவனையுமறியாமல் பெருமூச்சுக்கள் விடுபட்டது.

அடுத்த கணமே, "ம்ஹீம் நல்ல பாம்பு கூட அழகு தான்... அதற்காக அதைக் கொஞ்சி கொண்டாடவ முடியும்..." என்று முணுமுணுத்தவன் ஜன்னல் பக்கம் திரும்பி நின்று, "நான் சொல்றதை தெளிவாக புரிஞ்சுக்குவே என்று நினைக்கிறேன்..." என்ற பீடிகையோடு ஆரம்பிக்க, தேஜூவுக்கு ஆரம்பமே குழப்பியது.

ஆனாலும் அவன் பேச்சை அமைதியாக உள்வாங்க, "நான் உன்னை காதலித்தது, கல்யாணம் செய்தது எல்லாமே ஒரு நாடகம் ... "என்று நிதானமாகக் கூற,

தேஜூவுக்கு அவனின் பேச்சு புன்னகையை வரவழைக்க, "என்ன செழியன்.... முதலிரவில் என்ன விளையாட்டு இது..." என்று கொஞ்சும் குரலில் சிணுங்கினாள் .

"டோன்ட் கால் மீ செழியன்... என்னை அப்படி

அழைக்கும் உரிமை கண்டிப்பாக உனக்கில்லை..." என்று கடினமானக் குரலில் கூற,

அவன் சொன்ன வார்த்தைகளை கிரஹிக்க முடியாமல், "வ்வாட்... .என்ன சொன்னீங்க சரியா புரியலை..." என்று மீண்டும் கேட்க, அவளை நேருக்கு நேராக பார்த்து, முதல் சொன்ன வாக்கியத்தையே சிறிதும் அச்சு பிழறாமல் அழுத்திக் கூற, தேஜூ அதிர்ச்சியின் உச்சத்திற்கு சென்றாள்.

பின்னே விரும்பி மணந்துக் கொண்டவனுடன் இனிமையாகக் கழிய வேண்டிய முதலிரவில் இந்த கல்யாணமே நாடகம் என்றால் எந்தப் பெண்ணிற்குத் தான் அதிர்ச்சியாக இராது? கண்கள் அதிர்ச்சியில் அவன் மேலேயே நிலைகுத்தி இருக்க,

"என்ன அதிர்ச்சியா இருக்கா... நீ பலவருடங்களுக்கு முன்னால் ஒரு அப்பாவி ஜீவனுக்கு துரோகம் செய்தியே.... அந்த துரோகத்திற்கு கூலி கொடுக்கத்தான் இவ்வளவு நாடகமும்..." என,

"என்ன சொல்றீங்கன்னே புரியலை... நாடகம்... துரோகம்... என்று ஏதோ பெரிய பெரிய வார்த்தை யெல்லாம் சொல்றீங்க..." என்று மிரட்சியுடன் கேட்டவளை, அற்பமாகப் பார்த்துவிட்டு, "உண்மையிலே உனக்கு புரியவில்லையா? அல்லது புரியாத மாதிரி நடிக்கிறியா..." என்றவன் தொடர்ந்து, "காதல்ன்னா உனக்கு விளையாட்டாப் போச்சா... ஆண்கள் என்ன உன் கை பொம்மையா? அவர்களை வைத்து காதல் என்ற விளையாட்டை விளையாடி விட்டு போரடித்தவுடன் குப்பை மாதிரி தூக்கியெறிய. அப்படி நீ எறிந்த ஒருத்தன் இன்று தன் வாழ்க்கையையும் இழந்து, தன் சுய



நினைவையும் இழந்து உயிருக்குப் போராடிகிட்டு இருக்கிறான். அவனைப் பெற்றவர்களுக்கு எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும்... அவன் அனுபவிக்கிற வேதனைகளையும், வலியையும் நீ பாதியாவது அனுபவிக்க வேண்டாமா?" என கண்கள் சிவந்து வன்மமாகக் கேட்க, தேஜூவுக்கு உடம்பிலிருந்த சக்தியெல்லாம் வடிந்தார் போல இருந்தது.

"செழியன்... அது... நான்.. .உங்களுக்கு" என்றவளை இடைமறித்து,

" என்ன மேலும் மேலும் அதிர்ச்சியா இருக்கா... யாருக்கும் தெரியாமல் செய்த நம்பிக்கை துரோகம் இவனுக்கு எப்படித் தெரிந்தது... என்றவனிடம்,

அதிர்ச்சி, குழப்பம் எல்லாவற்றையும் விட்டொழித்து ஒருவாறு மனதை திடப்படுத்திகொண்டு, " நீங்க என்ன சொல்றீங்க என்று புரியலை... எனக்கு உங்களைப் பார்க்கும் வரை நீங்கள் யாரென்றே தெரியாது... அப்படியிருக்கும் பொழுது என் மேல் குற்றச்சாட்டை அடுக்கிக் கொண்டே போறீங்க..." என்றாள் எரிச்சலுடன்.

"ஓ! உண்மையைச் சொன்னால் எரிச்சலா இருக்கோ... ஒன்றுமே செய்யாத மாதிரி நடிக்காதே... ஹ்ம்ம் தப்பு செய்தவர்கள் எப்பொழுதுமே தப்பிவிட முடியாது... எத்தனை வருடம் ஆனாலும் அவர்களுக்கு கிடைக்கக் கூடிய தண்டனை கிடைத்தே தீரும். வினை விதைத்தவன் வினையைத் தானே அறுப்பான். ஒருவேளை நீ நல்லதை விதைச்சிருந்தால் உனக்கு நல்ல வாழ்க்கை அமைந்திருக்கும்..." என்று வெறுப்புடன் கொக்கரித்தவன் தொடர்ந்து,

"இப்பொழுது என் லட்சியமும் நிறைவேறிடுச்சு... ஆனாலும் முழுதாக என் லட்சியம் நிறைவேறினால் எனக்கு முழு சந்தோஷமும் திருப்தியும் கிடைக்கும்..." என்று ஒரு வித வெறியோடு பேசியச் செழியனை மொழி தெரியாத பேதைப் பெண் போல பார்த்துக் கொண்டிருந்தாள்.

செழியன் சொன்ன விஷயத்தின் சாராம்சம் புரிந்தாலும், அதில் பாதி கூட உண்மையில்லை... இதை எப்படி நான் இவனுக்குப் புரிய வைப்பேன்... அதையெல்லாம் விட நடந்து முடிந்த சம்பவம் எனக்கும் ஆதவுக்கு மட்டுமே தெரிந்த ஒன்று... இதில் செழியன் எங்கிருந்து வந்தார்..." என்ற குழப்பமும் ஆதனால் ஏற்பட்ட அதிர்ச்சியுமாக அவன் முகத்தை நோக்க,

செழியன் அவள் பேசுவதற்கோ கேட்பதற்கோ இடமே கொடுக்காமல், "லுக் இந்த வீட்டுக்கும், உலகத்துக்கும் தான் நீயும் நானும் புருஷன் பொண்டாட்டி... ஆனால் இந்த ரூமில் நீ யாரோம நான் யாரோ.... எனக்கு உன்னைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கு..." என்று அவன் மேலே பேசிக்கொண்டே போக தேஜூவின் காலடியில் பூமியே நழுவியது.

செழியன் தன்னைப் பழி வாங்க திருமணம் செய்துகொண்டான் என்கிற செய்தியை அவன் வாயால் கேட்ட பிறகு தேஜூவின் உள்மனம் உடைந்து நொறுங்கியது. இது பயங்கர கனவாக இருந்துவிடக் கூடாதா என்று மனது ஏங்கியது. ஆனால் ஏக்கம் இருந்து என்ன பயன்... நடப்பவை அத்தனையும் நிஜமாச்சே... செழியனிடம் யாரோ தேவையில்லாததை எல்லாம் சொல்லி அவர் மனதைக் குழப்பி பழி வாங்கும் உணர்ச்சியைத் தூண்டி விட்டிருக்கிறார்கள்...



இதை எப்படி உடைப்பது? அவருக்கு எப்படி புரியவைப்பேன்? நீங்கள் தாலி கட்டிய மனைவி நம்பிக்கை துரோகி இல்லை என்று.... யோசிக்க யோசிக்க தலையே வெடித்து விடும் போல இருந்தது.

ஆனாலும் தேஜூவுக்குத் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்று இருந்தது. அது, நடந்த சம்பவத்திற்கும், செழியனுக்கும் என்ன சம்மந்தம் என்று... கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மனதை திடப்படுத்திக்கொண்டு அதை அவனிடமே கேட்டுவிட,

""ரொம்ப அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுமோ..." என்று ஏளனப் பார்வையை வீசியவன், உடனே தீவிரம் மிக, "அவன் என் உயிர் நண்பன்... காலேஜ் நாட்களிலிருந்து மேற்படிப்புக்கு அமெரிக்கா சென்றது வரை இருவரும் ஒன்றாகவே இருந்தோம்.

எம்.பி.ஏ-வின் கடைசி வருட லீவில் ஊருக்குப் போயிட்டுவரேன் என்று சிரிப்பும் சந்தோஷமாக சென்றவன், அதன் பிறகு ஒரு மாதம் கழித்து சுயநினைவை இழந்து அரை உயிராக ஒரு மெண்டல் ஹாஸ்பிடலில் பார்த்தபொழுது எனக்கு எப்படி இருந்திருக்கும்...?" என்று நண்பனின் நினைவில் கண்ணீர் துளிர்க்க கேட்க, தேஜூவின் கால்கள் துவள தொப்பென்று கட்டிலில் அமர்ந்தாள்.

அதற்கு மேலே என்ன செய்வது? ஏது செய்வது என்று அவளால் யோசிக்க முடியவில்லை. மூளை வேலை செய்ய அடம் பிடிக்க, ஒரு கையால் தலையைத் தாங்கியபடி அமர்ந்திருந்த தேஜூவை சொடக்குப் போட்டு அழைத்தான்.

இங்கு நடந்த விஷயத்தை அம்மாவிடமோ, ஆத்விடமோ சொல்லி அனுதாபத்தை சம்பாதிக்கலாம் என்று நினைக்காதே... அப்படி நீ சொன்னாலும் எனக்கு எந்த விதத்திலும் பயமுமில்லை... பிரச்சினையுமில்லை. உண்மையைச் சொல்லப் போனால் உன்னை இந்த ரூமில் தினம் சந்திக்க வேண்டிய நிர்பந்தம் எனக்கு குறையும்..." என்று அலட்சியாகக் கூற தேஜூவுக்கு பயங்கர எரிச்சலும் ஆத்திரமும் கோபமும் வர,

சிலிர்த்துக்கொண்டு, "நான் உங்களைக் கண்டு ஒதுங்கித் தானே போனேன். அப்படியிருந்தும் எதற்காக என்னைத் துரத்தி துரத்தி காதலிச்சீங்க? நான் தான் ஆண்களை ஏமாற்றுகிறவள் என்று தெரிந்துவிட்டது. அப்புறமும் ஏன் என்னை கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்..." என, ஒரு நிமிடம் அவளைக் கூர்ந்து பார்த்தவன் அடுத்த கணம் ஆத்திரத்தில் உரக்க சிரித்தான்.

அவனின் சிரிப்பு தேஜூவின் உள்ளே சிலீரென்று ஊடுருவ, தேகமெல்லாம் ஒரு வித நடுக்கம் பரவியது. ஆனால் விறைத்து நிற்க, "பின்னே எப்படி உன்னைத் தண்டிப்பதாம்? என் நண்பனும், அவன் குடும்பமும் அனுபவிக்கிற வலிகளையும், வேதனைகளையும் நீயும் அனுபவித்தால் தானே தெரியும்.... நீ செய்த வேலை எப்படிப்பட்டதென்று...

உன்னை தேடிக் கண்டுபிடித்து நீ வேலை செய்கிற கம்பனிக்கு ப்ராஜெக்ட் கொடுத்து, உன்னை அடிக்கடி சந்தித்து, அப்பப்பா... ஆனால் ஒன்று உன்னை காதலிக்கிற மாதிரி நடித்து கல்யாணம் வரை கொண்டு வருவதற்கு நான் பட்ட கஷ்டங்கள் இருக்கே... அது அதிகம் தான்... நல்லவ மாதிரி ரொம்ப நல்லாவே நடிக்கிறே..." என்று



நல்லவ என்கிற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்து கூற, தேஜூவுக்கு கண்ணை கரித்துக் கொண்டு வந்தது.

அதற்கு மேல் அவனிடம் பேசப் பிடிக்காமல் முகத்தை திருப்பிக் கொண்டவளுக்கு செழியனைச் சந்தித்த முதல் நாளிலிருந்து அவன் தன்னிடம் நடந்து கொண்ட விதம் அவள் மனக்கண்ணில் காட்சிகளாக விரிந்தது.

கண்ட முதல் நாளிலே, அவன் பார்வையில் இருந்த அலட்சியம், பேசிய விதம், அவனைச் சந்திக்கச் சென்றபொழுது அவனின் பேச்சிற்கு அர்த்தம் கேட்டதும் அவன் மாறிய விதம், அதன் பிறகு யாரிடம் பேசினாலும் எரிந்துவிழுந்தது, அதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல சரணும், தோழியின் அண்ணனும் வந்திருந்த பொழுது கீழ்த்தரமாக நடந்து கொண்ட விதம் எல்லாவற்றிக்கும் மொத்தமாக காரணம் இன்று புரிந்தது.

ஆனால் எல்லாம் இப்பொழுது புரிந்து என்ன ஆகப் போகிறது. எல்லாமே நடந்து முடிந்துவிட்டது. இனி என்ன செய்ய முடியும்? எல்லாமே நன்றாக திட்டம் போட்டு நடத்தியவை... நான் தான் தெரியாமல் வந்து மாட்டிகொண்டேன்.

சிலந்தி வலையில் சிக்கிக் கொண்ட பூச்சியின் நிலைமை போல ஆகிவிட்டது என் நிலைமையும் என்று நினைக்க நினைக்க அழுகையும் ஆற்றமையுமாக இருக்க கட்டிலில் அமர்ந்து முழங்காலில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

எப்பொழுது கண் அயர்ந்தாளோ.... கீழே சுப்ரபாதம் சத்தம் கேட்டு கண்விழித்தவளுக்கு ஒரு நிமிடம் தான் எங்கிருக்கிறோம் என்று புரியவில்லை. கலையாமல்

இருந்த கட்டிலின் பூ அலங்காரம், தொடாமல் வைக்கபட்டிருந்த பால், ஸ்வீட்ஸ் இதெல்லாம் நேற்று நடந்தவைகளை பறை சாற்றியது.

தன் காதல் மலர்ந்து மணம் வீசும் என்று ஏகப்பட்ட கனவுகளோடு காத்திருந்தவளுக்கு அது மொட்டிலே கருகிவிடும் என்று எதிர்பார்க்காததால் நெஞ்சில் விழுந்த அடி பலமாகத் தான் இருந்தது.

அனிச்சை செயலாக கண்கள் செழியனைத் தேட, பாத்ரூமில் கேட்ட ஷவரின் சத்தம் அவன் குளிப்பதை உணர்த்த, ஒரு நெடிய மூச்சுடன் வேகமாக எழுந்து அந்த அறையை ஒட்டிய மற்றொரு அறையில் இருந்த பாத்ரூமில் வேகமாகக் குளித்து முடித்து செழியன் வெளியே வருவதற்குள் கீழே செல்ல, மருமகளைக் கண்டதும் சரளா அன்புடன் அவர் கையாலே காபியை கொண்டு வந்து கொடுத்தார்.

கருணையும், பாசமும், கனிவும் மட்டுமே கொட்டிக் கிடந்த அவர் முகத்தைக் கண்டதும் இப்படி பட்ட அன்பான தாய்க்கு எவனோ ஒருத்தனுக்காக கட்டின மனைவியையே பழிவாங்கத் துடிக்கிற மகனா? என்கிற ஆயாசம் எழுந்தது.

"என்னம்மா ரொம்ப நேரமா என்னையே பார்த்துகிட்டு இருக்கிறே... காபியை குடி..." என அவர் அழைப்பில் தன்னிலைக்கு வந்து,

"ஒன்றுமில்லை அத்தை... அம்மா இன்றைக்கு வரேன் என்று சொன்னாங்க.... அதான் எப்போ என்று யோசித்துக்கொண்டு இருக்கிறேன்.... என்று சமாளித்துவிட்டு,

"அத்தை நான் இன்று ஆபீசுக்கு முக்கியமா



போயாகணும்... நான் அப்படியே அம்மா வீட்டுக்குப் போய்டறேன்... நாளை உங்க பிள்ளை வந்தால் அவருடன் வந்திடறேன்.... என்று தகவல் மாதிரி கூற,

"சரிம்மா...." என்றவர், "செழியன் எங்கேமா..." என்றவருக்கு என்ன பதில் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே, அவனே இறங்கி வந்துவிட, மூவரும் சாப்பிட அமர, சற்று நேரத்தில் ஆதவும் அவர்களுடன் கலந்து கொண்டான்.

தேஜூ செழியனை நிமிர்ந்து பார்க்காமல் அமைதியாக குனிந்து தட்டில் போட்டதை சாப்பிடாமல் அளைந்து கொண்டிருந்தாள். தாலி கட்டியவன் காதல் கொண்டு தன்னை மணக்கவில்லை என்றான பிறகு அவளுக்கு அங்கிருக்கவோ, சாப்பிடவோ, அவ்வளவு ஏன் உட்காரக் கூட அவமானமாக இருந்தது.

மனம் கண்ணாடித் துகள்களாக சிதறிக் கிடப்பதை யாரிடம் சொல்ல முடியும்...? என்று மனதிற்குள் அழுது கொண்டிருந்தவளை ஒரு ஜோடி கண்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது.

ஒரு வழியாக சாப்பிட்டேன் என்று பேர் பண்ணி பாதியை அப்படியே வைத்து விட்டு எழவும், அந்நேரம் எழிலும், ஈஸ்வரனும் உள்ளே வரவும், தேஜூவுக்கு தாயைக் கண்டதும் அழுகை வெடிக்க, தாயைக் கண்ட கன்று போல ஓடி அவர் தோளில் தஞ்சம் புக சரளாவுக்கு முகம் மேலும் கனிந்தது.

அவளை சமாதானப்படுத்தி, பேசிக்கொண்டிருக்க செழியனும் முதல் நாளிரவு ஒன்றுமே நடக்காத மாதிரி அவர்களிடம் சிரித்து பேசிவிட்டு புறப்பட்டுச் செல்ல,

தேஜூவுக்கு தாயிடம் எல்லாவற்றையும் சொல்லி அழவேண்டும் என்று ஒரு வேகம் பிறந்தது.

ஆனால் மகள் சந்தோஷமாக இருக்கிறாள் என்று பூரித்துப் போயிருக்கும் தாய் தந்தையின் நிம்மதியை குலைக்க மனமின்றி தன் வேகத்தை கட்டுப்படுத்தி உள்ளுக்குள் அழுது வெளியில் சிரித்து நடித்துக் கொண்டிருந்தாள்.

எழில் எவ்வளவோ சொல்லியும் தேஜூ கேட்காமல் ஆபீஸ் கிளம்ப, சரளா தான் அவளுக்கு ஆதரவாக பேசி அனுப்பி வைக்க, அவருக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு விட்டால் போதுமென்று ஆபீஸ் சென்றாள்.

செய்ய வேலை எதுவுமில்லை என்றாலும் நிறைய வேலை இருப்பது போல காட்டிக்கொண்டு வாழ்த்துச் சொன்னவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு தன் கேபினுக்குச் சென்ற தேஜூவை சரயுவின் கண்கள் பின் தொடர்ந்தது.

செழியன் அவளிடம் தன் காதலைச் சொல்லி கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்த பிறகு தேஜூ தோழிகளிடம் மன்னிப்புக் கேட்டுப் பேச மீண்டும் அவர்களின் நட்பு தொடர்ந்தது. தோழியின் முகத்தில் கல்யாண களையே இல்லாதது, திருமணமான அடுத்த நாளே ஆபீஸிற்கு வருகை தந்தது, எல்லாம் அவள் மனதில் சந்தேக விதையைத் தூவியது.

மதிய நேரத்தில் தேஜூவைத் தேடி வந்தவள் நேரடியாகவே விஷயத்திற்கு வர, தோழியின் எதிர்பாராத கேள்விகளால் சற்று திணறிய பொழுதும் உண்மையை



மறைத்து பொய் உரைத்த தேஜூவை அவள் நம்பத் தயாராக இல்லை என்பதை சரயுவின் பார்வையே சொல்ல தேஜூவின் தலை தானாகவே கவிழ்ந்தது.

சரயுவின் மனதில் விழுந்த சந்தேக விதை தேஜூவின் தடுமாறிய பேச்சில் துளிர் விட, தோழியின் முகத்தை ஒரு விரலால் நிமிர்த்தி, "உனக்கு பொய் பேச வராது தேஜூ... உண்மையைச் சொல் . நேற்று என்ன நடந்தது. செழியன், நீ உடனே அவர் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கோபமாக நடந்து கொண்டாரா... சொல்லுடா..." என்று கனிவாக கேட்டதும், அவளின் கண்கள் கரை உடைக்க, செழியன் தன்னிடம் கடுமையாகப் பேசியதை மறைக்காமல் கொட்ட சரயுக்கு அதிர்ச்சியில் பேச்சே வரவில்லை.

இப்படி கூட உலகத்தில் நடக்குமா? என்ற அதிர்ச்சியில் இருந்தவள் தலையை குலுக்கிக்கொண்டு, "நீ அதையெல்லாம் கேட்டுக்கொண்டு சும்மாவா இருந்தே. அப்படி எதுவும் நடக்கவில்லை என்று சொல்லவேண்டியது தானே என்று கோபத்துடன் கேட்டவளுக்குப் பதிலாக தலையைக் குனிந்தாள்.

தோழியின் செய்கைக்கு காரணம் புரியாமல் பார்க்க, அவளிடம், தன் கடந்த காலத்தைக் கூறி, செழியன் கூறியதில் பாதி கூட உண்மையில்லை...., ஆனால் இதை அவருக்கு எப்படி புரியவைப்பேன்" என்று பரிதாபமாகக் கேட்டாள். சரயுவுக்கே இது புதிய செய்தியாக இருந்த பொழுதும் கண்ணால் பார்க்காத விஷயத்தை அடுத்தவர்

சொல்லிக் கேட்டு அதற்காக பலவருடங்கள் திட்டம் போட்டு பழிவாங்கிய செழியனை அவளால் மன்னிக்க முடியவில்லை.

"தேஜூ இது அழுது கரையற நேரமில்லை. அவர் தரப்பு நியாயத்தை எப்படி சொன்னாரோ அதே மாதிரி நீ உன் பக்கத்து நியாயத்தை சொல்லியிருக்கணும் . எந்த ஒரு பெண்ணும் அந்த நேரத்தில் அப்படித் தான் நடந்து கொள்வாள். நீ செய்ததில் தவறேதும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.... உண்மையான ஆண்மகனாக இருந்தால் நிச்சயம் அவர் புரிந்து கொள்வார்..." என்றவள் தொடர்ந்து,

"தெரியாமல் தான் கேட்கிறேன்... படிச்சு பெரிய பதவியில் இருக்கிற நீயே தாலி கட்டிய கணவன் உன் மேல் சுமத்திய அபாண்டங்களை எதிர்க்காமல் கோழை மாதிரி கண்ணை கசக்கிறியே, படிக்காத பெண்களின் நிலைமை என்ன?'' என்று கேட்டவளிடம்,

"ச்சே தைரியம் இல்லையென்று இல்லை சரயு... அந்த நேரத்தில் நான் அதிர்ச்சியின் பிடியில் இருந்ததால் என்னவோ என்னால் செழியனை எதிர்த்துப் பேசவோ... என்னை புரியவைக்கவோ தோன்றவில்லை. அதுதான் அமைதியாக இருந்துவிட்டேன்..."என்றாள் மனதை தொட்டு.

"எனகென்னவோ நீ அவர் சொல்வதைக் கேட்டு அமைதியாக இருந்தால் பொய் உண்மையாகிவிடும். ஒரு பொய்யை பலதடவை உரக்கச் சொன்னாலே உண்மையாகும் பொழுது இட்ஸ் ஹாப்பன்... சோ உன் தரப்பு நியாயத்தைச் சொல்ல தயங்காதே... என்று அவளின் கையை ஆதராவாக அழுத்தி அறிவுறுத்த,



தேஜூவுக்குள் சிறு நம்பிக்கை பொறி தோன்றியது.

அன்றிரவு தாயின் வீட்டில் தங்கிவிட செழியன் வேலை இருக்கு அவளின் வீட்டிற்கு வராமல் அடுத்த நாள் காலையில் வந்ததால் தேஜூவுக்கு அவனிடம் பேச சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அன்றிரவே அவனிடம் பேச முடிவெடுத்து காத்துக்கொண்டிருக்க, ரூமிற்குள் வந்தவன் அவளை கண்டுகொள்ளாமல் தன் வேலையை கவனித்துவிட்டு படுக்கச் செல்ல, "உங்களிடம் கொஞ்சம் பேசணும்" என்று நிறுத்தினாள்.

அசுவாரசியமாகத் திரும்பி "சாரி எனக்கு அசதியா இருக்கு தூங்கணும்'' என,

தனக்குள் எழுந்த கோபத்தை கட்டுப்படுத்தி, "ஹ்ம்ம் நீங்க தாராளமா தூங்கலாம்... ஆனால் அதற்கு முன் நான் சொல்வதையும் கேளுங்கள். நேற்று நீங்கள் பேசியதை நான் அமைதியாக கேட்கவில்லையா?" என்று நிதானமாக அதே சமயம் அழுத்தமாகப் பேச, செழியன் பார்வை என்ன சொல்லப்போகிறாய் என்று அலட்சியத்தோடு நோக்கியது.

"நீதிமன்றத்தில் ஒரு கொலைகாரனுக்குக் கூட தன் தரப்பு நியாயத்தைச் சொல்ல ஒரு வாய்ப்புண்டு. ஆனால் நேற்று நீங்கள் என்னிடம் நடந்து கொண்ட விதமும், பேசிய விதமும் ஒரு பண்புள்ள மனிதன் நடந்து கொண்ட மாதிரியா இருந்தது...." என்று பிசிறில்லாத குரலில் கேட்ட மனைவியை கண்ணோரம் சுருங்க நோக்கினான்.

"ஓ! நீ செய்த தவறை எப்படி பூசி மெழுகலாம் என்று யோசிக்க உனக்கு ஒரு நாள் முழுதாக தேவைப்பட்டதோ"

என்று படு நக்கலாக வார்த்தைகளை அள்ளித் தெளித்தவன், "என்னை பண்பில்லாதவன் என்று சொல்ல உனக்கு என்ன தகுதி இருக்கிறது..." என்று சீற தேஜூவின் உள்ளம் குமுறியது.

"ம்ஹீம் எனக்கு அப்படி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை மிஸ்டர்.செழியன். தவறு செய்தவர்கள் எப்படியும் தண்டனையை அனுபவித்தே தீருவார்கள் நீங்க சொன்னீர்களே. அதே மாதிரி தர்மம் என்றும் ஜெயிக்கும் என்று சொல்கிற அளவுக்கு என்னிடம் தைரியமும் இருக்கு மற்றவர்களை மதிக்கிற பண்பும் அதிகமாகவே இருக்கு" என்று பதிலுக்குச் சீறினாள்.

"யாரோ உண்மையைச் சொல்லப்போகிறேன்... அது இது என்று பில்ட் அப் கொடுத்தார்கள் போல...." என்று இகழ, கைகளையும், கண்களையும் இறுக மூடித் திறந்தவள், ஒரு பெருமூச்சை விடுத்து,

"கண்ணால் பார்ப்பதும் காதால் கேட்பதும் உண்மையில்லை... தீர விசாரிப்பதே மெய் என்று ஒரு பழ மொழியே இருக்கு.... நேற்று நீங்கள் என் மேல் சுமத்திய குற்றங்கள் அனைத்தும் உங்களுக்கு ஒரு செய்தியாக தெரிவிக்கப்பட்டவை.....

ஆனால் என் வாழ்க்கையில் நடந்தவை அப்படியே நேர்மாறானவை... எதையுமே முழுதாக தெரிந்துகொள்ள விரும்பாமல் ஒரு பக்கத்து நியாயத்தை மட்டுமே பேசிய உங்களிடம் இதை எப்படி நான் புரியவைப்பது?" என்றவளை கேலியாக நோக்கி,

"சொன்னால் புரிந்துவிடப் போகிறது..." என்றான் மீண்டும் அதே கேலியோடு.



# 16

செழியனின் இகழ்ச்சியான பேச்சு தேஜூவின் உள்ளத்தில் சலிப்பையும் ஆயாசத்தையும் ஒரு சேரத் தோற்றுவித்தது.. எதிர்த் தரப்பு வாதத்தைக் கேட்க மாட்டேன் என்று இரு காதுகளையும் இறுகப் பொத்திக்கொண்டு, அலட்சியமாகப் பேசுகிற இவனிடம் என்ன சொல்லி என்ன ஆகப் போகிறது....

நான் சொல்லப் போவதைக் கண்டிப்பாக இவர் நம்பப் போவதில்லை என்றான பொழுது, சொல்லி எதற்காக நேரத்தை வீணாக்க வேண்டும். ஹ்ம்ம், நடப்பது நடக்கட்டும்... "என்ற எண்ணத்தின் பிடியில் இருந்தவளைக் கை சொடுக்கி அழைத்து,

"என்ன கொஞ்ச நேரத்திற்கு முன் ஜான்சி ராணியாய் சீறினே.... இப்போ பேச்சே காணோம் ..." என்று கேட்டு மேலும் அவள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான்.

அவனின் கேள்விக்கு பதில் சொல்ல விரும்பாமல் கட்டிலில் படுத்துக்கொண்டு கண்ணை மூடியவளை செழியனின் ஏளனச் சிரிப்பு துரத்த, தேஜூவுக்கு அவள் நிலைமையை நினைத்துப் பரிதாபமாக இருந்தது .

இப்படிப்பட்ட கல்யாணமே வேண்டாம் என்று எல்லாவற்றையும் தூக்கிஎறிந்து போய்விடலாம் என்றால் சிசு வதையிலிருந்து காப்பாற்றி உயிரினும் மேலாக வளர்த்த தாய் தந்தையின் மனதை நோகடிக்க உள்ளம் இடம் கொடுக்கவில்லை... இன்னொரு பக்கம் தாயைப்

போல அன்பைப் பொழியும் சரளா அம்மா... ஒரு சகோதரனைப் போல பாசம் காட்டும் ஆதவ்...

எப்படி இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பது என்று யோசித்து யோசித்து ஒன்றும் பிடிபடாமல் மனது மேலும் குழம்பிப் போனது தான் மிச்சம். ஒரே அறையில் ஒரே கட்டிலில் தன்னை நேசிக்காதவனுடன் படுத்திருப்பது அருவருப்பாகத் தோன்ற, சடாரென்று எழுந்தவள் செழியனின் உறக்கத்தைத் தொல்லை செய்யாமல் மாடிப்படி இறங்கிச் சென்று, லானில் நடக்க ஆரம்பித்தாள்.

இன்னும் எத்தனை நாள் இந்தக் கொடுமையை அனுபவிப்பது? பேசாமல் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி கொஞ்ச நாள் அம்மா வீட்டிற்குப் போய்விடலாமா...? என்று நகத்தைக் கடித்தபடியோசித்துக் கொண்டிருந்தவள் முன், திடீரென்று சரளா அம்மா பிரசன்னமாக தேஜூவின் தேகம் தன்னையும் அறியாமல் தூக்கி வாரிப்போட ப்ரேக் போட்டது போல நின்றாள்.

" புருஷனுடன் இருக்க வேண்டிய நேரத்தில், அதுவும் தனியாக விளக்கைக் கூடப் போடாமல் இருட்டில் எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறியே... அது என்னன்னு தெரிஞ்சிக்கலாமா... " என்று சாவதானமாகக் கேட்க அவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் குழம்பி நின்றாள் .

மீண்டும் அவரே தொடர்ந்து, " என்னை நீ இங்கு எதிர்பார்க்கவில்லை என்று உன் அதிர்ச்சியில் இருந்தே தெரிகிறது. சொல்லு, உனக்கும் செழியனுக்கும் இடையே என்ன பிரச்சனை...?" என்று நேரடியாக விஷயத்திற்கு வர, தேஜூவின் நிலைமை இன்னும் மோசமானது.



"அம்மா... அது... வந்து... எங்களுக்குள்ளே எந்தப் பிரச்சனையுமில்லை... எனக்கு ஏதோ நடக்கணும் என்று தோணியது... அவர் தூங்கிவிட்டதால் நான் மட்டும்..." என்று சொல்லிக் கொண்டிருந்தவளை இடைமறித்து,

"போதும்மா...எதுக்கு இப்போ இவ்வளவு கஷ்டப்பட்டு பொய் சொல்றே...? புதுசா கல்யாணமான எந்தப் பெண்ணும் இந்த நேரத்தில் கணவனை விட்டு இப்படித் தனியே வர விரும்ப மாட்டாள்..." என்று நிறுத்தி அவளை உற்று நோக்கியவர், "இதற்கு மேலும் உனக்கு விளக்கம் வேண்டுமா?" என்று அனுபவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்த முதியவரின் கம்பீரமான கேள்வியில், அவளின் தலை நிலம் நோக்கிக் கவிழ்ந்தது.

அவளின் தலையை நிமிர்த்தி, துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்து, "உன் மனசை அழுத்திக் கொண்டிருக்கிற பாரத்தை என்னை உன் தாயாய் நினைத்துச் சொல்லும்மா... கண்டிப்பாக என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்...." என்று கனிவாகப் பேசப் பேச அதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த அழுகை வெடித்தது.

அவளைத் தன் தோளில் ஆதரவாகச் சாய்த்து சிறிது நேரம் அழட்டும் என்று முதுகை மென்மையாக வருடிக் கொடுக்க, சிறியவளின் அழுகை நின்று... விம்மல் மட்டுமே வர, அவரிடமிருந்து விலகியவள் கண்களைத் துடைத்துக்கொண்டு, செழியன் தன் மேல் சுமத்தும் குற்றச்சாட்டுகளைக் கூற, பெரியவரின் புருவங்கள் அருவையாக நெரிந்து, அவளைக் கேள்வியாக நோக்கின.

அவளே தொடர்ந்து "நான் அவர் சொல்கிற மாதிரிப் பெண் இல்லை அத்தை! அவரை யாரோ நன்றாகச்

குழப்பி விட்டிருக்கிறார்கள்" என்றவளுக்கு மீண்டும் அழுகை துளிர்த்தது. கண்ணீரை உள்ளுகிழுத்துக் கொண்டு.

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நேரம்... கல்லூரியில் இருந்து படிப்பு சம்மந்தமான சுற்றுலாவாக ஒரு மாதத்திற்கு வடநாட்டுப் பக்கம் செல்ல முடிவெடுத்தார்கள்... அந்த லிஸ்டில் ராஜஸ்தானும் இருந்தது.

அது என்னுடைய பிறந்த ஊர் என்பதால், ஆரம்பத்தில் என் பெற்றோர் என்னை அனுப்ப ஒத்துக்கொள்ளவே இல்லை... என்றதும் "ஹ்ம்ம், எழில் சொல்லியிருக்கிறாள் உன்னைப் பற்றி..." என்று அவளின் பேச்சின் நடுவே ஆமோதிக்க, அதன் பிறகு என் கல்லூரித் தோழிகளின் வற்புறுத்தலால் அனுப்பி வைத்தார்கள்.

நானும் அவர்களுடன் வடநாட்டு ட்ரிப்பை நன்றாக என்ஜாய் செய்தேன்... எனக்குக் கட்டிடக் கலை தான் விருப்பமாக இருந்தது. சிறு வயது முதலே ஆர்கிடெக்ட் ஆகணும் என்கிற ஆசை இருந்தது. முதலில் புது டெல்லிக்கு சென்று தங்கி, அங்குள்ள புகழ் மிக்க தாஜ்மஹால் மற்றும் சில புகழ் பெற்ற இடங்களுக்கு சென்றோம்... அதன் பிறகு ஜெய்ப்பூருக்குச் சென்றோம்... அங்கே சில நாட்கள் தங்கி விட்டு ராஜஸ்தானிற்குச் சென்றோம்.

அங்கு எல்லோரும் அந்த ஊர்ப் பெருந்தனத் தலைவருக்குச் சொந்தமான ஒரு ஜமீன் பங்களாவில் தங்க வைக்கப் பட்டோம். சாப்பாடு அவர் வீட்டிலிருந்தே வந்துவிடும். நாங்களும் ராஜஸ்தானில் உள்ள அரண்மனை, எலிக் கோவில் எல்லாம் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம்.



அந்தச் சமயத்தில் அந்தத் தலைவரின் மகன் ரஞ்சித் அமெரிக்காவிலிருந்து வந்திருப்பதாகவும், வீட்டில் போரடிப்பதால் எங்களுக்கு கைட் செய்வதாகக் கூறி தானே முன்வந்து உதவ எங்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சியாக இருந்தது.

அதன் படியே அவரும் தினமும் காலை நாங்கள் தங்கியிருக்கும் பங்களாவிற்கு வந்தால் திரும்பிச் செல்ல இரவு நேரமாகிவிடும்... அவ்வளவு நேரமும் எங்களுடன் தான் சாப்பாடு, அரட்டை பேச்சு எல்லாம்... சிரிக்கச் சிரிக்கப் பேசுவார் என்பதால் எல்லோருமே அவரிடம் ஒரு தோழமையுடன் பழகினார்கள்.

எங்கு சென்றாலும் கட்டிட க்கலையை ஆர்வமாக நான் ஆராய்வதை க் கண்டு ரஞ்சித் ராஜஸ்தானில் உள்ள பெருமை வாய்ந்த ஜமீன் மாளிகைகளையும், கட்டிடங்களையும், கோவில்களையும் சுற்றிக் காண்பித்தார்.

நானும் ஆர்வமாகக் குறிப்பு எடுத்துக் கொண்டிருந்ததால் அவரின் உண்மையான குணத்தைப் புரிந்து கொள்ள நேரமில்லாமல் போய்விட்டது" என்றதுமே "என்னம்மா சொல்றே? என,

"ஆமாம் அத்தை, அவரின் எண்ணங்கள் எல்லாம் பெண்களைத் தன் செல்போனில் தவறான கோணத்தில் படம்பிடித்து அதை ரசிப்பது தான் என்பது, எங்கள் குரூப்பில் உள்ள சில பெண்களுக்குத் தெரிய வந்தது .

ஆனால் இதை வெளியே சொல்லி மற்றவர்களை எச்சரிக்க முடியாதபடி அவன் அவர்களிடம் நெருங்கிப் பழகி அவர்களைத் தவறாகப் படம் பிடித்து வைத்திருந்தான் . அந்த வீடியோவைக் காட்டி . அவனின்

ஆசைக்கு இணங்கச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறான்.

இதைப் பற்றி வெளியே யாரிடமோ சொன்னாலோ அல்லது அவனைக் காட்டிக் கொடுத்தாலோ இந்த ஆபாசப் படங்கள் நெட்டில் உலா வரும் என்றும் மிரட்டியிருக்கிறான். இதற்கு பயந்து அவனிடம் மாட்டிக்கொண்ட மூன்று பெண்கள் திருடனுக்குத் தேள் கொட்டிய மாதிரி இருந்து விட விஷயம் தெரியாத நானும் மற்றவர்களும் வழக்கம் போல சகஜமாகப் பழகிக் கொண்டிருந்தோம்.

ஒரு நாள் என் உடல் நிலை சரியில்லாமல் போனதால், என்னால் மற்றவர்களுடன் ஊர் சுற்றச் செல்ல முடியவில்லை. நான் பங்களாவிலே தங்கிவிட மற்றவர்களுக்கு என்னை விட்டுச் செல்ல மனம் வராமல், என்னுடன் தங்க முடிவு செய்தார்கள்.

அந்த நேரத்தில் ரஞ்சித் எனக்குத் துணையாக ஒரு வயதான மூதாட்டியை ஏற்பாடு செய்துவிட்டு மற்றவர்களைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்றான்.

எல்லோரும் சென்ற கொஞ்ச நேரத்தில் நான் மாத்திரையின் உபயத்தால் உறங்க ஆரம்பித்தேன். திடீரென்று சிகரெட் வாசனை என் நாசியைத் தீண்ட,உறக்கம் கலைந்து எழுந்த எனக்கு பலமான அதிர்ச்சி. ஏனென்றால் அவன் என் அறையின் கதவைத் தாளிட்டுவிட்டு, என் எதிரே கிடந்த சேரில் அலட்சியமாக அமர்ந்தபடி சிகரெட்டை ஊதிக்கொண்டிருந்தான்.

அதிர்ச்சியில் எழுந்த நான் நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு, அவனை வெளியே போகச் சொல்லி விரட்ட, அவன் சற்றும் அசைந்து கொடுக்காமல் கோணலாகச் சிரித்து, "எதுக்கு பேபி இப்போ



அவசரப்படறே! இந்த மாதிரி ஒரு தருணத்திற்குத் தானே காத்திருந்தேன்! என் வேலை முடிஞ்ச பிறகு நானே வெளியே போயிடறேன்..." என்று பேசிக்கொண்டே செல்போனை ரெக்கார்டிங் ஆப்ஷனில் வைத்துவிட்டு, நான் எதிர்பார்க்காத நேரத்தில் என் மீது பாய்ந்தான்.

ஏற்கனவே உடல் நிலை சரியில்லாமல் போனதாலும், இந்த திடீர் தாக்குதலாலும் நிலை குலைந்து போன நான் அவனிடம் என் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள உயிரைக் கொடுத்து போராடிக் கொண்டிருந்தேன். அந்தக் காம வெறி பிடித்த மிருகத்தின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் என் சக்தியெல்லாம் வடிந்து சோர்ந்து போன நிலையில், திடீரென்று பூட்டியிருந்த அறைக் கதவை உடைத்துக் கொண்டு ஆபத்பாந்தவனாக என் நண்பர் ஒருவர் உள்ளே வந்தார்.

அந்த நண்பர் வேறு யாருமில்லேமா; உங்க இரண்டாவது பையன் ஆதவ் தான்! "என்றதும் சரளாவின் முகத்தில் வெளிப்படையான ஆச்சரிய அலைகள். நடுவில் எதையும் பேசாமல் அவள் தொடர்ந்து பேசட்டும் என்ற எண்ணத்தில் அமைதியாக அவள் முகத்தை நோக்க,

"என் கல்லூரியில் வேறு பிரிவு மாணவனாக இருந்தாலும் எங்களுக்குள் ஒரு நல்ல நட்பு இருந்தது. நாங்கள் சுற்றுலா கிளம்பும் போதே, லீவு கிடைத்தால் ராஜஸ்தானிற்கு வருகிறேன் என்று கூறியிருந்தார். சொன்ன மாதிரியே வந்ததோடு நில்லாமல் என் வாழ்க்கையையும், கற்பையும் காப்பாற்றினார். அவர் மட்டும் அந்த நேரத்தில் வராமல் போயிருந்தால்? என்னும் பொழுதே தொண்டை தழுதழுக்க வார்த்தைகள்

தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது. தேஜூவின் அந்த நிமிட வலி, பெண்ணான அவருக்குப் புரிய மருமகளின் கையைத் தன் கையில் எடுத்து ஆதரவாக அழுத்திக் கொடுக்க, சில வினாடிக்குப் பிறகு தன்னை சமன் படுத்திக்கொண்டு மேலே தொடர்ந்தாள்.

"திடீரென்று உள்ளே ஒருவர் வந்ததால்... அந்த மிருகம் சற்றுத் தடுமாறி, என்னை விட்டுவிட்டு இடையூறாக வந்த ஆதவ்வை தாக்கத் தொடங்கியது.

இருவருக்கும் பலமாக சண்டை நடந்த நேரத்தில் ஆதவ்வை அந்த மிருகம் கழுத்தைப் பலமாக நெறிக்கவும், ஆத்வ்விற்கு மூச்சு த் திணற ஆரம்பித்தது . என் வாழ்க்கையைக் காப்பாற்றிய அவரின் உயிரை அந்த மிருகத்திடமிருந்து காப்பாற்ற அங்கிருந்த சேரை எடுத்து என் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி அவன் தலையில் ஓங்கி அடித்தேன் ... நான் அடித்த வேகத்தில் அவன் மண்டை உடைந்து அங்கேயே ரத்த வெள்ளத்தில் சாய்ந்துவிட்டான்.

பயத்தில் நான் நடுங்கிக் கொண்டிருக்கும் பொழுதே ஆதவ் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அதற்கு மேல் அங்கிருந்தால் என் பெயர் கெட்டுவிடும் என்று என்னை எங்கள் குழு இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று அவர்களிடம் நடந்த விஷயங்களைக் கூறினார் .

அப்பொழுது தான் என் தோழிகள் சில பேர் கண்ணீருடன் தன் உள்ளக் குமுறல்களைக் கொட்டித் தீர்க்க, அவன் எப்படிப்பட்ட அயோக்கியன் என்று தெரிய வர, எங்கள் குழுவே அதிர்ந்து நின்றது.

ரஞ்சித்தின் அயோக்கியத் தனத்திற்குத் துணை போக விரும்பாமலும், என்னைக் காட்டிகொடுக்க



விரும்பாமலும் எங்கள் குழு இன்சார்ஜர் அவன் மாடிப் படிக்கட்டில் தவறி விழுந்துவிட்டாதாக பொய் சொல்லி ஹாஸ்பிடலில் சேர்த்துவிட்டார். ஆனால் அவன் வீட்டில் இதையெல்லாம் நம்பாமல் பிரச்சனைகள் செய்தார்கள் .

எப்படியோ பேசிச் சமாளித்து என்னை ஊருக்கு அழைத்து வந்துவிட்டார்கள். அதன் பிறகு அவன் என்னவானான் என்று கூட எனக்குத் தெரியாது..." என்று ஒரு பெருமூச்சுடன் சொல்லி நிறுத்தினாள்.

இடையில் அவளைக் கொஞ்சம் கூட இடையூறு செய்யாமல் அமைதியாகக் கேட்டுக்கொண்டு வந்தவர் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள்ள, குடிக்கத் தண்ணீரைக் கொடுக்க, மடமடவென்று சரித்துக் கொண்டாள்.

"நன்றி அத்தை..." என்றவளிடம் அதே அமைதியுடன் "இதில் உன் தவறு எதுவுமே இல்லையேம்மா... எந்த ஒரு பெண்ணுமே அந்த நேரத்தில் இப்படித் தானே நடந்துகொள்வாள்? இதை தைரியமாக செழியனிடம் சொல்லியிருக்கலாமே! அவனிடம் இதை ஏன் சொல்லாமல் மறைக்க வேண்டும்?"என,

"இல்லை அத்தை, அவர் மனதில் ஏற்கனவே நஞ்சை விதைச்சு வைச்சிருக்காங்க. இப்போ நான் எது சொன்னாலும் அவரைப் பொறுத்தவரை பொய்யாகத் தான் இருக்கும் . இதைச் சொல்லி நான் அவரிடம் அசிங்கப்படுவதை விட பேசாமல் இருப்பது தான் உத்தமம்" என்று குரல் கமறச் சொன்ன மருமகளை பரிதாமாகப் பார்த்தார்.

சில நொடிகள் ஒரு பெருமூச்சுடன் "ஹ்ம்ம், எனக்கு இப்படி ஒரு பிள்ளை... அப்படி ஒரு பிள்ளை... ஆதவ் கூட

ஊரில் இல்லை... அவன் ஊருக்குச் செல்வதற்கு முன் உன்னை கவனமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லி என்னிடம் பல முறை எச்சரித்துவிட்டுப் போனான்... அதன் அர்த்தம் இப்போ புரிகிறது..." என்றவர்,

"சரிம்மா, இனிமே இந்த விஷயத்தை நான் பார்த்துகிறேன்... நீ கவலைப்படாதே..." என்று ஆறுதல் கூறியவர், "இப்போ நீ உங்க அறைக்குப் போ! நாளைக்கு இதற்கு ஒரு ஏற்பாடு செய்கிறேன்..." என்றார் ஒரு முடிவுடன்.

அடுத்த நாளிலிருந்து ஒரு முடிவுடன் ஒதுங்கி ஒதுங்கிச் சென்றவளை இழுத்து செழியனுக்கு சாப்பாடு பரிமாறச் சொல்வது, அவன் ஆபிஸ் செல்லும் நேரங்களில் கண்ணெதிரே இருப்பது போல ஏதாவது ஒரு வேலை கொடுப்பது... வீட்டில் எது செய்தாலும் அவளையே கேட்டுக்கொண்டு செய்வது..." என்று அவளை முன்னிறுத்தியே அவர் எல்லாவற்றையும் செய்தார்.

ஆரம்பத்தில் தேஜூவுக்கு அவரின் செயலுக்கான அர்த்தம் புரியாமல், "நான் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டார்களா? என்னைக் கண்டாலே எரிந்து விழுபவரின் கண் முன்னாலே இருக்கும்படி வேலை கொடுக்கிறார்களே! மேலும் மேலும் என் மீது ஆத்திரமும் வன்மமும் தானே அவருள் வளரும்?என்று எரிச்சலடைய கடவுளின் முன் அமர்ந்தபடி மகாலஷ்மி அஷ்டகம் சொல்லிக் கொண்டிருந்த மாமியாரிடம் கேட்டும் விட்டாள்.

"நான் எது செய்தாலும் அதில் ஒரு காரணம் இருக்கும்! இப்பொழுது என் செயலின் காரணம் புரியாமல் இருக்கலாம். ஆனால் ஒரு நாள் உனக்கே புரியும் "என்றவர்,



"எனக்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும் தேஜூ " என்று நிறுத்த, "சொல்லுங்க!" என்றாள் புரியாமல்.

"என் பையன் என்பதற்காகச் சொல்லுகிறேன் என்று தவறாக நினைக்காதேம்மா ..." என்று பீடிகையுடன் பேச ஆரம்பித்தவர், "செழியன் இயல்பிலே மிகவும் நல்லவன்மா... பெண்களிடம் மிகுந்த மரியாதை யுடையவன்! அப்படிபட்டவன் ஏன் உன் விஷயத்தில் ஒரு மூடன் மாதிரி நடந்து கொள்கிறான் என்று எனக்குத் தெரியவில்லை? ஆனால் கண்டிப்பாக நான் அவனுக்கு உண்மையைப் புரிய வைப்பேன் .

அதற்கு நிச்சயம் கொஞ்சம் காலம் பிடிக்கும்! அதற்குள் நீ என் பையனை வெறுத்து விட மாட்டியே தேஜூ?" என்று அவளின் கையை ப் பிடித்துக் கெஞ்சுகிற மாதிரிக் கேட்க, தேஜூ பதறிவிட்டாள்.

"என்ன அத்தை இந்த மாதிரியெல்லாம் பேசறீங்க? அவர் என்னைக் காதலித்தாரா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை... ஆனால் நான் அவரை மனதார விரும்பித் தான் ஏற்றுக் கொண்டேன்.

அவர் மேலே வருத்தம் தான் ஒழிய, நிச்சயமா வெறுப்பு இல்லை . நான் பிறந்ததிலிருந்து நிறைய, அதுவும் அசாதாரணமான துன்பங்களைக் கடந்து வந்திருக்கிறேன். அதுபோல இதுவும் கடந்து போகும் என்று நம்புகிறேன்!" என்று இளம் முறுவலுடன் நம்பிக்கையுடன் கூற, நிம்மதிப் பெருமூச்செறிந்தார்.

அவளே தொடர்ந்து, "ஒரு நண்பனுக்காகத் தன் வாழ்க்கையையே வீணாக்கிக் கொள்கிற அளவுக்கு, நட்பை ஒரு கற்பைப் போல போற்றுகிற அவரை

நினைத்தால் எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது என்று பிரமிப்புடன் சொல்லிக்கொண்டு வந்தவள், ஆனால் அவரின் நட்பிற்குத் தகுதியானவன் அந்த ரஞ்சித் இல்லையே என்பது தான் வருத்தம் அத்தை!" என்னும் போதே அவளின் அழகிய முகம் சுணங்கியது.

அவளைத் தேற்றி, "கவலைப்படாதேம்மா எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்... நான் சொல்வதை மட்டும் செய்!" என, அடுத்து வந்த நாட்களில் அவரின் சொல்லைக் காப்பாற்றும் விதமாக நடந்து கொண்டாள் தேஜு.

பகல் நேரங்களில் தன் தாயின் சொல்படி தனக்குப் பணிவிடை செய்கிறாள் என்பதறியாத செழியன், தன்னை ஈர்ப்பதற்காக இப்படி விழுந்து விழுந்து கவனிக்கிறாள் என்கிற வெறுப்பில் இரவில் அவளை வார்த்தைகளால் கொல்வான்.

ஆனால் அவனின் பேச்சிற்கு பதில் பேச்சுப் பேசாமல் தேஜு அமைதியாகச் செல்ல ,அவனுக்கு எரிகிற கொள்ளியில் நெய்யை ஊற்றுகிற மாதிரி இருக்க, மேலும் எரிந்து விழுவான். அவளைப் புண்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் அமைதியாகச் செல்பவளை வம்பிற்கிழுப்பான்.

ஓரிரு சமயங்களில் மாமியாரின் அட்வைஸ் காற்றில் பறந்துவிட, சூடாக பதிலடி கொடுப்பாள். "நம்பிக்கை துரோகிக்கெல்லாம் கோபம் எதற்கு?" என்று நக்கலடித்த கணவனை விரக்தியாக நோக்கியவள்,

"என்னை அப்படிச் சொல்ல உங்களுக்கு என்ன தகுதியும் உரிமையும் இருக்கு?" என்றாள் சீறலாக.

அவளின் பதிலில் கோபம் தலைக்கேற அவன்



தோள்களைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பியவன், "நான்... உன்... என்று கடுமையோடு ஆரம்பித்தவன், அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு, "ச்சே, உண்மையைப் பேசுகிறவளிடம் சொன்னால் புரியும்! உனக்கெங்கே புரியப் போகுது! உனக்கும் உண்மைக்கும் வெகு தூரமாச்சே" என்று திராவகத்தை வீச, தேஜூ அவன் பேச்சில் துடித்துப் போனாள்.

அதற்காக அழுது மூலையில் அமர்ந்துவிடாமல், "ஆமாம் மிஸ்டர் செழியன், நீங்கள் எப்படியோ அப்படித் தானே, உங்கள் நண்பர்களும் இருப்பார்கள்" என்று அழுத்தி நிதானமாகக் கூற,

"ஹேய் சீ! என்னைப் பற்றியும், என் நண்பனைப் பற்றியும் பேச உனக்கென்ன தகுதி இருக்கிறது ? அவன் எவ்வளவு உயர்வானவன் தெரியுமா? " என்றான் கண்களில் கடுமையை ஏற்றி.

அவனை ஐயோ பாவமே என்ற ரீதியில் அவனைப் பார்த்து, "ஆமாம்... ஆமாம்... உண்மையில் மிக மிக உயர்வானவன்... பின்னே நண்பனிடம் எதையும் மறைக்காமல் கூறியிருக்கிறாரே... என்று கேலியாகப் பேசியவள், எதையும் என்ற வார்த்தை அழுத்திக் கூற செழியனுக்கு வார்த்தைக்கு வார்த்தை அவளிடம் மல்லுக் கட்டுவது கோபத்தை அதிகமாக்க, "உன்னை நிம்மதியாக வாழ விடவே மாட்டேன்! நரகம் என்னவென்று நான் உனக்குப் புரிய வைக்கிறேன்" என்று சூளுரைத்தவனை அமைதியாக நோக்கினாள்.

"நீங்கள் நரகமாக்குவது என் வாழ்க்கையை மட்டுமில்லை... உங்கள் வாழ்க்கையையும் சேர்த்துத் தான்! அதுவும் தகுதியில்லாதவர்களுக்காக!" என்று நிறுத்தி

நிதானமாகக் கூறிவிட்டு கொஞ்சம் கூட அவசரமே இல்லாமல், சோபாவில் தலையணையைப் போட்டுப் படுத்துக் கொள்ள செழியன் சிலையாக நின்றுவிட்டான்.

சில வினாடிகளில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு சீறலான மூச்சுடன் அவளிடம் திரும்ப, அவனை ஸ்தம்பிக்க வைத்தவளோ எவ்வித சலனமும் இல்லாமல் நிச்சலனமாக உறங்குவதைக் கண்டு பற்கள் கடிபட்டன.

தன் நண்பனைப் பற்றி இவளுக்கென்ன தெரியும்? அவனுக்குத் தகுதியில்லை என்று சொல்ல முதலில் இவளுக்கு என்ன தகுதி இருக்கு ?

வரட்டும் இவளை ஒரு வழி செய்கிறேன் என்று அடுத்த நாள் இரவு ஐபடில் வேலை பார்த்துக் கொண்டே தேஜூவுக்காகக் காத்திருந்தவன், நெடு நேரமாகியும் அவள் வராததால் வேலை முடிந்ததும் உறங்கிவிட்டான்.

அன்றிலிருந்து தேஜூ அவனின் கண்களில் அதிகம் படாமல் சரளா அம்மா கவனித்துக் கொண்டார். ஆனால் செழியனின் கவனத்தில் அதெல்லாம் பதியவில்லை. அவன் மனதில் இருந்ததெல்லாம், தன் நண்பனை இந்த நிலைக்கு ஆளாக்கியவளை எப்படியாவது துடிக்க வைக்கவேண்டும்! கதறடிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தான்.

மதிய வேளைகளில் அவள் சாப்பாடு பரிமாறினாலே வேண்டுமென்றே குற்றம் சொல்லி சாப்பாட்டைப் பாதியிலே உதறிவிட்டு எழுந்துவிடுவான். பல சமயங்களில். அந்த நேரங்களில் சரளா அம்மா தேஜூவுக்குப் பரிந்து வந்தால்,

"உங்கள் மருமகளுக்கு வக்காலத்து வாங்கினது



போதும்மா. சாப்பாடு கூட ஒழுங்காப் பரிமாறத் தெரியலை! எல்லாம் வேலை பார்க்கிறோம் என்கிற திமிர்" என்று பொரும, சரளா அவனை முறைப்பார்.

"வெளிநாட்டுக்குப் போய்ப் படித்து பல தொழில்களை நிர்வகிச்சு என்னப்பா பிரயோஜனம்? நீயும் ஒரு சராசரிக் கணவனா கட்டின பெண்டாட்டியைக் குத்தம் சொல்றே! உன் வெளிநாட்டுப் படிப்பு, இதைத் தான் உனக்குச் சொல்லிக் கொடுத்துச்சா செழியா?" என்று நிதானமாக வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி கேட்டு, அவனின் வாயை அடைப்பார்.

இரண்டு நாள் அமைதியாக இருந்தால், மூன்றாம் நாள் மீண்டும் அவளைக் குற்றம் சொல்ல, புதிதாகக் காரணத்தைக் கண்டு பிடிப்பான்... முக்கால்வாசி மாலை நேரங்களில் காபி குடிக்க மாட்டான். சரி இவர் தான் காபி குடிக்க மாட்டாரே என்று கேட்காமல் இருந்துவிட்டால், அதற்கும் வேண்டுமென்றே திட்டுவான்.

ஒரு நாள் வலைத் தளத்தில் படித்த சிற்றுண்டியைச் செய்து செழியனுக்குப் பரிமாற, ருசியாக இருக்கிறது என்று சாப்பிட ஆரம்பித்தவனுக்கு தேஜூ தயாரித்தது என்று தெரியவந்ததும், சட்டென்று வாயில் இருந்ததைத் துப்பி, கையை உதறி,

"ச்சே... வர வர இந்த வீட்டில் நிம்மதியா சாப்பிடக் கூட முடியலை! என்று வெறுப்புடன் அனலைக் கக்கிவிட்டு பாதிச் சாப்பாட்டில் எழுந்து செல்ல தேஜூவின் உள்ளம் சோர்ந்து போனது.

அந்த நேரங்களில் தேஜூவுக்கு, ச்சே, இது என்ன வாழ்க்கை என்று அலுப்பு தான் மிஞ்சும். அப்படிப் பட்ட

சமயங்களில் சரளா அம்மாவும் ஆதவ்வும் அவளைத் தேற்றுவார்கள்.

அவள் கண்ணீர் வடிப்பதைப் பொறுக்க முடியாமல், "நானே அண்ணனிடம் நடந்த விஷயங்களைக் கூறிப் புரியவைக்கிறேன் அம்மா..." என்று புறப்படும் மகனிடம்,

"நம்பிக்கையையும்,அன்பையும் எப்பொழுதுமே சிபாரிசினால் பெற முடியாது ஆதவ்! கொஞ்ச நாள் அமைதியாக இரு. எல்லாம் சீக்கிரமே சரியாகிவிடும்" என்று சமாதானப்படுத்துவார்.

சில சமயங்களில் பகலில் அவளை வார்த்தைகளால் வதைப்பது போதாது என்று இரவில் அவளை நோகடிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு காத்திருப்பான்.

பகலில் கண்ணில் படும் மனைவி இரவானதும் காண முடியாமல் போக, ஆரம்பத்தில் பெரிதாக எடுத்துக் கொள்ளதவனுக்கு மாதக்கணக்கில் இதுவே தொடர, எதையோ இழந்த மாதிரி உணர ஆரம்பித்தான்.

அவள் மீது கண்மூடி த்தனமாக வெறுப்பை வளர்த்து வைத்திருந்தவனுக்கு, நாளாக நாளாக அது பனிக்கட்டி போல கரைந்து புதிதாக நேசம் துளிர் விட ஆரம்பித்தது.

ஒரு வேளை தான் தூங்கிய பிறகு வந்துவிட்டு, எழுந்திருப்பதற்கு முன்னே போய்விடுகிறாளோ என்கிற சந்தேகம் எழ, எப்படியும் அவள் முகத்தைப் பார்த்து விட்டே உறங்குவது என்கிற முடிவில் அன்று அவளுக்காகக் காத்திருந்தவன், தன்னையும் அறியாது உறங்கிவிட்டான்.

அவளின் அழகிய முகத்தைப் பார்க்க வேண்டும்



என்ற ஆவலில், வழக்கத்திற்கு மாறாக சீக்கிரமே குளித்து முடித்துக் கீழே வந்தவனுக்கு சரளா டிபன் பரிமாற, செழியனின் முகம் கேள்விக் குறியாகியது.

அவனின் முக பாவத்தை கவனிக்காதது போல சரளா அம்மா சகஜமாகப் பேசிக்கொண்டே சாப்பாடு பரிமாறிக்கொண்டே அவனோடு அமர்ந்து சாப்பிட, செழியனுக்கு தேஜூவைக் காணாமல் அவஸ்தையாக இருந்தது.

அவரிடம் எப்படிக் கேட்பது என்று தவித்துவிட்டு மென்று முழுங்கிக் கொண்டே சாப்பிட்டு, ஒரு சோர்வுடன் எழுந்து செல்ல, பெரியவரின் முகம் வெற்றிக் களிப்பில் பூரித்தது. ஆனால் அதை வெளிகாட்டிக் கொள்ளாமல் ஒரு வேலையைக் கொடுத்து, அவர் அறையிலே முடக்கி வைத்திருந்த மருமகளிடம் சென்றார்.

பகல் நேரங்களில் கூட தேஜூவைக் காண்பது அரிதானது செழியனுக்கு. தன் தயக்கத்தையும் மீறி வாய்விட்டே தேஜூவைப் பற்றி கேட்டால், சரளா அம்மாவிடம் இருந்து சரியான பதில் வராது. அதற்கு மேலும் தோண்டித் துருவிக் கேட்க தன்மானம் இடம் கொடுக்காமல் அமைதியாகப் போய்விடுவான்.

இப்பொழுதெல்லாம் தேஜூ சொன்ன தகுதியில்லாதவர்களுக்காக என்ற வார்த்தையே அவனைச் சுற்றிச் சுற்றி வர, அவள் ஏன் அப்படிச் சொன்னாள் என்று சிந்திக்க ஆரம்பித்திருந்தான்.

ஒரு நாள் மாலை ஆபிசிலிருந்து வந்தவன், ஒரு பெரிய இன்விடேஷனை நீட்டி, "அம்மா இது நம்ம

ஹோட்டலில் திறப்பு விழா கார்ட்; பங்ஷன் அடுத்த வாரம்... என்று துள்ளலோடு சொல்லிக் கொண்டு வந்தவன், "ஆதவ் வேலை விஷயமா பெங்களூர் சென்றானே! எப்போ திரும்பி வரேன்னு சொன்னானா ? என்று கேட்டான்.

"விழாவிற்குள்ளே வந்திடுவான்... சரி,சாப்பிட வாப்பா" என்றபடி வேலைக்காரி கொண்டு வந்து வைத்த உணவுகளை கடமையே கண்ணாகப் பரிமாற,

"அம்மா... தேஜூ!" எனவும், "யாரு... என்றபடி நிமிர்ந்த தாயின் முகத்தைப் பார்க்கச் சக்தியற்று, "இல்லை,தேஜஸ்வி எங்கே என்று கேட்டேன்... "என்றான் தயங்கித் தயங்கி.

முதன் முதலாக மகன் தன் மனைவியின் பெயரைச் சொல்லிக் கேட்பதைக் கேட்டதும், சரளாவின் உள்ளம் குளிர்ந்து, சந்தோஷத்தில் மனம் நிறைந்தது.

அதே சமயம் மகனின் முகத்தில் வழிந்த ஆர்வத்தைக் கண்டும வந்த சிரிப்பை மென்று கொண்டு, "ஓ! தேஜூவா... அவள் இன்னும் ஆபிசிலிருந்து வரலையே! என்று அசட்டையாக பதில் கூறிவிட்டு உள்ளே செல்ல,செழியன் மணிக்கட்டைத் திருப்பி கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி ஏழை நெருங்கிக் கொண்டிருக்க, தேஜூ இன்னும் வீடு வந்து சேராததால் செழியனின் இதயம் அவளுக்காக முதல் முறையாகத் துடிக்க, தாயிடம் சொல்லாமல் கொள்ளாமல் காரை எடுத்துக் கொண்டு பறந்தான்.



# 17

அவளைத் தேடி ஆபிஸ் சென்றவனைப் பூட்டிய கேட் தான் வரவேற்றது. அங்கேயிருந்த சென்ட்ரியிடம் விசாரிக்க, "மேடம் கிளம்பி ஒரு மணி நேரத்திற்கு மேலே ஆகுது சாப்! என்றான் மரியாதையாக.

தேஜூவின் வீட்டிற்குப் போன் செய்து அங்கே இருக்கிறாளா என்று நேரடியாகக் கேட்டுக் கலவரப்படுத்தாமல, நாசூக்காக விசரித்தவனுக்கு அங்கேயும் அவள் வரவில்லை என்றதும் மேலும் பதட்டம் கூடியது.

அவள் எங்கெங்கு போகிறாள் என்று தெரியாததால், ஓர் இலக்கு இல்லாமல் நெஞ்சம் துடிக்க... தேடி அலைந்துவிட்டுச் சோர்வாக வீடு திரும்பியவனின் கண்ணில், போர்டிகோவில் சாதுவாக நின்று கொண்டிருந்த தேஜூவின் கார் பட்டதும்... மனதில் இனம் தெரியாத நிம்மதி பரவியது.

ஹாலுக்குள் பிரவேசித்த மகனைக் கண்டதும், தொலைக்காட்சியில் மூழ்கியிருந்த சரளா, "எங்கே செழியா போனே? டிபன் எடுத்து வருவதற்குள் காணாமப் போயிட்டே! என்றவர் அவனின் பதிலை எதிர்பாராமல், சரி..சரி சாப்பிட வாப்பா !" என்று அழைத்தவாறு டைனிங் டேபிளை நோக்கிச் சென்றவரைத் தயக்கமாகப் பார்த்தான்.

தேஜூ வந்துவிட்டாளா என்று கேட்கலாமா? அவளது வண்டி இருக்கிறது என்றாலும் அவள் கண்ணிலேயே படவில்லையே! என்று யோசித்தபடி

நின்று விட, "என்னப்பா அங்கேயே நின்னுட்டே? என்றவர்,

"ஆஹா! சொல்ல மறந்துட்டேனே தேஜூ எங்கே என்று கேட்டே இல்லே! அவள் இப்போ தான் வந்தாள் ; அவள் ரூமில் இருக்கிறாள் !" என்று அவன் கேட்காமலே உபரித் தகவலையும் கொடுக்க, செழியனின் பார்வை அவனையுமறியாமல் மாடியை நோக்கி உயர்ந்தது.

தேஜூ எங்கே போனாள்ம ஏன் இவ்வளவு நேரம் ஆச்சு என்று கேட்கலாமா? என்று ஒரு கணம் யோசித்தவன் அடுத்த கணமே, "இவ்வளவு நாள் இல்லாத அக்கறை இப்போ எதுக்கு என்று கேட்டு விட்டால் என்ன செய்வது?" என்ற எண்ணம் ஓட, வேண்டாம் என்று முடிவு செய்து ரெப்ரெஷ் செய்து கொண்டு வருகிறேன் என்று முணுமுணுத்துவிட்டு மாடியேறிச் சென்றான்.

அவளைத் தேடிச் சென்றவன், அவள் அறையில் இல்லாமல் கதவு திறந்து கிடக்க, கீழே எட்டிப் பார்த்தான். அங்கேயும் அவள் இல்லாமல் போக, மொட்டை மாடிக்குச் சென்று அறை இருளில் தேட தூரத்தில் தெரிந்த கோபுரத்தை வெறித்தபடி அவள் நின்றிருந்த கோலம் அவனை உலுக்கியது. முகத்தில் படிந்திருந்த கவலையின் நிழல்.... இறுக்கமான முகம்... எதையோ பறிகொடுத்த தோற்றம்... அதில் ஒரு குழப்பம்.

அவளின் மோன நிலையைக் கலைக்க விரும்பாமல் சத்தம் போடாமல் தன் அறைக்கு வந்து கட்டிலில் அமர்ந்தவனுக்கு, தன் மனைவியின் கவலை படிந்த முகமே நெஞ்சில் நிழலாடியது. மனதில் முள் தைத்த



மாதிரி ஒரு வலி. எல்லாவற்றிக்கும் நான் தானே காரணம் என்று தன் மேலேயே கோபம் எழுந்தது.

ஆனால் அடுத்த வினாடியே, அவள் செய்த தவறுக்குத் தானே நான் தண்டித்தேன்! இது எப்படித் தவறாகும்? என்று நினைவு ஓட, சூஅவளைத் தண்டிக்க உனக்கு என்ன உரிமை இருக்கு.... நீ என்ன கடவுளா..சூ என்று மனசாட்சி கேள்வி கேட்க, சட்டென்று நிமிர்ந்தான்.

உண்மை தான்! அவளைப் பழி வாங்க எனக்கென்ன உரிமை இருக்கு? அவளால் என் நண்பன் பாதிக்கப் பட்டால் அதற்கு அவனோ, இல்லை அவனைச் சார்ந்தவர்களோ அல்லவா அதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று தன்னையே கேட்டுக்கொண்டவனுக்கு இன்னொன்றும் தோன்றியது.

நான் தேஜூவின் நியாயத்தையும் கேட்டிருக்க வேண்டுமோ? அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று கேட்காமலே அவளை இதுவரை தண்டித்து இருக்கி றேனே! ஒரு வேளை அவள் பக்கம் நியாயமிருந்தால், இதுவரை நான் அவளுக்கு செய்தது துரோகமாக அல்லவா ஆகிவிடும் என்று நினைக்கும் போதே மனது நிலை கொள்ளாமல் தவித்தது.

என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ள மனது துடித்தது! ஆனால் இத்தனை நாள் அலட்சியம் செய்துவிட்டு திடீரென்று தேஜூவிடம் சென்று என்ன நடந்தது என்று கேட்க, தயக்கம் அவனைக் கட்டிப் போட்டது.

அவளிடம் பேசவும் முடியாமல் பேச வழி வகை தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்ததால், எந்த வேலையிலும் மனம் ஒன்ற மறுத்தது. என்ன தான் ஆதவ்

கூடவே இருந்து பாதி வேலைகளைச் செய்தாலும், மன அமைதியின்மை காரணமாகச் சில சமயங்களில் ஒரு வேலையை இரு முறை செய்கிற மாதிரி ஆகிவிடும்!

அந்தச் சமயங்களில் இரவு நெடு நேரம் விழித்து வேலைகளை முடித்துவிட்டுத் தான் உறங்கச் செல்வான். முக்கால்வாசி நாட்களில் வீட்டிற்கு வரத் தாமதம் ஆவதும் உண்டு.

கணவனுடன் சுமூகமான உறவு இல்லையென்றாலும், காதல் கொண்டு மணந்த கணவனின் முகத்தை தூரத்தில் இருந்தாவது பார்த்து திருப்திப்பட்டுக் கொண்டிருந்த தேஜூவுக்கு, கொஞ்ச நாட்களாக அவனைப் பார்ப்பதே அரிதாக இருப்பது மனதைக் குடைந்தது.

அப்படி ஒரு நாள் இரவு செழியனின் முக தரிசனத்திற்காகக் காத்திருந்தவளுக்கு (அவனுக்குத் தெரியாமல் தான்!) அவன் வரும் வழி நோக்கிக் காத்திருந்து, கண்கள் பூத்துப் போனது தான் மிச்சம். அவன் அன்றிரவு முழுவதும் வரவேயில்லை.

அவனைப் பார்க்காததால் மனசோர்வுடன் காலையில் குளித்துவிட்டு கீழே இறங்க எத்தனித்த பொழுது, ஹாலில் சரளா அம்மாவுடன் பேசிகொண்டிருந்த செழியனின் குரலைக் கேட்டதும் மனதில் ஓர் இனிய பரபரப்பு தொற்றிக் கொள்ள, சத்தம் போடாமல் கீழே இறங்கிவந்து அவனின் முகத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு தாயாக சரளா அம்மா மகனிடம் தாமதமாக வருவதைப் பற்றி வருத்தப்பட்டு பேசிக் கொண்டிருக்க, அவரை சமாதானப்படுத்திக் கொண்டிருந்த செழியனின்



குரலில் மெலிதாக இழையோடிய சோகம் தேஜூவைத் தாக்க, தன் ஈகோ, கோபதாபம் எல்லாவற்றையும் புறந்தள்ளி அன்று மாலையே அவன் முன் கொண்டு நிறுத்தியது.

சோர்வாக இருந்தாலும் வேலையைத் தள்ளிப் போட முடியாது என்பதால் குளித்துவிட்டு மீண்டும் ஆபிஸ் செல்வதற்காக உடையணிந்து கொண்டிருந்த செழியனிடம், உள்ளே வரலாமா என்று அனுமதி வேண்டி நின்ற மனைவியைக் கண்டதும் ஒரு நிமிடம் ஒன்றுமே புரியவில்லை அவனுக்கு!

தான் காண்பது கனவோ என்று கூடத் தோன்றி விட்டது. பின்னே மனைவியைப் பார்த்தே பல வாரங்கள் ஆகிவிட்ட நிலையில், அவளே திடீரென்று தன் ரூமிற்கு வருவாள் என்று எதிர்பார்க்காததால், வா என்று கூட அழைக்காமல் ம ஆச்சரியத்தோடு அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

குரலைக் கனைத்து மீண்டும் அனுமதி கேட்க, ஒரு சிறு தலையசைவில் உள்ளே வரச் சொன்னவனை விநோதமாகப் பார்த்தாள். அவன் எதிரில் சென்றால் காச் மூச்சென்று கத்துவான்.... இதயத்தைக் கிழிக்கிற மாதிரி பேசுவான்... என்று எதிர்பார்த்து எதற்கும் தயாராக வந்தவளுக்கு, அவள் நினைப்பிற்கு எதிர்மாறாக நடப்பதைக் கண்டு தலையே சுற்றியது. ஒரு வேளை புலி பதுங்குகிறதோ என்ற சந்தேகம் கூட எழுந்தது.

அதற்குள் தன்னைச் சுதாரித்து கொண்ட செழியன் கேள்வியாக புருவத்தை உயர்த்த, அதுவரை எப்படி ஆரம்பிப்பது என்று தயங்கிக் கொண்டிருந்தவள் தொண்டையை லேசாகக் கனைத்து, "உங்களுக்கு

ஆட்சேபணை இல்லேன்னா... என்று இழுக்கவும், "ஹ்ம்ம், இல்லேன்னா..." என்ற செழியனின் கேள்விக்கு அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, கண்களில் லேசான கலவரம் தோன்ற,

"வந்து, உங்களுக்கு விழா வேலைகளில் உதவி செய்யலாமா என்று கேட்க வந்தேன்!" என்று ஒருவழியாகத் திக்கித் திணறி தான் சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்க, செழியன் அவளை விழிகள் தெரித்துவிட நோக்கினான்.

செழியனுக்குள்ளேயும் இப்படி ஒரு எண்ணம் இருந்தது. ஆனால் யாரிடமும் இதுவரை உதவி கோரியதில்லை என்பதோடு, வேண்டாம் என்று ஒதுக்கிய மனைவியிடம் எப்படிக் கேட்பது என்ற ஈகோ அவனை யோசனையில் ஆழ்த்திவிட, அதை அப்படியே தன்னுள் புதைத்துக் கொண்டான்.

ஆனால் தேஜூவே முன்வந்து, அதுவும் ஒரு பயத்தோடு கேட்டதும், தன் மீதே அளவற்ற வெறுப்பு வந்தது. ஒரு நிமிடம் எப்படி ரியாக்ட் செய்வது என்று தெரியாமல் சற்றுத் திணறிவிட்டு கூ சம்மதம்கூ என கூதேங்க்ஸ்கூ என்று சிறு குரலில் கூறிவிட்டு வெளியே சென்றவள் நின்று,

"அதிக உரிமை எடுத்துக் கொள்கிறேன் என்று நினைக்காதீர்கள் நேற்று இரவெல்லாம் நீங்க வீட்டிற்கு வராமல் வேலை பார்த்துக் களைப்பாக இருக்கிறீர்கள். இன்று ஒரு நாள் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள். நான் வேலையைப் பார்த்துக் கொள்கிறேன்!" என செழியனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.



பேசுவது தேஜூ தானா? இவள் என்னை நினைத்துக் கூடக் கவலைப்படுவாளா! என்று அதிசயித்துப் பேச்சே வராமல் ஊமையானவனை, "முட்டாள், நீ தானே அவளை ஒதுக்கி வைத்தாய் உன் நண்பனுக்காக!" என அவன் மனசாட்சியே இடித்துரைத்தது.

சிலைக்கு உயிர் வந்தது போல் தலையைக் குலுக்கி முகமலர்ச்சியுடன் நன்றி சொல்ல வாயைத் திறக்க, அதற்குள் தேஜூவே தொடர்ந்து, "உங்களுக்கு உதவி செய்யலாம் என்று தான் கேட்டேனே தவிர, இதன் மூலம் உங்களைக் கவரவோ அல்லது மனைவி என்ற உரிமை எடுத்து கொள்வதற்காகவோ அல்ல.

என்னை உங்கள் கம்பெனிகளில் வேலை செய்யும் ஒரு ஸ்டாப்பாக நினைத்துக் கொண்டால் போதும்!" என்றுவிட்டு அவனைப் பாராமலே கூறிவிட்டு, விடுவிடுவென்று சென்றவள் மீண்டும் திரும்பி,

"உங்களுக்கு எந்த வகையிலும் தொந்தரவாக இருக்க மாட்டேன்! இது உறுதி!" என்று அறையை விட்டுச் செல்ல, செழியனுக்கு முகத்தில் அறைந்தது போல இருந்தது! சற்று முன் ஏற்பட்ட சந்தோஷம், ஊசி குத்திய பலூன் போல சந்தோஷமெல்லாம் வடிந்துவிட அப்படியே உறைந்து நின்றான்.

அன்றிலிருந்து தன் ஆபிசுக்கு லீவ் போட்டுவிட்டு கணவனுக்கு உதவியாக எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள். டெகரேஷன் வேலைகளில் குறையிருந்தால் சற்றும் தயங்காமல், அதே சமயம் மிகவும் இதமாக சரணிடம் எடுத்துக் கூறுவாள்.

ஒவ்வொரு மாடிக்கும் ஒவ்வொரு கான்செப்ட்

அலங்காரம். அதே மாதிரி திரைச் சீலைகள், பெட்ஸ்ப்ரெட் என்று ஒவ்வொரு மாடிக்கும் செழியனிடம் கலந்து கொண்டு வித்தியாசப்படுத்தினாள்.

மாடியிலே ரூப் கார்டன் அமைத்து அதன் நடுவிலே நீச்சல் குளத்தை அமைக்க ஏற்பாடு செய்தாள் . கீழே அமைக்கப்பட்டிருந்த நீச்சல் குளத்தை அரேபியன் ஸ்டைலில் அமைக்கச் செய்தாள் ....

தூரத்தில் இருந்து பார்க்கும் மொத்த இடமும் கண்ணாடித் தரை போல பளபளவென்று ஈச்சம் மரங்களுடன் இருப்பது, பசுமையுடன் கண்ணைப் பறித்தது. அவள் சரணுடன் சேர்ந்து திட்டமிட்டு , அதே சமயம் செழியனிடமும், ஆதவ்விடமும் அபிப்பிராயத்தைக் கேட்டு செழியனின் ஆசை மற்றும் கனவுக்கு உயிர் கொடுக்கும் வகையில், அந்த ஹோட்டலை உருவாக்க உதவி செய்தாள்.

கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல், அதே சமயம் இயல்பாக அலட்டல் இல்லாமல் அவள் வேலை செய்வதையும், மற்றவர்களிடம் வேலை வாங்குவதையும் அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த செழியனுக்கு அவள் மேலிருந்த மதிப்பும், காதலும் கூடியது.

கல்யாணத்திற்கு முன் அவள் மேலிருந்த வெறுப்புக் காரணமாக அவளின் வேலைத் திறமையை மெச்ச மனதில்லாமல் போனது. ஆனால் இன்று மனதிருந்தும் வார்த்தையில்லாமல் போனது தான் சோகம்.

இருவரும் காலையில் ஒன்றாக ஆபிஸ் கிளம்பினாலும், அவளை ஹோட்டலில் விட்டுவிட்டு சிறிது நேரம் அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளை,



தேஜூ மற்றும் சரணுடன் கலந்து பேசிவிட்டு மற்ற கம்பெனிகளைக் கவனிக்கச் சென்றுவிடுவான்.

வேலை அதிகமிருந்தால் ரெஸ்டாரெண்டில் இருந்து உணவுகளை வரவழைத்து, தேஜூவுடன் பேசிக் கொண்டே சாப்பிடுவான். தேஜூவும் அவனின் பேச்சில் கலந்து கொண்டாலும் அவளின் பேச்சு வெறும் வேலை சம்மந்தப்பட்டதாகவே இருக்கும். அவள் ஆரம்பத்தில் அவனிடம் கூறிய மாதிரி, செழியனை இம்ப்ரெஸ் செய்ய சிறிதும் கூட முயலவில்லை.

செழியனுக்கு அவளுடன் தனிமையில் நிறையப் பேச வேண்டும் என்ற ஆவல் மீறினாலும், ஏனோ அவள் கண்ணைப் பார்த்து, அவனால் இயல்பாகப் பேச முடியாமல் தவித்துப் போவான். நெஞ்சத்திலே காதல் கவிதை எழுதத் தெரிந்தவனுக்கு, அதை முடிக்கத் தெரியாமல் போனது தான் பாவம்!

அவனின் வேலைப் பளு குறைந்தது. ஆனால் தேஜூவின் மேல் கொண்ட காதலால் இதயத்தில் பளு அதிகமாக, அவனின் ஒவ்வொரு செல்லும் அவளின் அருகாமை மற்றும் அன்பான பார்வைக்கு ஏங்கியது. ஆயிரம் கனவுகள் கண்டவனுக்கு அதில் ஒன்றைக் கூட நிஜமாக்கத் தெரியவில்லை. மொத்தத்தில் அவனுக்கு தேஜூவின் மேல் முளைத்த காதல், ஊமை கண்ட கனவு போல ஆனது.

தன் கணவனின் மனமாற்றத்தைப் பற்றி அறியாத தேஜூ, வேலை முடிந்து வீடு திரும்பியதும் தன் அறைக்குச் சென்று தஞ்சமடைந்து விடுவாள்.

பேச்சு எல்லாம் வேலையில் மட்டுமே! வீட்டிற்கு வந்தால் அவனுக்கு எந்த வகையிலும் சம்மந்தமில்லாத

மாதிரி நடந்துகொள்வாள். சரளா அம்மாவிடமும், ஆதவிடமும் சிரித்துப் பேசுவாள். அதைக் காணும் பொழுது செழியனுக்கு, சுனாமியாய் உள்ளுக்குள் ஏக்கம் அலையடிக்கும். தன்னிடம் எப்பொழுதும் மலர்ந்த ரோஜா மாதிரி சிரித்துப் பேசப் போகிறாள் என்று பெருமூச்சு எழும்.

சரளா அம்மாவிடம் தினமும் நடக்கிற நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ள, அதில் கணவன் மனைவிக்கான எந்த ஒரு முக்கியத்துவமும் இல்லாததைக் கண்டு அவரின் மனம் துணுக்குற்றது.

தேஜூவை மகனின் கண்ணில் படாமல் ஒளித்து வைத்து கண்ணாமூச்சி ஆடியதே அவனின் மனம், தேஜூவை நாட வேண்டும் என்று தான். அவர் நினைத்த மாதிரி செழியனின் மனது தேஜூவின் பக்கம் கனிந்த நேரத்தில், இருவரும் ஒன்றாக வேலை பார்க்கும் சந்தர்ப்பம் கிட்ட மருமகளுக்கு மாமியார் எந்தத் தடையும் கூறவில்லை. இந்த நேரத்தில் செழியனின் பக்கத்தில் தேஜு இருந்தால், இருவரும் ராசியாக வாய்ப்புண்டு என்று தான் கணக்குப் போட்டார்.

ஆனால் தேஜூவும் சரி, செழியனும் சரி இருவருமே தங்களுக்குள்ள பிரச்சனை பற்றியோ, கசப்பைப் பற்றியோ, பேசித் தீர்த்துக்கொள்ள கொஞ்சம் கூட முயற்சிக்கவில்லை என்று மருமகளின் பேச்சில் இருந்து புரிந்து கொண்டவர், அடுத்து என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார்.

மகனின் மனமாற்றத்தைப் புரிந்துகொண்டாலும் அவன் தன் உணர்வுகளை வெளியிடாமல் அழுத்தக் காரனாக இருப்பது, அவருள் எரிச்சலை ஏற்படுத்தியது. செழியனின் மனதில் துளிர் விட்டிருக்கிற ஏக்கத்தைக்



கிளறிவிட நல்ல சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க, அந்த நேரமும் விரைவிலே கிட்டியது.

விழா அன்று அவனின் கோதுமை நிறத்திற்கு சாக்லேட் கலர் சூட்டில் கம்பீரமும் ஆண்மையுமாக ரெடியாகி வந்தவன், தேஜூவை அழைத்துச் செல்வதற்காகக் காத்திருக்க, அதைப் புரிந்து கொண்ட சரளா அம்மாவிற்குள் உடனேயே ஒரு திட்டம் தோன்றியது.

அதைச் செயல்படுத்தும் விதமாக, "செழியா, தேஜூ வர நேரமாகும், நீ முன்னால் போ! நானும் தேஜூவும் பின்னால் வருகிறோம்" என்று அழுத்திக் கூறிவிட்டு அவனின் பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே சென்றுவிட, செழியனுள் ஏமாற்றம் பரவியது.

அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கிளம்பியவனின் மனம் முழுவதும் தேஜூவை எதிர்நோக்கியே இருந்தது. இடையிடையே மந்திரி, மற்றும் முக்கியமானவர்களின் வருகையைப் புன்சிரிப்போடு கைகுலுக்கி வரவேற்றுக் கொண்டிருந்தவனின் கண்கள் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தன.

இதற்கிடையே ஆதவ் வந்து ஏதோ கேட்க, அவனுக்குப் பதில் கூறிவிட்டு நிமிர்ந்தவனின் கண்கள்...பேபி பிங்கில் விஸ்கோஸ் ப்ராசோ சாரியில் அளவான நகைகளுடன் அழகே உருவாகத் தாயுடன் ஒரு தேர் போல அசைந்து வந்து கொண்டிருந்தவளின் மேல் நிலை குத்தி நின்றது.

பார்வையாலே விழுங்கிக் கொண்டிருந்தவனை வெகு சாதாரணமாகப் பார்த்துவிட்டு, எதிர்ப்பட்டவர் களுக்கு கைகுவித்து வணக்கம் கூறியவள், சரளா

அம்மாவுடன் அமர்ந்துகொள்ள, செழியனின் நிலை தான் பரிதாபாக இருந்தது.

இருந்தாலும் விழா முடியும் வரை மனதை அலைபாயவிடாமல், வந்தவர்களை உபசரித்து நல்ல படியாக அனுப்பும் வரை தன் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.

இதை கவனித்துவிட்ட ஆதவ்ம தாயிடம் ரகசியமாகக் காதை கடிக்க, அவனிடம் தன் திட்டத்தைக் கூறி அவனையும் தன்னுடன் கூட்டு சேர்த்துக் கொண்டார்

அண்ணன் யாரிடம் பேசிக் கொண்டிருந்தாலும் அவர் பார்வை தேஜூவின் மேல் ஓர் ஆவலுடன் படிவதைக் கண்டு உள்ளுக்கு சிரிப்பு வந்தாலும், கொஞ்சம் பாவமாகத் தான் இருந்தது.

விழா முடிந்ததும் மருமகளோடு விழாவிற்கு வருகை தந்திருந்த அவளின் தாய் தந்தையுடன் அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல, தேஜூவுக்குக் குழப்பமாக இருந்தது. ஆனாலும் அவரின் செயலில் நியாயம் இருக்கும் என்பதால், ஏன் என்று கேட்காமல் தாயின் வீட்டிற்குச் சென்றாள்.

ஹோட்டலின் அழகு மற்றும் இன்டீரியர் டெகரேஷன் பற்றி சிலாகித்துப் பேசிக்கொண்டிருந்த பெற்றோரின் பேச்சை, சிறு முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்த தேஜூவின் மனம் செழியனிடம் தாவி ஓடியது. காலையில் அவன் பார்வையில் இருந்த மாற்றம், தேஜூவை சற்றே விநோதப்படுத்தியது!

அவனின் காந்தப் பார்வையில் அலை பாயத் தொடங்கிய மனதை க் கட்டுப்படுத்தி மாமியாரோடு அமர்ந்தவள், அதன் பிறகு எதற்கும் அவனை நேருக்கு



நேர் பார்ப்பதை... வேண்டுமென்றே தவிர்த்து அவன் பார்க்காத தருணங்களில் ரகசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாலும், மனதளவில் ஒரு வித இறுக்கம் அவளை ஆள, விழாவிற்கு வந்திருந்த பெற்றோரைக் கண்டதும் அவளின் இறுக்கம் சற்றே தளர்ந்தது.

நேரமாக ஆக செழியன் அவளிடம் பேசவே முயற்சிக்காததைக் கண்டதும் இத்தனை நாட்கள் உதவி செய்ததற்காக, தன் மீது வீசப்பட்ட நன்றிப் பார்வை அது என்று புரிய, வாழ்க்கை சற்று அலுப்புத் தட்டியது.

ஆனால் சரளா அம்மா தான் அவனைத் தன்னிடம் பேசவிடாமல் செய்கிறார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை. அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காமல் தாய் வீட்டிற்கு வந்துவிட்டாலும், செழியனின் நினைவே அவளைப் பெரிதாக வாட்டியது.

விழா முடிந்ததும் கவனிக்க வேண்டிய வேலைகள் முடிந்து, மீதியை ஆதவ்விடம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, தேஜூவைக் காணும் ஆவலோடு வேகமாக வீட்டுக்குச் சென்றவனுக்கு, வீட்டில் தேஜூ இல்லை என்றதுமே செழியனின் முகம் சுணங்கியது.

ஆனால் தாயிடம் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் தனக்குள்ளே மருகிக் கொண்டிருந்தவனுக்கு, வினாடிக்கு வினாடி அவளைப் பார்க்க வேண்டும் என்று உந்திய ஆவலை அடக்கிக்கொண்டு, தேஜூ எப்பொழுதுமே அமரும் லானில் அவள் அமர்ந்த சேரில் அமர்ந்தவனுக்குள் சிறு அமைதி பரவியது.

என்னவோ அவள் அருகிலே அமர்ந்த மாதிரி ஒரு விதப் பரவசம் தோன்ற, கால்களை நீட்டித் தலைக்குப் பின் கைகளை மடக்கிக் கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்து

சுவாசிக்க, அந்த லான் முழுவதும் மனைவியின் வாசனையே நிறைந்திருப்பது போலத் தோன்றியது.

இரவு சாப்பிட அழைக்க மகனைத் தேடி வந்த சரளா அம்மா, இரவு விளக்கைக் கூடப் போடாமல் நிலவொளியில் கண்மூடிய பரவசமான நிலையில் அதுவும் எப்பொழுதுமே தேஜூ அமரும் சேரில் ஏகாந்தமான புன்னகையோடு அமர்ந்திருந்த மகனைக் காணவும், இதழில் குட்டியான புன்னகை ஒன்று மலர அவனை உலுக்கினார்.

தேஜூவுடனான இனிய கற்பனையில் ஆழ்ந்திருந் தவனுக்கு அது கலைந்த எரிச்சலில் திடுக்கிட்டுக் கண்விழிக்க, தாயைக் கண்டதும் மீண்டும் முகம் இறுகிவிட, சாப்பாடு வேண்டாம் என்று மாடிக்குச் சென்றவனை மர்மப் புன்னகையோடு பின் தொடர்ந்தார்.

தேஜூவின் நினைவில் தேகம் தகிக்க, பனிவிழும் இரவில் பால்கனியில் சேரில் அமர்ந்து நிலவையே வெறித்துக் கொண்டிருந்தவன் எப்பொழுது உறங்கினா னோ பறவைகளின் கலகத்வனி கேட்டுத் தான் கண்விழித்தான்.

சரியாகத் தூங்காததால் உடலும் மனமும் சோர்ந்திருக்க, ஆபிஸ் போகலாமா வேண்டாமா என்று ஒரு நிமிடம் யோசித்தவன், வீட்டில் இருந்தால் மனைவியின் நினைவே தன்னைக் கொன்றுவிடும் என்று தீர்மானித்து ஆபிஸ் கிளம்பிச் சென்றான்.

ஆனால் ஆபிசிலும் அவனால் கவனம் செலுத்த முடியாமல் வினாடிக்கு வினாடி தேஜூவின் நினைவு, அவன் நெஞ்சில் விஸ்வரூபம் எடுத்து அடைத்துக் கொண்டு அவனை மூச்சுத் திணற வைத்தது.



அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் வீட்டிற்கு வந்தவன், வேலைக்காரி செண்பகத்திடம் தாய் கோபமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு விசாரிக்க, "ஹ்ம்ம், இவளுக்குத் தன் புருஷன், அதான் நம் வீட்டு டிரைவர் பழனியிடம் இருந்து விவாகரத்து வேண்டுமாம்... அதுக்குத் தான் என் உதவி கேட்டு நிற்கிறாள்..." என, அதிர்ச்சியுடன், "வாட் " என்றான்.

"ஆமாம் செழியா! அதான் அவங்க முறைப்படி அறுத்துக் கட்டணுமாம்..." என்று மீண்டும் கூற, "எதுக்கு... பழனி ரொம்ப நேர்மையானவனாச்சே... நேற்று வரை ஒத்துமையாகத் தானே இருந்தீங்க... இன்று என்ன இப்படி ஒரு முடிவு?" என்று சினத்துடன் கேட்க, வேலைக்காரியால் பதில் சொல்ல முடியாமல் தலைகுனிய, செழியன் தாயை நோக்கினான்.

"ஒன்றுமில்லே செழியா, நம்ம பழனியைப் பற்றி யாரோ அவதூறாகப் பேசினாங்களாம்... அதாவது அவனுக்கு இன்னொரு பெண்ணுடன் தொடர்பு இருக்கு என்று... அதைக் கேட்டதிலிருந்து எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த இப்படிப் பட்ட புருஷனே வேண்டாம் என்கிறாள்..." என்றவர் தொடர்ந்து,

"யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்... இத்தனை வருடம் வாழ்ந்த இவளுக்குத் தெரிய வேண்டாம்... எது உண்மை...? எது பொய் என்று? விவாகரத்து வேண்டுமாம் விவாகரத்து! அறிவு கெட்டவள்!" என்று படபடவென்று பொரிய, செழியன் தாயை யோசனையுடன் பார்த்தான்.

"அம்மா... நான்..." என்று இழுத்த செண்பகத்தை, "நீ ஒன்றும் பேசாதே.... எந்த ஒரு விஷயத்தையும் அலசிப்

பார்க்காமல், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்ய முற்படக் கூடாது...

சாதாரண ஒரு விஷயத்திற்கே இப்படி என்றால் நம்மை நேசிக்கிறவர்கள் பற்றியும், நாம் நேசிக்கிறவர் களைப் பற்றியும் யாரோ என்னமோ சொன்னார்கள் என்று கொஞ்சம் கூட ஆராய்ந்து பார்க்காமல், அவ்வளவு சாதரணமாக தூக்கியெறியறது, அவங்க மனதைக் கஷ்டபடுத்தறது என்று செய்வது பைத்தியகாரத்தனமாத் தெரியலையா உனக்கு?."என்றார் கோபத்துடன்.

"மன்னிச்சிக்கங்கம்மா! நீங்க சொல்றது புரியுது! நானும் கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன்... இனிமே இப்படியெல்லாம் பேசமாட்டேன்..." என்றவளிடம், "முதலில், நீ பேசின பேச்சுக்கு பழனியிடம் மன்னிப்புக் கேள்!" என்றார் அதிகாரமாக.

"அம்மா.... ஏன்... நான் என்ன..." என்று தயங்கி நின்றவளிடம், ஓரக்கண்ணால் மகனை நோக்கிவிட்டு, "ஏன் திட்டும் பொழுது இந்தத் தயக்கம், யோசனை எல்லாம் எங்கே போனது? மன்னிப்புக் கேள் என்றதும் எதுக்குத் தயக்கம்? உன் மனதுக்குப் பிடித்தவர்களிடம் தானே மன்னிப்புக் கேட்கிறே...

அதுவும் நீ செய்த தவறுக்கு... இதில் உனக்கெதற்கு ஈகோ?" என்று குத்திக்காட்டிவிட்டு, எதையும் பேசாமல் மௌனமாக அமர்ந்திருந்த மகனின் பக்கம் திரும்பி, "என்னப்பா நான் சொல்றது சரிதானே?" என்று அவனிடம் அபிப்பிராயம் கேட்டார்.

அதுவரை தாயின் பேச்சால் கல்லாய் சமைந்த வனுக்கு, அவரின் ஒவ்வொரு வார்த்தையும் சாட்டை யடியாக இருந்தது. அதனால் அவரின் கேள்விக்குப் பதில்



சொல்ல முடியாமல், விருட்டென்று எழுந்து மாடிக்குச் செல்ல, அவனின் இந்த செயலை எதிர்பார்த்தமாதிரி சரளாவின் முகத்தில் இளம் புன்னகை அரும்பியது.

மேலே சென்ற செழியன் அதே வேகத்தில் கீழே இறங்கிவர, வேறொரு உடையில் மிகவும் ட்ரிம்மாக இருப்பதைக் கண்டு ஒன்றும் புரியாத மாதிரி நோக்கி, "என்ன செழியா நான் கேட்டதற்கு பதில் சொல்லாமல் வெளியே கிளம்பிட்டே?" என்றார் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு.

"கண்டிப்பாச் சொல்றேன்.... ஒருத்தருக்கு அட்வைஸ் செய்வதற்கு முன்னால் அதற்குண்டான தகுதியை வளர்த்துக்கணும். இப்போ எனக்கொரு முக்கியமான வேலை இருக்கு, நான் வரேன்" என்று பூடகமாகச் சொல்லிவிட்டு வெளியே செல்ல, அவரின் உதடுகள் வெற்றிப் புன்னகையை ச் சிந்தின.

சின்ன எஜமான் பேசுவது புரியாமல் விழித்துக் கொண்டிருந்த செண்பகம், "அம்மா நீங்க எதுக்கு என்னை திடீரென்று அழைத்து இப்படியெல்லாம் பேசினீங்க? எனக்கும் என் வீட்டுக்காரருக்கும் எந்தச் சண்டையும் இல்லாதபொழுது நீங்களே என்னென்னமோ பேசி நீங்களே முடிச்சிட்டீங்க! சின்ன ஐயா வேற என்னென்னமோ சொல்லிட்டுப் போறாங்க!" என்று முடியைப் பிய்த்துக்கொள்ளாத குறையாக பரிதாபமாகக் கேட்க, சரளாவுக்கு செண்பகத்தின் குழப்பத்தைக் கண்டு சிரிப்பு வர வாய்விட்டுச் சிரித்தார்.

எதற்காகத் தன்னை இங்கு கொண்டு வந்து விட்டுச் சென்றார்கள் என்று தெரியாமலே செழியனின் நினைவிலே மூழ்கிக் கிடந்தவளுக்கு அவனைப் பாராமல்

இங்கு வந்து தனித்து இருப்பது சலிப்பாக இருந்தது. செழியனைப் பார்க்க வேண்டும் போல் துடித்த மனதை அடக்கிக் கொண்டு, பெற்றோரின் முன்னிலையில் புன்னகை தவழும் முகத்தோடு வளைய வந்தாள்.

அவனின் நினைவில் உடலே பாரமாக இருப்பது போலத் தோன்ற சீக்கிரமே சென்று படுத்தவளுக்குத் தூக்கம் கண்களைத் தழுவ மறுத்து சத்தியாகிரகம் செய்தது. தூங்க என்னென்னவோ செய்தும் நித்திரை வர மறுக்க, கண்களை இறுக்க மூடி அசையாது படுத்துத் தூங்க முயற்சித்தவளுக்கு, தன்னை யாரோ உற்றுப் பார்ப்பது போன்ற பிரமை தோன்றத் தூக்கி வாரிப்போட எழுந்தாள்.

# 18

**யா**ரோ தன்னை உற்றுப் பார்ப்பது போன்று தோன்ற, திடுக்கிட்டு எழுந்து பார்த்ததும், அங்கே யாரும் இல்லாததால் குழப்பத்தில் ஏசியிலும் வியர்த்துப் போனது.

அவளின் பார்வை பூட்டிய கதவில் சென்று மீள, கதவு பூட்டியிருக்கும் பொழுது யார் என் அனுமதியில்லாமல் உள்ளே வந்துவிட முடியும்? ஏதேனும் பிரமையாக இருக்கும் என்று தனக்குள் பேசிக்கொண்டே எழுந்து சென்று ஏசியைக் குறைத்து தண்ணீர் குடித்துவிட்டு மீண்டும் படுத்துக்கொண்டாள்.

ஒருவேளை, செழியனின் நினைவிலே படுத்ததால் அவரே இங்கு வந்து என்னைப் பார்க்கிற மாதிரி கனவு வந்துவிட்டது போலிருக்கு! ஹ்ம்ம், பேசாவிட்டாலும் செழியனின் முக தரிசனம் கிடைத்துக் கொண்டிருந்தது.



இன்று அதுவுமில்லாமல் போய்விட்டது-அங்கு செழியன் என்ன செய்து கொண்டிருப்பார்?" என்று பெருமூச்செழ,

இன்னும் எத்தனை நாளைக்கு இங்கிருப்பது? எதற்கு இங்கு கொண்டு வந்துவிட்டார்கள்? ஏன் எதுவும் சொல்லாமல் போய்விட்டார்கள்? தாலிகட்டிய கணவனின் பாராமுகமும், தூரத்திலிருந்து அவனை ரசிப்பதும் இன்னும் எத்தனை நாளைக்கு!" என்று யோசித்துக்கொண்டே• தூங்க பிரம்மபிரயத்தனம் செய்துகொண்டிருந்தாள்.

வரிசையாக எழுந்த கேள்விகளுக்கு விடை கிடைக்காமல் அதற்காக யோசிப்பதே அலுத்துப் போய்த் தூக்கம் கண்களைத் தழுவும் நேரம், அவளின் அறைக்கதவு படபடவென்று பொறுமையில்லாமல் தட்டப்பட, அவளை ஆசையாக அணைக்க வந்த நித்ராதேவி, சத்தம் கேட்டு விட்டு விலகியது.

கதவைத் திறந்தவளிடம், "மாப்பிள்ளை வந்திருக்கிறார்டி! ஒரு நாள் கூட உன்னைப் பிரிந்து அவரால் இருக்க முடியவில்லை ! வா" என்று விகசித்த முகத்துடன் அழைத்த தாயை, ஆச்சரியத்துடன் விழி அகல நோக்கியவளுக்கு அடுத்த வினாடி,

"ஐயோ ! இவர்களுக்கு நம் விஷயம் தெரியாதே... அது தெரியாமல் செழியன் ஏதாவது சொல்லிவிடப் போகிறார் என்று பதறியவள், தாயை முந்திக்கொண்டு செழியனிடம் செல்லவும் தந்தையுடன் சிரித்துப் பேசிகொண்டிருந்தவனின் பார்வை மனைவியைக் கண்டதும் மேலும் கனிந்தது.

"உங்களைப் பிரிஞ்சி ஒரு நாள் கூட என் பெண்ணால் இருக்க முடியவில்லை! நீங்க

வந்திருக்கீங்கன்னு ஓடி வந்திருக்கா பாருங்க..." என்று தாயைப் போலவே தந்தையும் குறும்பாகக் கூறிச் சிரிக்க, தர்ம சங்கடமாக இருந்தது.

"எனக்கும் உங்க மாப்பிள்ளைக்கும் நடுவில் ஒன்றுமே இல்லைப்பா' என்று சொல்ல மனது துடித்தாலும், செழியன் முன்னிலையில் வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் அவமானத்தில் முகம் சிவந்துவிட, வெட்கப்படுவது போல உதட்டைக் கடித்து தலையைக் குனிந்து கொண்டாள்.

செழியனுக்கு அப்போதைய நிலை மனதில் படாமல் இருவரையும் நிமிர்ந்து பார்க்க முடியாமல், முகம் சிவந்து தவித்த மனைவியை இதழோரம் ஜனித்த புன்னகையோடு குறும்புடன் ரசித்துக் கொண்டிருந்தான்.

மகளின் தவிப்பு தாய்க்குப் புரிந்ததோ என்னவோ, "தேசு மாப்பிள்ளைக்குச் சாப்பாடு எடுத்து வைம்மா!" என, தாயைப் பார்த்து விழித்துத் தலையாட்டிவிட்டு உள்ளே திரும்ப எத்தனிக்க, சோபாவிலிருந்து எழுந்து இரண்டே எட்டில் அவளின் கையைப் பிடித்து நிறுத்தி, ஐ ஹேட் மை டின்னர்..." என்றவன் அத்தோடு நில்லாமல், "நீ சாப்பிட்டியா...? என்றான் அக்கறையாக.

செழியனிடமிருந்து இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத தேசு இமைக்க மறந்தும விசித்திரமான உணர்வுடன் அவன் கண்களோடு உறவாட, அவனும் அவளையே தான் பார்த்துக் கொண்டிருந்தான். இருவரின் நிலையையும் உணர்ந்த பெரியவர்கள், குறும்பான புன்னகையுடன் இடத்தைக் காலி செய்தார்கள்.

அதற்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்டவள், பெரியவர்கள் இருவரும் பெருந்தன்மையுடன் விலகிச்



செல்வதை ஓரக்கண்ணால் கவனித்துவிட்டு, "ஹ்ம்ம்..." என்று முனகியவள் மெல்லிய குரலில் "தேங்க்ஸ்..." என்றாள்.

"என்னை இங்கேயே நிறுத்திப் பேசி அனுப்பிவிட எண்ணமா ?" என்று கண்ணோரம் குறும்பில் சுருங்கக் கேட்டதும் தான் உரைத்தது, தான் அவனை உள்ளேயே அழைக்கவில்லையென்று.

"ஆனால் ரூமிற்கு எப்படி அழைப்பது? அப்படியே வந்தாலும் ஒரே அறையில் இன்றைய இரவைக் கழிப்பது? வேறு அறையில் தங்க வைக்கலாமென்றால் பெரியவர்களிடம் என்ன சொல்லிச் சமாளிப்பது?' என்று தனக்குள்ளே குழம்பிக் கொண்டிருந்தவளுக்கு இன்னொன்றும் உதித்தது.

"என்னைக் கண்டாலே எரிந்து விழுகிற இவர், இந்த நேரத்தில் என்னை ஏன் தேடி வந்தார்? ஒரு வேளை அத்தை அனுப்பி வைத்திருக்கிறார்களா? இல்லை ஆபிஸ் விஷயமாக ஏதாவது கேட்க வந்திருக்கிறாரா? என்று யோசித்துக்கொண்டே அதைக் கேட்க நினைத்து நிமிர்ந்தவள் தாய், பாலோடு வருவதைக் கண்டு அமைதியானாள்.

"மாப்பிள்ளையை ரூமிற்கு அழைத்துப் போம்மா!" என்று கூறி பாலை அவள் கையில் திணிக்க, சங்கடத்துடன் தலையாட்டியவள் விழிகளைத் தாழ்த்தி, "வாங்க!" என்றாள் சிறு தயக்கத்துடன்.

இருவரும் ரூமிற்குச் செல்வதைத் திருப்தியுடன் பார்த்துவிட்டுப் புன்னகையுடன் திரும்பிச் செல்வதைக் கவனித்து, பாலை டேபிளில் வைத்துவிட்டுத் திரும்பியவள், "ஐ அம் சாரி! அப்பா அம்மாவுக்கு நம்

விஷயம் தெரியாது! அது தான் என் ரூமிற்கு அழைத்துப் போகச் சொல்லிவிட்டார்கள்!" என்று தணிந்த குரலில் சொன்னதோடு நில்லாமல் கட்டிலிலிருந்து ஒரு தலைகாணியும், போர்வையும் எடுத்து கீழே விரித்துப் படுக்க ஆயத்தம் செய்ய, அவளின் கையைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பினான்.

கணவனின் அன்புக்கும், காதலுக்கும் ஏங்கிக் கொண்டிருந்தவளுக்கு அவனின் தொடுகை பலமிழக்க வைக்க, கணவனின் பரந்த மார்பில் சாய வேண்டும், அவனின் கேசத்தை விரல்களால் அளைய வேண்டும், அவன் மடியில் விழி மூட வேண்டுமென்று அலைபாய்ந்த மனதைக் கட்டுப்படுத்த, படாத பாடுபட்டுக் கொண்டிருந்தாள்.

மனம் போராடினாலும், அதற்கு நேர்மாறாக அவனைக் குழப்பத்தோடு விழி விரித்து நோக்கியவளிடம், "நான் எதுக்கு வந்தேன்னு கேட்க மாட்டியா? என்றவன், அவள் அப்பொழுதும் அமைதியாக இருப்பதைக் கண்டு,

"பரவாயில்லை, நானே சொல்றேன்!ஆனால் தேங்க்ஸ் எதுக்குன்னு தெரிஞ்சிக்கலாமா ?" என்றான் கிசுகிசுப்பான குரலில் அவள் காதோரம் மெல்லக் குனிந்து.

கணவனின் நடவடிக்கையே இன்று அதிசயமாக இருந்ததினால் அவனின் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் திராணியற்று, பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தவள் தன்னைச் சமாளித்து, அவனிமிருந்து விலகி ஜன்னல் அருகே சென்றவள்ம வானத்தில் கண்சிமிட்டிக் கொண்டிருந்த நட்சத்திரங்களை இலக்கில்லாமல் வெறித்துவிட்டு,

"அப்பா அம்மாவிடம் நம் விஷயத்தைப் பற்றிச்



சொல்லாமல் இருந்ததற்கு!" என்றவள் ஒரு நெடிய பெருமூச்சுடன், "சொன்னால் அவர்கள் இடிந்து போய்விடுவார்கள்" என்று ஒரு சோர்வுடன் சொல்வதைத் தாங்க மாட்டாமல், அவளின் தோளைப் பற்றித் தன் பக்கம் திருப்பினான்.

"எனக்கும் மனசாட்சியிருக்கு தேஜு! என்னதான் மனைவி மேலே கோபமிருந்தாலும் அதை அவளின் பெற்றோர்களிடம் காட்டுவது அநாகரிகம் என்று தெரியும்! அதனால், இந்த விஷயத்தில் உனக்குப் பயமே வேண்டாம்!" என்றவன் தொடர்ந்து, "நான் எதுக்கு வந்தேன்னு நீ கேட்கவேயில்லையே?" என்றான் மீண்டும்.

இரண்டாம் முறையாக செழியன் இந்தக் கேள்வியைக் கேட்டும், அவளுள் எவ்வித இரசவாதமும் நிகழாமல் அவனைக் கேள்வியாக நோக்கி, "ஏதாவது ஆபிஸ் விஷயமாக வந்தீர்களா? என்றாள் இயந்திரத்தனமாக.

அவளின் கையை தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தவன், கண்களை இறுக மூடித்திறந்து, "உன்னிடம் மன்னிப்புக் கேட்க வந்தேன்!" என, விலுக்கென்று நிமிர்ந்தவள் நம்பாத பார்வையால் அவனை அளந்தாள்.

"ஏன்மா, நம்ப முடியவில்லையா? உண்மை தான் தேஜு! இத்தனை நாள் உன்னிடம் நான் எவ்வளவு முட்டாளாக நடந்து கொண்டிருக்கிறேன் என்று நினைத்துப் பார்த்தால், எனக்கே வெட்கமாக இருக்கிறது!" என்று சிறிது இடைவெளி விட்டவன், அவளின் கையைத் தன் கன்னத்தில் வைத்து அழுத்தி,

"உன்னைப் புரிந்துகொள்ள எனக்கு இத்தனை நாள் தேவைப்பட்டிருக்கு! ஐ அம் சோ சாரிடா! என்னை

மன்னிப்பாயா தேஜூ?" என்று உருகிப்போய்க் கேட்டதும் தேஜூவின் உள்ளே இனிமையான சாரல் தூவ, முகம் மெல்லக் கனிந்தது.

ஆனால் உடனேயே மீண்டும் கல்லாய் இறுகிவிட, அவனிடமிருந்து தன் கைகளை உருவிக்கொண்டு, "ஏன் இன்றுதான் உங்கள் நண்பரைப் பற்றி புரிந்து கொண்டீர்களா? அதற்குத் தான் இந்த மன்னிப்பா?'' என்றாள் நெஞ்சில் குமைந்த கோபத்தோடு!

"காதலிக்கிறேன் என்று ஆசை வார்த்தைகளைக் கூறிக் கல்யாணம் செய்து கொண்டு, ஆயிரம் கனவுகளோடு முதலிரவு அறைக்கும் வந்தவளை நெருப்பென்னும் வார்த்தைகளால் சுட்டெரித்தும அவளின் வார்த்தைகளுக்கும், உணர்வுகளுக்கும் சிறிதும் மதிப்புக் கொடுக்காமல், ஒரு குப்பை மாதிரி தூக்கியெறிந்துவிட்டு இன்று திடீரென்று மன்னிப்புக் கேட்டால் என்ன அர்த்தம் ?

நட்பை, கற்பைப் போலக் காப்பாற்றிய ஆருயிர் நண்பனின் சுயரூபம் தெரிந்திருக்கும்! அதனால் தன் மனைவி மேல் தவறில்லை என்று புரிந்து மன்னிப்புக் கேட்க ஓடோடி வந்துவிட்டாராக்கும்? என்ன ஒரு பெருந்தன்மை!' என்று எகத்தாளமாக நினைத்ததும் மட்டுமில்லாமல் வாய்விட்டே கொட்டியவளுக்கு மனது உலை போலக் கொதித்தது.

ஆனால் செழியன் சற்றும் கோபப்படாமல் அமைதியாக, இல்லை தேஜூ, நான் இப்பொழுது என் நண்பனைப் பற்றியோ, அவனின் பிரச்சனை பற்றியோ பேச வரவில்லை ! என்னை நேசித்த பெண்ணிடம்ம என் மனைவியிடம், நான் அவளுக்கிழைத்த தவறுக்கு



மன்னிப்புக் கேட்கத்தான் வந்தேன்!" என்றதும் தேஜூவின் விழிகள், அவன் முகத்தில் நிலைகுத்தி நின்றன.

"ஆமாம் கண்மணி, என் நண்பனுக்காக நான் என்ன வேண்டுமென்றாலும் கொடுக்கலாம்! என் வாழ்க்கையையோ, அவ்வளவு ஏன் என் உயிரையையோ கூடக் கொடுக்கலாம். ஆனால் அவனுக்காக, என்னை நம்பி வந்த பெண்ணைப் பழிவாங்க எனக்கென்ன அதிகாரமிருக்கு? ஹ்ம்ம், இது புரிய எனக்கு இத்தனை நாளாகியிருக்கு?" என்று தன்னையே நொந்து கொண்டவன்,

புலி தன் காயங்களைத் தானே நக்கிக்கொள்வது போல கண்ணில் வலியுடன், "கண்மூடித்தனமாக உன் மீது வெறுப்பை வளர்த்து வந்திருக்கிறேன்! வெறுப்புக்கும் விருப்புக்கும் ஒரு நூலிழை தான் வித்தியாசம் என்று அம்மா அடிக்கடி சொல்வார்கள். அதன் அர்த்தம் எனக்கு இப்பொழுது நன்றாகப் புரிகிறது!

நீ என்னை விட்டு விலகிச் செல்லச் செல்ல, என் அடி மனதில் உன் மீதிருந்த அன்பு தண்ணீரில்அழுத்திய பந்து போல வெளிப்பட்டு.. என் காதலை எனக்கே உணர்த்தியது ! உன்னை இழந்துவிடக் கூடாது என்று தான் இன்று நான் உன்னைத் தேடி வந்தது!" என்று அடிபட்ட உணர்வுடன் கூற, தேஜூவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

பேசுவது செழியன் தானா? இல்லை இதுவும் கனவா? என் வாழ்க்கைக்குத் தடையாக இருந்த பிரச்சனையையே, அதைப் பற்றிக் கவலையில்லை என்று என்னிடம் மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறாரே! அப்படியென்றால் உண்மையென்னவென்று தெரியாவிட்டாலும் அதைப் பெரிதுபடுத்த விரும்பாமல், என்னை

நேசிக்க ஆரம்பித்துவிட்டாரா? என்று சலசலவென்று தெளிந்த நீரோடை போல எண்ணங்கள் ஓடின.

ஆனாலும் நீரோடையின் கீழ் படிந்திருக்கும் மணல் போல, "ஒரு நாள் உண்மை தெரியவரும் பொழுது இவர் என்னைக் கொலைகாரி என்று நினைப்பாரோ?" என்று ஆழ்மனதிலிருந்த எண்ணம், அவளைத் திடுக்கிட வைத்தது.

இத்தனை எண்ணங்கள் ஓடினாலும் அவளின் பார்வை சிறிதும் செழியனின் முகத்தை விட்டுப் பிரியாமலிருக்க, அவன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

"ஆனால் ஒன்று தேஜூ, அருமையான தாயால் வளர்க்கப்பட்ட எனக்கே ஒரு பெண்ணிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று தெரியாமல் முரட்டுத்தனமாக நடந்து கொண்டேன். ஒரு முரட்டுத் தந்தையால் வளர்க்கப்பட்ட அவன் நிச்சயம் தவறு செய்திருப்பான் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமுமில்லை!

ஆனால் எது எப்படியோ, நான் இனி பழைய விஷயங்களைப் பற்றிப் பேசப்போவதில்லை! எனக்கு என் மனைவி, என் குடும்பம் தான் முக்கியம்!" என்று முகம் இறுக, பழைய நினைவுகளின் தாக்கத்தில் பேசியவனைப் பார்க்க, அவளுக்குப் பரிதபாமாக இருந்தது.

இதுவரை யாரிடமும் மன்னிப்புக் கேட்டு பழக்கமில்லாமல் கம்பீரமாக வளைய வந்தவன், அவனையுமறியாமல் செய்த தவறுக்கு இன்று தன் முன் மன்னிப்பு வேண்டி நிற்பது, அவளுக்கே வேதனையளிக்க மனது உருகிப்போனது.

மேலும் அவன் பேசும்முன், "ப்ளீஸ் போதும்.



என்னால் உங்களைப் புரிந்து கொள்ளமுடிகிறது! எனக்கு என்றைக்குமே உங்கள் மேல் கோபம் இருந்ததில்லை... அதனால் நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை... நம் வாழ்வில் இதெல்லாம் நடக்க வேண்டுமென்று இருக்கும்பொழுது யாரால் தடுக்க முடியும்?" ஒரு பெருமூச்சுடன் முடித்தவள்,

பாலை அவனிடம் நீட்டி, "குடித்துவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள்" என, அதை வாங்காமலே அவளை ஆச்சரியத்துடன் நோக்கி, "தேங்க்ஸ்... என் மேலே கோபமில்லை என்று உன் இதழ்கள் சொல்லுது; ஆனால் நீ இன்னும் என்னை மன்னிக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது!" என்று குற்றஞ்சாட்டியவனைப் புரியாமல் நிமிர்ந்து பார்த்தாள்.

"சாரி நீங்க சொல்றது புரியவில்லை!"என்று கேட்டவளுக்குப் பதிலளிக்காமல், அவளினருகே நெருங்க, தேஜூவுக்கு நெஞ்சம் இனிதாகப் படபடத்தது. அவன் நெருங்க நெருங்க அவளின் தலை அனிச்சைச் செயலாய்க் கவிழ, அவளின் முகத்தை ஒரு விரலால் நிமிர்த்தியதும், கணவனின் தொடுகையில் தேகம் சிலிர்க்க கண்களை மூடிக்கொண்டாள்.

அடுத்து என்ன செய்வானோ என்ற படபடப்பில் தேகம் விறைக்க, அவளின் புருவங்களின் மத்தியில் விழுந்திருந்த சுருக்கங்களை மென்மையாக நீவி வருடிவிட, அவனின் செய்கையில் ஈர்க்கப்பட்டு விழிகளை மலர்த்தினாள் .

அவளின் அழகான மலர் முகத்தை ஒரு கையால் வருடி, "இந்த முகத்தின் கடினமும், என் பெயரை நீ கவனமாகத் தவிர்த்துப் பேசுவதையும், புன்னகை

காணாமல் போயிருப்பதையும் வைத்துத் தான் சொல்றேன்..." என்றவன் லேசாக பிரிந்த அவளின் சிவந்த இதழ்களில், தன் இதழ்களை ஒற்றி எடுக்க ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு கணவனின் மார்பில் தஞ்சமடைய முடியாமல் ஏதோ ஒன்று தடுக்க, சட்டென்று அவனிடமிருந்து விலக நினைத்து செயல்பட்டவளை விலக விடாமல் செழியனின் வலிமையான கரங்கள் அவளை வளைக்க, "ப்ளீஸ்... வேண்டாம்... என்னை விடுங்க..." என்று ஈனஸ்வரத்தில் கெஞ்சினாள்.

செழியனும் மனைவியின் அருகாமையில் தாபத்தில் இருந்தாலும், அவளின் கேன்சல்/கெஞ்சல் அவனைத் தன்னிலைக்குக் கொண்டுவர, அவளை உடனே விடாமல், "என் பெயரைச் சொல்லி விடச் சொல் ; விடறேன்!" என்று குறும்பாகச் சிரித்தான்.

அவனின் பளீரென்ற சிரிப்பில் ஒரு நிமிடம் தன்னைத் தொலைத்தவள் உடனேயே சுதாரித்து, "ப்ளீஸ் செழியன், உங்க மேலே கோபம் எதுவுமில்லை! ஆனால் எனக்குக் கொஞ்சம் டைம் வேண்டும்... ப்ளீஸ் ட்ரை டு அண்டர் ஸ்டாண்ட் மீ!" என்னும் பொழுதே அவள் அதரங்கள் புன்னகையில் குளிக்க, அவளின் தேனூறும் இதழ்களில் மீண்டும் தன் முத்திரையைப் பதித்து அவளை விடுவித்தவன், "சீக்கிரமே என்னைப் புரிந்துகொள்வாய் என நினைக்கிறேன்..." என்று சிரித்தான்.

விசிலடித்தபடியே கார்ச்சாவியை ஆள்காட்டி விரலால் சுற்றிக்கொண்டே வீட்டை விட்டு வெளியே வந்த ஆதவ் போர்டிகோவில் அண்ணனின் கார் வந்து



நிற்பதையும், அதிலிருந்து கணவன் மனைவி இருவரும் சிரித்துப் பேசியபடி ஜோடியாக இறங்குவதையும் கண்டதும், அவனின் கண்கள் வியப்பில் விரிந்தது.

அடுத்த நொடியே சந்தோஷத்தில் முகம் விகசிக்க, தாயைக் கூவி அழைத்துவிட்டு, "அண்ணா, ஐ கான்ட் பிலீவ்... உங்க ரெண்டு பேரையும் அதுவும் இப்படிச் சிரித்த முகத்தோடு பார்க்கிறது ரொம்ப சந்தோஷமாயிருக்கு! எனிவே கங்க்ராட்ஸ்!" என்று கைகுலுக்கி அணைத்துக் கொண்டான்.

மகனின் அழைப்பில் வெளியே வந்த சரளா, மருமகளின் முகத்திலிருந்த புன்னகையைக் கண்டு ஓரளவிற்கு யூகித்துக்கொண்டு, அவளைத் தனியே அழைத்துச்சென்று, "சொல்லும்மா, இந்த அகளிகால விசுவாமித்திரன் என்ன சொன்னான்? மன்னுப்பு ஏதேனும் கேட்டானா? இல்லை, எப்பொழுதும் போல நியாயம் தர்மம் என்று பேசினானா? ஆர்வம் பொங்கக் கேட்பதை விநோதமாகப் பார்த்தவளுக்கு, ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது.

சோ, அந்த ராத்தரியில் அவளைத் தேடி வர வைத்தது இவர்கள் தானா? என்று புரிந்ததுமே அவரின் அன்பிலும் அக்கறையிலும் மனம் நெகிழ, தங்களுக்குள் நடந்த உரையாடலைக் கூறியதும், சற்று நேரம் எதையோ சிந்தித்தவர், "சரிம்மா, நீ போய் ரெஸ்ட் எடு... என்று அவளை அனுப்பிவிட்டு, ஆதவ்வை அழைத்து ஏதோ பேசினார்.

அன்றிலிருந்து செழியன் ஆபிஸ் நேரம் போக மற்ற நேரம் முழுவதையும், மனைவியுடன் செலவு செய்தான். அவளைக் கொண்டு அவள் ஆபிசில் விட்டு அப்படியே

கம்பெனிக்குச் செல்கிறவன் மதிய உணவிற்கு மனைவியுடன் ஹோட்டலில் அல்லது வீட்டிற்கே வந்து சாப்பிட்டுவிட்டுச் செல்வான். மாலையில் வேலைகளை விரைவாக முடித்துக்கொண்டு அவளை வீட்டிற்கு அழைத்து வருவான்.

தங்களுக்கு இத்தனை தோழிகள் இருக்கும் பொழுது, மருமகள் வேறொரு கம்பெனியில் கைகட்டி வேலை செய்வது மாமியாருக்கு உறுத்த, அதைப் பற்றி மகன்கள், மருமகளிடம் கலந்து பேச, அவள் கட்டிய ஹோட்டலுக்கே அவளைச் சேர்மன் ஆக்கிவிடுவது என்ற முடிவை எடுத்தான்.

சொன்ன மாதிரியே அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்ய, அவளுடைய பழைய ஆபிசில் அவளை ரிலீவ் செய்யவே சேர்மன் தாமோதரனுக்குக் கஷ்டமாகயிருந்தது சரயுவுக்குத் தன் தோழி தன்னை விட்டுப் பிரிந்து போகிறாள் என்பது வேதனையாக இருந்தாலும், அவளின் திருமண வாழ்க்கையிலிருந்த பிரச்சனைகள் ஒருவாறாகத் தீர்ந்து சந்தோஷமாக வாழப்போகிறாள் என்பதே ஆறுதலாக இருந்தது.

ஆபிஸ் நண்பர்கள், ஷேர் ஹோல்டர்கள் மற்றும் முக்கியமான வி.ஐ.பிக்கள் முன்னிலையில் புதிய சேர்மனாக தேஜஸ்வியை அறிமுகம் செய்துவைத்து அவளைச் சேர்மன் சீட்டில் அமரவைத்து அழகு பார்த்தான்.

அந்த ஹோட்டலின் முழுப் பொறுப்பையும் எவ்வித முடிவாக இருந்தாலும் அவள் வசமே விட்டுவிட, தேஜூவுக்கு மற்ற எதையுமே யோசிக்க முடியாமல் அதிலேயே மூழ்கிப்போனாள். எவ்வளவுதான் வேலையிருந்தாலும் இருவரையும் சரியாக ஆறுமணிக்கு



வந்துவிட வேண்டும் என்று சரளா கட்டளையிட்டு இருந்ததால் செழியன் கூடவே திரும்பிவிடுவாள்.

சில நாட்களில் சீக்கிரம் வந்துவிட்டால் இருவரும் கோவிலுக்குப் போயிட்டு வாங்க... இன்று கோவிலில் விஷேச பூஜையிருக்கு என்று அனுப்புவார். இன்று நல்ல படம் ரீலீசாகியிருக்கு; போய்ப் பார்த்துவிட்டு வாங்க! என்று செழியனைக் கிளப்புவார். மற்றொரு நாள் தேஜூவை, அவளின் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்லச் சொல்வார் .

ஆக அவர்கள் இருவரையும் ஒன்றாகவே இருக்கும்படி பார்த்துக் கொண்டார். அதற்குக் காரணம் இருவரும் ராசியாகிவிட்டாலும், இன்னும் கூட ஒன்று சேராமல் தனித் தனி அறையில் இருப்பது தான். தன் மகன் தான் இன்னும் மனைவியிடம் நெருங்காமல் இருக்கிறான் என்பது அவர் கணிப்பு.

அதை சில சமயங்களின் மகனிடம் ஜாடை மாடையாகக் கண்டித்தும் பார்த்தார். ஆனால் பாவம், இப்படிப்பட்ட நிலைக்கு மருமகள் தான் காரணம் என்று தெரியாமல் போனது.

மாலை நேரங்களில் நேரம் கிடைத்தால் ஆதவ்வோ... செழியனோ நீச்சல் குளத்தில் நீந்துவார்கள். அந்த மாதிரி நேரங்களில் தேசு அங்கே அமர்ந்திருந்தால், மாமியாரும் மருமகளுடன் அமர்ந்து மகன்கள் நீந்துவதை வேடிக்கை பார்த்துக்கொண்டே, தேஜூவுடன் பேசிக் கொண்டிருப்பார் .

அப்படி ஒரு நாள் கணவனும் ஆதவ்வும் நீந்திக் கொண்டிருப்பதைச் சற்று தூரத்தில் அமர்ந்து, தன் தாயுடன் போனில் பேசியபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

மருமகளைத் தேடி வந்த சரளா, மருமகள் தனித்து அமர்ந்திருப்பதைக் கண்டதும், அவரின் பார்வை யோசனையாக மகன் பக்கம் தாவியது.

தம்பியுடனான பேச்சில் கவனம் செல்லாமல், தூரத்தில் அமர்ந்திருந்த தேசு மீதே செழியனின் கண்கள் ஏக்கமாகப் படிந்திருப்பதைக் கண்டவருக்கு லேசாக குழப்பமேற்பட, என்ன நினைத்தாரோ உடன் நீந்திக் கொண்டிருந்த சிறிய மகனை அழைத்து போன் வந்திருப்பதாகக் கூற, ஏற்கனவே அண்ணனின் கவனம் தன் பேச்சிலில்லை என்றுணர்ந்த ஆதவ், கழன்று கொள்ள நேரம் பார்த்துக் கொண்டிருந்ததால் ம உடனேயே அங்கிருந்து கழன்று கொண்டான்.

அவன் பின்னால் உள்ளே செல்வது போலச் சென்ற சரளா ஓரிடத்தில் மறைந்து நின்று இருவரையும் கவனித்துக் கொண்டிருந்தார். இருவரும் தனித்து வாழ்வதற்குக் காரணம் யார் என்ற குழப்பத்தின் விளைவே, இருவரின் செய்கைகளையும் மறைந்திருந்து பார்க்கத் தூண்டியது.

ஆதவ் சென்றதும் செழியனின் பார்வை மனைவியை ஏக்கமாக வட்டமிட, கணவனின் பார்வை புரியாமல் போனில் பேசிமுடித்தவள், ஹோட்டல் மேனேஜ்மென்ட் புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

சிறிது நேரம் ஒரு பெருமூச்சோடும், ஏக்கத்தோடும் பார்த்துவிட்டு மீண்டும் பட்டர்பிளை டைவ் அடித்து நீந்தியவன் நீச்சல் குளத்தை விட்டு மேலேறி இடுப்பில் ஒரு துண்டுடன் தேஜூவை நோக்கிச் செல்வதைக் கண்டவர், இங்கிருந்து போய்விடலாமா? என்று எண்ணி



செயல்படுத்துமுன் அவரின் பார்வை அவர்களை நோக்கித் தாவியது.

மனைவியை விளையாட்டாகச் சீண்ட நினைத்து, அவள் எதிர்பாராத விதமாக ஈரத்தலையை அவளின் அருகில் சென்று சிலுப்ப, அவனின் கேசத்திலிருந்த நீர்த்துளிகள் அவளையும், புத்தகத்தையும் ஈரமாக்கியது.

சட்டென்று கோபத்துடன் நிமிர்ந்தவள், கணவனின் குறும்பான பார்வையைச் சந்தித்ததும் தன் கோபத்தைக் கட்டுப்படுத்தி, "டோன்ட் ப்ளே செழியன்!" என்று உலர்ந்த குரலில் கூறிவிட்டு, விடுவிடுவென்று அங்கிருந்து தன் உடமைகளை எடுத்துச் செல்ல, செழியனின் முகத்தில் ஏமாற்றம் பரவியது. உடனேயே சமாளித்து தன் போக்கில் அவன் செல்ல, சரளா தான் விக்கித்துப் போனார்.

இரண்டு நாள் சென்றிருக்கும். கணவனுடன் ஆபிஸ் போய்விட்டு திரும்பிவந்து ரெப்ரெஷ் செய்யத் தன் அறைக்கு சென்றவள், அறை காலியாக இருப்பதைக் கண்டு திகைத்து நிற்க, "உன் சாமானெல்லாம் செழியன் அறையிலிருக்கு தேஜு!" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.

"நான் தான் கொண்டு போய் வைக்கச் சொன்னேன் ! இனியும் நீங்களிருவரும் தனித்தனித் தீவாக வாழ்வதில் யாருக்கு என்ன பிரயோஜனம்? அதுமட்டுமில்லை! வெளியாள் யாராவது பார்த்தால், அதற்கு கண் காது மூக்கு வைத்து விஷயத்தைப் பெரிதாக்கி விடுவார்கள். அதனால் இருவரும் ஒரே அறையில் இருப்பது தான் நல்லது!"

என்றார் கண்டிப்புடன் முடித்துவிட தேஜு எதிர்த்துப் பேச முடியாமல் வாயடைத்து நின்றாள்.

என்ன தான் மகன் தன் தவறை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டாலும், இத்தனை மாதம் அனுபவித்த வேதனைகளையும் துன்பங்களையும், மருமகளால் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது தான் !

அதற்காக இருவரும் தனித்தே இருந்தால், இருவரும் ஒன்றாவது எப்படி என்று யோசித்துத் தான், அந்த நீச்சல் குள சம்பவத்திற்குப் பிறகு சரளா அதிரடியாக இப்படி ஒரு வேலை செய்தார்.

இன்று இல்லாவிட்டாலும் கூட, என்றாவது ஒரு நாள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வார்கள் என்பது அவர் கணிப்பு. அவரின் கணிப்பும் கூடிய சீக்கிரம் நனவாகியது.

# 19

**மா**மியாரின் பேச்சைக் கேட்டு சிலநிமிடங்கள் விக்கித்து நின்றவள் வேறு வழியில்லாமல் செழியனின் அறையை நெருங்கி, உள்ளே காலடி எடுத்து வைக்க முடியாமல் அங்கேயே சில கணங்கள் தயங்கி நின்றவள், ஒரு பெருமூச்சோடு உள்ளே சென்றாள்.

அந்த அறையில் கமழ்ந்த செழியனின் ஷேவிங் லோஷனின் வாசனையும், செண்டின் மணமும் தேஜூவுக்கு முதலிரவும்,அதைத்தொடர்ந்து அவள் அங்கே தங்கியிருந்த கசப்பான நாட்களும் நினைவில் வர, மனம் சோர்ந்து அவளை அலைக்கழித்தது.



மாற்று உடைகளைக் கூட எடுக்கத் தோன்றாமல் பாத்ருமிற்குச் சென்று ஷவரைத் திறந்து அதனடியில் நின்றவளுக்கு, போன வாரம் வரை செழியனின் கடுமையான பேச்சும், ஒதுக்கமும் அதனால் தான் அனுபவித்த மன வேதனைகளும் ஒன்றன் பின் ஒன்றாக ஊர்வலம் வர, அதன் விளைவாக ஏற்பட்ட கழிவிரக்கத்தில் கண்ணீர் மடைதிறந்தது.

இது நாள் வரையில் நெஞ்சத்தில் புதைத்து வைத்திருந்த வேதனைகளை யாரிடமும் வெளிக்காட்டாமல், வாய் விட்டு அழாமல் ஒரு வைராக்கியத்தோடு வாழ்ந்து வந்தவளுக்கு, இன்று அவளையும் மீறி பழைய நினைவுகள் துரத்தியடிக்க, அதைத் தாங்க முடியாமல் நெஞ்சு விம்ம வாய்விட்டு அழுதாள்.

மனைவியோடு வீட்டிற்கு வந்தவன் ஆதவ்விடம் ஆபிஸ் விஷயங்களைப் பேசிவிட்டு, சில மணித்துளிகள் கழித்து அவன் அறையை நோக்கிச் சென்றவனை நிறுத்திய தாயைக் கேள்வியாக நோக்கியவனிடம், "இன்றிலிருந்து தேஜு உன் அறையில் தான் இருந்தாகணும், அவளுடைய பொருட்களை உன் அறையில் மாத்தியாச்சு ! இனி நீ எப்படி நடந்துக்கணும் என்பதை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

உன் வாழ்க்கையைச் சொர்க்கமாக மாத்திக்கிறதும் ; நரகமாக வைச்சிக்கிறதும்... உன் கையில் தான் இருக்கு! "

என்று மிகச் சுருக்கமாகத் தான் சொல்ல வந்ததைச் சொல்லி முடித்ததும் அவர் அகன்றுவிட, செழியனுக்கு என்ன மாதிரி உணர்வது என்று புரியாமல் சில கணங்கள் சிலையாக நின்றான்.

தேஜூவை தன் அறையில் மீண்டும் சந்திக்கப் போகிறோம் என்று உரைக்க அவனின் உடலின் ஒவ்வொரு செல்லும் பூப்பூக்க, மனம்முழுக்க சந்தோஷமும், அதே சமயம் ஒரு சிறிய பையனின் ஆர்வமும் ஒரு குறுகுறுப்பும் அவனைப் பந்தாட, அவன் கால்கள் அவனின் அறையை நோக்கி நடையை எட்டிப் போட்டது. மனதில் தத்தளித்த மகிழ்ச்சியோடு அறையின் உள்ளே சென்றவனின் கண்கள், மனைவியை தேடித் துழாவியது.

தேஜூவைக் காணாமல் சிறு ஏமாற்றம் படிய, சோபாவில் சோர்ந்து போய் அமர்ந்தவனின் காதுகளில் பாத்ரூமிலிருந்து தண்ணீர் கொட்டும் சத்தம் கேட்டதும் அவனின் கண்கள் ஆர்வமாக பாத்ரூம் கதவில் படிந்து மீள, குளித்து முடித்து பனியில் நனைந்த ரோஜா மலர் போல வரும் மனைவிக்காக ஒரு வித இனிய பரபரப்புடன் காத்திருக்க ஆரம்பித்தான்.

அவனின் மனது முதலிரவில் தான் கடுமையாகப் பேசிய பிறகும் தன்னைப் புரியவைக்க அவள் போராடிய விதமும், அதைத் தொடர்ந்து வந்த நாட்களில் அவளை அலட்சியப்படுத்தி கடுமையான வார்த்தைகளில் வதைத்த பொழுதும் அதையும் மீறித் தான் கஷ்டப்பட்ட நாட்களில் தானாக முன் வந்து தன் பாரங்களை அவள் தோளில் சுமந்து தனக்கு உதவிய அவளின் அன்பான மனதும்,

அவள் மேல் கண்மண் தெரியாமல் வெறுப்பை வளர்த்து வைத்திருந்த தன்னையே அவள் பக்கம் ஈர்த்ததை நினைத்து, அவன் இதழ்களில் ஒரு மந்தஹாசப் புன்னகையைத் தோற்றுவிக்க சோபாவில் தலைக்குப்



பின்னால் கைகளைக் கோர்த்துச் சாய்ந்து கண்களை மூடிக் கனவில் ஆழ்ந்தான்.

எவ்வளவு நேரம் சென்றதோ, மனதில் ஏதோ தோன்றம கனவிலிருந்து மீண்டு கண்திறந்து பார்த்தவன் இன்னும் தண்ணீர்ச் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்க, தன் ரோலக்ஸ் வாட்சைத் திருப்பி மணியைப் பார்க்க, அவன் ரூமிற்கு வந்தே ஒரு மணிநேரம் கடந்திருந்தது.

அவள் எப்பொழுது உள்ளே சென்றாளோ ? இவ்வளவு நேரமாகியும் வெளியே வரவில்லை என்றால் தேஜூவுக்கு ஏதாவது ?" என்று யோசிக்கும் பொழுதே அதுவரை மனதில் நிரம்பித் ததும்பியிருந்த சந்தோஷம், துள்ளல் எல்லாம் ஆற்று வெள்ளம் போல வடிந்து லேசான பயம் பரவியது.

கதவைப் படபடவென்று தட்டி, "தேஜு, கதவைத் திற... " என்று பலமுறை அழைத்தும், உள்ளிருந்து எவ்வித ரியாக்ஷனும் இல்லாமல் தண்ணீர் கொட்டும் சத்தம் மட்டுமே தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்க, பலங்கொண்ட மட்டும் மீண்டும் தட்டினான். அப்படியும் மனைவியிடமிருந்து எவ்வித பதிலும் இல்லாததால் செழியனின் பயம் அதிகரிக்க கதவை எப்படித் திறப்பது என்று யோசிக்கலானான்.

கதவை உடைக்கலாம் என்றால் தேக்கால் செய்த ஸ்ட்ராங்கான கதவென்பதால் உடைப்பது சாத்தியமில்லை என்று உணர்ந்தவன், அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் அந்த அறையை சுற்றும் முற்றும் விழிகளால் அலசியவனுக்கு, மூளையில் பளிச்சென்று ஒரு விஷயம் உதிக்க, ஒரு போர்க்கால அவசரத்துடன் கீழே சென்றான்.

மீண்டும் தன் அறைக்குத் திரும்பியவனின் கையில், கதவைத் திறக்கத் தேவையான திருப்புளி, சுத்தியல் மற்றும் பல தேவையான சாமான்கள் இருக்க, மறுபடியும் கதவைத் தட்டி மனைவியை அழைத்தவன் எந்த பதிலும் வரவில்லை என்றதும் சிறிதும் தாமதிக்காமல் கதவைத் திறக்கும் வேலையில் ஈடுபடலானான்.

சில நாழிகைப் போராட்டத்திற்குப் பிறகு, உள்பக்கத் தாழ்ப்பாளை வெற்றிகரமாக விலக்கி கதவைத் திறந்தவனுக்கு உடம்பில் துண்டோடு கண்களை மூடியபடி தேகம் வெட வெடத்தாலும், உணர்ச்சியற்ற ஜடம் போல நின்று கொண்டிருந்தவளைக் கண்டு துணுக்குற்றான்.

முதல் வேலையாக ஷவரை நிறுத்தியதும், அப்பொழுது தான் வேறு உலகத்தில் இருந்து நிகழ்காலத்துக்கு வந்தவள் போல கண்ணைத் திறந்தவளின் தேகம் அவளின் கட்டுப்பாட்டில் இல்லாமல் தடதடவென்று உதறியது.

சிறு கோழிக் குஞ்சு போல மனைவி நடுங்குவதைக் கண்டதும் சினம் தலைக்கேற, "உனக்கென்ன பைத்தியமா? மழைக்காலத்தில் அதுவும் மாலை நேரத்தில் மணிக்கணக்காக யாராவது ஷவரைத் திறந்து விட்டுக் கொண்டு நிற்பாங்களா? என்றவனை, திருவிழாவில் தொலைந்த சிறுமி போலப் பார்த்து விழித்தாள்.

கணவனைக் குளியல் அறையில் கண்டதும் குழப்பமான விழிகளால் ஆராய்ந்த அவள் விழிகள், தன்னைக் குனிந்து நோக்க தான் வெறும் துண்டோடு



நிற்பது புரிய கூச்சத்துடன் துண்டை இறுக ஒரு கையால் பிடித்துக் கொண்டு அங்கிருந்து செல்ல ஒரு அடி எடுத்து வைக்க முயற்சி செய்ய, அது பலிக்காமல் அவ்வளவு நேரம் தண்ணீரில் நின்றிருந்ததாலும்ம மனம் வெதும்பி அழுததாலும், உடம்பு அவளின் கட்டுப்பாட்டை மீற நிலை தடுமாறி அருகில் நின்றிருந்த கணவனின் மேலே சாய்ந்தாள்.

தண்ணீரில் சுரணையே இல்லாமல் நின்றிருந்தவளைக் கண்டதும் சினத்துடன் அவளைத் தூக்க அருகில் சென்றவன், தன்னைக் கண்டதும் அந்த நேரத்திலும் தன்னை விட்டு விலகிச் செல்ல நினைப்பதைப் புரிந்து, கோபாவேசத்துடன் திரும்பிய அதே நேரம் தேஜு அவன் மேலே சாயவும், "முட்டாள் !" என்று திட்டியவன், அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்தபடி அவளைத் தூக்கி வந்து கட்டிலில் கிடத்தினான்.

நனைந்திருந்த துண்டை மாற்ற நினைத்து அதில் கையை வைத்ததும் ஒரு பெண்ணுக்கே உண்டான கூச்ச உணர்வும், விழிப்புணர்வும் அவனின் கையைத் தடுக்க, "இந்த நேரத்தில் கூட உன் உடம்பை ரசிக்கும் ஒரு காமுகன் என்று என்னை நினைத்தாயா? என்று சீறியவன்,

அவள் கையைத் தட்டிவிட்டு கடமையே கருத்தாக அவள் துண்டைக் கழற்றி, உடலைப் பரபரவென்று துடைத்தும கனமான பூத்துவாலையால் அவளை மூடி, முடியை ஹீட்டர் போட்டு உலர்த்தி, சில்லிட்டிருந்த கை கால்களுக்கு தைலத்தால் சூடேற்றியவன், இண்டர்காமில்

கீழே அழைத்து வேலைக்காரியிடம் சூடாக காபி எடுத்து வரக் கட்டளையிட்டான்.

தாயிடம் சொல்லலாமா வேண்டாமா என்று ஒரு கணம் யோசித்தவன், வேண்டாம் என்று முடிவெடுத்தும் கம்பளியை தேஜூவின் கழுத்து வரை போர்த்திவிட்டு அவள் கன்னத்தில் மென்மையாகத் தட்டி, "தூங்கு, இதோ வரேன்..." என்றவன் ஈரமாக இருந்த தன் உடைகளைக் கழற்றி ஒரு குளியல் போட்டு உடைகளை மாற்றிக் கொண்டு வர , காபியும் வந்து சேர்ந்தது.

அவன் குளித்துவிட்டு வருவதற்குள் அசதியில் ஒரு குழந்தை போல மனைவி தூங்குவதை சிறிது நேரம் இமைக்காமல் பார்த்தவன் ஒரு பெருமூச்சோடு தேஜூவின் தலைமாட்டில் அமர்ந்து அவளைத் தன் மேலே சாய்த்துக் கொண்டு மாத்திரையோடு சூடான காபியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குழந்தைக்குப் புகட்டுவது போலப் புகட்ட, கணவனின் அணைப்பின் சூடோ அல்லது பானத்தின் சூடோ அவளின் தெம்பை மீட்டெடுக்க, மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்.

சிறிது நேரம் அலங்க மலங்க விழித்தவளின் பார்வை கணவனின் முகத்தில் வந்து நிலைக்க, "என்னடா இப்போ பரவாயில்லையா? என்றவனை அரை நிமிடத்திற்கும் குறைவாகப் பார்த்தவளுக்கும அவளின் நிலைமை மண்டையில் உரைக்க அவசரமாக அவனிடமிருந்து விலக, அவளின் கையைப் பிடித்தான்.

"இந்த நிலையிலுமா என்னை விட்டு விலகிப்போகணும் என்று நினைக்கிறே தேஜூ... அந்த அளவிற்கு உனக்கு என் மேலே வெறுப்பாக இருக்கா? என்று வேதனையுடன் வினவியவன், அவளின் முகத்தில்



தெரிந்த ஒரு வித கலவரத்தைக் கண்டு அவளின் கையை விட்டு,

"ஐ அம் சாரி !" என்று ஒருவித கையாலாகாத்தனத் தோடு கூறி, கட்டிலை விட்டு எழுந்து ஜன்னலின் வெளியே இலக்கில்லாமல் வெறிக்க ஆரம்பித்தான்.

அதுவரை கணவனின் அணைப்பில் இருந்ததால் உண்டான தெம்பும் இதமும் அவளை விட்டு ஓட, சோர்வான விழிகளோடு பேச வார்த்தைகளற்று கணவனின் முதுகையே வெறித்தவள், ஒரு முடிவோடு அவனின் அருகில் செல்ல கட்டிலை விட்டு இறங்க காலைக் கீழே வைக்க கால் தரையில் படாமல் அந்தரத்தில் மிதந்தது.

எந்த பதிலும் இல்லையே என்று எதேச்சையாக மனைவியின் பக்கம் வேதனையோடு திரும்பியவன் கட்டிலில் இருந்து எழ முயற்சி செய்த தேஜூ நிலை தடுமாறிக் கீழே விழுவதைக் கண்டு பதறிப் போய் ஓடி வந்து கீழே விழாமல் அவளைப் பூப்போலத் தன் கையில் தாங்கினான்.

அவனின் வலிமையான கரங்களின் அணைப்பில் சிக்குண்ட தேஜூ, ஒரு வித எதிர்பார்ப்போடு கணவனின் கண்களோடு உறவாட அவனின் கண்களில் கசிந்த காதலும், தன்னை மன்னிக்க மாட்டாயா என்று இறைஞ்சிய முகமும், அவளை முத்தமிடத் துடிக்கும் இதழ்களும், வைரத்தின் ஜொலி ஜொலிப்பைப் போல அவளுள் சந்தோஷத்தை வாரியிறைக்க, அடுத்த நொடி செழியனின் மார்பில் வெட்கத்துடன் முகம் புதைத்தாள்.

மனைவியிடமிருந்து இந்தச் செயலை எதிர்பார்க்காத செழியன், ஒரு நிமிடம் இனிமையான பரவசத்தில்

செயலற்றுப் போக, அடுத்த நொடியே என்ன ஏது என்று உணர்வதற்குள் வெறும் மன பிரம்மையோ என்பது போல தேஜு அவனிடமிருந்து விலகி திரும்பிப் படுத்துக் கொள்ள, செழியனின் முகம் வாடிப்போனது.

தன்னையும் நெருங்க விடாமல், அவளும் நெருங்காமல் எப்பொழுதும் ஒரு விலகல் தன்மையோடவே தேஜு இருப்பதை அவனால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

ஏன்? எதனால்? என்ற காரணமும் சரிவரப் புரியாமல் சிறிது நேரம் அவள் முதுகையே வெறித்தபடி அமர்ந்திருந்தவன் ஒரு நெடிய பெருமூச்சோடு எழுந்து கதவை மூடிவிட்டுக் கீழே இறங்கிச் செல்ல, அதுவரை கண்களை இறுக்க மூடி அசையாமல் படுத்திருந்த தேஜு மெல்ல எழுந்து அமர்ந்து அவன் அமர்ந்திருந்த இடத்தை கையால் தடவ, அவள் மனதிலிருந்த ஏக்கம் கண்ணீராகக் கன்னங்களில் வழிந்தது.

ஆரம்பத்தில் கண்மூடித்தனமாக வெறுத்தவன் மனம் மாறி, தனக்காக மட்டும் நேசிக்கும் அளவிற்கு மாறிப் போன பிறகு கணவன் மேல் அளவு கடந்த அன்பும் காதலும் இருந்தாலும், அவனின் அன்பில் கரைய நெஞ்சு முழுக்க ஆசை இருந்தாலும், ஏதோ ஒன்று அவளை அவனிடமிருந்து விலக்கியே வைத்திருந்தது.

அது அவளின் கடந்த காலம் தான். ஒரு வேளை கடந்த காலம் தெரிந்த பிறகு அவன் தன்னை ஏற்று கொண்டிருந்தால் கூட மனதிலிருந்த பாரங்கள் இறங்கி லேசாகி, அவனோடு இயல்பாக ஒன்றியிருக்க முடிந்திருக்கும்

ஆனால் இன்று அவனின் காதலை முழுதாக



அனுபவித்துவிட்டு, பின்னாளில் என்றாவது ஒரு நாள் அவளின் கடந்த காலம் தெரியவரும் பொழுது, தான் அடித்ததால் தான் ரஞ்சித் பைத்தியமாக இருக்கிறான் என்று தெரிந்தால் அவரால் என்னிடம் பழையபடி அன்பாகச் சிரித்து பேசத்தான் முடியுமா? அல்லது இயல்பாக பேசிப் பழகத் தான் முடியுமா? என்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் கொலைகாரி என்ற எண்ணம் தானே அவர் மனதில் ஓடும் ? இதனால் மீண்டும் என் வாழ்க்கை, வறண்ட பாலைவனம் போல ஆகிவிடாதா?

கடவுளே! நானே என் வாயால் ரஞ்சித்தை அடித்து பைத்தியமாக்கினேன் என்று எப்படிச் சொல்ல முடியும் ? என்ன தான் தற்காப்புக்காகச் செய்தது என்றாலும் தவறு தவறு தானே ? இதை எப்படி நான் செழியனுக்குப் புரியவைப்பேன் ... ? என்ற எண்ணச் சுழலில் சிக்கி அதிலிருந்து வெளியில் வர முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவள், கதவு திறக்கும் சத்தம் கேட்டதும் யாரையும் எதிர் நோக்கும் சக்தியற்றும தூங்குவது போல கண்களை மூடிகொண்டாள்.

மகன் மூலம் விஷயத்தை கேள்விப்பட்டதும் மருமகளைத் தேடி வந்த சரளா, அவள் தூங்குவதைக் கண்டதும் நெற்றியில் கை வைத்து பார்த்து, ஜுரம் எதுவும் இல்லையென்றதும் சிறிது நேரம் அவளின் தலையை அன்பாக கோதி விட்டு, கம்பளியை இழுத்துப் போர்த்தி, நைட் லாம்பை மட்டும் போட்டுவிட்டு கதவை சத்தமில்லாமல் மூடிவிட்டுச் சென்றதும், அதுவரை அவரின் செயல்களில் நெகிழ்ந்து கூனிக் குறுகிப் போய் படுத்திருந்தவள், அவரையும் ஏமாற்றுகிறோமே என்ற குற்ற உணர்வில் மருகினாள்.

இரவு உணவுக்கு பின் மீண்டும் அறைக்கு வந்த செழியன் தேஜு இப்பொழுது அசதியில் உண்மையிலே உறங்குவதைக் கண்டதும், அந்த அறையில் சிறிது நேரம் எதையோ சிந்தித்தபடி குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

கால்களும் மனமும் ஓய்ந்து போக கட்டிலில் அமர்ந்து கண்களை இறுக மூடி சிறிது நேரம் அமர்ந்தவன், ஒரு முடிவுடன் கட்டிலில் படுத்து விட்டத்தையே வெறித்துப் பார்த்தபடி படுத்திருந்தான். எப்பொழுது அவன் உறங்கினானோ அவன் அறியான்.

காலை எப்பொழுதும் போல குயில்களின் இசைக் கச்சேரியோடும் சூரியனின் நல்வரவோடும் பொழுது புலர, தூக்கம் கலைந்து எழுந்த தேஜு பக்கத்தில் செழியனைக் காணாததால், அந்த அறையை பார்வையால் துழாவினாள்.

அவன் இல்லாததால் எதையோ இழந்த மாதிரி உணர்ந்தவள், சோர்வாக எழுந்து குளித்து வேறு உடை மாற்றி லேசான ஒப்பனையோடு ஆபிஸ் செல்ல ரெடியாகிக் கீழே இறங்கியவளை புன்னகையோடு எதிர் கொண்டார் சரளா.

அவளின் உடல் நிலையை விசாரித்தவர், "ஏன்மா! உடம்பு சரியில்லாத பொழுதும் ஆபிஸ்க்கு போயே ஆகணுமா? செழியன் உன்னை வீட்டில் ரெஸ்ட் எடுக்கச் சொன்னான்" என்றவருக்கு சிறு புன்னகையை பதிலாகக் கொடுத்து,

"இப்போ பரவாயில்லை அத்தை, ஒன்றும் பிரச்சனையில்லை..." என்றபடி அமர்ந்த தேஜுவுக்கு டிபன் பரிமாறியவரிடம் செழியனைப் பற்றிக் கேட்க,



"ஏதோ முக்கியமான வேலை இருக்காம்! பெங்களூர் வரை போயிருக்கான்; வர இரண்டு நாளாகும் என்றான்! உன்னிடம் சொல்லச் சொன்னான்" என்றார்.

"எனக்குத் தெரியாமல் அப்படி என்ன முக்கியமான வேலை? என்று யோசித்தபடியே தட்டில் அளைந்து கொண்டிருந்தவளின் கையில் மாத்திரையைக் கொடுத்துப் போடச் சொல்ல, புரியாமல் நிமிர்ந்து பார்த்தவளிடம் "இது செழியனின் கண்டிப்பான உத்திரவு!" என்றார் புன்னகையுடன்.

கணவனின் அக்கறையும், மாமியாரின் பரிவும் அவளுள் பெரும் ஆயாசத்தை ஏற்படுத்த, அவர் சொன்னபடி மாத்திரையைப் போட்டுகொண்டும சாப்பிட்டுவிட்டு ஆபிஸ் கிளம்பியவளின் முன்னால் வந்து நின்ற ஆதவ், "கிளம்பலாமா? என்று கேட்க, அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"நீ இன்னும் ஆபிஸ் கிளம்பலையா? எதற்காக எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறே? நான் தனியா போய்க்கிறேன்!" என்றவளை இடைமறித்து, "ம்ஹீம், உன்னை வீட்டில் ரெஸ்ட் எடுக்கச் சொன்னார் அண்ணன். ஆனால் நீ ஆபிஸ் கிளம்பறே! இந்த நிலைமையில் உன்னைத் தனியாக அனுப்பினால் சரியாக வராது!" என்றவன், அவளின் பதிலுக்குக் காத்திராமல் வண்டியை நோக்கிச் செல்ல, தேஜுவால் அதற்கு மேல் மறுத்துப் பேச முடியவில்லை. உண்மையைச் சொல்லப் போனால், அவளுக்கு ஆதவ்விடம் கொஞ்சம் பேச வேண்டி இருந்தது.

சரளாவிடம் சொல்லிவிட்டு இருவரும் கிளம்ப, எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் யோசித்துக்

கொண்டு வந்தவளிடம், "உனக்கு என்ன ப்ராப்ளம் தேஜு?" என்று ரியர்வியூ கண்ணாடி வழியாக நோக்கிக் கேட்டு அவளின் மௌனத்தைக் கலைக்க, திடுக்கிட்டு நிமிர்ந்தவள் சிறிது திணறிவிட்டு, "எப்படி ஆதவ்?" என்று தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினாலும் தன் மனக்குழப்பத்தை அவனிடம் சொல்லத் தவறவில்லை.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டவன் வண்டியை ஓர் ஓரமாக நிறுத்தி, அவள் பக்கம் திரும்பி அமர்ந்து, "நான் உன்னை புத்திசாலி என்று நினைத்தேன் ஆனால் நீ இப்படி முட்டாளா ரியாக்ட் செய்வே என்று நினைத்துப் பார்க்கலே!" என்று அசூயையாகக் கூற, "என்ன சொல்றே ஆதவ்? நான் என்ன முட்டாளா ரியாக்ட் செய்தேன்?" என்றாள் சற்றுக் கோபமாக.

"முதலில் கோபப்படுவதை நிறுத்து! இப்போ என்ன குற்றம் செய்துவிட்டே என்று இப்படி உனக்குள்ளே மருகிறே! உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்... நீ செய்தது தவறு இல்லை எந்தப் பெண்ணாக இருந்தாலும் அந்த மாதிரி தான் ரியாக்ட் செய்வார்கள் என்று! இதை நான் சொல்லித்தான் உனக்குத் தெரியுமா? மீண்டும் மீண்டும் நீ செய்தது தவறு என்று ஒரே வட்டத்துக்குள் சுற்றிச் சுற்றி வந்தால், உனக்கு நீ செய்தது தவறாகத் தான் தெரியும். முதலில் அந்த வட்டத்தை விட்டு வெளியே வா. அப்போ உனக்கு எல்லாமே தெளிவாகப் புரியும்.

தன்னை ஆபத்திலிருந்து காப்பற்றிக்கொள்ள செய்கிற கொலைக்குக் கூட சில நேரங்களில் சட்டத்தில் குறைந்தபட்ச தண்டனை தான். ஆனால் நீ கொலையே செய்யவில்லையே! அவன் உயிரோடு தானே



இருக்கிறான்? அவன் செய்த தண்டனைக்கு, ஆண்டவன் அவனுக்கு தண்டனை கொடுத்திட்டான். நீ என்ன தவறு செய்தாய் என்று உனக்கு நீயே இத்தனை வருடமா தண்டனை கொடுத்திகிட்டு இருக்கே?" என்றவன் கோபமாகக் கூறிக்கொண்டு வந்தவன்,

சற்று இடைவெளி விட்டு, "லுக் தேஜு, அண்ணனே கூட தான் செய்த தவறை உணர்ந்து உன்னிடம் மன்னிப்பு கேட்டுட்டார். ஆனால் நீ செய்யாத தவறுக்கு உனக்கு நீயே தண்டனை கொடுத்து வருத்திக்கிறதும் இல்லாமல், அண்ணனையும் சேர்த்துக் கஷ்டப்படுத்தறியோ என்று தான் நினைக்கத் தோணுது! இவ்வளவு தான் என்னால் சொல்ல முடியும். இதுக்கும் மேலே நீ செய்யறது சரியா இல்லையானு நீயே முடிவு செய்!" என்றவன் வண்டியை எடுக்க, தேஜு அயர்ந்து போய் அமர்ந்திருந்தாள்.

ஆபிஸ் சென்றவளுக்கு வேலையே ஓடாமல் மீண்டும் மீண்டும் ஆதவ்வின் பேச்சே மண்டையில் ஓட, தான் நினைப்பதும், செய்வதும் தவறோ என்று கூட அவளுக்குத் தோன்றியது. ஆதவ் சொல்கிற மாதிரி, செழியனை கஷ்டப்படுத்தி விட்டோமோ என்ற எண்ணம் எழுந்ததுமே, அவளுக்கு உடனேயே செழியனைப் பார்க்க வேண்டும் மனது கிடந்து தவித்தது.

செழியனைக் காதலனாக, கணவனாக, ஒரு நண்பனாக இதுவரை பார்த்து வந்தவளுக்கு, நேற்று ஒரு தாயாக அவன் நடந்து கொண்ட விதத்தில், தேஜு அதிகமாகவே அவன் வசமிழுந்து போயிருந்தாள். அதனால் தான் என்னவோ இத்தனை நாள் அவனை விட்டு விலகியிருந்த அவளுக்கு இனியும் செழியனை விட்டு விலக முடியாது என்று தோன்ற, மிகவும் தவித்துப் போனாள்.

இரண்டு நாள் பார்க்க முடியாது என்ற அத்தையின் பேச்சு நினைவு வர, அவனின் கைப்பேசிக்கு முயற்சி செய்ய, அது "நாட் ரீச்சபிள்' என்றே வந்தது. பலமுறை முயன்றும் அப்படியே வர, அலுத்துப் போகம அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் ஆதவ்விடம் போன் செய்து சொல்லிவிட்டு தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

மகளைக் கண்டதும் எழிலுக்கு இறக்கை கட்டாத குறையாக சந்தோஷத்தில் பறக்க, மகளுக்குப் பிடித்தது எல்லாம் பார்த்துப் பார்த்து சமைத்துப் போட்டார். ஈஸ்வரனும் சீக்கிரமே ஆபிசிலிருந்து திரும்பிவிட, தேஜூவுக்கு மனதிலிருந்த குழப்பங்கள் தீர்ந்து நிர்மலமாக இருந்ததினால் தாய் தந்தையிடம் கலகலப்பாகப் பேச, நீண்ட நாளைக்குப் பிறகு அந்த வீடு மூவரின் கலகலப்பான பேச்சில் அதிர்ந்தது.

செழியன் இல்லாத அந்த வீட்டிற்குச் செல்ல மனமில்லாததால் அன்றிரவு சரளாவிடம் தாய் வீட்டிலே தங்கப் போவதாக போன் செய்து சொல்லியவள், சிறிது நேரம் பெரியவர்களிடம் பேசிவிட்டுத் தன் அறைக்குச் சென்று படுக்க ஆயத்தம் செய்தவள் மீண்டும் செழியன் கைப்பேசிக்கு முயற்சி செய்ய, மறுபடியும் "நாட் ரீச்சபிள்' என்றே வர,அவளுக்கு வெறுத்துப் போனது.

"ஏன் போன் அட்டென்ட் செய்யமாட்டேன்கிறார்... அப்படி எங்கே தான் போயிருக்கிறார்? அவரும் இதுவரை போன் செய்யவில்லை? நேற்றுவரை தினமும் போன் செய்தவர் ஏன் இன்று காலையில் இருந்து ஒரு கால் கூட செய்யவில்லை? ஏன்? ஏன்? என்று யோசித்தவளுக்கு,

"ஒரு வேளை, நேற்று நான் நடந்துகொண்ட விதத்தில் என் மீது கோபம் வந்து என்னைப் பார்க்கப் பிடிக்காமல் வேலை இருக்கிறது என்று சொல்லிவிட்டு, எங்கேயாவது போய்விட்டாரா? என்று அபத்தமாக மனது யோசிக்கபோதே தேகம் பதறியது.



அன்றிரவு முழுவதும் செழியன் நினைவிலே தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தும், பொட்டு கண் மூட முடியவில்லை. கண்ணில் நெருஞ்சி முள்ளை வைத்த மாதிரி தவிப்பும், நெஞ்சில் வலியோடும் அன்றைய இரவை அவள் நெட்டித் தள்ள அது நீண்ட இரவாக மாறி அவளை வதைத்தது.

ஒரு வழியாக பொழுது புலர, முதல் நாள் இருந்த சந்தோஷம் மீண்டும் காணமல் போக, பெரியவர்களிடம் சொல்லிவிட்டு ஆபிஸ் சென்றவள் தன்னைக் கட்டுப்படுத்தி கவனத்தை வேலையில் செலுத்தி, முடிக்க வேண்டிய வேலைகளைச் செய்தாள்.

இன்றும் செழியன் அழைக்காததால், உலகமே சூனியமாகிப் போன மாதிரி தோன்ற, ஒரு எந்திரம் போல ஆபிசை விட்டு வீட்டுக்குச் சென்றவளை முகம் முழுக்க புன்னகையோடு வரவேற்ற சரளா, அவளின் தாய் தந்தை பற்றி விசாரித்தார்.

அவரிடம் பேச்சில் கவனம் இல்லையென்றாலும் கவனத்தை இழுத்துப் பிடித்து அவரின் கேள்விகளுக்கு பதில் கூறிவிட்டு, தங்கள் அறைக்குச் சென்றவள் கைப்பையை அலுப்பாக கட்டிலில் வீசிவிட்டு அப்படியே படுத்துகொண்டாள்.

செழியன் சொல்லாமல் கொள்ளாமல் தன்னை விட்டு விலகிச் சென்றதை நினைத்து கண்களிலிருந்து கண்ணீர் வடிய, அதைத் துடைக்கத் தோன்றாமல் படுத்துக் கொண்டிருந்தவளை இண்டர்காம் அழைக்க, கண்ணீரைத்

துடைத்துக்கொண்டு எடுத்தவளை சரளா கீழே இறங்கி வரச் சொல்ல, "ஹ்ம்ம்..." என்று முனகினாள்.

அழுததால் குரல் ஞை... ஞை... என்றிருக்க, பேசினால் தன் குரல் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று வெறுமே முனகியவள், ரிசிவரை வைத்துவிட்டு முகத்தை நன்றாகக் கழுவிப் பொட்டிட்டு முடியை சீர் செய்துகொண்டு கீழே இறங்கியவள், ஹாலில் அமர்ந்திருந்தவனைக் கண்டு அதிர்ச்சியில் கால்கள் படியிலே ப்ரேக் போட்டது.

சோபாவில் நடு நாயகமாக ரஞ்சித் அமர்ந்திருக்கம பக்கத்தில் செழியனும், எதிர் சோபாவில் சரளாவும், ஆதவ்வும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க, தேஜூவுக்கு படியிலிருந்து நகர முடியாமல் அங்கேயே வேர் பிடித்தது போல ஊன்றிவிட ரஞ்சித்தையும், செழியனையும் பயத்தோடும மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு உலகமே தட்டாமாலை சுற்றியது.

ரஞ்சித்துடன் சிரித்துப் பேசியபடி நிமிர்ந்த செழியன், படியிலே நின்றுவிட்ட தேஜூவைக் கண்டதும் எழுந்து வந்து, "என்ன! இங்கேயே நின்னுட்டே? வந்து யார் வந்திருக்காங்கன்னு பார் தேஜூ!" என்று சுவாதீனமாக அவளின் தோளின் மேல் கையைப் போட்டு லேசாக அணைத்தபடி நடத்தியவன்,

"ரஞ்சித், ஷி இஸ் மை வைப் தேஜஸ்வி" என்று அறிமுகப்படுத்த ரஞ்சித் சங்கடமான புன்னகையுடன் கை குவிக்க, தேஜூவுக்கு கை குவிப்பதா வேண்டாமா என்று குழம்பி,செழியனைப் பார்த்து விழித்தாள்.

அவளின் குழப்பத்தை தீர்க்கும் விதமாக அவளின் கையை லேசாக அழுத்தி, "நடந்த உண்மைகளை ரஞ்சித்



சொன்னான்!" என்றதுமே தேஜூ மிரண்டு விழிக்க,

"ஹேய், இப்போது சொன்னது பொய்யில்லை! அத்தனையும் நிஜம். நீ என்னிடம் சொல்லத் துடித்த உண்மையைத் தான் அவன் சொன்னான் என்றவன் மனைவியின் குழப்பம் மேலும் அதிகரிப்பதை உணர்ந்து,

"பயப்படாதேடா! அவன் தன் தவறை உணர்ந்து உன்னிடம் மன்னிப்புக் கேட்க வந்திருக்கான்" என்று கூறியதுமே அவளின் பார்வை ஆதவ், சரளா என்று பயணித்து கடைசியாக ரஞ்சித்தின் முகத்தில் நம்பாத தன்மையோடு நிலைத்தது.

அவளின் பார்வையை கண்டு கொண்டவன், "ஐ அம் சாரி சிஸ்டர், புத்திகெட்டுப் போய் உங்களிடம் அசிங்கமாக நடந்துகொண்டு விட்டேன். அதுக்குத் தான் ஆண்டவன் இத்தனை வருடமா புத்தியைப் பேதலிக்க வைத்து தண்டனை கொடுத்திட்டார். நான் செய்தது தவறு என்று தெரிந்த பிறகு, என் குடும்பத்தில் உள்ளவர்களே என்னை வெறுத்து ஒதுக்கி விட்டார்கள்.

ஆனால் எல்லாம் தெரிந்தும், செழியன் எனக்கு நல்ல மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சை கொடுத்ததினால் தான் இன்று உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்! என்னை மன்னிச்சிடுங்க!" என்று கண்ணில் வைரத் துளியாக கண்ணீர் மினுமினுக்க மீண்டும் கையைக் குவிக்க, தேஜூவை அறியாமலே அவளின் பார்வை செழியனை நன்றியோடு நோக்கியது.

அதற்கு பதிலளிப்பது போல செழியன் அவளின் தோளை லேசாக அழுத்திக் கொடுக்க, தேஜூவுக்கு மனதிலிருந்த கசடுகள் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் அடித்துக் கொண்டு ஓடியது. அதற்கு மேல் இந்தப் பேச்சை

வளர்க்க விரும்பாமல், சரளா பேச்சை திசை திருப்பி எல்லோரையும் சாப்பிட வைத்து, ரஞ்சித்தை நல்லபடியாக வழி அனுப்பி வைத்ததும், கணவனுடன் தங்கள் அறைக்குச் சென்ற தேஜூவுக்கு, நெஞ்சம் முழுவதும் இனிய பரபரப்பு.

முதன் முறையாக கணவனின் இயல்பான நடவடிக்கையும், தனக்காக அவன் இவ்வளவு தூரம் யோசித்துச் செய்ததும் அவனின் தொடுகையும் தேஜூவை பனிக்கட்டியாய் உருக வைக்க, அறைக்குள் சென்றதும், "தேங்க்ஸ் செழியன்!" என, ஷர்ட்டைக் கழற்றுவதற்காக டையைத் தளர்த்திகொண்டிருந்தவன் சடாரென்று திரும்பி, "ஹேய், இப்போ... நீ... என்ன சொன்னே? என்றான் ஆச்சரியமும் வியப்புமாக.

அவள் சொன்னதையே திருப்பி புன்னகையுடன் கூற, ஆசையுடன் அவளை நெருங்கி, "வெறும் தேங்க்ஸ் மட்டும் தானா? வேறொன்றுமில்லையா...? என்றான் ஏக்கம் கலந்த கிசிகிசுப்பான குரலில்.

அவன் குரலில் இருந்த தாபம் அவளையும் தொற்றிக் கொள்ள, பேச்சு வராமல் வெறுமே தலையை மட்டும் அசைக்க, கண்கள் பளபளக்க செழியன் அவளின் முகத்தை நிமிர்த்தி, "தேஜூ..." என்று மனதிலிருந்த ஆசையெல்லாம் தேக்கி காதலுடன் அழைக்க,

அதற்கு மேல் தாங்க முடியாமல் அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு, "ஐ லவ் யு செழியன்..." என்று அவன் மார்பில் சாய, ஒரே ஒரு நொடி திகைத்து நின்றவன்ம அடுத்த நொடி "ஐ லவ் யு டூ ஹனி!" என்று தன்னோடு சேர்த்து இறுக அணைத்து அவளைத் தூக்கி ஒரு சுற்று சுற்றியவன் அவளை முத்தங்களாலே குளிப்பாட்டினான்.



சிறிது நேரம் கழித்து அவனிடமிருந்து விலக, அவளின் இடையை விடாமலே, "ம்ஹீம், இன்னும் நீ என்னை விட்டு விலகிப் போறதை நான் அனுமதிக்கவே மாட்டேன்... என்று தாபத்துடன் அவள் கழுத்தில் முகம் புதைக்க, தேஜூவின் தேகம் பரவசத்தில் சிலிர்த்தது.

இருந்தாலும் அவளுக்கு கேட்க வேண்டிய கேள்வி ஒன்று நெஞ்சிலே இருந்ததால் அவனிடமிருந்து மென்மையாக விலகி, "இரண்டு நாளாக நான் உங்களுக்கும் போன் செய்தும், ஏன் நீங்க அட்டென்ட் செய்யவே இல்லை? உங்களைப் பார்க்காமல், உங்களிடம் பேசாமல் நான் எவ்வளவு தவித்துப் போய்விட்டேன் தெரியுமா?" என்னும் பொழுதே கண்கள் கலங்கிவிட,

அவளை இழுத்து தன் மடியில் போட்டுக் கொண்டு, "சாரிடா! நான் தெரிஞ்சு தான் எடுக்கலை!" என்று சிறு வருத்தம் தோய்ந்த குரலில் கூற, தேஜூவின் பார்வையில் "ஏன்" என்ற கேள்வி தொக்கி நின்றது.

"நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டதும் எல்லாமே சரியாயிடுச்சினு தான் நினைச்சேன் ! ஆனால் உன் மனதில் அதையும் தாண்டி, உன்னுடைய கடந்த காலமும் அதில் நீ சந்தித்த பிரச்சனைகளும் தடையாக இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை! நீ என்னிடமிருந்து விலகிச் செல்லும் போதெல்லாம் ஏதோ என் மேலே இருக்கிற வருத்தம் தான் உன்னை இப்படிச் செய்ய வைக்கிறது என்ற எண்ணம் இருந்தது. ஆனால் நேற்று நீ அழுதது, என் மார்பில் சாய்ந்து உடனேயே விலகியது, என்னிடம் நெருங்க ஆசையிருந்தும் முடியாமல் நீ தவித்தது, இதெல்லாம் என்னை யோசிக்க வைத்தது.

கீழே லானில் நடந்துகிட்டு இருக்கும் பொழுது ஆதவ் என்னிடம் வந்து, பேசும் பொழுது அவன் மூலமாக எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டேன். உன் மனதில் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டோம் என்ற குற்ற உணர்ச்சி இருப்பதைப் புரிந்து கொண்டேன்.

நீ செய்தது சரி தான் என்றாலும், மென்மையான மனது உள்ள உன்னால் உன் செய்கையை நியாயப்படுத்த முடியாமல் குற்ற உணர்ச்சி ஒரு புழு மாதிரி உன் மனதைக் குடைவதை புரிந்த கொண்ட நான், அதைச் சரி செய்யத்தான் ராஜஸ்தான் கிளம்பிச் சென்றேன்!" என்றவனை இடைமறித்து, "ஆனால் நீங்கள் பெங்களூர் சென்றதாக..." என்று இழுத்த மனைவியின் சிவந்த இதழ்களை ஒரு விரலால் வருடினான்.

"உனக்குத் தெரிய வேண்டாம் என்று தான்... எப்படியும் நான் எங்கே சென்றேன் என்று அம்மா சொல்வார்கள்! அதைக் கேட்டு நீ மேலும் கலங்கிவிடக் கூடாது என்று தான் மாற்றிச் சொல்லிவிட்டுப் போனேன்... ரஞ்சித் தவறு செய்திருப்பான் என்று எனக்கு எப்பவோ உறுதியாயிடுச்சி. இருந்தும் அவன் வீட்டு ஆட்கள் அவனை வெறுத்து ஒதுக்கியதைத் தாங்க முடியாமல், நானே அவனை ஒரு ஹாஸ்பிடலில் சேர்த்து சிகிச்சை கொடுத்தேன்..." என்றவன்

"என்னடா, இதெல்லாம் எதுக்கு என்று கேட்கிறியா?'' என்று கேட்டுவிட்டு அவனே தொடர்ந்து, "எல்லாம் ஒரு சுயநலம் தான்'' மனைவியின் புருவங்கள் மீண்டும் கேள்வியாக நெரிவதை மென்மையாக நீவிக் கொண்டே,



"உன் நல்ல மனது எனக்குப் புரிய ஆரம்பித்ததுமே உன்னால் ஒருவன் பாதிக்கப் பட்டு இருக்கும் பொழுது, நிம்மதியான வாழ்க்கையை உன்னால் தொடர முடியாது என்று புரிந்தது.

அதுமட்டுமில்லை, அவன் செய்த தவறுக்கு, அவன் வாயாலே உன்னிடம் மன்னிப்புக் கேட்க வைக்க வேண்டும் என்று தான்! அவனுக்காக உன்னை தண்டித்தது நியாயமென்றால், உன்னிடம் அவனை மன்னிப்பு கேட்க வைப்பதும் நியாயம் தானே?" என, தேஜூவுக்கு தன் கணவன் தனக்காக இவ்வளவு தூரம் யோசித்திருக்கிறாரா? என்று புரிந்ததுமே, தன்னையும் அறியாமல் அவன் உள்ளங்கையில் மென்மையாக தன் இதழைப் பதித்தாள்.

"இதோ நீ உன் முழு மனதோடு என்னிடம் உன்னை ஒப்படைக்க வேண்டுமென்று தான், நேற்று ரஞ்சித்தை அழைத்து வரப் போனேன்... கிட்டத்தட்ட ஐம்பது மிஸ் கால்கள் உன் போனிலிருந்து! எடுத்துப் பேச மனது துடித்தாலும் என்னைக் கட்டுபடுத்திக் கொண்டேன்! "பிகாஸ்'' உன்னையே உனக்குப் புரியவைக்கத் தான்...

காதலை யாசகமாய் வாங்க முடியாது என்ற உன் கொள்கை தான் என்னுடையதும். நான் நினைத்த மாதிரியே, எல்லாமே இப்போ நல்லபடியா முடிஞ்சிடுச்சி ! என் சொர்க்கம் இப்போ என் மடியில்" என்றவன், அவன் எதிர்பார்க்காத நேரத்தில் குனிந்து அவள் இதழ்களில் ஒரு நீண்ட முத்தத்தை பதிக்க,தேஜூ கணவனின் ஆளுமையில் கிறங்கி அவனோடு ஒன்றிப் போனாள்.

**சுபம்**